# ஆனந்த நாவல்



# கதை கதையாம் காரணமாம்

## பாலகுமாரன்

# கதை கதையாம் காரணமாம்



## பாலகுமாரன்



## துருவன்

கடவுள் என்பதை எளிதில் விளக்கிவிட முடியாது. எந்த மொழிக்கும் கடவுள் என்கிற விஷயத்தை விளக்கும் பலம் இல்லை. எந்த அனுபவத்தையும் சொல்ல மொழி ஒரு அளவே உபயோகப்படும். அனுபவத்தால்தான் கிரஹித்துக் கொள்ள முடியும். தேன் எப்படி இனிக்கிறது என்பது தேன் அருந்தினால்தான் தெரியும். தேன் குடித்த அனுபவம் இரண்டு பேருக்கும் இருந்தாலும் விளக்கி வார்த்தையாக்க முடியாது.

தேன் இனிப்பு பற்றி நான் அனுபவித்திருக்கிறேன். உங்கள் தேன் அனுபவம் எனக்குப் புரிகிறது என்று வேண்டுமானால் சொல்லலாம். சாதாரண உணவு விஷயமே மொழியால் பரிமாறப்பட முடியாமல் இருக்க, சூட்சுமத்தில் அறியும் கடவுள் அனுபவம் எப்படி பரிமாற முடியும். அப்படி பரிமாற முயற்சித்தால் இது ஊமை கனவு கண்ட விதமாகத்தான் முடிகிறது.

ஆனால் ஊமையாக இருந்தாலும் பரிமாறலை நிறுத்தி விடுவதில்லை. கையைக் காலை அசைத்து பொருளற்று கூவி விழி விரித்து, உரக்க அலறி ஏதோ ஒரு விதத்தில் முயற்சி நடக்கிறது.

கடவுள் விஷயத்தை அப்படி வெளியிடச் செய்த விஷயம் தான் புராணங்கள், இதிகாசங்கள், இன்ன பிற கதைகள். இவை கடவுளை முழுமையாகச் சொல்வன அல்ல. ஆனால் மெல்ல வெளிச்சம் போட்டு காட்டுபவை. இருண்ட மனத்தில் விளக்கேற்றி வைப்பவை.

அந்தக் கதைகள் கடவுள் அல்ல. கை விளக்குகளே. அந்த விளக்கின் ஒளியால் கடவுளைக் கண்டுபிடிக்க வேண்டும்.

ராமாயணத்தின் மூலம் ராமர் யார் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். ராமரை நகருக்குள் தேட வேண்டும். கிருஷ்ணர் யார் என்று தெரிந்து கெரள்ள வேண்டும். ராமரும் கிருஷ்ணருமே உதாரணங்கள்தான். உபமானங்கள்தான். நீரில் தோன்றும் நிலவு பிம்பங்கள் தான். கைக்கு எட்டும் தூரத்தில் நிலவு பிம்பம் தெரிந்தாலும், நிலவு வெகுதூரத்தில் இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

கடவுள் என்கிற தன்மை கிருஷ்ணராய் ராமராய் விவரிக்கப்பட்டிருக்கிறது. நாம் உள்ளே போய் பார்க்க வேண்டும்.

நாத்திகர்கள் உதாரணத்தை மட்டும் எடுத்துக் கொண்டு குழப்புகிறார்கள்.

நாராயணர் பாற்கடலில் படுத்திருக்கிறாராமே. எப்பொழுது தயிராகும் என்று முட்டாள்தனமாகக் கேட்கிறார்கள். தமிழை அன்னை என்றால் பாட்டி யார் என்று கேட்கலாமா. தமிழ் அம்மா என்றால் அப்பா யார் என்று வினவலாமா.

தமிழ் என்கிற மொழி தாயைப் போல முக்கியமானது. உயர்வானது என்று சொல்லத்தான் அந்த வர்ணனை உபயோகப்படுகிறது.

எல்லா கடவுள் கதைகளும் அதுபோல என்று தொக்கி நிற்பவை. இந்தத் தொடரில் உங்களுக்குக் கதையைச் சொல்லி இந்தக் கதையின் அடிப்படை தத்துவம் என்ன என்பதை விளக்கவும் முயற்சிக்கிறேன்.

ஆன்மீகக் கதைகளைப் புரிந்து கொள்ள அவசியம் ஒரு பக்குவம் வேண்டும். வளர வளர, அனுபவம் ஏற ஏற கடவுள் கதைகள் மிகச் சரியான கோணத்தில் புரியும்.

இந்தத் தொடரை துருவன் கதையிலிருந்து தொடருகிறேன். என் விளக்கம் உங்கள் எல்லோருக்கும் எளிதாகப் புரிய வேண்டும் என்று என் சத்குருநாதன் திருவண்ணாமலை மகான், கடவுளின் குழந்தை யோகி ராம்சுரத்குமார் அவர்களின் பாதங்களில் பணிந்து வேண்டிக் கொள்கிறேன்.

உத்தானபாதன் என்கிற அரசனுக்கு இரண்டு மனைவிகள். ஒருத்தி பெயர் சுநீதி. இன்னொருத்தி பெயர் சுருசி.

சுநீதிக்கு துருவன் என்றொரு மகன் இருந்தான். சுருசியின் மகன் பெயர் உத்தமன். சுருசிக்கு தான் இரண்டாவது மனைவியோ என்கிற சந்தேகம் வர ஒரு தாழ்வு மனப்பான்மை ஏற்பட்டது. தான் சிறந்தவள் என்று காண்பிக்கும் அருமை வளர்ந்தது. தன்னை அதிகம் அலங்கரித்துக் கொண்டாள். மன்னனை அதிகம் புகழ்ந்தாள். அவன் தன்னோடு அதிக நேரம் இருக்க வேண்டும் என்பதற்காக இடைவிடாது தந்திரங்கள் செய்தாள்.

மன்னனுடைய அழகில் மயங்கிச் சரிவது போலும், அவன் பேச்சில் கிறங்கித் தவிப்பது போலும் நாடகங்கள் நடத்தினாள்.

பெண்களின் உள் மனதைப் புரிந்து கொள்ளும் திறன் ஆணுக்கு அறவேயில்லை. நம்பியவரை எளிதில் சந்தேகப்படுவதில்லை. அதையும் தவிர பெண்கள் மயங்கும் அளவுக்கு பேரழகனாகவும், பெரும் பேச்சாளனாகவும் இருக்க ஆண் அதிகம் விரும்புவான். பெண்ணின் கபடத்தைப் புரிந்து கொள்ளாமல் தன்னைக் கவனமாய் அலங்கரித்துக் கொள்ளவும் பேசுவதற்காகவே படிக்கத் துவங்குவதும் கை கொள்ளுவான்.

உத்தானபாதனுக்கும் இதுவே நேர்ந்தது. ஆணுக்கு அழகு சத்தியம் என்பது மறந்து போயிற்று. ஆணின் படிப்பு அனுபவம் என்பது புரியாமல் போயிற்று.

திராவிட தேசம் இங்கிருந்து ஒரு மாதப் பயணம். அங்கே காவிரி என்கிற நதி ஓடுகிறது. அந்த நதியின் இரண்டு கரையோரமும் செந்நெல்லும், கரும்பும், வாழையும் பயிராகின்றன. திராவிடர்கள் கருப்பாக இருப்பினும் மிகவும் களையானவர்கள். அதிபுத்தி சாலிகள். மண்ணை முகர்ந்து சிறிது தின்று பார்த்துவிட்டு என்ன பயிராகும் என்று சொல்லிவிடுவார்கள். பிறை கவனித்துவிட்டு மழை வருகையைக் கூறுவார்கள். எறும்பைக் கவனித்துவிட்டு வெய்யிலின் கடுமையையும், தும்பி பறக்கும் உயரத்தைக் கவனித்து விட்டு காற்றின் ஈரப்பதம் பற்றியும் சொல்வார்கள்.

மூன்று கடல் கூடும் இடத்திற்கு குமரிமுனை என்று பெயர். அது பரத கண்டத்தின் எல்லை. 'ஒருமுறை நாம் அதுவரை பயணம் செய்வோம்..'

சுருசிக்கு உத்தானபாதன் கையடித்து சத்தியம் செய்து கொடுக்க 'கடவுளே' என்று அவள் அவனைக் கட்டிக் கொள்வாள். அழைத்துப் போகும் முன்பே அவனுக்கு நன்றி சொல்வாள்.

"உங்களுக்கு என்னவெல்லாம் தெரிந்திருக்கிறது." என்று வியந்து பாராட்டுவாள்.

அள்ளிச் சொரிந்த பாராட்டுக்களாலும், சுற்றி சுற்றி செய்த சிருஷைகளாலும் மன்னன் சுருசியை அதிகம் நாடினான். அவள் அந்தப்புரத்திலேயே அதிக நேரம் செலவிட்டான்.

சுநீதி பரந்த மனமுடையவள். இதைப் பிரச்சினையாகவே கருதவில்லை. மன்னன் சுருசியிடம் அதிக நேரம் செலவு செய்வது மன்னனுக்கு நல்லது என்று நினைத்தாள். அவர்கள் இளமை வாழட்டும் என்று கடவுளை வேண்டினாள்.

தத்துவ நூல்களைப் படிப்பதற்கும், பூஜைகள் செய்வதற்கும் மன்னர் இல்லாத நேரத்தை பயன்படுத்திக் கொண்டாள். குழந்தை துருவனுக்கு விஷ்ணுவைப் பற்றி நிறைய கதைகள் சொன்னாள்.

வீட்டிற்கு வந்த சாதுக்களை குழந்தையை

நமஸ்கரிக்கச் சொன்னாள். அவன் சிறிய கைகளால் தானம் வழங்கச் சொன்னாள்.

புருஷனுக்கு பதிலாய் பிள்ளையை முன்னிறுத்தி சாதுக்கள் வரும்போது பாத பூஜை செய்வித்தாள். பெரியோர்களிடம் பணிவாக 'என் மகனை ஆசிர்வதியுங்கள்' என்று மனமுருக வேண்டினாள்.

ஆனால், சுருசியின் மகன் உத்தமன் வேறுவிதமாக வளர்ந்தான். கணவனோடு சல்லாபிப்பதற்காக சுருசி குழந்தையை அடிக்கடி தூங்கச் செய்தாள். அவனுக்கு தூக்கம் வருவதற்காக மதுவையும், மயக்க மருந்தையும் கொடுத்தாள். தான் தன் புருஷனைப் புகழ்வதுபோலவே தனது மகனையும் புகழ்வதற்குப் பழக்கினாள். நாடகமாடக் கற்றுக் கொடுத்தாள்.

உத்தானபாதனுக்குப் பிறகு தன் மகன் உத்தமனே பட்டத்துக்கு வரவேண்டுமென்று ஆசைப்பட்டாள். ஆசை அச்சத்தைத் தருகிறது. அச்சம் பொய்யைக் கவிழ்க்கிறது. பொய் என்பது இடைவிடாத தொந்தரவு. அது இயல்பாய் இருக்கவிடாது. தன் இயல்பு கெட்டு விட்டால் கடைசி வரை தன்னைப்பற்றியும், தன்னைச் சுற்றியுள்ள உலகம் பற்றியும் தெரிய வராது.

ஒருநாள் உத்தமனை அரண்மனை வாசலில் குழந்தை துருவன் சந்தித்தான். உத்தமன் அம்மா சொல்லிக் கொடுத்தது போல உத்தானபாதனாய் நடித்துக் கொண்டிருந்தான். சேடிகளும் வாயிற்காப்போர்களும் அதை ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"அடாடா. இவனல்லவோ அப்பனுக்குத் தப்பாமல் பிறந்த குழந்தை."

துருவனை அப்படி நடக்கும்படி தூண்டினார்கள்.

துருவன் நமஸ்கரிக்கக் கற்றிருந்தானேயொழிய நடிக்கக் கற்றுக் கொள்ளவில்லை.

அந்தக் குழந்தை அப்பாவாக நடித்த உத்தமன் காலைத் தொட்டு வணங்கி, 'தந்தையே முதல் குரு. தந்தையே சகல ஆராதனைக்கும் உரியவர்' என்று ஸ்லோகம் சொன்னான்.

கூட்டம் இதைப் பார்த்து வாய்விட்டுச் சிரித்தது.

"துருவா, உன்னை தந்தைபோல் நடிக்கச் சொன்னால் தொண்டனைப் போல் நடுங்கிப் பணிகிறாயே." என்று கேலி செய்தது.

துருவன் விவரம் புரியாமல் திகைத்தான். எல்லோரும் உத்தமனை சூழ்ந்துகொண்டு கொண்டாட, இவர்தான் வருங்கால மன்னன் என்று தலையில் தூக்கிக்கொண்டு ஆட சுருசியின் அந்தப்புரத்திற்குள் துருவன் அப்பாவைத் தேடி ஓடினான்..

அப்பாவை அருகிருந்து பார்த்தால்தானே அப்பாவைப் போல் நடிக்க முடியும் என்று தோன்றியது. அப்பாவைப் பார்த்து எத்தனை நாளாகிறது என்று மனம் ஏங்கியது.

அந்தப்புரத்தில் ஒவ்வொரு அறையாக துருவன் தகப்பனைத் தேடி அலைந்தான். எங்கோ மேல்மாடத்தில் அப்பாவின் அட்டகாசக்குரல் கேட்டது. அந்தச் சிரிப்பில் குழறல் இருந்தது.

மன்னன் உத்தானபாதன் முட்ட முட்ட மது அருந்தியிருந்தான். சுருசியும் லேசாக மதுபானம் அருந்தியிருந்தாள். மனைவியோடு போர் செய்வதற்காக மன்னன் ஆயத்தங்களில் ஈடுபட்டிருந்தான்.

சுருசி, 'எத்தனை நாள் முற்றுகையிட்டாலும் கோட்டைக் கதவு திறக்காது' என்று அவனுக்கு வெறி ஏற்றிக் கொண்டிருந்தாள். 'கோட்டை உங்களை மூச்சுத் திணற வைக்கும்' என்று எச்சரித்திருந்தாள். அது அவர்கள் அடிக்கடி விளையாடும் விளையாட்டு.

துருவன் விவரம் புரியாமல் நடுவே போய் நின்றான்.

சுருசி துருவனை பார்த்துவிட்டு தன்னைத் துணியால் போர்த்திக் கொண்டாள்.

என்ன தொந்தரவு இது என்று சலித்துக் கொண்டாள். அவள் சலிப்பைப் பார்த்துவிட்டு மன்னன் உத்தானபாதன் வாய்விட்டுச் சிரித்தான்.

அப்பா சிரிப்பதைப் பார்த்து விட்டு பிள்ளை தைரியமாக முன்னேறி அப்பாவின் மடியில் உட்கார்ந்து கொண்டது.

சிற்றன்னை பல் கடித்தாள். இடுப்புத் துணி நழுவ போர்த்திக் கொண்ட துணியோடு வாசற்பக்கம் போய், "யாரங்கே!" என்று அதட்டினாள்.

சேடிகள் ஓடி வந்தார்கள். வாய் புதைத்து நின்றார்கள்.

"இவனை அப்புறப்படுத்து." துருவனை நோக்கி கைநீட்டிக் காண்பித்து உரக்கக் கத்தினாள்.

மன்னன் மடியிலிருக்கும் மன்னனின் மகனை எந்தச் சேடி அப்புறப்படுத்துவாள். பயத்தில் கை உதறினார்கள்.

"கண்ட நாயை உள்ளே விட்டுவிட்டு என்ன காவல் செய்கிறீர்கள்." சுருசி எரிந்து விழுந்தாள்.

கள் குடித்த மன்னன் அவள் கோபத்தை சிரிப்போடு ரசித்துக் கொண்டிருந்தான். என்ன செய்கிறாள் பார்ப்போம் என்று யோசித்தபடி இன்னொரு மிடறு கள் குடித்தான்.

மடியில் அமர்ந்த பிள்ளையை லட்சியம் செய்யாமல் பெரிய கறித்துண்டைக் கடித்துச் சுவைத்தான். மடியில் இருக்கும் மகனின் மனோநிலை பற்றி எந்தவித

அபிப்பிராயமும் இல்லாமல் வெறுமே எருமைபோல் சுமந்திருந்தான்.

குழந்தை துருவனுக்கு நடப்பது ஏதும் புரியவில்லை. சுருசியின் அந்தப்புரத்திற்குப் போனால் அப்பா கோபிப்பார் என்று அம்மாவால் சொல்லப்பட்டிருந்தது. அப்பா கோபிக்கவில்லை. ஆனால் இன்னொரு அம்மா ஏன் கோபிக்கிறார் என்று புரியவில்லை.

சுருசியும் தன்னைக் கோபிக்கவில்லை. சேடிகளைத் தான் ஏதோ திட்டிக் கொண்டிருக்கிறாள் என்று வெறுமே உட்கார்ந்திருந்தான்.

சுருசிக்கு கோபம் தணிந்த பிறகு எனக்கும் மன்னரைப் போல் நடிக்கக் கற்றுக் கொடுங்கள் என்று கேட்க வேண்டுமென்று நினைத்துக் கொண்டான்.

சேடிகள் குழந்தையை அப்புறப்படுத்த முன் வராததால் சுருசியே துருவனுக்கு அருகில் போனாள்.

"பூஜை வேளையில் கரடி புகுந்தது போல இவன் எதற்கு இங்கே." இடுப்பில் கை வைத்து உரக்கக் கத்தினாள்.

கத்தினபடியே மன்னன் முகத்தை ஆராய்ந்தாள்.

மன்னன் கண் சிமிட்டி சிரிக்கவே தைரியமானாள்.

"வெளியே போ." என்று குழந்தையைப் பார்த்து கத்தினாள்.

குழந்தை பயந்து போய் தகப்பன் முகத்தைப் பார்த்தான்.

தகப்பன் சிற்றன்னையைப் பார்த்துச் சிரிப்பதைக் கவனித்தான்.

தானும் சிரிக்க முயற்சி செய்தான்.

அப்பா எதற்கு சிரிக்கிறார் என்பது அவனுக்குப் புரிந்து விட்டது.

"அய்யய்யே.. நீங்க புடவையே உடுத்திக்கலை." போர்வை வழியே அவள் உடம்பைக் கவனித்து விட்டுக் கூறினான்.

வாசற் பக்கம் யாரோ சிரித்தான்.

சுருசி கோபமானாள். சட்டென்று அவன் தோளைப் பிடித்து அக்குளில் கை கொடுத்து தூக்கினாள். இழுத்து தரையில் இறக்கினாள்.

தரதரவென்று கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு போனாள்.

வாசல் தாண்டி திரும்பியதும் தலைமயிரைக் கொத்தாகப் பிடித்தாள். பலம் கொண்ட மட்டும் தலையை உலுக்கினாள். பளீரென்று கன்னத்தில் அறைந்தாள். கழுத்தில் கை கொடுத்து நெட்டித் தள்ளினாள்.



காலும் கையும் பரப்பி துருவன் வாசற்பக்கம் போய் விழுந்தான்.

"இனி இந்த நாய் உள்ளே நுழைந்தால் உங்களை வெட்டிப் போடுவேன்." திரும்ப அறைக்குள் போய் கதவு சாத்திக் கொண்டாள். மேலே போர்த்தியிருந்த சால்வையை உருவி வீசி விட்டு மன்னனுக்கு அருகே நெருங்கி அமர்ந்துக் கொண்டாள்.

மன்னன் மெல்ல முற்றுகையைத் துவங்கினான்.

அடிபட்ட துருவனை ஒரு சேடி தூக்கி நிறுத்தினாள்.

"இங்கு ஏனப்பா வந்தாய். போ.. உன் வீட்டிற்குப் போ. பாவம். எத்தனை மோசமான நிகழ்ச்சி. உண்மையான இளவரசன் நீ இருக்க உத்தமனைக் கொண்டாடி உன்னைத் தள்ளி விட்டார்களே. துருவா, என் கண்ணே, அழாதே." என்று அணைத்துக் கொண்டாள்.

துருவனுக்கு அழுகை வந்தது.

பலபேர் மாறி மாறி பரிதாபப்பட துருவன் பொங்கிப் பொங்கி அழுதான்.

ஒரு காவலன் அவனை அள்ளித் தூக்கிக் கொண்டு போய் சுநீதியின் மாளிகை வாசலில் விட்டான்.

சுநீதி குழந்தையின் அழுகுரல் கேட்டு ஓடி வந்தாள்.

காவலன், சேடி தனக்கு விவரித்ததை சுநீதிக்கு விளக்கிச் சொன்னான்.

"தவறான நேரத்தில் இளவரசர் நுழைந்துவிட்டார். எனவே சுருசி அம்மையார் துரத்தி விட்டார்கள்."

"என்ன முட்டாள்தனம் இது. உச்சிப் பகல் குழந்தை வர தவறான நேரமா. குடித்துவிட்டுப் புரளத்தான் தவறான நேரம். அப்புறப்படுத்த வேண்டியதுதானே. எதற்கு கன்னத்தில் அறைந்திருக்கிறாள். கண்ணில் ரத்தம் வருகிறதே. குழந்தையின் மார்பு எப்படி துடிக்கிறது பார். உதடு வீங்கியிருக்கிறது. காது சிவந்திருக்கிறது. இப்படியா அடிப்பார்கள். மன்னர் இதைக் கேட்க வில்லையா. பார்த்து விட்டு மௌனமாக இருந்தாரா."

சுநீதி சீறினாள்.

"அரசியாரே, தயவு செய்து இதைப் பெரிது படுத்தாதீர்கள். இதில் தவறு எங்களுடையது. நாங்கள் காவலில் கவனமாக இல்லையென்று தண்டிக்கப் படுவோம். உங்கள் காலில் விழுந்து மன்னிப்பு கேட்கிறேன். இதை இத்தோடு விட்டு விடுங்கள். சிறிதளவு மூலிகைப் பற்றுப் போட்டால் போதும். வீக்கம் உடனே வடிந்துவிடும். இதோ மூலிகைகள் பறித்து வருகிறேன்."

காவலன் வெளியே ஓடினான். தோட்டத்தில் திரிந்து

இலைகளோடு வந்தான்.

எண்ணெய் தடவி தணலில் வாட்டி கன்னத்தில் பதிய வைத்தான். மறுபடி மன்னிப்புக் கேட்டு இளவரசரின் காலைத் தொட்டு வணங்கி வெளியேறினான்.

குழந்தை துருவனுக்குத் திரும்பத் திரும்ப ஒரு காட்சியே மனதில் ஓடிற்று.

அப்பா பார்க்க, அத்தனை பேர் பார்க்க சிற்றன்னை தன்னை இழுத்து வந்தது அதிர்ச்சியாய் இருந்தது. உத்தமனைச் சுற்றி எல்லோரும் கை கட்டிக் கொண்டாடினார்கள். நான் அடி வாங்கும்போது யாரும் தடுக்கவில்லையே. எவரும் எனக்கு இரக்கப்பட வில்லையே.

ஏன் ஒட்டுமொத்தமாய் எல்லோரும் புறக்கணிக்கிறார்கள். சிற்றன்னை அடித்தது வழி நடையில் எப்படி எதிரொலித்தது. அப்பாவின் காதுகளிலும் அந்தச் சத்தம் விழுந்திருக்கும். அப்பா ஏன் வரவில்லை. எதனால் தடுக்கவில்லை.

உத்தமன் வீட்டு வாசலில் எத்தனைக் காவலர்கள். எத்தனை விதமான சேடிகள். இங்கே எவரும் இல்லையே.

இவர்கள் என்னை மட்டும் புறக்கணிக்கவில்லை. என் வீட்டை, என் தாயாரை சேர்த்தே புறக்கணிக்கிறார்கள். தந்தைக்கு என் பேரில் பிரியமில்லையா. என்னிடமும் அம்மாவிடமும் ஏதேனும் குறையா.

அந்தப் பிஞ்சு மனம் வெம்பி வெம்பித் தணிந்தது. எழுந்து உட்கார்ந்தது. அம்மாவின் மடியில் தலை புதைத்து அழுதது. அம்மாவும் அழுதாள்.

"ஏனம்மா அப்பாவுக்கு உன்னைப் பிடிக்க வில்லையா." அதிரடியாய் கேள்வி கேட்டது.

"அப்பா இங்கு வருவதேயில்லையே. காரணம் என்ன." அம்மாவின் கண்களை நோக்கி வினவிற்று.

"என்னை ஏன் சிற்றன்னை இறக்கி விட்டாள். எதனால் அலட்சியப்படுத்தினார்கள். ஏன் அப்புறப்படுத்தினார்கள். அப்பாவின் மடியில் உட்கார எனக்கு உரிமை இல்லையா. அவர் எனக்கு அப்பா இல்லையா. ஏன் இவ்விதம் நடந்தது. இது யார் பிழை." குழந்தை இடைவிடாது அம்மாவைக் கேள்வி கேட்டான்.

"உத்தமனை எல்லோரும் கொண்டாடுகிறார்களே. என்னை ஏன் கொண்டாடுவதில்லை." அம்மாவை திரும்பத் திரும்ப அரித்தெடுத்தான்.

சிற்றன்னையான சுருசிக்கு என்னை ஏன் பிடிக்காது போயிற்று. திகைப்பில் ஆழ்ந்தான்.

அம்மா எல்லா கேள்விகளுக்கும் ஒரே பதில் சொன்னாள்.

"இது கடவுளின் விருப்பம். மௌனமாய் இரு." என்றாள்.

"ஏன் கடவுள் என்னை அவமானப்படுத்தினார்." துருவன் மறுபடி கேட்டான். அவன் மனம் ஆவேசத்தால் பொங்கிப் பொங்கித் தவித்தது. கன்னத்தில் வாங்கிய அடியைவிட மனதில் வாங்கிய அடி அதிகம் வலித்தது.

"ஏன் கடவுள் அவ்விதம் விரும்பினார்." அவன் தொடர்ந்து கேட்டான்.

"எனக்கு தெரியவில்லையேடா. கண்ணே. கடவுள் ஏன் இவ்விதம் விரும்பினார் என்று கடவுளைத்தான் கேட்க வேண்டும்."

சுநீதி நொந்து கொண்டு பதில் சொன்னாள்.

"அப்படியா. நான் அந்தக் கடவுளைக் கேட்கிறேன்.. ஏன் இவ்விதம் எனக்கு நேர்ந்தது என்று அந்தக் கடவுளைக் கேட்கிறேன்." துருவன் சீறியெழுந்தான். அவன் மனம் முழுவதும் ரௌத்திரமாக இருந்தது.

"மகனே, இதென்ன பிடிவாதம். கடவுளை உன்னால் எப்படி காண முடியும். படுத்து உறங்கு."

"இல்லை. நீ சொல்லி இருக்கிறாய். இங்கு வந்த முனிவர்களும், சாதுக்களும் சொல்லியிருக்கிறார்கள். இவர் கடவுளைக் கண்டவர் என்று பலபேரை எனக்கு அறிமுகப்படுத்தியிருக்கிறாய். விழுந்து வணங்கச் சொல்லியிருக்கிறாய்."

"'உனக்கு கடவுள் தரிசனம் கிடைக்கட்டும்.' என்று அதில் பலபேர் எனக்கு வாழ்த்தியிருக்கிறார்கள். நான் கடவுளைப் பார்க்காமல் பின்வாங்க மாட்டேன். கேட்காமல் பின்வாங்க மாட்டேன்."

"அது இல்லையப்பா. கடவுள் உண்டு."

"இருப்பதைப் பார்க்க முடியாதா."

"பார்க்க முடியும். உன்னால் முடியாது."

"ஏன்."

"நீ குழந்தை."

"யார் கூப்பிட்டாலும் கடவுள் வருவார் என்று சொல்லியிருக்கிறாயே."

"ஆமாம். சொன்னேன். இப்போது அதை மறந்து விடு."

"என்னால் மறக்க முடியவில்லை அம்மா. என்னால் எதையும் மறக்க முடியவில்லை. நான் கடவுளை நிச்சயம் பார்த்தேயாக வேண்டும். கேள்விகள் கேட்டேயாக வேண்டும்."

"குழந்தாய். இது கடினமான விஷயம்."

"முயற்சித்தால் முடியும் என்று நீ எனக்குப் போதித்திருக்கிறாயே. கடவுள் அருள் இருந்தால் எவரும் எதையும் செய்யலாம் என்று எனக்குச் சொல்லியிருக்கிறாயே."

அம்மா மௌனமாக இருந்தாள்.

"அம்மா, என்னை ஆசிர்வாதம் செய்யுங்கள். நான் கடவுளைக் காணப் போகிறேன். அவரை நோக்கித் தவம் செய்யப்போகிறேன்."

"தவம் செய்வது கடினம் குழந்தாய்."

"கடவுள் எளிதாக்குவார் அம்மா."

"கானகத்துக்கல்லவா போக வேண்டும்."

"அங்கே கடவுள் காவல் இருப்பார் அம்மா."

"இருக்கட்டும். குளிரும் வருத்துமே."

"கடவுள் துணை செய்வார் அம்மா."

"பசியும், ஜுரமும் வாட்டுமே."

"கடவுள் கவனித்துக் கொள்வார் அம்மா."

"பேய்; பிசாசுகள் தொந்தரவு செய்யுமே."

"கடவுள் அவர்களை விரட்டியடிப்பாரம்மா."

"கானகத்தில் அம்மா இருக்க மாட்டேனே, துருவா."

"கடவுள் இருப்பார் அம்மா. நீ ஏன் கவலைப்படுகிறாய். உனக்கு ஏன் கடவுள் மீது நம்பிக்கை குறைந்து விட்டது. கடவுள் பெயரைச் சொல்லி என்னை அனுப்பி வைக்க உனக்கு ஏன் தெரியவில்லை. கடவுளை நம்புபவர்கள் கடவுளை மறுப்பது எத்தனை வேடிக்கை. என்னை வாழ்த்தி அனுப்பி வை, அம்மா.

கடவுளைப் பார்க்காமல், கடவுளோடு பேசாமல் நான் வரமாட்டேன்." அவன் தாயை வலம் வந்து வணங்கி வெளியேறினான்.

**து**ருவன் அரண்மனை விட்டு வெளியேறினான். தூங்கிக் கொண்டிருந்த நகரத்தை இருட்டு நேரத்தில் கடந்தான். கறவைகளுக்கு நடுவே நகர்ந்து கோட்டைக் கதவைத் தாண்டினான். ஆற்றில் இறங்கி நீரோட்டத்தோடு மிதந்து அடர்ந்த கானகத்தில் கரையேறினான். மலையுச்சியில் பெரிய மரம் தேடி அதன் நிழலில் அமர்ந்தான்.

'நாராயண.. நாராயண.. நாராயண..' என்று ஜெபிக்கத் துவங்கினான்.

அவன் எதிரே நாரதர் தோன்றினார்.

சாதுக்களை வணங்கி பழக்கப்பட்ட குழந்தையல்லவா. துருவன் தன் குலம் பெயர் சொல்லி நாரதரை வணங்கினான்.



நாரதரும் பயமுறுத்தினார்.

"கானகத்தின் சுமையை உன்னால் தாங்க முடியாது துருவா. உண்ண உணவு, உடுக்க உடை, படுக்க பஞ்சணை என்று பல சுகங்கள் இருக்கும் அரண்மனைக்குப் போய் விடு. உன் தந்தை மடியில் யார் உட்கார்ந்தால் என்ன. உனக்கு தாய் இருக்கிறாளே. அது போதாதா.

தந்தை மடி வேண்டுமென்று யாரேனும் தவம் செய்ய வருவார்களா. மாற்றாந்தாய் புறக்கணித்தால் இதற்கு என்ன காரணம் என்று இறைவனைக் கேட்பார்களா.

கடவுளைக் காணுவது எளிதல்ல. பல இரவுகள் பல பகல்கள் தனித்து மௌனமாக இருக்க வேண்டும். கடவுளைத் தேடும் முன் உன்னைப் புரிந்துகொள்ள வேண்டும். இங்கே நீ என்பது எது என்று யோசிக்க வேண்டும்.

எது நான்.. எது நான் என்று இடைவிடாது சிந்திக்க வேண்டும். எது சிந்திக்கிறது என்று உற்றுக் கவனிக்க வேண்டும். எதனால் சிந்தனை வருகிறது என்ற வேரோட்டம் அறியவேண்டும். சிந்திக்கிற சக்தியை உடம்புக்கு எது கொடுத்தது. அந்த சக்தியை உற்றுப் பார்க்க வேண்டும்.

எல்லாம் மறந்துவிட்டு உன் பெயரையும் மறந்துவிட்டு உள்ளுக்குள் கிடக்கிற சக்தியோடு நீயும் கிடக்க வேண்டும். அந்த சக்தி தெரியத் தெரிய கடவுளைப் பற்றியும் புரிய ஆரம்பிக்கும். புரியத் துவங்குகிற போது கர்வம் கிளைவிடும். கர்வத்தை விலக்கி எது எதைப் புரிந்து கொண்டிருக்கிறது என்று பார்க்க வேண்டும். அப்போது ஏற்படும் மகத்தான அமைதியை அணுஅணுவாய் அனுபவிக்க வேண்டும்.

அந்த ஆனந்த பரவசத்தை அப்படியே விழுங்கி அதுவாகவே ஆகிவிட வேண்டும். அனுபவம் வேறு. அனுபவிக்கிறவன் வேறு என்கிற பிரிவினை ஒழிய வேண்டும். ஆனந்தமே நீயாக மாற அதுவரை கற்றதனைத்தும் கவிழ்ந்து விடும். கற்றதிலிருந்து வெளியே வர கடவுள் தோன்றுவார்.

இது பெரிய பாடம். கடைசி காட்சி. இதற்குப் பிறகு கற்பதற்கும் காண்பதற்கும் எதுவுமில்லை. மூலத்தை மூலம் அடைந்துவிட்டது என்று பொருள்.

இதையெல்லாம் செய்ய உன்னால் முடியுமா." நாரதர் வினவினார்.

துருவன் நாரதரை வலம் வந்து தரையில் விழுந்து வணங்கினான்.

குருவே என்று கால் பிடித்துக் கொண்டான்.

"வினவுவதுபோல் எனக்கு விளக்கினீர்களே. விளையாட்டாய் பேசுவது போல் எனக்கு விவரித்தீர்களே. அச்சத்தை சொல்லி அச்சமற்று இரு என்று சொன்னீர்களே. என் குருவே, உங்கள் கருணைக்கு நான் என்ன கைமாறு செய்வேன். தேடிவந்து உபதேசித்த தன்மைக்கு எப்படி பிரதியுபகாரம் செய்வேன். சத்குரு, நாரத மஹரிஷி, சீடனைத் தேடித்தான் குரு வருகிறார் என்பது மறுபடி நிரூபிக்கப்பட்டது. என்னைத் தேடி இறங்கி வந்த உமது புகழை இடைவிடாது பாடுவேன்.

குருவே, சூட்சும ரூபத்தில் நின்று தொடர்ந்து எனக்கு வழிகாட்டுங்கள். நீங்கள் பெற்ற இறை தரிசனத்தை ஸ்ரீமன் நாராயணரின் வாத்சல்ய ரூபத்தை நானும் பார்க்க வேண்டுமென்று ஆசிர்வாதம் செய்யுங்கள்.

குரு இல்லாமல் இறை தரிசனம் கிடைக்காது என்பதைப் புரிந்து கொண்டேன். குரு வாழ்க." மறுபடி வணங்கினான்.

நாரதர் வாயாரச் சிரித்து அவனைத் தழுவிக் கொண்டார். அந்தத் தழுவலில் துருவனின் ரத்தக் கொதிப்புகள் அடங்கின. நாடித் துடிப்புகள் சமனாகின. மூச்சு சீராகியது.

துருவன் அமர்ந்து கண் மூடினான். தன்னுள் தன்னைத் தேடினான்.

தன்னைத் தேடுதல் என்பதை எத்தனை விதமாகச் சொன்னாலும் விளக்க முடியாது. அது ஒரு தனி மனித வித்தை. சொல்லவும், விள்ளவும் அங்கு இன்னொருவர் இல்லை.

மனம் எப்போதும் வெளியே தான் பார்த்துக் கொண்டிருக்கிறது. வெளியே பார்க்கும் அளவுக்கு உள்ளே பார்க்க மனத்திற்குத் தெரியவில்லை. மனம் உள்ளே தான் இயங்குவதை பார்க்கத் துவங்கியதும், வெளியே தெரியும் விஷயங்கள் பார்வையிலிருந்து மறைந்து போகின்றன.

கண் தானாக மூடிக் கொள்கிறது. பிறகு காதுகளும் உள்நோக்கி திரும்பி விடுகின்றன. பிறகு காது கேட்கும் தன்மையும் உள்நோக்கி திரும்பி விடுகின்றது. எல்லா புலன்களும் மெல்ல, மெல்ல நடு மையத்தைப் பார்க்கத் துவங்கி விடுகின்றன. இதனால் நடு மையம் அதீத உணர்வு கொள்ளத் துவங்குகிறது.

உறங்கிக் கிடந்த அந்த உணர்வு விழித்தெழ ஆரம்பிக்கிறது. தன்னை இனம் பார்க்க ஆரம்பிக்கிறது.

தான்தான் முக்கியம் என்று நினைத்துக் கொண்டிருந்த மனம், தான் வெறும் நினைவுகளின் தொகுப்பு என்பதைப் புரிந்து கொண்டு நினைவுகளை உதிர்த்து விட்டு தன்னை இயக்கும் சக்தியை வெளிக் கொண்டு வருகிறது.

எதனால் உடம்பு இயங்குகிறதோ, எதனால் புத்தி இயங்குகிறதோ. எந்த புத்தியால் மனம் என்ற ஒரு தோற்றம் ஏற்படுகிறதோ இவை எல்லாமே தனித் தனியாய் மனதிற்குத் தெரிகின்றன.

தான் முக்கியமில்லை என்று தெரிந்ததும் மனம் தொழிலை நிறுத்தி விடுகின்றது. மனத்திலிருந்து விடுபட்ட புத்தி ஒருவித அமைதிக்குப் போகிறது. அந்த அமைதியால் நாடித் துடிப்பும், இருதயத் துடிப்பும் மிருதுவாகின்றன.

உள்ளே சுடர் விட்டுப் பிரகாசிக்கின்ற ஒரு விஷயம் எல்லாவற்றையும்விட முக்கியமானதாகப் போய் விடுகின்றது.

அந்தத் தரிசனம் மிகப் பெரிய சந்தோஷத்தை, சிலிர்ப்பை ஏற்படுத்துகின்றது. நூறு பெண்களை ஒரே நேரத்தில் கூடிய ஆனந்தம் அதை இனங்கண்டு கொண்டவுடன் வந்து விடுகிறது.

முதலில் தரிசனம் தந்த விஷயம் விருட்டென்று பெரிதாகி, தரிசித்த மனதையே விழுங்கிவிடுகின்றன.

இனி அங்கு புத்தியோ, மனமோ இல்லை. கற்றலோ, கேட்டலோ இல்லை. உடம்பு, புத்தி, மனம், உயிர் எல்லாம் ஒன்றேயாக ஒரு பரவச நிலை ஏற்படுகிறது. தக, தகவென்று ஒரு பூரணமாய் ஜ்வலிக்கின்றது.

அப்போது பேச்சும் இல்லை, மூச்சும் இல்லை. சுவாசம் நின்று போய் உடம்பு விரைத்து கட்டை போலாகி உயிர் வழியே உலக தரிசனம் ஏற்படுகிறது. கண் வழியே பார்ப்பதும், காது வழியே கேட்பதும், உடல் வழியே உணர்வதும் ஒரு சாதாரண நிலை.

உயிர் வழியே பிரபஞ்சத்தை உணர்வது அசாதாரண நிலை.

கண் பார்க்கும், ஆனால் கண் பார்த்த பார்வைக்கும் அப்பால் ஒரு விஷயம் தெரியும். எதிரே ஒரு உயிரின் சூட்சுமம் தெரிந்து விடும். அந்த உயிரின் பேச்சை கேட்க முடியும்.

அந்த உயிரோடு தன் உயிரை கலக்க முடியும்

பரம சுகம் என்பது இதுதான். உயிரை உயிர் உணர்வதுதான். ஆத்ம தரிசனம்தான். தானே எல்லாமும் என்கிற உணர்வுதான்.

எங்கிருந்து இவையெல்லாம் என்ற கேள்வி உடனே

வரும். புலன்கள் ஆத்மாவை உணர்ந்தது போல, ஆத்மா விகசித்து தன்னை அறிந்தது போல தன் மூலத்தை, தான் தோன்றிய புள்ளியை ஆத்மா தேட திடீர் என்று அதுவும் பிரசன்னமாகி விடுகின்றது.

இதுதான் கடைசி உண்மை. இதுதான் முழு உண்மை. இதுதான் நிஜம். இதுதான் சத்ய சொரூபம். இதுதான் பரமாத்மா. இதுதான் எல்லாம். இதுவே எல்லாம். இதுவே விதம் விதமாய் பிரிந்து விளையாடிக் கொண்டு இருக்கிறது. இதுவே தாய். இதுவே தகப்பன். இதுவே சகோதரன். இதுவே சிற்றன்னை. இதுவே தாவரம். இதுவே மிருகம். இதுவே பறவை. இதுவே பூச்சி. இதுவே கிருமி. இதுவே நீர். இதுவே நிலம். இதுவே நிலா. இதுவே சுடர்கள். இதுவே எங்கனும் பரவியதாகி, இதுவே நான். நானே இவை எல்லாமாக நிற்கிறேன்.

இது தெரியவர எல்லா பேதமும் உதறி, எல்லாவற்றையும் அணைத்துக் கொள்கின்ற தன்மை வந்து விடுகிறது. எதிலும் தன்னைப் பார்க்கின்ற நிலை ஏற்பட்டு விடுகிறது. தான் எது என்கிற பிரிவு உடனே காணாமல் போகிறது.

பேதம் கற்பிக்கப்படுவதைப் பார்த்து சிரிப்பு வருகிறது. பேதம் இல்லாததைப் பார்த்து மிகப் பெரிய சந்தோஷம் ஏற்படுகிறது. அது குதியலான சந்தோஷம் அல்ல. ஒரு நிறைவு. ஒரு நிம்மதி. ஒரு ஆனந்தம்.

உடம்பின் அங்கங்கள் தனித்தனியே பெயர் வைத்திருந்தாலும், உடம்பு ஒன்று என்பதுபோல பிரிவினை அற்ற நிம்மதி. பிரித்துப் பார்க்கவே தெரியாத ஒரு அமைதி.

துருவன் தன்னைக் கண்டான். தன்னுள் ஆதாரமான கடவுளைக் கண்டான்.

"ஹரி.." என்று வியப்போடு எழுந்தான். 'ஹரி' என்பது பெயரல்ல. ஒரு வியப்புச் சத்தம். அந்த வியப்புச் சத்தத்தைக் கடவுளுக்குப் பெயராக வைத்து இருக்கிறார்கள்.

எல்லாம் தெரிந்த திகைப்பு ஏற்படுகிறபொழுது உடம்பிலிருந்து அந்த சப்தம் தானாகவே ஸ்பூரித்து எழும்புகிறது.

இந்தப் பிரபஞ்சத்தின் மூலம் தெரிய வர அளவிட முடியாத ஆனந்தம் ஏற்படுகிறது. காலின் கீழே தெரியும் மரத்தின் வேரும், தொலைவே எரியும் நட்சத்திரமும் ஒன்றாகின்றன.

உடம்பு, மனம், புத்தி எல்லாம் விசாலமே இல்லாது போகின்றது.



உடம்பை மறந்த துருவன் உடம்பின் வழியே உலகம் பார்ப்பதும் ஒரு வேலை என்பதைப் புரிந்து கொண்டான். உடம்பே உலகமல்ல என்று சொல்வதற்காக பரம்பொருள் அவன் உடம்பில் உணர்வு வரவழைத்தது. உயிர் வழியே பார்த்ததும், ஊன் வழியேயும் பார் என்று கட்டளையிட்டது.

மற்றவர்க்கு சொல்லிக் கொடு. நீ உயர்ந்து அமர்ந்த இடத்தை எல்லோரும் பார்க்கட்டும். பிரபஞ்சம் முழுவதும் உன்னைச் சுற்றி இயங்குகிறது. நீ அசையாத இடத்தை தொட்டு விட்டாய் என்பதை அவர்கள் அறிந்து கொள்ளட்டும்.

அசைகின்ற மனதுக்குள்தான் அசையாத இடம் இருக்கிறது என்பதை உன் மூலம் அவர்கள் தெரிந்து கொள்ளட்டும். அசைகின்ற அனைத்துக்கும் அசையாததுதான் ஆணிவேர் என்பதை அறிந்து கொள்ளட்டும்.

துருவா, நீ அழியாச்சுடர், அசையாச்சுடர். ஹரி.. என்று அவன் வியக்க அவனை ஆசிர்வதித்தார்.

துருவன் அந்த பரவசத்திலேயே நெடுநாள் கிடந்தான். மெல்ல, மெல்ல உடல் உணர்வு அதிகரிக்க மலையிலிருந்து இறங்கி வனத்தின் ஊடே நடந்து, வந்த வழியே திரும்பினான்.

பாம்புகளும், பறவைகளும், மிருகங்களும், தாவரங்களும் அவனைப் பார்த்து 'ஹரி'என்று வியந்து கூவின. வணங்கி வழிவிட்டன. காற்று அமைதியாகக் கடந்து போயிற்று. நதிநீர் வழிவிட்டது. மரங்களில் கனிகள் உதிர்ந்தன. பூக்கள் சொரிந்தன.

பகலவன் துருவன் உடம்புக்கு மெருகேற்றினான். கண்களுக்கு ஒளிகொடுத்தான். பூமி அவனை குழந்தையெனத் தாங்கிற்று. ஆகாயம் ஆசீர்வதித்தது. கோட்டை வாசலில் நின்ற இளைஞனைப் பார்த்து காவலர்கள் திகைத்தார்கள்.

"யாரப்பா நீ." என்றார்கள்.

அவன் மெல்லச் சிரித்தான். அந்தச் சிரிப்பில் சொக்கிப் போனார்கள். அவன் தன் அடையாளம் காட்டினான்.

"ஹரி" என்று வியப்பில் கத்தினார்கள். அவன் வருகைக்கான எக்காளத்தை ஊதினார்கள். சுநீதியின் வயிற்றில் சந்தோஷம் குழைந்தது. சுருசி திகைத்தாள். உத்தானபாதன் உதறி எழுந்து நின்றான். உடல் நடுங்கினான். படிகளில் இறங்கி கோட்டை வாயிலை நோக்கி ஓடினான். மந்திரியும், சேனாதிபதிகளும், மக்களும் அடித்துப் பிடித்துக் கொண்டு வந்தார்கள்.

அவனைப் பார்த்ததும் கைகூப்பினார்கள். அவனை நெருங்க முடியாமல் விலகியே நின்று கைகூப்பினார்கள். அவன் முகத்தின் கனிவு பார்த்துவிட்டு விம்மி அழுதார்கள்.

அரசன் ஒருஅடி முன்னேறி "அப்பா" என்று கூப்பிட்டதும், 'அடடே அரசனுக்குப் புரிந்து விட்டதே' என்று அவன் வாய்விட்டுச் சிரித்தான். சதங்கை சிதறியது போன்ற அவன் யோகச் சிரிப்பைக் கண்டு ஊரும் சிரித்தது.

சுநீதி ஓடிவந்தாள். அவன் நடந்து வரும் கம்பீரத்தைப் பார்த்துவிட்டு இவன் 'என்மகன் அல்லன். இவன் கடவுளின் குழந்தை' என்று தெரிந்து நெற்றி நிலம் பட வணங்கினாள்.

தாயை தன் பெற்ற மகளென அவன் தூக்கி நிறுத்தினான். அவன் தொடலில் அவள் உயிர் குழைந்தாள். உணர்வுப் பெருக்கத்தால் மூர்ச்சையானாள். உடல் தளர்ந்தாள். அவளை அணைத்தபடி அவன் தொடர்ந்து நடந்தான்.

இடக்கையை அரசனோடு போர்த்திக் கொண்டிருந்தான்.

தகப்பனை கை கோர்த்தபடி, தாயை தோள் தாங்கியபடி ஊர் புடைசூழ நடந்து வரும் பிள்ளையைக் கண்டதும் சுருசிக்கு பயம் ஏற்பட்டது. அவள் பிள்ளைக்கு இளவரசு பட்டாபிஷேகம் சமீபத்தில்தான் நடந்து முடிந்திருந்தது. 'அவை பறிக்கப்பட்டு விடுமோ, தான் தண்டிக்கப்பட்டு விடுவோமோ,' சுருசி வயிறு கலங்கினாள்.

பின்னடைந்து சுவர் பின்னே ஒண்டிக் கொண்டாள்.

"கடவுளே.. என்னை வஞ்சித்து விடாதே" என்று கை கூப்பினாள்.

பிரபஞ்சத்திற்கு அப்பால் இருப்பதையும் தெரிந்து கொண்டவனுக்கு, சுவருக்கு அப்பால் இருப்பதையா தெரிந்து கொள்ள முடியாது. சுருசியின் பயம் தெரிந்து கொண்டான். அவன் கருணை மிகுந்து பொங்கியது.

தாயை விட்டு விட்டு சரக்கென்று அவளை நோக்கி ஓடினான். "கடவுளுக்கு வஞ்சிக்கத் தெரியாது. வஞ்சிப்பவர் கடவுளல்ல. நீ என் தாய். நீ வருத்தமுற நான் பார்ப்பேனா. உன் மனம் நடுங்க நான் பொறுப்பேனா. அம்மா இங்குள்ள எல்லா நல்லவையும் உன்னுடையதே." அவள் கைகளைப் பற்றிக் கொண்டான்.

அவளால் இந்த கருணையைத் தாங்க முடியவில்லை. அவன் அவள் தாளில் பணிய உலகம் ஆடத் துவங்கியது. அவளுக்குத் தலை சுற்றியது. கிருஷ்ணனை வளர்த்த



யசோதைபோல ஒரு பாவனை அவள் நெஞ்சில் மின்னியது.

உடம்பு ஆடி உச்சி முதல் தவித்தது. அவள் பயந்து பின் வாங்கினாள். தடுமாறி தலையைத் தொட்டாள். அவன் பொன்னுடல் மேனியையும், நிலவு முகத்தையும், சுடர் போன்ற கண்களையும், அதில் பொங்கி வழியும் கருணையையும் கண்டு தவித்தாள்.

தன் மகனுக்கு இளவரசுப் பட்டம்தான் கிடைத்திருக்கிறது. இவனோ, பிரபஞ்சத்திற்கே சக்கரவர்த்தியாகி விட்டான் என்பது புரிந்து போயிற்று. ஆயிரம் அரசர்கள் வணங்கும் ரிஷியாகி விட்டான் என்பது புரிந்தது.

யோகசக்தி அவனிடம் ததும்பிக் கிடப்பது புரிந்தது. சுருசி திரும்பி சுநீதியைப் பார்த்தாள்.

"என்னைவிட சுநீதி நீயே உயர்ந்தவள். இப்பேர்ப்பட்ட மாணிக்கத்தை மகனாகப் பெற்ற நீயே உலகின் தாய். நான் வெறும் வாய்."

"நான் உலகத்தின் ருசிகளை உன்னதமாக நினைத்தேன். ருசியைவிட நீதிதான் உன்னதம் என்பது நிரூபிக்கப்பட்டு விட்டது."

"சுநீதி என்னை மன்னித்துவிடு. நான் உனக்கு செய்த தீங்குகளை தயவு செய்து மறந்துவிடு. நான் உன் மகனை இந்த ஹரியை வணங்கக்கூட தகுதியில்லாதவள். எனவே, உன்னிடம் மன்னிப்புக் கேட்கிறேன். சுநீதி உனக்கு நான் அடிமை." விழுந்து வணங்கியவளை சுநீதி வாரி அணைத்துக் கொண்டாள்.

அவர்கள் சகோதரிகளைப் போல் தழுவிக் கொண்டனர். அரசன் ஒரு சாதாரணனைப் போல் கைகட்டி வேடிக்கைப் பார்த்தான்.

சுருசியின் மகன் உத்தமன். சகோதரனின் உயர்வைப் புரிந்து கொண்டு இளவரசுக் கிரீடத்தை அவன் காலில் வைத்தான். அன்றே அரசனும் விலகிக் கொள்ள துருவன் மன்னனானான்.

காடும், நாடும் ஒன்றே. மரவோரும், ரத்தின சிம்மாசனமும் ஒன்றே. மண்ணும் மலர் மஞ்சமும் ஒன்றே. உயிரிலிருந்து உலகைப் பார்க்கிறவன் ஆட்சியில் எல்லா உயிர்களும் சந்தோஷமாக இருந்தன.

நன்கு வாழ்ந்து உடல் மறைந்த பிறகு துருவன் நட்சத்திரமானான். என்றும் நிலையான இடத்தில் குடி புகுந்தான்.

இந்தக் கதையின் அடிப்படை விஷயம் என்ன. இந்தக் கதை என்ன விஷயம் சொல்கிறது. இதன் சூட்சுமம் என்ன.

உலகம் தோன்றிய நாள் முதலே மாற்றாந்தாய் நடவடிக்கை என்பது வந்துவிட்டது.

புறக்கணிப்பது என்பது மனித வாழ்க்கையில் இயல்பாகி விட்டது.

நீங்கள் உங்கள் எஜமானராலோ, உங்கள் கணவராலோ, உங்கள் மனைவியாலோ, உங்கள் பெற்றோர்களாலோ, உங்கள் குழந்தைகளாலோ, சகோதர, சகோதரிகளாலோ, நண்பர்களாலோ, குருவாலோ, சீடர்களாலோ, அண்டை அயலாளர்களாலோ புறக்கணிக்கப்படலாம்.

தரதரவென்று நீங்கள் இழுக்கப்பட்டு வெளியேற்றப் படலாம். அவமானப்படுத்தப்படலாம். அதட்டப்படலாம். இந்தப் புறக்கணிப்பிற்குப் பயந்து விடாதீர்கள்.

பெருத்த அவமானமாய் நினைத்து விடாதீர்கள். உடைந்து போகாதீர்கள்.

துருவனைப் போல் தவம் செய்யத் துவங்குங்கள். தவம் என்பது தனித்திருத்தல். தனித்து இருந்து தன்னைப் பற்றிச் சிந்தித்தல்.

உங்களைப் பற்றி சிந்திக்க, சிந்திக்க உங்கள் பலமும், பலவீனமும் தெரியும். எப்போது இவை தெரிகிறதோ அப்போது உங்கள் பலத்தை நீங்கள் உயர்த்திக் கொள்ள முடியும். உங்கள் உடல்பலம், மனோபலம், புத்திபலம் உயர உங்கள் வாழ்க்கை நிலையும் உயரும்.

உங்கள் வாழ்க்கை நிலை உயர்ந்தால், உங்களைப் புறக்கணித்த உலகம், உங்களை அவமானப்படுத்திய உலகம், மறுபடி உங்களைக் கண்டு வணங்கும்.

தனித்திருத்தல் என்கிற மகத்தான விஷயத்தை துருவன் கதை உங்களுக்குச் சொல்லித் தருகிறது.

மிகச் சாதாரண கேள்வியோடுதான் துருவன் தவம் செய்யப் போனான். எனக்கு என் அப்பா வேண்டும் என்று மிக மெலிதான சந்தோஷத்தைக் கேட்கப் போனான். அவனுக்குப் பிரபஞ்சமே கைக்குக் கிடைத்து விட்டது.

அப்பாவின் மடியைக் கேட்டவனுக்கு, நட்சத்திரமே ஆசனமாகி விட்டது. உங்களை நீங்களே தெரிந்து கொண்டபிறகு நீங்கள் விரும்பிய பல விஷயங்கள் உங்களுக்குத் தேவையில்லாதவை என்று புரிந்துவிடும்.

உங்களை நாடி வந்த பல சுகங்களை நீங்கள் சிரித்தபடி விலக்கி விடுவீர்கள். பணமும், பதவியும் உங்களோடு ஒட்டிக் கொண்டிருக்கும். நீங்கள் அவைகளோடு ஒட்ட மாட்டீர்கள்.

துருவன் கதையை திரும்பத் திரும்ப யோசித்துப் பாருங்கள். தனித்திருக்க, தவிக்க ஆரம்பித்து விடுவீர்கள்.

# பிரகலாதன்



பிரும்ம முகூர்த்தத்தில் கண்விழித்து ஹிரண்யகசிபு தன் மாளிகை விட்டு வெளியே வந்து உப்பரிகை மீது நின்றான். அவன் கண்ணெதிரே அத்தேசம் அமைதியாக தூங்கிக் கொண்டிருந்தது. புரவிகளில் ஏறி தீப்பந்தங்களுடன் காவலர்கள் காவல் காத்துக் கொண்டிருந்தார்கள். கோட்டைக்கு வெளியே மந்தை மந்தையாய் ஆநிரைகள் மடக்கப் பட்டிருந்தன. அவைகளின் குரலோசையும் மணிஓசையும் இடைவிடாது கேட்டுக் கொண்டிருந்தன.

ஒரு தேசத்திற்கு பசுக்கள்தான் செல்வங்கள். அந்த செல்வங்கள் மிகப்பெரிய அளவில் ஹிரண்யகசிபுவிடம் இருந்தன. வெவ்வேறு தேசத்துப் பசுக்கள் ஓட்டப்பட்டு அவன் கோட்டை வாசலில் கட்டப்பட்டிருந்தன. பல்வேறு மன்னர்களுடன் போரிட்டு ஜெயித்து, அவைகளின் செல்வங்கள் கொள்ளையடிக்கப் பட்டு அவனுடைய பண்டாரக சாலையில் குவிக்கப் பட்டிருந்தன. நூறு தலைமுறைகளுக்கு குறைவில்லாத செல்வம் அவன் கோட்டைக்குள் குவிந்து கிடந்தது. ஒரு நிறைவான வாழ்க்கைக்கு அவன் கடுமையாக உழைத்திருந்தான்.

ஒரு அரசன் என்பவன் சோம்பித் தூங்கலாகாது. அரசனுக்கு எந்நேரமும் வேலையிருக்கும். இடையறாது உழைக்க வேண்டிய அவசியம் இருக்கும். ஹிரண்யகசிபு உழைப்புக்கு அஞ்சாதவன். கூர்ந்த புத்தியுடன் செயல்களைத் திட்டமிட்டு செய்பவன். புலன்களை வசப்படுத்தி அடக்கி ஆண்டு தன்னுடைய வலிமையைப் பெருக்கிக் கொண்டவன்.

உலகத்திலுள்ள அத்தனை உயிரினங்களும் அவனுக்குப் பயந்தன. பிரபஞ்சத்திலுள்ள அத்தனை தேவர்களும் அவனைக் கண்டு நடுங்கினார்கள். பிரபஞ்சத்தின் எந்தப் பகுதிக்கும் மனம் நினைக்கும் வேகத்தில் அவனால் போய்வர முடிந்தது. அவன் ஆற்றல் முழுவதும் அவன் கடுமையான தவத்தால் கிடைத்தது. அயர்ச்சியே இல்லாத ஹிரண்யகசிபு வாழ்க்கையின் பல வெற்றிகளைக் கண்டு அமைதியாகி நிதானமாகி ஒவ்வொரு நாளையும் அனுபவிக்கத் துவங்கினான். மிக கம்பீரமாய் தன் தேசத்தை ஏறிட்டுப் பார்த்தான். இங்கு என்னைப் போற்றுகின்ற மக்கள் ஏராளம். என்னைக் கண்டவுடன் நடுங்குகின்ற போர் வீரர்கள் ஏராளம். எனக்கு அருகே வர அச்சப்பட்டு கண்கிறங்கித் தவிக்கின்ற பெண்கள் ஏராளம்.

புலவர்களும், ஞானிகளும், மேதைகளும் என்னை நமஸ்கரித்து நான் நீடூழி வாழ வேண்டுமென்று வாழ்த்துகிறார்கள். என்னிடம் ஆலோசனை கேட்கிறார்கள். கவிதையாக இருந்தாலும் சரி, கடிதமாக இருந்தாலும் சரி, கோட்டை கொத்தளம் கட்டுவதாக இருந்தாலும் சரி, படை நடத்துவதாக இருந்தாலும் சரி, அரசியல் சூழ்ச்சியாக இருந்தாலும் சரி என்னிடம் அருகே வந்து ஆலோசனை கேட்கிறார்கள். என் முடிவுகளையே தங்கள் முடிவுகளாக எடுத்துக் கொண்டு போகிறார்கள்.

இவர்கள் யாரும் எட்ட முடியாத ஒரு விஷயம் இந்த ஹிரண்யகசிபுவிடம் இருக்கிறது. ஹிரண்யகசிபு மெல்ல சிரித்துக் கொண்டு உப்பரிகையில் உலாவினான். தன்னைத் தானே குனிந்து கர்வத்துடன் பார்த்துக் கொண்டான். பின் கைகட்டி எதிரே தெரியும் தேசத்தை பார்த்து ஏளனமாகச் சிரித்தான்.

என்னிடம் இருக்கின்ற அற்புதமான விஷயம் புலனடக்கம். பசியாக இருந்தாலும் சரி, காமமாக இருந்தாலும் சரி, தொடு உணர்ச்சியாக இருந்தாலும் சரி என்னால் அதை என் புத்தியிலிருந்து அகற்ற முடியும். வெளியே தலை காட்டாதே என்று அதட்டி ஒரு ஓரத்திற்கு அனுப்ப முடியும். எப்போது வேண்டுமோ அப்போது மறுபடியும் சொடுக்கிக் கொண்டு வர முடியும். இந்தப் புலனடக்கத்திற்குப் பெயர்தான் தவம்.

பலநூறு வருடங்கள் தவம் செய்து உடம்பின் ஒவ்வொரு நாடி நரம்பையும் சுத்தப்படுத்தி, மரணம் என்கிற விஷயம் நெருங்காமலிருக்க வரம் வாங்கியாகி விட்டது. யார் படைப்புக்கு காரணமாக இருந்தாரோ அவரையே தவ வலிமையால் அழைத்து, எனக்கு மனிதர்களாலோ, மிருகங்களாலோ, பறவைகளாலோ, உள்ளேயோ, வெளியேயோ, இரவிலோ, பகலிலோ, மேலோ, கீழோ மரணம் சம்பவிக்கக் கூடாது என்று தெள்ளத் தெளிவாக வரம் வாங்கியாகி விட்டது.

தவத்தின் வலிமைக்குக் கொடுத்துத்தானே ஆகவேண்டும். படைத்தவன் அள்ளிக் கொடுத்து விட்டு கைகட்டி நின்றான். அவன் நின்ற நேரம் சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது.

இப்போதும் சிரிப்பு வருகிறது. ஹிரண்யகசிபு வாய் விட்டு சிரித்தான்.. உலகத்தில் அறிஞர் முதல், அரசர் வரை.. மன்னர் முதல் பிச்சைக்காரன் வரை பயப்படுகின்ற விஷயம் எது, மரணம்தானே. அந்த மரணத்தையே வென்றுவிட்ட பிறகு எதை குறித்து பயம். எதை நினைத்து புது அச்சம். எனவே இங்கே எதை நினைத்தாலும் சிரிப்பாகத்தான் இருக்கிறது. யார் வலிமை உள்ளவன் என்று வந்து நின்றாலும், வாய்விட்டு சிரிக்கத் தோன்றுகிறது. நான் நிரந்தரம் என் கவிதையால் என் பெயர் நிரந்தரம் என்று எவரேனும் சொன்னால் அப்படியே வாழ்க வாழ்க என்று கண்சிமிட்டத் தோன்றுகிறது.

நிரந்தரம் என்பதை இந்த ஹிரண்யகசிபுதான் முதன் முதலில் உருவாக்கினான். உலகத்தில் எதுவுமே நிரந்தரமில்லை என்று எல்லோரும் சொல்லிக் கொண்டிருந்த போது, இந்த ஹிரண்யகசிபு நிரந்தரம் என்று பெயர் வாங்கினான். இதற்கு அடிப்படைக் காரணம் தவ வலிமை. தவ வலிமைக்கு அடிப்படைக் காரணம் புத்தி. புத்தியை சரியாக யார் அணுகுகிறார்களோ, புத்தியோடு தன்னை சரியாக யார் உற்றுப் பார்க்கிறார்களோ, அவர்களுக்கு புலனடக்கம் உடனே வந்து விடுகிறது. புலனடக்கத்தைப் பின்பற்றிப் போனால் தவத்தின் உச்சக் கட்டத்தை வெகு எளிதாக அடையலாம்.

எனவே, புத்திமானே பலவான். ஹிரண்யகசிபு தன்னுடைய தோளைத் தானே தடவிக் கொண்டான். ஆனால், மக்கள் இருக்கிறார்களே அவர்கள் அரசரைக் காட்டிலும் கெட்டிக்காரர்கள். அரசரைச் சுற்றியிருக்கின்ற அரசசபை ஆட்கள் இருக்கின்றார்களே அவர்கள் மக்களை

விட கெட்டிக்காரர்கள்.

இந்த அரசன் நிரந்தரம். இவரை யாரும் அசைக்க முடியாது என்று தெரிந்து விட்டால், அவரை தொழுது வணங்கி பாட்டுப்பாடி, ஆட்டம் ஆடி, அரசனை கிறுகிறுக்கச் செய்து விடுவார்கள். இந்த கிறுகிறுப்பிலிருந்து அரசன் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

அரசவை முழுவதுமே புகழ் பாடிகளாய் போய் விட்டது. அதுவும் குறிப்பாய் இந்தக் கவிஞர்கள் பாட ஆரம்பித்தால் காது புளித்துப் போகிறது. வாழ்த்த வயதில்லை.. வணங்குகிறோம் என்று தொண்டு கிழமே வாழ்த்த பயப்படுகிறது என்பதால், நேற்று முளைத்த சின்னப்பயல்களெல்லாம் இதையே சொல்லி ஏகத்திற்கு கவிதைகள் எழுதுகிறார்கள். புகழ்ச்சி கேட்டு அலுத்துப் போய்விட்டது.

இப்படியே தனியே பிரம்ம முகூர்த்தத்தில் நின்று தன்னைத்தானே வேடிக்கைப் பார்த்துக் கொள்வது, தனக்கு எதிரி யார் என்று யோசிப்பது சுகமான அனுபவமாய் இருக்கிறது. எவர் எதிரே வந்தாலும் வணங்கப் போகிறார், வணங்கிவிட்டு வாயாரப் புகழப் போகிறார் என்று தெரிகிறபோதே, அவரை அப்புறப்படுத்தத்தான் தோன்றுகிறது. ஆனால் அப்புறப்படுத்தினால் அவர்கள் எங்கு போவார்கள். அதனால் புகழ்ந்து விட்டு போகட்டும் என்று வெறுமே புகழ்ச்சியை காது கொடுத்துக் கேட்காமல், வேறு ஏதேனும் சிந்தித்துக் கொண்டிருப்பது ஹிரண்யகசிபுவின் இயல்பாயிற்று.

கவிஞர்களைவிட இந்த மந்திரிசபை இன்னொரு வாலாட்டிக் கூட்டம். தான் எழுந்தால் அதுவும் எழுந்திருக்கும். தான் கனைத்தால் அதுவும் கனைக்கும். தான் தலையைத் தடவிக் கொண்டால் அதுவும் தலையைத் தடவிக் கொள்ளும். தான் நடந்தால் அதுவும் பின்னே ஓடிவரும். தான் பேச முற்படுவதற்கு முன் கைகட்டி நிற்கும். மந்திரிகளுக்கு என்ன சொல்வது என்று இன்னமும் தெரியவில்லை. வாயிலிருந்து வார்த்தைகளைக் கையில் ஏந்திக் கொண்டு இதை செய்யட்டுமா என்று கட்டளைகளுக்காவே காத்து நிற்கிற பிறவிகளாய் போய் விட்டார்கள். ஆனால், இவர்கள் இப்படி இருப்பது சௌகர்யமாய்த்தான் இருக்கிறது. சுயமாய் சிந்திக்கிற மந்திரி ஆபத்தானவன். அவனை அப்புறப்படுத்த வேண்டியது அவசியம் என்று உடனே தோன்றி விடுகிறது.

மந்திரி சபையை விட மோசம் இந்த மக்கள் கூட்டம்.



ஆட்டுமந்தை என்று வர்ணித்திருக்கிறார்கள். எவ்வளவு சரியாக இருக்கிறது. எதற்கு கத்துகிறோம், எதற்கு வாழ்த்துகிறோம், ஏன் இங்கு நிற்கிறோம் என்று தெரிவதே இல்லை. வெறுமே இருள் பிளக்க கூச்சலிடுகிறார்கள். தன்னைப் பார்த்ததும் கண்களில் ஜலம் வழிய, கை கூப்பி அரற்றுகிறார்கள். கடவுளைக் கண்டது போல் கதறுகிறார்கள். ஆனால், நகர்ந்து போனதும் சட்டென்று முகம் மாறிவிடுகிறார்கள். கலைந்து போகும்போது ஒரு நாடக நடிகன் முகத்தைத் துடைத்துக் கொண்டு போவது போல, வேறுஒரு பாவனைக்குப் போய் விடுகிறார்கள். இவர்களைவிடத் தேர்ந்த நடிகர்கள் யாருமில்லை என்று தோன்றுகிறது. எனவே எப்போதும் இவர்கள் மீது ஒரு கண் வைத்துக் கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

மக்களைக் கவனிக்க மிகப் பலமான ஒரு ஒற்றப்படை ஹிரண்யகசிபுவிடம் இருந்தது. அந்த ஒற்றர்படையை கவனிக்க இன்னொரு ஒற்றர்படை ரகசியமாக நிறுவப்பட்டது. ஒற்றர்படையைக் கவனிக்கும் ஒற்றர்படையை ஹிரண்யகசிபு அடிக்கடி ரகசியமாய் ஒற்றறிந்து வந்தான்.

எல்லாக் கோணத்திலும் வாழ்க்கை சந்தோஷமாகத்தான் நகர்ந்து வந்தது. இது உண்மையான சந்தோஷம்தானா என்று அடிக்கடி கேள்வி எழுந்தது. ஹிரண்யகசிபு தூக்கம் வராமல் இப்போது எழுந்தது கூட அந்தக் கேள்வியால்தான்.

தனக்கு எதிரி என்பவர் உண்டா.

ஆமெனில் அவர் எங்கிருக்கிறார்.

எதிரி இல்லாத வாழ்க்கை அலுப்பாய் இருக்கிறதா. ஒரு எதிரியை நாமே உருவாக்கிக் கொண்டு நாமே அழித்து விடலாமா. அல்லது உண்மையாய் எதிரி யாரும் உண்டா என்று தேடலாமா. ஹிரண்யகசிபு யோசித்தான். எதிரியே யாரும் இல்லையெனில் எதிரியை உருவாக்கிக் கொள்ளலாம். எதிரியே இல்லை என்கிற முடிவுக்கு எப்போது வருவது. ஒருமுறை தேடிவிட்டு வருவோம் என்று யோசித்தான்.

எங்கே தேடுவது. பரதகண்டம் முழுவதும் எதிரி இல்லை. உலகத்தின் மற்ற பகுதிகளிலும் எதிரி இல்லை. பிரபஞ்சத்திலும் எதிரி இல்லை.. எதிரி வேறு எங்கு இருக்கக்கூடும். யோசித்தான்.

இந்த பிரபஞ்சம் யாரால் உருவாக்கப்பட்டது. அவர் எங்கிருக்கிறார் என்று தெரியவில்லை. உருவாக்கப்பட்ட அவர் ஒருவேளை தன் முன் தோன்றினால் அவர் தனக்கு எதிரியாகக் கூடும். உருவாக்கியவன் நீ ஏன்

இங்கிருக்கிறாய் என்கிற கேள்வி எழுப்பக்கூடும். எனவே இந்த பிரபஞ்சத்தை உருவாக்கியவன் யார். இதன் ஆதி எது என்று நாம் கண்டு பிடிக்க வேண்டும் என்று யோசித்தான். அவன் புத்தி கூர்மையாயிற்று.

ஆதி எது. எது ஆரம்பம். எதனால் ஆரம்பம். எங்கு ஆரம்பம். என்று ஆரம்பம் என்று அவன் புத்தி தேடத் துவங்கியது. தேடுகிற விஷயம்தான் தவம் என்று இந்த உலகத்தில் அழைக்கப்படுகிறது. அவன் வெளியே தேடாமல் தனக்குள் தேடத் துவங்கினான். தன் புத்தியால் தன் ஆதாரசக்தி எது என்று தேட ஆரம்பித்தான்.

ஆனால், அது எளிதான விஷயமில்லை. இந்த உலகத்தில் இரும்பு காலில் இடறியது. அட.. இது கத்திக்காகுமே என்று மனிதன் செய்து வைத்துக் கொண்டான். மரம் எதிரே தென்பட்டது. இதில் தேர் செய்யலாமே என்று கணக்கு போட்டான். குதிரைகள் நாலா பக்கமும் வேகமாய் ஓடுவதைப் பார்த்தான். இதில் சவாரி செய்யலாமே என்று திட்டம் தீட்டினான். பறவைகள் கூடுகட்டுவதைப் பார்த்தான். தான் கோபுரத்தோடு வீடு கட்டிக் கொண்டான். வெளியே இருக்கின்ற பொருள்களைப் பார்த்தவுடன் அதன் உபயோகங்கள் அவனுக்குத் தெரியத் துவங்கின.

ஆனால், உள்ளே பார்க்கும் போது திகைப்புதான் மிஞ்சியது. உள்ளே இருப்பது என்னவென்று அவனுக்குத் தெரியவில்லை. அதை உபயோகப் படுத்தவும் போதுமான அறிவு இல்லை.

ஹிரண்யகசிபுவின் புத்திசாலித்தனம் வெளியே செல்லுபடியாயிற்று. உள்ளே போகும் போது திகைத்து நின்றது. திகைப்பால் புத்தி தன் வேலையைத் தொடர முடியவில்லை. அவனுக்கு அலுப்பு வந்தது.

மெல்ல திரும்பிப் பார்த்தான். அவனுடைய குழந்தை பிரகலாதன் மெல்ல எழுந்து கைகூப்பி வணங்கிக் கொண்டிருந்தான்.

ஹ.. இது எழுந்து விட்டதா. ஆவலோடு எழுந்து குழந்தைக்கு அருகே போனான்.

கண் மூடி கைகூப்பி தொழுது கொண்டிருந்த குழந்தையைத் தொட்டு ஆசீர்வாதம் செய்தான்.

"அப்பனே.. உனக்கு சர்வமங்களம் உண்டாகட்டும்."

பிள்ளை எழுந்து தகப்பனை நமஸ்கரித்தது.

"பிரகலாதா, நன்கு தூங்கினாயா." ஹிரண்யகசிபு பாசம் பொங்க கேட்டான்.

"நன்கு தூங்கினேன் அப்பா."

"பசிக்கிறதா."



"ஆமாம் அப்பா."

"ஏதேனும் சாப்பிடுகிறாயா."

"சரி அப்பா."

"என்ன சாப்பிடுகிறாய்."

"நீங்கள் எது கொடுத்தாலும் சாப்பிடுகிறேன் அப்பா."

பிரகலாதனுடைய சிறப்பே இதுதான்.

ஹிரண்யகசிபுவுக்கு மற்ற குழந்தைகளைவிட பிரகலாதன் மீது அதீத ஈடுபாடு வரக் காரணம் இதுதான். பிரகலாதன் இது கொடு அது கொடு என்று தேர்ந்தெடுப்பதேயில்லை. இது வேண்டும்.. அது வேண்டும் என்று பிடிவாதம் பிடிப்பதே இல்லை. எது கொடுத்தாலும் எடுத்துக் கொள்கிற ஒரு இனிமையான இயல்பு அவனிடமிருந்தது. எல்லாம் சரி என்கிற அமைதி அவன் முகத்தில் ததும்பியிருந்தது.

"உனக்கு என்ன பிடிக்கும்.. அது கேள். தருகிறேன்." ஹிரண்யகசிபு மகனிடம் கர்வத்தோடு சொன்னான்.

"நீங்கள் என்ன கொடுத்தாலும் அதை ஏற்கிறேன் அப்பா." மறுபடியும் இனிமையாக பிரகலாதன் தந்தையைப் பார்த்துக் கூறினான்.

ஒரு சொம்பு நிறைய பால் வரவழைத்து குழந்தைக்குத் தந்தான். சுத்தி செய்து உடம்பை ஈரத்துணியால் துடைத்து தலைவாரி பொட்டிட்டு பாலை ஆற்றி தந்தையே கொடுக்கும் போது குழந்தை ஆவலாய் வாங்கிப் பருகியது.

தன் குழந்தை தான் கொடுத்த உணவை உண்ணுவது பார்த்து தந்தைக்கு பெருமிதம் பொங்கியது. இவனை சான்றோனாக்க வேண்டும். மிகுந்த வலுவுள்ள அரசனாக்க வேண்டும், எல்லோரும் பயப்படும்படியான போர் வீரனாக மாற்ற வேண்டும். எல்லோரும் புகழ்ந்து பேசுகின்ற அறிவாளியாக இவன் திகழவேண்டும். காலாகாலத்துக்கும் இவன் என் பெயரை, 'என்தந்தையினுடைய அடிச்சுவடு நான்' என்று என் பெயரைச் சொல்லிக் கொண்டிருக்க வேண்டும் என்று ஆவல் உள்ளே பொங்கிற்று.

தன்னை புகழ்வதற்கு ஆயிரம் புலவர்கள் இருக்கிறார்கள். ஏகப்பட்ட பெண்கள் இருக்கிறார்கள். பயந்து போன மாற்றரசர்கள் இருக்கிறார்கள். அறிஞர்கள் இருக்கிறார்கள். ஞானிகள் இருக்கிறார்கள். ஆனால், பெற்ற மகன் தந்தையைப் புகழும் போது ஏற்படுகின்ற சுகமே தனியான விஷயம்.

பிரகலாதன் வாய் நிறைய தன்னை வாழ்த்த வேண்டும் என்று ஹிரண்யகசிபுவுக்குத் தோன்றியது.

பிரகலாதன் அமைதியாய் பாலைக் குடித்துவிட்டு,

"அப்பா, நான் விடைபெற்றுக் கொள்ளட்டுமா" என்று பணிவாகக் கேட்டான்.

"எங்கே போகப் போகிறாய் பிரகலாதா."

"ஆற்றங்கரைக்குப் போகப் போகிறேன்."

"ஆற்றங்கரைக்குப் போய் என்ன செய்வாய்."

"நண்பர்களோடு விளையாடுவேன்."

"பிறகு என்ன செய்வாய்."

"அவர்களோடு பள்ளிக்குச் செல்வேன்."

"பிறகு"

"குருவை நமஸ்கரித்துப் பாடம் கேட்பேன்."

"பிறகு"

"மறுபடியும் ஓடிவந்து உங்களுக்கு அருகே உட்கார்ந்து கொள்வேன்."

"ஹா.. போய் வா. போய் படித்து விட்டு என்ன படித்தாய் என்று எனக்குச் சொல்."

தந்தை கட்டளையிட பிரகலாதன் விழுந்து வணங்கி வாசல் நோக்கி ஓடினான்.

வெளியே பொழுது விடிந்து கொண்டிருந்தது.

ஹிரண்யகசிபு ஆவலோடு பிரகலாதனை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.

**பி**ரகலாதன் என்பது மனம். மனம் என்பது குழந்தைத் தனமுடையது. எல்லாவற்றையும் ஆச்சர்யத் தோடு பார்ப்பது. எல்லாவற்றையும் அப்படியே ஏற்றுக் கொள்வது. எங்கே நல்லது கெட்டது என்று வந்து விடுகிறதோ அங்கு புத்தி வேலை செய்கிறது என்று அர்த்தம். மனதிற்கு நல்லது கெட்டது தெரியாது. மனம் வெறுமே ஸ்வீகரிக்கக் கூடிய தன்மை கொண்டது. அதை பகுத்துப் பார்ப்பது புத்தி.

இங்கே பிரகலாதன் என்கிற விஷயம் குழந்தையாக மனிதருடைய மனமாக உருவகிக்கப்பட்டு கதை சொல்லப் படுகிறது.

பிரகலாதன் ஆனந்தமயமான நிலையில் இருந்தான். மனதின் இயல்பு இடைவிடாத சந்தோஷம். மனதின் இயல்பு அமைதி. மனதின் இயல்பு அன்பு. மனதில் புத்தி புகுந்துவிட, இவையெல்லாம் சிதைந்து விடுகின்றன.

ஹிரண்யகசிபு பிரகலாதன் என்கிற விஷயத்தில் தன்னைப் பொருத்திக் கொள்ள ஆசைப்பட்டான். பிரகலாதன் அதை அனுமதிக்காமல் வெறுமே தன் இயல்போடு இருந்தான்.

இதுதான் இந்தக் கதை.

பிரகலாதன் ஆற்றங்கரை நோக்கி ஓடினான்.



முழங்காலளவு தண்ணீரில் நின்றான். கிழக்கு நோக்கிப் பார்த்தான். சூர்ய உதயம் துவங்கியிருந்தது. அந்த சூர்ய உதயம் மிகுந்த பிரமிப்பை அவனுக்குக் கொடுத்தது. 'எத்தனை துல்லியமான கணக்கு. இதை யார் எழுப்புகிறார்கள். யார் கத்துகிறார்கள். எதனால் இந்தக் கோளம் அக்னியை உமிழ்ந்து நம்மை வாழ வைத்துக் கொண்டிருக்கிறது. இதனுடைய தன்மை பூமிக்கு எத்தனை சுகத்தைத் தந்து கொண்டிருக்கிறது. இது இங்கிருக்கவும், அது அங்கு நகரவும் யார் விதித்தது. இந்தச் சுடர்களெல்லாம் யார் படைப்பு. மெல்ல மெல்ல வெளிச்சம் பரவிக் கொண்டிருக்கிறதே, இது எவரால். பூக்கள் மலர்கின்றனவே யாரால். பறவைகள் இத்தனை அழகாகப் பாடுகின்றனவே, யார் இந்த சக்தியைக் கொடுத்தது. மான்கள் துள்ளி ஓடுகின்றனவே இந்த அழகு எப்படி வந்தது. இதற்கு ஆதி காரணம் என்ன. எங்கிருந்து இந்த சக்தி. எதனுடைய விகசிப்பு இது' என்று அவனுடைய மனம் வெறுமே யோசிக்கத் துவங்கியது.

'அடே... இது சக்தி. சூரியனுக்குள் ஒருசக்தி. சந்திரனுக்குள் ஒருசக்தி. மான் துள்ளலில் ஒருசக்தி. பூ மலர்வதில் ஒருசக்தி . காற்று வீசலில் ஒருசக்தி. பூமி சுழற்சியில் ஒருசக்தி. வெப்பத்தில் ஒருசக்தி. நீரில் ஒருசக்தி. எல்லா இடத்திலும் ஒருசக்தி நீக்கமற நகர்ந்து கொண்டிருக்கிறது. கண்ணுக்குத் தெரியாமல் ஒவ்வொரு இடத்திலும் அசைந்து கொண்டிருக்கிறது. இதற்கு என்ன பெயர். இந்த சக்தியை என்னவென்று அழைப்பது.'

யோசிக்கும் போது சக்தி கிளர்ந்து எழுந்தது. அவன் முன்பு நின்றது. சிரித்தது.

வீசி எறிந்த மணல் துகள் போல, எந்த உருவமும் இல்லாது நகர்ந்து கொண்டேயிருக்கிற இந்த சக்தியை பிரகலாதன் பார்த்தான். 'இதோடு எப்படி பேசுவது. இதுவரை நாம் பேசியதெல்லாம் உருவமுள்ள வற்றோடுதானே. உருவமற்ற விஷயத்தோடு நாம் பேசியதே இல்லையே. உருவமற்ற உன்னோடு நீயார் என்று கேட்டால் என்ன பதில் சொல்வாய். உருவமாக உன்னை பார்க்க முடியாதா' என்று அவன் மனம் ஏங்க அவன் மனமே உருவத்தைக் கற்பனை செய்தது.

நான்கு கைகளும் அவனைப் போன்ற அழகான முகமும், சுருள் கேசமும் சிவந்த உதடும், நீலநிற மேனியும் அழகிய உடைகளும், முத்து மாலைகளும், கையில் சங்கும் சக்கரமும், கதையுமாய் திருமால் அவன் முன் தோன்றினார்.

நீ விரும்பியபடியே உனக்கு உன் எதிரே வந்து நின்றேன் என்பதாய் மெல்லச் சிரித்தார்.

பிரகலாதன் புரிந்து கொண்டான். கை கூப்பினான்.

சக்திக்கு எத்தனையோ ரூபம், இதுவும் ஒன்று என்று நினைத்துக் கொண்டான். சக்திக்கு உருவமில்லை. ஆனால், உருவம் வேண்டுமெனில் உருவத்தோடு, உருவம் வேண்டாமெனில் உருவம் இல்லாமலும் இருக்க முடியும். கடவுள் என்கிற தன்மைக்கு இதுதான் என்று பெயர் வைக்கவே முடியாது. கடவுள் என்கிற தன்மை எல்லாம் கடந்தது. எல்லாமாக இருப்பது.

பிரகலாதன் கைகூப்பினான்.

இந்த உருவத்திற்கு ஏதேனும் பெயர் வைக்க வேண்டுமே என்று தோன்றிய போது அவனுக்குள் ஒரு வார்த்தை ஸ்புரித்தது.

'ஓம் நமோ நாராயணாய நம.' என்று அவன் வாய் விட்டு கூறினான். அப்படி அந்த சொல்லும் கடவுள் தன்மையால்தான் தனக்குக் கிடைத்தது என்பதைப் புரிந்து கொண்டான்.

மிக சிநேகமாக கடவுளை நோக்கி புன்னகை செய்தான்.

கடவுளும் அவனை நோக்கி புன்னகை செய்தார். அவர்கள் பேசிக்கொள்ளவில்லை. பார்த்துக் கொண்டார்கள். அவர்கள் வேறு ஏதும் பரிமாறிக் கொள்ளவில்லை. ஒருவரையொருவர் முற்றிலுமாய் அறிந்து கொண்டார்கள். பிர்கலாதன் எதையும் யாசிக்கவில்லை. கடவுள் எதுவும் பிரகலாதனுக்குக் கொடுக்கவில்லை. பிரகலாதனுக்கு கடவுள் என்கிற விஷயத்தின் இருப்பு புரிந்தது. இருப்பை பிரகலாதனுக்குக் காட்டிய சந்தோஷம் கடவுளுக்கு இருந்தது.

கடவுளைக் கண்டவர்கள் இவ்விதம்தான் இருக்கிறார்கள். கேட்கிறவர்களும், கேட்டுக் கிடைத்ததாய் சொல்கிறவர்களும் கடவுளைப் பார்த்தவர்கள் அல்லர். இடைவிடாது இடைவிடாது, 'ஓம் நமோ நாராயணாய நம, என்று பிரகலாதன் சொல்லத் துவங்கினான். அவன் ரத்தத்தின் ஒவ்வொரு அணுவும் இதைத் திரும்ப உள்வாங்கி எதிரொலித்தன. அவன் உடம்பு முழுவதும் இந்த வார்த்தையை இடைவிடாது கூறியது.

அவன் மிகுந்த மலர்ச்சியோடு பள்ளியை நோக்கி நடந்தான். கடவுள் அவனுக்குள் உட்கார்ந்திருந்தார்.

பள்ளிக்கூடத்திற்குள் குருவின் குரல் ஓங்கி ஒலித்துக் கொண்டிருந்தது. குரு 'ஓம் ஹிரண்ய கசிபுவே நம' என்று உரக்கச் சொல்லிக் கொண்டிருக்க, நிறைய குழந்தைகள் அவர் சொல்வதைத் திருப்பி சொல்லிக் கொண்டிருந்தார்கள்.



நிறைய குருமார்கள் தங்களை விற்றவர்கள். தான் யாரென்று அறியாதவர்கள். வெறும் பிரச்சாரகர்கள். பிரச்சாரகர்களுக்கு குரு என்று பெயர் வைக்க முடியாது. கடவுளைக் கண்டவர்கள் பிரச்சாரம் செய்வதில்லை. தெரிந்ததாகப் பொய் சொல்கிறவர்கள்தான் பிரச்சாரம் செய்கிறார்கள். பிரச்சாரகர்களுக்கு குரு என்று பெயரில்லை. ஆனாலும், அவர்கள் தங்களைத் தாங்களே அப்படி கூப்பிட்டுக் கொள்கிறார்கள். மிக உயர்ந்த பதவியை எடுத்து தங்களுடைய அக்குளில் வைத்துக் கொள்கிறார்கள். அவர்களால் கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாது. எதிர்த்து அதட்டத்தான் முடியும். கேள்வி கேட்காத குழந்தைகளைத்தான் அதிகம் கொஞ்சுவார்கள்.

பிரகலாதன் உள்ளே நுழைந்ததும் குருமார்கள் எழுந்து நின்று வணக்கம் சொன்னார்கள். கடவுளை அறிந்தவர் எவருக்கும் பயந்து கை கட்டுவதில்லை.

"அடே பிரகலாதா.. குளித்து விட்டாயா." போலியான ஒரு அதட்டலை வரவழைத்துக் கொண்டு பிரகலாதனை கொஞ்சுவது போல அதட்டினார்கள்.

"இல்லை குருவே."

"பளபளவென்று இருக்கிறாயே. குளித்து விட்டாயோ என்று நினைத்தேன்."

"பாடம் முடிந்த பிறகு ஒன்றாக குளிப்பதுதானே வழக்கம்."

"ஆமாம். ஆனால் இத்தனை பிரகாசமாய் இருக்கிறாயே. இந்தப் பிரகாசம் எங்கிருந்து வந்தது."

பிரகலாதன் பதில் சொல்லவில்லை. வெறுமே பார்த்துக் கொண்டு இருந்தான்.

'பிரகாசம் எங்கிருந்து வந்தது.' தன்னையே குனிந்து கேட்டுக் கொண்டான். தன்னைப் பார்த்தான்.

உட்கார்ந்து கொண்டிருந்த கடவுள் அவனைப் பார்த்து சிரித்தார்.

இதற்கு பதில் சொல்ல வேண்டாம். சும்மா இரு என்பது போல் அவனை நோக்கினார். அவன் மௌனமாக குருவைப் பார்த்து சிரித்தான்.

'தினமும் பசும்பால் சாப்பிட்டால் முகம் பிரகாசமாய் இருக்கும்.' குரு தனக்குத்தானே பதில் சொல்லிக் கொண்டார்.

ஏதேனும் ஒருபதில் சொல்லியாக வேண்டிய நிர்பந்தம் அவருக்கு அங்கு ஏற்பட்டு விட்டது.

அதனால்தான் பல பெரிய கேள்விகளுக்கு மிக மிக அல்பமான பதில்களை பல குருமார்கள் சொல்கிறார்கள்.

"சரி.. வந்து பாடத்தைக் கவனி."

"ஓம் ஹிரண்யகசிபுவே நம." அவர் மறுபடி மறுபடி அரசனுடைய பெயரையே சொல்ல ஆரம்பித்தார்.

பிரகலாதனும் அந்தப் பெயரையே கைகூப்பி சொன்னான். இரண்டு நாழிகை சொன்ன பிறகு குழந்தைகள் விடுவிக்கப்பட்டார்கள். குழந்தைகள் ஆற்றங்கரைக்கு கூவிக் கொண்டு ஓடினார்கள்.

காலையில் எழுந்தவுடன் படிப்பு. பின்பு ஆற்றங்கரையில் அட்டகாசமான குளியல் என்பது அந்தப் பள்ளிக்கூடத்தின் வழக்கமாக இருந்தது.

குழந்தைகள் குதூகலமாக குளித்தார்கள். துள்ளித் துள்ளி நீந்தினார்கள். நடு நடுவே பசிக்கிறபோது அப்பமும், லட்டுவும் எடுத்துக் கொண்டு கரைக்கு வந்து தின்றார்கள். மறுபடி வந்து நீந்தினார்கள். மீன்களைப் பிடித்து விளையாடினார்கள். மறுபடி நீரில் விட்டார்கள்.

பிரகலாதன் ஓரளவு விளையாடிய பிறகு கரையேறினான். உடை மாற்றினான்.

மறுபடியும் சூரியனைப் பார்த்தான். சுற்றியுள்ள விஷயங்களைக் கவனித்தான் மெல்ல ஒரு பாறை மீது அமர்ந்து கொண்டான். உள்ளே கவனித்தான். உள்ளே நீலநிற சியாமள வர்ணன் புன்னகைத்தான்.

'ஓம் நமோ நாராயணாய நம.' அவன் சொல்லத் துவங்கினான். இடைவிடாது சொல்ல ஆரம்பித்தான். அவன் அமர்ந்திருந்த கோலத்தை மற்ற மாணவர்கள் கவனித்து விட்டு அவனருகே வந்தார்கள்.

"என்ன சொல்லிக் கொண்டிருக்கிறாய்." என்று ஆவலோடு கேட்டார்கள்.

அவன் தன்னுள் ஸ்புரித்த அந்தச் சொல்லை அவர்களுக்குச் சொன்னான்.

"ஓம் நமோ நாராயணாய நம."

அவர்கள் பதிலுக்கு சொல்லி எதிரொலித்தார்கள்.

"பிரகலாதா, நாராயணன் என்பது யார். நாம் இதுவரை ஹிரண்யக்சிபு என்றுதானே சொல்வது வழக்கம். திடீரென்று யார் பெயரையோ சொல்கிறாயே. நாராயணன் எந்த தேசத்து மன்னன்."

"ஹிரண்யகசிபு ஒரு மன்னர். என்தந்தை. இந்த தேசத்து அரசன். ஆனால், நாராயணன் என்பது பிரபஞ்சம் முழுவதும் பரவியிருக்கும் ஒரு சக்தி. அதற்கு உருவம் நிர்ணயித்தாலும் தவறில்லை. நாராயணன் என்று சொல்கிறபோதே எல்லா இடத்திலும் பரவிய, எங்கும் நீக்கமற நிறைந்திருக்கிற ஒரு சக்தியைத்தான் நான் நினைத்துக் கொள்கிறேன். அந்த சக்திதான் என்னையும், உங்களையும், இந்த தேசத்து மன்னரையும், மரங்களையும், பூக்களையும், பறவைகளையும், மிருகங்களையும் எல்லா உயிர்களையும் ஆட்டி அசைத்துக் கொண்டிருக்கிறது. பிரபஞ்சம் முழுவதையும் நகர்த்திக் கொண்டிருக்கிறது. சூரியன் எழவும், சந்திரன் தாழவும் இந்தச் சக்திதான் காரணம். இது இடைவிடாது பூமியை சுழற்றிக் கொண்டிருக்கிறது. இந்தச் சக்தியைத்தான் நான் எனக்குள் வைத்து நாராயணன் என்று அழைக்கிறேன்."

"எனக்குப் புரியவில்லையே. இன்னும் தெளிவாகச் சொல்." ஒரு பையன் கேட்டான்.

"காற்று எங்கும் இருக்கிறது. ஆனால் நம் கண்ணுக்குத் தெரியவில்லை. ஆனாலும் என்ன, நாம் உள்ளுக்குள் இழுத்து நுரையீரலுக்குள் நிரப்பி ஜீவிக்கிறோம் அல்லவா. அதே போல எங்கும் இருக்கிற சக்தியை நாம் ஸ்வீகரித்து இழுத்து நமக்குள் தேக்கி வைத்துக் கொள்கிறோம். நமக்குள் இருக்கிற சக்தியும், வெளியே இருக்கிற சக்தியும் ஒன்றையொன்று உரசுகிறது. அப்போது ஏற்படுகின்ற பரமானந்தத்தை நான் அனுபவித்துக் கொண்டிருக்கிறேன். எல்லாம் ஒன்றுதான் என்று தெரிய பிரிவினையற்ற ஒரு பெரும் நிம்மதியை அனுபவித்துக் கொண்டிருக்கிறேன். மறுபடி மறுபடி சொல்லி வாருங்கள், ஓம் நமோ நாராயணாய நம." அவன் சொல்லத் துவங்கினான். மற்ற குழந்தைகள் அவனைப் பின்பற்றினர்.

தொலை தூரத்தில் ஹிரண்யகசிபுவின் வயிற்றில் ஒரு சங்கடம் எழுந்தது. அபசகுனங்கள் தோன்றின. அவன் அரசவையில் ஆத்திரத்தோடு நடந்து கொண்டான். சபை பதறியது. எல்லோரும் பயந்து வாய் பொத்தி அச்சத்தோடு அவன் முன் நின்று கொண்டிருந்தனர்.

பள்ளிப் படிப்பு முடித்து பிரகலாதன் அரசவை நோக்கி ஓடி வந்தான். அரசர் குளுமையானார். அரசவைக்குள் நுழைந்த பிரகலாதன் தந்தையைப் பார்த்ததும் ஆனந்தமாகச் சிரித்தான். ஹிரண்யகசிபுவுக்கு சந்தோஷம் பொங்கியது. இரண்டு கைகளையும் விரித்து "வா, என்னிடம் வா மகனே" என்று அழைத்தான். பிரகலாதன் துள்ளிக் கொண்டு ஹிரண்யகசிபுவிடம் ஓடினான். ஹிரண்யகசிபு மகனின் ஓட்டத்தை, அவன் வெகுளித்தனத்தை, அவனுடைய கள்ளம் கபடமற்ற முகத்தை, அவனுடைய அழகை, தன்மீது வைத்திருக்கிற அன்பைக் கண்டு பரம சந்தோஷம் அடைந்தான்.

புத்தி மனதைப் பார்த்து எப்போதும் இப்படித்தான்

யோசிக்கிறது. புத்தி மனதைத் தன் குழந்தைபோல கொண்டாடுகிறது. என்ன எதைப் பார்த்து இப்படி திகைத்து நிற்கிறாய். செடியிலுள்ள எல்லாப் பூக்களையும் பார்த்தவுடன் ஆனந்தம் ஏற்பட்டு அத்தனையும் பறித்திடலாமா. மாலையாக்கி உன் கழுத்தில் போடவா. இம்மாதிரி பலநூறு பூக்கள் பூக்கும் நந்தவனம் உனக்காக அமைக்கவா.

ஒன்றுமில்லை. இந்தப் பூக்கள் இந்த தேசத்தில் அதிகம் கிடைக்கும். அங்கிருந்து வாங்கி வந்து இந்த தேசத்திலுள்ள மண்ணை உரமாகப் போட்டு, வேறு சில விவசாய நுணுக்கங்கள் செய்தால் இந்தப் பூக்கள் அமோகமாகப் பூக்கும். அப்படி ஒன்று செய்யட்டுமா.

இந்தப் பூ ஒரு வர்ணத்திலில்லை. நாலு வர்ணங்களில் இருக்கிறது. நாலும் நாலு திசையில் இருக்கிறது. நாலு திசையிலிருந்து அந்தப் பூக்களை உனக்காக கொண்டு வரச் சொல்லட்டுமா.

புத்தி உடனே மனம் பார்க்கும். பூ, மணம் இவை இரண்டுக்கும் நடுவே புத்தி புகுந்து கொண்டு, இது சாதாரண விஷயம் என்பது போல் திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டிருக்கிறது. அதை மனம் பார்த்து வியந்து கொண்டிருக்கிறது. உடனே அங்கு புத்தியினுடைய நுழைவு ஏற்பட்டு விடுகிறது. அந்தப் பூவினுடைய நிறம், மணம், குணம் அது கிடைக்குமிடம், அதை என்ன செய்யலாம் என்கிற அபத்தங்களை யெல்லாம் புத்தி பேச ஆரம்பித்து விடுகிறது. மனம் பூவை ரசிப்பதற்கு முன்பு ஏகப்பட்ட தகவல்கள் புத்தி கொடுத்து விடும். பூ, மனம் இவை இரண்டும் தனியாக இருக்கவே விடாது. மனதை சுயமாக இருக்க புத்தி விடுவதேயில்லை. மனம் ஆசைப்பட்டவுடன் அல்லது விரும்பியதைப் பார்த்துத் திகைத்ததும் அதை எப்படி அடைய வேண்டும் என்கிற பலநூறு திட்டங்களைத் தீட்டி அதை மனதின் முன்பு கடை பரப்பும்.

இதனால் பூவை அனுபவிப்பது என்பது மனதிற்கு முடியாமல் போகிறது. அனுபவம் என்பது அங்கே உடனடியாக புத்தியால் சிதறடிக்கப் படுகிறது.

பிரகலாதன் ஓடிவந்து தந்தையின் அருகில் அமர்ந்து கொண்டான். தந்தை குழந்தையை இறுக்கிக் கொண்டான்.

'இந்தக் குழந்தைக்கு என்ன தெரியும். எவ்வளவு சிறிய குழந்தை இவன். அவனைப் பாதுகாத்து வளர்க்க வேண்டியது நானல்லவா. இவனைப் பாதுகாக்கத்தானே நான் இருக்கிறேன்.' என்கிற கர்வத்தால் இன்னும்



இறுக்கிக் கொண்டான். எல்லாத் தந்தையிடமும் இந்தக் கர்வம் இருக்கிறது. தான் தான் காப்பாற்றுகின்றோம் என்கிற அலட்டல் இருக்கிறது.யார் காப்பாற்றுகின்றோம் என்று அலட்டுகிறார்களோ அவர்களையும் சேர்த்து இறைவன்தான் காப்பாற்றுகிறான் என்று அவர்களுக்குப் புரிவதேயில்லை..

"பள்ளிக்கூடம் போய் வந்தாயா." ஹிரண்யகசிபு பிரகலாதனைத் தழுவிக் கொண்டு கேட்டான்.

"போய் வந்தேன் அப்பா."

"பாடங்கள் படித்தாயா."

"படித்தேனப்பா."

"உணவு முடிந்ததா."

"பள்ளியிலேயே கிளம்பும் முன்பு அறுசுவை உணவு போட்டார்கள்."

"இப்போது இனிப்பு சாப்பிடுகிறாயா.."

"சாப்பிடுகிறேனப்பா."

"யாரங்கே.."

திரும்பினான்.

பல தட்டுகளில் இனிப்புப் பண்டங்கள் நீட்டப்பட்டன. ஒன்றையெடுத்து குழந்தையின் வாயில் கடிக்க வைத்து. அந்தக் குழந்தை உண்பதை ஆதரவோடு பார்த்துக் கொண்டிருந்தான். மேல் துண்டால் வாய் துடைத்தான்.

சபை முழுவதும் மன்னனையும், மன்னனின் மகனையும் பார்த்துக் கொண்டிருந்தது. இதுவரை கொதித்துக் கொண்டிருந்த சபை முற்றிலும் குளுமையாகி குழந்தையின் வரவால் மகிழ்ச்சியோடு சிரித்துக் கொண்டிருந்தது.

மனதை உற்றுப் பார்த்த, நெருங்கிப் பார்த்த, அதன் வெறுமைத்தனத்தை ஆழ்ந்து பார்த்த சந்தோஷத்தில் புத்தி அமைதியாகியது.

புத்தி எப்போது மனதைப் பார்க்கிறதோ அப்போது அது மிக அமைதியாகி விடுகிறது. மனதை இடைவிடாது புத்தியால் பார்க்கச் சொல்வது இதற்காகத்தான்.

இனிப்பு சாப்பிட்டு முடித்ததும் பிரகலாதன் கீழே இறங்க முற்பட்டான். ஆனால், ஹிரண்யகசிபுக்கு அவனை உடனே விட மனமில்லை.

"சரி.. என்ன படித்தாய்." ஆவலோடு கேட்டான்.

"பாடங்களப்பா."

"கடைசியாக மாணவர்களோடு என்ன ஸ்லோகம் சொன்னாய்."

பிரகலாதன் நிமிர்ந்து அப்பாவைப் பார்த்தான்.

சிரித்தான்.

"எல்லோரும் சேர்ந்து ஒரு ஸ்லோகம் சொன்னோம். நான்தான் கற்றுக் கொடுத்தேன்."

"அப்படியா.. நீதான் கற்றுக் கொடுத்தாயா. நல்லது.. எங்கே.. எனக்குக் கற்றுக் கொடு." தந்தை ஒரு மாணவனைப் போல் கைகட்டி நின்றார்.

பிரகலாதன் வாய்விட்டுச் சிரித்தான்.

"சரி.. கற்றுத் தருகிறேன். கண்களை மூடிக் கொள்ளுங்கள்."

ஹிரண்யகசிபு கண்களை மூடிக் கொண்டான்.

"கைகூப்பிக் கொள்ளுங்கள்."

ஹிரண்யகசிபு கைகூப்பிக் கொண்டான்.

"இப்போது நான் சொல்வதைத் திரும்பச் சொல்லுங்கள்."

பிரகலாதன் கண்மூடி கைகூப்பினான்.

"ஓம் நமோ நாராயணாய நம." சட்டென்று ஹிரண்யகசிபு விழிகள் திறந்தன. உறுத்து பிரகலாதனைப் பார்த்தான். பிரகலாதன் முதல் வார்த்தையிலேயே ஆழ்ந்த தியானத்துக்குப் போய்விட்டான்.

"ஓம் நமோ நாராயணாய நம."

ஹிரண்யகசிபு விலுக்கென்று எழுந்திருந்தான். பிரகலாதன் அவன் மடியிலிருந்து உருண்டு கீழே விழுந்தான்.

"என்ன இது.. என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய் உன் மனதில். யாரை என் எதிரியாக என் வாழ்நாள் முழுதும் கருதி துரத்திக் கொண்டிருக்கிறேனோ அவன் பெயரை என் மடியில், என் அரசவையில் உட்கார்ந்து கொண்டு சொல்ல வேண்டுமென்றால், உனக்கு எவ்வளவு துணிச்சல். இந்தத் துணிச்சலை உனக்கு சொல்லிக் கொடுத்தது எந்த ஆசிரியர். இப்படிச் சொல்ல வேண்டுமென்று திட்டமிட்டு யாரும் சொன்னார்களா. யார் வந்து உன்னைச் சொல்லச் சொன்னது.. சொல்."

பிரக்லாதன் திடுக்கென்று எழுந்து தந்தையின் முன் கைகட்டி நின்றான்.

"யாரும் எனக்குச் சொல்லித் தரவில்லையப்பா."

"பிறகு, உனக்கு இந்த வஞ்சகம் யார் சொல்லிக் கொடுத்தது."

"எனக்குள் தோன்றியது அப்பா. எனக்குள் இது சொல்லப் பட்டது."

"யாரங்கே.. இவனுடைய ஆசிரியரை இழுத்து வாருங்கள்."

ஹிரண்யகசிபுவின் உத்தரவுக்குப் பணிந்து அடுத்த



சில நிமிடங்களில் ஆசிரியரை அலங்கோலமாக இழுத்து வந்தார்கள்.

"என்ன இது.. என் பிள்ளையை எதற்கு அனுப்புனேன். நீங்கள் என்ன சொல்லிக் கொடுத்திருக்கிறீர்கள். இவன் என் எதிரியின் பெயரைக் கூச்சமில்லாமல் நமோ நம, சொல்லிக் கொண்டிருக்கிறான். வாழ்வாங்கு வாழ்க என்று சொல்லிக் கொண்டிருக்கிறான். எப்படி இதை அனுமதித்தீர்கள்."

"இல்லையே. அப்படி ஒரு வார்த்தையை நான் சொல்லித் தரவேயில்லையே. என் வாழ்நாளில் நாங்கள் சொல்லவேயில்லையே. இவன் எப்படி சொல்கிறான் என்று தெரியவில்லையே. பிரகலாதா.. உன் தந்தையின் கோபத்திற்கு ஏன் ஆளாகிறாய். எங்களையும் அவர் கோபத்திற்கு ஆளாக்குகிறாயே. பிரகலாதா.. எப்போதாவது, வாழ்க்கையில் எப்போதேனும் ஒரு முறையாவது உன் தந்தையின் பெயரல்லாது வேறு எவர் பெயரையாவது உனக்குச் சொல்லிக் கொடுத்திருக்கிறேனா. வேறு எவரையாவது வாழ்க என்று சொல்லும்படி சொல்லிக் கொடுத்திருக்கிறேனா.

நான் சொன்னதைச் சொல்லாமல் நீயாக ஏதோ சொல்லி ஏனப்பா எங்களை சிரமப்படுத்துகிறாய்."

ஆசிரியர் புலம்பத் துவங்கினார்.

ஹிரண்யகசிபு அவரை கை உயர்த்தி அமர்த்தினான்.

"இங்கு வா, பிரகலாதா. ஏதோ தவறு நடந்து விட்டது. அருகே வா. அந்தப் பெயரை என் முன் உச்சரிக்காதே பிரகலாதா. அது என் எதிரியின் பெயர். எனக்குப் பிடிக்காத பெயர். தயவு செய்து எந்தக் காரணம் கொண்டும் என்முன் இதைச் சொல்லாதே. உனக்கு இம்மாதிரி சொல்ல வேண்டுமென்றால் நான் சொல்லித் தருகிறேன். ஓம்.. என் பெயரைச் சொல், ஓம் ஹிரண்யகசிபுவே நம. புரிகிறதா. ஹிரண்யகசிபுவே நம. எங்கே சொல் பார்க்கலாம். ஓம் ஹிரண்யகசிபுவே நம."

"இல்லையப்பா. இந்த ஓசையில் ஒரு தவறு இருக்கிறது. ஓம் நமோ நாராயணாயநம என்று சொல்லும் போதுதான் மனம் நிறைகிறது. உங்கள் பெயர் சொல்லும் போது உடம்பெல்லாம் எரிவது போல் ஒரு தகிப்பு, ஒரு அயர்ச்சி உண்டாகிறது."

"பிரகலாதா, நான் மிகக் கோபமானவன். என்னைக் கண்டு தேவர்களும் மிகப் பெரிய அரசர்களும் நடுங்குகிறார்கள். பிரகலாதா, நீ சிறு குழந்தை. நீ அறியாமல் செய்கிறாய் என்று தெளிவாகத் தெரிகிறது. பெரியவர்கள் பேச்சை மீறக் கூடாது. இத்தோடு நிறுத்திக்

கொள். நீ இனி அந்தப் பெயரைச் சொல்லக் கூடாது. என் பெயரைச் சொல். அந்தப் பெயரைச் சொன்ன பாபத்திற்காக இந்த இடத்தில் இன்று ஆயிரம் முறை என் பெயரைச் சொல். கண் மூடு. கைகூப்பி என் பெயரைச் சொல். ம்.."

"இல்லையப்பா.. ஓம் நமோ நாராயணாய நம. இதைத்தான் நான் சொல்வேன்."

"கூடாது. என் பெயரைச் சொல்."

"அப்பா முடியாது. என் தந்தை யார் என்று கேட்டால் ஹிரண்யகசிபு என்று சொல்லுவனே தவிர, என் தந்தையை நமோ நம என்று சொல்லமாட்டேன். அவ்வளவு உயர்ந்தவரல்ல நீங்கள். உங்களையும் விட உயர்ந்தவரல்லவா நாராயணன். பிரபஞ்சத்திற்கு அதிபதி அல்லவா நாராயணன். இங்குள்ள அத்தனை பொருள்களிலும் இருப்பது நாராயணன் அல்லவா. எனவே நாராயணன் பெயர் சொல்வதுதான் நல்லது. நீங்களும் சொல்லுங்களப்பா.. ஓம் நமோ நாராயணாய நம."

"அடித்துக் கொன்று போடுவேன். பிரகலாதா.. என் கோபம் எல்லை மீறிக் கொண்டிருக்கிறது. உன்னிடம் கடைசி முறையாகக் கேட்கிறேன். என் பெயரை சொல்வாயா.. மாட்டாயா."

"உங்கள் பெயரைச் சொல்வேனப்பா. யார் உன் தகப்பன் என்று கேட்கும் பொழுது."

"போதும் நிறுத்து. என் பெயரை நமோ நம. என்று சொல்வாயா. மாட்டாயா."

"நாராயணனைத் தவிர வேறு யாரையும் அப்படி சொல்வது அழகல்ல அப்பா. நாராயணனைத்தான் நமோ நம என்று சொல்ல முடியுமே தவிர.. அவரைத்தான் வணங்க முடியுமே தவிர.. நீங்கள் என் அப்பா. உங்களை முதற் பொருளாக நரன் வணங்கவே முடியாது. உங்களுக்கு அந்தத் தகுதியில்லை."

"யார் சொல்லிக் கொடுத்தது இப்படி."

"அப்பா, இது தெரிந்தது..."

எவர் சொல்லிக் கொடுத்தது.

"என் மனதில் தோன்றியது அப்பா."

"யார் அப்படி தோற்றுவித்தார்கள்."

"யாரும் தோற்றுவிக்கவில்லையப்பா. எங்கும் இருப்பது எனக்குள்ளும் இருக்கிறது."

"என்ன சொல்கிறாய்."

"இந்த சப்தம் எங்கும் இருக்கிறது. எல்லா இடத்திலும் நிறைந்திருக்கிறது. நாராயணா.. நாராயணா என்கிற சப்தம் எங்கும் பரவியிருக்கிறது. அப்படி பரவிக் கிடப்பது



என்னுள்ளும் இருக்கிறது. உங்கள் உள்ளும் அந்த சப்தம்தானப்பா இருக்கிறது. இடைவிடாது நீங்கள் எப்பொழுதும் நாராயணனைத்தான் யோசித்துக் கொண்டிருக்கிறீர்கள். இந்த ஆசிரியரும் இடைவிடாது நாராயணனைத்தான் மனதுக்குள் தியானித்துக் கொண்டிருக்கிறார்."

"ஆசிரியனே.. நீங்கள் மனதில் நாராயணனைத்தான் தியானித்துக் கொண்டிருக்கிறீர்களா." ஹிரண்யகசிபு பல் கடித்து கர்ஜித்தான்.

சபை நடுங்கியது.

வாளை உருவிக் கொண்டு ஆசிரியரை நோக்கிப் போனான். ஆசிரியர் நடுங்கினார்.

"நான் எந்தத் தவறும் செய்யவில்லை. எவரையும் மனதில் நினைக்கவில்லை. உங்களைத் தவிர வேறு எந்தப் பெயரையும் நான் உச்சரித்ததில்லை. என்னை வெட்டிப் போடுங்கள். அப்போது கூட என் உடம்பின் ஒவ்வொரு அங்கமும் ஹிரண்யகசிபுவே நம என்றுதான் சொல்லும்." ஆசிரியர் அலறினார்.

புத்தியின் ஆளுமைக்கு உட்பட்டவன் வேதனைப் படும் போது பொய்தான் சொல்வான். துக்கம் வந்த போது நாடகம்தான் ஆடுவான். வாழ்க்கையை உற்றுப் பார்த்தால் நாடகங்கள் நமது வேதனையிலும் நமக்குத் தொடர்ந்து வந்திருக்கிறது. மிகுந்த துக்கத்திலும் மரண பயத்திலும்கூட, நாம் நாடகமாடியிருக்கிறோம் என்பது நமக்குத் தெரிய வந்திருக்கிறது. புத்தி மிக பலமானது. அது எல்லா உணர்வுகளையும் நசித்து விடுகிறது.

ஆசிரியர் கண் மூடி ஓம் ஹிரண்யகசிபுவே நம என்று சொல்ல ஆரம்பித்தார்.

ஹிரண்யகசிபு மறுபடியும் அமைதியானான். திரும்பி தன் சிம்மாசனத்திற்கு வந்தான். அமர்ந்தான். ஆத்திரத்தோடு மகனைப் பார்த்தான்.

இது என்ன சூழ்ச்சி. என் மகனையே எனக்கு எதிராகத் திருப்பி விட்டு என்னைக் கொல்ல அந்த நாராயணன் திட்டமிட்டிருக்கிறானா. அதற்காக என் மகனின் மனதை மாற்றியிருக்கிறானா. ஏதேனும் மயக்க மருந்து கொடுத்து புரட்டிப் போட்டு விட்டானா.

ஆஹா... இங்கு ஏதோ நடக்கப் போகிறது. என் வயிறு நடுங்குகிறது. மனம் பதறுகிறது. நான் அடுத்து என்ன செய்ய வேண்டும் என்று வழக்கமாக அற்புதமாய் யோசிப்பேன். இப்போது யோசிக்க முடியவில்லை. மனம் திகைத்து நிற்கிறது. உடம்பில் ஒரு சோர்வு படர்கிறது. கண்ணில் ஒரு அழுத்தம் இருக்கிறது. பேச முடியாமல்

நாக்கு ஒட்டிக் கொள்கிறது. தொடையில் ஒரு தொய்வு இருக்கிறது. சரிந்து கண்மூடி அப்படியே கிடக்கலாமா என்றிருக்கிறது. ஆனால், அப்படியே கிடந்தால் அந்த நாராயணன் நம்மைக் கொன்று விடுவான்.

"பிரகலாதா, நான் கடைசியாய் கேட்கிறேன்.இந்தப் பெயர் சொல்வதை நிறுத்தி விடுகிறாயா."

"இல்லையப்பா, மாட்டேன். இடைவிடாது நாராயணனின் நாமத்தைத்தான் என்மனம் உச்சரித்துக் கொண்டிருக்கிறது. வேறு எதுவும் உச்சரிக்க என்னால் முடியவில்லை."

"பிரகலாதா, உன் தந்தையின் கோபத்தை ஏன் கிளறிக் கொண்டிருக்கிறாய். நாராயணன் சாதாரண மனிதன். உனக்கு யாரும் சொல்லித் தரவில்லையா பிரகலாதா. நான் யார் என்று உனக்குப் புரியவில்லை. உன் தந்தை என்று மட்டுமே என்னை நினைத்துக் கொண்டிருக்கிறாய். என்பலம் மிகப் பெரியது. இந்த பிரபஞ்சம் முழுவதும் என் காலின் கீழ் வைத்திருக்கிறேன். நான் நினைத்தால் ஆக்க முடியும். நான் நினைத்தால் அழிக்க முடியும். என்னால்தான் இந்த உலகம் இயங்குகிறது. இந்த உலகம் சுபிட்சமாக இருக்க ஹிரண்யகசிபு காரணம். இந்த ஹிரண்யகசிபுவுக்கு கோபம் வந்தால் எதையும் அழித்துப் போடுவான். இந்த உலகத்தை பொசுக்கிப் போடுவான். இந்த பிரபஞ்சத்தை விஷ வாயுவால் கலக்கிப் போடுவான். எல்லா கிரஹங்களையும் விதம் விதமான இடத்திற்கு நகர்த்திப் போடுவான். ஹிரண்யகசிபுவால் இது முடியும். பிரகலாதா, புரிந்து கொள். உன் தகப்பனின் வலிமையைப் புரிந்து கொள். ஹிரண்யகசிபுவின் வலிமையைப் புரிந்து கொள்."

"அப்பா, நாராயணனுக்கு முன்னால், எங்கும் நிறைந்திருக்கிற அந்த இயற்கைக்கு முன்னால் உங்கள் சக்தி மிக மிகச் சிறியது. நீங்களும் அவருக்குக் கட்டுப்பட்டவர். அவரை உங்களால் எதிர்க்க முடியாது. அவரை எதிர்த்தால் நீங்கள் அழிவது திண்ணம். அப்பா உங்களுக்கென்று சில வரைமுறைகள் இருக்கின்றன. அந்த வரைமுறைகளைத் தாண்டி ஒருக்காலும் போகாதீர்கள். நீங்கள் ஒரு சிறிய பகுதிக்கு அரசர். எனக்கு மட்டுமே தந்தை. நீங்கள்தான் உலகத்திலுள்ள அத்தனை பேருக்கும் தந்தை என்றும், பிரபஞ்சம் முழுவதுக்கும் அரசர் என்றும் நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள். அது ஒரு மாயத் தோற்றம். உங்களை நீங்களே ஏமாற்றிக் கொண்டிருக்கிறீர்கள் அப்பா."

"பிரகலாதா.. நிறுத்து. இன்னொரு முறை எனக்குப் புத்தி சொல்லாதே."

"அப்பா, நீங்கள் அழியப் போகிறீர்களோ என்று நான் அச்சப்படுகிறேன்."

"என்னை அழிக்க இங்கு யாருமில்லை.."

"இருக்கிறார்கள் அப்பா."

"யார்."

"கடவுளப்பா."

"யார் கடவுள்."

"நாராயணன் அப்பா."

"எங்கேயிருக்கிறார்."

"எல்லா இடத்திலும் இருக்கிறார் அப்பா."

"எல்லா இடத்திலும் என்றால்.."

"இந்த பூமியின் ஒவ்வொரு மண் துகளிலும் நாராயணன் இருக்கிறாரப்பா. நாராயணன் இல்லாத இடமே இல்லை."

"முட்டாள் பிரகலாதா.. முட்டாள் பிரகலாதா. இத்தோடு நிறுத்திக் கொள். இதற்கு மேல் ஒரு வார்த்தை பேசாதே. நான் உன்னை என்ன செய்வேனென்று எனக்கே தெரியாது. தயவு செய்து மன்னிப்பு கேட்டுவிட்டு என் முகத்தில் விழிக்காது ஓடிப்போய்விடு."

"இல்லையப்பா. நான் மன்னிப்பு கேட்க மாட்டேனப்பா."

"ஏன்..."

"நாராயணன் பெயர் சொல்வது பாபமல்லவே. எதற்கு மன்னிப்பு கேட்க வேண்டும். நீங்களும் அவர் பெயர் சொல்லுங்கள் அப்பா. ஓம் நமோ நாராயணாய நம."

ஹிரண்யகசிபு கோபமாகி கால்களால் பூமியை உதைத்தான். கைகள் வீசினான். மகனைத் தூக்கி அடித்து கொன்று போட வேண்டும் என்று முழு பலத்தோடு நகர்ந்தான். திரும்பி சபையைப் பார்த்தான். கை தட்டினான். காவலர்களை அழைத்தான்.

"இவனைக் கட்டிப் போட்டு சவுக்கால் அடி. நான் யார் என்று இவனுக்குத் தெரியவில்லை. உடம்பு ரத்தம் வழியும் வரை, நான் என்று தெரியும்வரை, நாராயணன் பெயர் மறந்து போகும் வரை, என் பெயர் சொல்லும் வரை கூசாமல் அடி. என் பிள்ளை என்று பார்க்க வேண்டாம். இவன், என் எதிரி.. என் எதிரியைத் தொழுகின்ற எதிரி. இவனை அடித்து நொறுக்குங்கள்."

தலைமயிரைப் பிடித்து காவலர்கள் இழுத்துக் கொண்டு போனார்கள்.

பிரகலாதன் நாராயணா என்று உள்ளுக்குள் அலறினான்.

யார் தொட்டது என்று தெரியவில்லை. எங்கு போகிறோம் என்று தெரியவில்லை. நாராயண மந்திரம் அவனைத் தனக்குள் இழுத்துக் கொண்டது. பிரகலாதன் உடம்பில் சவுக்குகள் வீசப்பட்டன. அவன் உடம்பு பிய்ந்து ரத்தம் வடிந்தது. ஆனால், பிரகலாதன் உள்ளுக்குள் நாராயணனோடு இருந்தான்.

எது வலியை உணரவேண்டுமோ, அது நாராயணனைப் பற்றிக் கொண்டது.

மிக பலமுள்ள ஆட்களால் நூறுமுறை சவுக்கால் அடிக்கப்பட்டும், பிரகலாதன் ஒரு சிறிய முனகல்கூட இல்லாமல் கண்மூடி உள்ளுக்குள் ஆழ்ந்து கிடக்கிறான் என்று அரசனுக்குச் சொல்லப் பட்டது.

அரசன் சந்தேகமானான். ஏதோ மிகப் பெரிய சூழ்ச்சி தன் மகனை வைத்து நடக்கிறது என்று பயந்தான்.

இவன் தன் மகனே அல்ல. தன் மகனின் உருவில் தன் எதிரி நாராயணன் இங்கு வந்து விட்டான். தன்னைக் கொல்வதற்கே மிகப் பெரிய திட்டம் போடுகிறான். நாடகமாடுகிறான். அவன் நாடகம் என்னவென்று தெரியவில்லை. தன் மரணம் உறுதியோ என்ற பயம் வந்து விட்டது. அதனால் ஹிரண்யகசிபு பதட்டமானான்.

புத்தி, மரணம் என்றால் மிகவும் பயப்படுகிறது. புத்தி இதுவரை மரணத்தை வென்றதே இல்லை. புத்தி பலஹீனம் என்பதற்கு இதுவே சாட்சி. எப்போது இது வீரர்களால் தாக்கப்பட முடியவில்லையோ, அப்போது அவன் பலமாகி விட்டான் என்றல்லவா அர்த்தம். பலமாயிருக்கிறவன் மகனாய் இருந்தாலும் எதிரிதானே. அப்போது அவனை அழிக்கத்தானே வேண்டும்.

அதுதானே நல்லது. "யாரங்கே.. பிரகலாதனை யானைகளை விட்டு மிதிக்க ஏற்பாடு செய்யுங்கள். அப்படியும் இறக்கவில்லையென்றால், மலையிலிருந்து உருட்டி விடுங்கள். அப்படியும் முடியவில்லையென்றால் கொடிய நாகங்களை அவன் மீது போட்டு விஷம் தாக்கி மரணமடைய ஏற்பாடு செய்யுங்கள்."

எல்லாம் நடந்தன. ஆனால், எதுவும் பிரகலாதனுக்குத் தெரியவில்லை.

மனம் அற்று இருத்தல். இதுதான் ஞானியின் குணம். ஞானி சொல்லும் வரை மரணம் அவனை அணுகாது. அவனால் மரணத்தைத் தள்ளி வைக்கவும் முடியும்.

மனம் முழுவதையும் இறை உணர்வாக்கிக் கொண்டவர்கள் ஞானிகள். அவர்களுக்கு உடம்போடு தொடர்பு இருப்பதில்லை. அவர்களாக நினைத்தாலொழிய எந்த மாறுதலும் அவர்கள் உடம்பில் ஏற்படுவதில்லை.



உடம்பு மனம் சொல்படி நடப்பது. மனம் உடம்பை விநாடியில் அழித்து விடவும் முடியும், உடம்பை நிரந்தரமாக்கி விடவும் முடியும். இது மிக மிக சூட்சுமமானது. ஒரு விஷயம் அமைதியான மனம்தான் ஆரோக்கியமான உடம்பு. ஆரோக்கியம் உடம்பில் கெட்டுப் போனால் மனம் அமைதியற்று விடுகிறது. எனவே, மிக மிக இளமையிலே மனதை அமைதியாக வைத்துக் கொள்ள பழக வேண்டியிருக்கிறது.

அப்பொழுதுதான் நெடுநாள் ஆரோக்கியமாக வாழ முடியும்.

"அரசே.. அரசே.. பிரகலாதன் உங்கள் மகனே அல்ல."

"ஏன் அப்படி சொல்கிறாய்."

"அவனை அழிக்கவே முடியவில்லை."

"அப்படியா."

வந்து சொன்னவனும், அவன் வாய் மொழியைக் கேட்டவனும் முட்டாள்கள் போல் திகைத்து நின்றார்கள்.

ஹிரண்யகசிபுவின் மகனை யாரால் அழிக்க முடியும் என்று அவன் கேட்டிருக்க வேண்டும்.

ஆனால், அவன் தன் மகன் என்று கருதாமல் ஏன் அழிக்க முடியவில்லை என்று யோசிக்கத் துவங்கி விட்டான். 'அவனை இங்கு இழுத்து வா.' என்று கட்டளையிட்டான்.

பிரகலாதன் அரசவைக்கு இழுத்து வரப்பட்டான்.

அப்போது கண்கள் வெளியே பார்த்துக் கொண்டிருந்தாலும் மனம் உள்ளுக்குள் இருந்தது. பார்வையும் மனதோடு கிடந்தது.

ஹிரண்யகசிபு பிரகலாதனை உற்றுப் பார்த்தான். அவன் தன்னைப் பார்க்கின்ற நிலையைக் கண்டு வயிறு கலங்கியது.

இவன் தன் மகனே அல்ல. இத்தனை கொடுமைகளுக்குப் பிறகும் ஒருவன் எந்த உணர்ச்சியும் காட்டாமல், தன் எதிரே தைரியமாக நிற்க முடியுமென்றால் இவன் நாராயணனுடைய அம்சம். நாராயணனுடைய பிரதிநிதி. இவன் ஏதோ தந்திரத்துடன் அரண்மனைக்குள் நுழைந்திருக்கிறான். நாமும் அதே தந்திரத்தைக் கையாள வேண்டும். வெறும் வலிமையால் நாராயணனை அழித்து விடமுடியாது. அவன் சூட்சுமம் மிகுந்தவன் என்பது உலகோர் அறிந்த விஷயம்.

"பிரகலாதா.."

"தந்தையே.."

"ஹஹ்ஹஹ.. யார் யாருக்குத் தந்தை.. ம் உன் கடவுள் எங்கிருக்கிறான் பிரகலாதா."

"என் கடவுள் எங்கும் இருக்கிறார்."

"யார் உன் கடவுள்."

"நாராயணன்."

"எங்கே இருக்கிறான் உன் நாராயணன். எனக்குக் காட்டு."

"எங்கும் இருப்பவரைக் காட்டு என்று சொன்னால் எப்படி காட்டுவது. பார்க்க உங்களுக்குத் தெரியவில்லை."

"நான் பார்க்கும் படி காட்டு. நீ எங்கும் இருக்கிறார் என்று சொன்னால் நான் நம்ப வேண்டுமா. என்னை முட்டாள் என்று நினைத்துக் கொண்டிருக்கிறாயா. பிரகலாதா, இருக்கிறான் என்று நீ உணர்கிறாய் அல்லவா. அதே போல் எனக்குள் இருக்கிறான் என்று எனக்குத் தெரியும் படியாக உன் நாராயணனை எனக்குக் காட்டு. அவனை நேரில் வரச் சொல். கடவுள் என்று ஒருவர் இருந்தால் அவர் இங்கே வரட்டும்."

காலாகாலமாய் கடவுளுக்கு எதிராய் புத்தி இப்படித்தான் கூவிக் கொண்டிருக்கிறது. எங்கே கடவுள். அந்தக் கடவுளை நேரே வரச் சொல்லென்று மக்களின் ஒரு பகுதியினர் இடைவிடாது, தலைமுறை தலைமுறையாய் கத்திக் கொண்டிருக்கிறார்கள். எத்தனை முறை காட்டினாலும், மறந்து போய் மறுபடியும் காட்டு காட்டு என்று கூவுகிறார்கள். பார்க்கத் தெரியாதவர்கள்.. பார்க்க பக்குவம் இல்லாதவர்கள்.. பார்க்க பொறுமை இல்லாதவர்கள்.. பார்க்கும் ஆவல் இல்லாதவர்கள்.. தங்கள் கண்ணெதிரே தங்கள் மாயைகளைக் கிழித்தபடி இறைவன் வர வேண்டுமென்று ஆசைப் படுகிறார்கள். ஆனால், சிலசமயம் அவர்களும் பார்க்கும்படியாக இறைவன் காட்சி தருகிறான்.

"பிரகலாதா.. அவர் இந்த சிம்மாசனத்தில் இருக்கிறாரா."

"இருக்கிறாரப்பா."

"உனக்கும், எனக்கும் நடுவே இருக்கிறாரா."

"இருக்கிறாரப்பா."

"இந்தத் தரையில் இருக்கிறாரா."

"இருக்கிறாரப்பா."

"இந்தத் தூணில் இருக்கிறாரா."

"இருக்கிறாரப்பா."

எது உடைப்பதற்கு வாட்டமோ அதைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு அதில் இருக்கிறாரா என்கிற கேள்வியை ஹிரண்யகசிபு கேட்டான். தன் கதாயுதத்தை இறுக்கப் பிடித்துக் கொண்டான்.

அங்கே இருக்கிறார் என்றதும் வேகமாக நகர்ந்தான்.



அதற்குள் இருக்கிற கடவுளைக் கூப்பிட்டான். ஓங்கி அடித்தான்.

"வா.. இதற்குள் நாராயணன் என்கிற கடவுள் இருக்குமானால் வெளியே வரட்டும். வெளியே வரட்டும்." என்று உரக்க அலறினான்.

மிகுந்த கர்வமும், உடல் கொழுப்பும்தான் நிரந்தரம் என்கிற கர்வ பேதைமையும் நிறைந்த அந்த மனிதன் முன்பும் கடவுள் தோன்றினார்.

ஒரு தீப்பிழம்பாய் அணுச் சிதறிய செந்நிறமாய் சுற்றியுள்ள அத்தனை காற்றையும் இழுத்து தனக்குள் பொதித்துக் கொண்டு மற்ற எல்லா இடங்களையும் வெற்றிடமாய் மாற்றக் கூடிய வல்லமை பொருந்தியவராய், தகதகப்பாய் அங்கு கடவுள் தோன்றினார்.

என்ன இது.. மிருகமா..

தலை மிருகம் போலிருந்தது.

யார் இது.. மனிதனா..

உடம்பு மனிதன் போலிருந்தது.

என்ன கைகள் இவை. ராட்சஸன் கைகளா.

கைகள் நகங்களோடு கூடியதாய் இருந்தன.

யார் இது..

- தெரியவில்லையே.

விதம் விதமாய் கடவுள் அவனுக்குத் தெரிந்தார்.

அவன் மனம் எப்படி எப்படியெல்லாம் நினைத்ததோ கடவுள் அப்படியெல்லாம் அவனுக்கு காட்சியளித்தார்.

ஹிரண்யகசிபு தபஸ்வி. தன்னை யாரும் தாக்கி விடாதிருப்பதற்காக பல தற்காப்புகள் வாங்கி வைத்திருப்பவன். இதனால் எனக்கு மரணமில்லை. இந்த நோயால் எனக்கு மரணமில்லை. இப்படிப்பட்ட வகையால் எனக்கு மரணமில்லை என்று புத்தியால் பல்வேறு விஷயங்களைக் கண்டு பிடித்து வைத்திருந்தான்.

ஆனால், இவையெல்லாம் தாண்டியும் மரணம் அவனை நோக்கி நடை போட்டு வந்தது. தலைமயிரைப் பிடித்தது. தூக்கி மடியில் போட்டுக் கொண்டது. வயிற்றைக் கிழித்தது. ரத்தத்தைக் குடித்தது. ஓங்கி தரையில் வீசியது. அவனை மிதித்துக் கொன்று போட்டது.

அங்கே யுத்தம் மிகச் சில நொடிகளில் நடந்து முடிந்தது. பிரபஞ்ச சக்தியின் முன்பு மனிதனுடைய புத்திசாலித்தனம் கூழயிற்று. மனிதன் மரணத்தை வெல்ல முடியாமல் கடவுளிடம் அடிபட்டான். தான் நிரந்தரம் என்கிற வார்த்தை அவனிடமிருந்து பிய்ந்து குடல்

போலத் தொங்கியது. அவனுடைய சக்திகள் அனைத்தும் உறிஞ்சி குடிக்கப்பட்டன.

பூமியும் இல்லாமல், வானமும் இல்லாது பூமிக்கு மேலே ஒரு நடுவாந்திர இடத்தில் ஹிரண்யகசிபுவின் மரணம் நிகழ்ந்தது. வெளிச்சமும் இல்லாது, இருட்டும் இல்லாத நேரத்தில் ஹிரண்யகசிபுவின் மரணம் நிகழ்ந்தது.

அறிவும் முழுமை பெறாது, அறியாமையும் புரிந்து கொள்ளாது ஒரு இரண்டுங்கெட்டான் நேரத்தில் புத்தி என்கிற மனிதன் அடிபட்டான்.

ஹிரண்யகசிபுவின் மரணம், மனித கர்வத்தின் மரணம்.

ஹிரண்யகசிபுவின் சக்தி ஒரு வரையறைக்கு உட்பட்ட சக்தி. இறைவனின் ஒரு சின்ன அசைவைக்கூட இந்த ஹிரண்யகசிபு என்கிற புத்தியால் தாங்க முடியவில்லை.

வானத்தைக் கைப்பற்றி விட்டதாய் சில காததூரம் பறந்து விட்டு அவன் நினைத்துக் கொண்டிருக்கிறான். எல்லாம் அறிந்து விட்டதாய் சில விஷயங்கள் தெரிந்து கொண்டு அவன் கர்வம் கொண்டிருக்கிறான்.

அவன் கர்வம் அபத்தமானது. அவன் கர்வம் நிர்மூடம். இறை அவன் கர்வத்தை அழிக்கத் தூணிலிருந்து வெளிப்பட்டார்.

தூண் என்பது ஒரு இறுக்கமான விஷயம். மிக இறுக்கமான விஷயத்தை மனிதன் தொட்டு பார்க்கும் போது அந்த பிளவிலிருந்து மிகப்பெரிய சக்தி தோன்றி விடுகிறது.

அப்படி உடைக்கத் தெரிந்ததாலேயே இந்த விஷயம் தன் வசத்தில் இருக்கிறது என்று மனிதன் நினைத்துக் கொண்டிருக்கிறான்.

இல்லை.. அவனுக்கு உடைக்கத்தான் தெரிந்திருக்கிறது. உடைப்பிலிருந்து என்ன வெளிவருகிறது, அதை எப்படி தடுத்து நிறுத்துவதென்று அவனுக்குத் தெரியவே இல்லை. ஏதோ ஒரு தர்மத்துக்குக் கட்டுப்பட்டு அந்த சக்தி மனிதனை இன்னும் நசுக்காமல் இருக்கிறது.

இந்த புத்தியின் இரண்டுங்கெட்டான் நிலையைத் தான் பிரகலாதன் சரித்திரம் சொல்கிறது. பிரகலாதன் நாராயணனைப் பார்த்து கை கூப்பினான்.

அதாவது மனம் புத்தியின் மரணத்தைப் பார்த்து திகைத்து நின்றது. எல்லாம் வல்ல இறையைப் பார்த்து கை கூப்பியது. அவர் கால்களுக்குக் கீழே போய் நமஸ்கரித்தது. அவருடைய முழங்காலைப் பற்றிக் கொண்டு "போதும் இறையே, சாந்தமாக இருங்கள்." என்று கெஞ்சிக் கேட்டுக்



கொண்டது.

மனம் குழந்தை போன்று தன்னை உற்றுப் பார்ப்பதைப் பார்த்து இறையும் சாந்தமானது. அமைதியானது.

பிரகலாதன் சரித்திரமானான்.

இந்தக் கதையை இதற்கு மேல் விளக்க முடியாது. நன்றாக உற்றுப் பார்த்து பலமுறை படியுங்கள். இந்தக்கதை வெளியில் இல்லை. இந்தக்கதை உங்களுக்குள் இருக்கிறது. உங்கள் மனதையும், உங்கள் புத்தியையும் தனித்தனியே உற்றுப்பார்க்கக் கற்றுக் கொண்டால் இதனுடைய வலிமைகளும், அட்டகாசங்களும் இதனுடைய உண்மைகளும் உங்களுக்குப் புரியவரும்.

பிரகலாத சரித்திரம் வெறும் கதையல்ல. ஒவ்வொரு தனிமனிதனுக்குள்ளும் நடந்து வருகின்ற யுத்தம்.

இந்தப் போரைக் கவனித்து வந்தால் தன்னையறியலாம். தன்னை அறிந்தவன்தான் வாழ்க்கையில் வெற்றி பெறுகிறான். சரித்திரமாகிறான்.

## கொங்கணவர்

'பிரகலாதன் கதை'யில் புத்தியின் ஆட்டத்தையும், மனதின் குழந்தைத்தனத்தையும் விவரித்திருந்தேன். மனம் பிரகலாதனா, குழந்தையா, அப்போது மனம் என்பது வேறெதுவும் செய்ய வேண்டாமா. வெறுமே கடவுளை நோக்கி கைகூப்பி இருந்தால் போதுமா. 'குழந்தையாகவே வாழ எனக்கு ஆசைதான். ஆனால், முடியாதே' என்று ஒருவர் சொன்னார்.

புத்தி செய்யும் அட்டகாசத்தை உதறி, அதாவது தன்னுள் கிளரும் கர்வத்தைப் புறக்கணித்து, அமைதியாய் வாழ்வது பற்றி இன்னொரு கதை சொல்ல ஆசைப் படுகிறேன்.

புத்தியின் கர்வம் எப்படிப்பட்ட தொந்தரவுகளைக் கொண்டு வந்து கொடுக்கும் என்று விவரிக்க விரும்புகிறேன். நீங்கள் இந்தக் கதையைப் படித்து தெரிந்து கொள்வதைவிட, கர்விகளைப் பார்த்து தெரிந்து கொள்ளலாம். இந்தக் கதையிலும் ஒரு கர்வியை உங்களுக்குச் சுட்டிக் காட்டுகிறேன்.

அவருக்கு கொங்கணவர் என்று பெயர். அவர் அந்தணர். குலகர்வத்தைத் தாண்டி வித்யா கர்வமும் அவரிடம் நிரம்பிக் கிடந்தது. அவர் குலத்தில்

உள்ளவர்களையே அவர் மதிப்பதில்லை. எவரோடும் மனம் ஒன்றிப் பேசுவதில்லை.

அவருக்கு நிறைய வித்தைகள் தெரிந்திருந்தன. விடிந்து கீழ்திசையைப் பார்த்தால் இன்று வெய்யில், மழை, பனி பற்றிய பருவநிலை அவருக்குத் தெரிந்து விடும். இன்றைக்கு கிரக நிலைகளை வைத்து, தன் மனோ நிலையை எடை போட்டு விட முடியும்.

'இன்று அங்காரகன் எனக்கு எட்டில் இருக்கிறான். புதன் பத்தில், எனவே நிச்சயம் இன்று கோபம் வரும். கோபத்தால் தீங்கு ஏற்படாமல் இருக்க 'சுப்பிரமணிய அஷ்டகம்' சொல்வது உத்தமம். நிறைய நீர் குடித்து கிழங்குகள் தவிர்த்து, கனிகளாகவே புசிப்பது நல்லது' என்று முடிவு செய்வார்.

அடே, நாரை கடல் பக்கத்தில் இருந்து திரும்புகிறதே. அப்படியானால் அங்கு இருட்டி விட்டது என்று அர்த்தம். அதாவது மேகம் சூழ்ந்து விட்டது என்று பொருள். நாரை மிகவும் தாழப் போகிறது. தொலைவே மின்னுகிறது என்று இதற்குப் பொருள்.

'சரி.. காற்று எப்படி அடிக்கிறது. தென்னையும், பனையும் பார்த்து, நாணலையும், மூங்கிலையும் கவனித்துக் காற்றின் வேகம் தெரிந்து, இன்னும் ஒன்னரை நாழிகையில் இங்கு மழைவரும். இன்னும் கால் நாழிகையில் தும்பிகள் வட்டமிடும். காற்றில் ஈரம் தெரியும். அதற்குள், ஏதேனும் ஒரு ஊருக்குள் நுழைந்து உட்கார்ந்து விடலாம்.' அவர் விரைவாக நடந்தார்.

அது ஒரு சிறு கிராமம். ஊர்த் தலைவர்கள் கூடி அவரை வரவேற்றார்கள். சிவன் கோவிலில் அவரை உட்கார வைத்தார்கள். தும்பிகள் அடையாய் பறப்பது பார்த்து அவர் திடுக்கிட்டார். பெரு மழை பெய்தால் ஊர்க் கோவில் தாங்குமா. என்று சுற்றிப் பார்த்தார். தாங்கும் என்று தோன்றியது.

"பெரிய மழை வரப் போகிறது. எனவே சுற்றுப் புறத்தில் வேலை செய்பவர்களை ஊருக்குள் அழைத்து விடுங்கள். தாழ்வான இடத்தில் வசிப்பவர்கள் கோவிலுக்குள் நுழைந்து விடுங்கள். உங்கள் மாடு, கன்றுகளை மேடான இடத்திற்கு அனுப்பி விடுங்கள்." அவர் உரத்துக் கூறினார். அவர் குரலில் உள்ள தன்மையைக் கண்டு அவர்கள் உடனே அடிபணிந்தார்கள்.

"வெய்யில் சுள்ளென்று உரைக்கிறது. எப்படி மழை பெய்யும்." ஒரு இளைஞன் நாலா பக்கமும் சுற்றிப் பார்த்துக் கேட்டான். மரம் ஏறி கிழக்கு நோக்கினான்.



"தொலைவே ஒரு புள்ளி போல் அடிவானத்தில் ஏதோ தெரிகிறது." என்று கூறினான்.

"அதுதான் மழை." அவர் பதில் சொன்னார்.

ஊர் மழைக்குக் காத்திருந்தது. மாடுகளை மேடான பட்டியில் அடைத்தது. தானியங்களை கல் கட்டிடங்களுக்கு மாற்றியது. உயர்ந்த துணிகளை, வீட்டின் பொக்கிஷங்களை தக்கவாறு பத்திரப்படுத்திக் கொண்டது. அடுத்த ஒரு நாழிகையில் ஆண்களும், பெண்களுமாய் சில நூறு பேர்கள் பம்பரமாய் சுழன்று தங்களைப் பத்திரப் படுத்திக் கொண்டார்கள்.

மழை பெரிய கால்கள் ஊன்றி வந்தது. மழைக்கு முன் காற்று நுழைந்து ஊரைக் கலைத்துப் போட்டது. தூசியை வாரி, மூலை முடுக்கெல்லாம் இறைத்து கோபம் காட்டியது. எல்லா வீட்டுக் கதவுகளும் இழுத்து மூடப்பட்டிருந்ததால் அவர்கள் பாதிப்பில்லாமல் தப்பினார்கள்.

மழை தடதடத்து தரை இறங்கியது. மின்னல் மின்னி, இடி இடித்து வயிறு கலக்கியது.

பேய் மழை என்பது என்ன என்று அன்று இளைஞர்களுக்கும், குழந்தைகளுக்கும் சொல்லித்தரப் பட்டது. பெரிசுகள் பழைய விஷயங்களை நினைவு படுத்திக் கொண்டார்கள்.

மழை சற்று இடைவெளி விட, அவர் யோசனையின் பேரில், கிராம மக்கள் படைவீரர்கள் போல் செயல்பட்டு குடிசைவாசிகளை கோவிலுக்கு மாற்றினார்கள். ஊர் முழுவதற்கும் உணவு தயாரிக்க ஏற்பாடு செய்தார்கள்.

மழை மறுபடியும் முற்றிற்று. யாருக்கும் பேச்சே வரவில்லை. எல்லோரும் மழையையே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

'இவர் எச்சரிக்காவிட்டால் என்ன ஆகியிருக்கும்.' திகைத்துப் போயிருந்தார்கள். குளிரிலும், பயத்திலும் உட்கார்ந்தபடியே தூங்கினார்கள். மழை ஊரை சதிராட்டம் ஆடியது. விடிந்தபிறகும் தொடர்ந்தது. அவர் மறுபடியும் வானம் பார்த்தார். கோபுரமேறி திசைகள் கவனித்தார்.

"இன்னும் மூன்று நாழிகையில் மழை நின்றுவிடும். கவலை வேண்டாம்." அவர் சொல்லிவிட்டு ஜபத்தில் மூழ்கினார். அவர் சொன்னபடியே நடந்தது. மூன்றாம் நாழிகை மழையின் பலம் குறைந்தது. நாலாம் நாழிகை அறவே நின்றது.

அவர் 'வருகிறேன்' என்று விடைபெற்று எழுந்தார். ஊர் அவரைக் கைகூப்பி பின் தொடர்ந்தது. பெண்கள் அவரைப் பார்த்து 'தெய்வமே' என்று அரற்றினார்கள். குழந்தைகளை முன்னே தள்ளி அவரை வணங்கச்

செய்தார்கள்.

'நீங்கள் வராது போயிருந்தால் இந்த ஊர் சின்னா பின்னமாகப் போயிருக்கும். இந்த ஊருக்கு இது மறுபிறப்பு. புனர் ஜென்மம். மணமுள்ள மலர்கள் நிறைந்த ஊர் மணவூர் என்று வைத்திருந்தோம். இனி இந்த ஊருக்குப் பெயர் 'கொங்கணவர் வரம்' நன்றியோடு பேசினார்கள்.

கொங்கணவர் வரத்தை ஆசீர்வதிக்க வேண்டும் என்று வேண்டினார்கள். அவர் சிரித்தார். அப்படியே ஆகட்டும் என்றார். கை உயர்த்தி ஊரை ஆசீர்வாதம் செய்தார்.

'அய்யா, மழை வருவதை முன்கூட்டியே அறிந்து கொள்ளும் வித்தையை, எங்களில் எவருக்கேனும் ஒருவருக்கு நீங்கள் சொல்லித் தரலாகாதா.' ஒரு பெரியவர் வினவினார்.

கொங்கணவர் அவர்களில் ஒருவரைத் தேர்ந்தெடுத்தார். 'தான் ஒருவருக்கு மட்டுமே சொல்லித் தரலாம்' என்று சத்தியப் பிரமாணம் வாங்கிக் கொண்டார். மழை வருவதைப் பற்றி மிகத் தெளிவாக அந்த கிராம வாசிக்குக் கற்றுக் கொடுத்தார்.

காப்பாற்றியதற்கும், கற்று கொடுத்ததற்கும் ஒரு கவளம் உணவுகூட வாங்கிக் கொள்ளவில்லை. ஒருகுவளை குடிநீர் கூட கேட்டு அருந்தவில்லை.

காட்டு வழியில் அகன்ற இலைகளில் தேங்கிய நீரை சேமித்துக் குடித்தார். கொய்யாவும், விளாம்பழமும் ருசித்தார். பெரிய நகரம் நோக்கி நடந்தார். காப்பாற்றியதும், கற்றுக் கொடுத்ததும் அவர் மனதில் மிகப் பெரிய கர்வத்தைக் கிளறி விட்டிருந்தன.

'ஒருவேளை நான் அந்தக் கிராமத்திற்குப் போகாமல் இருந்தால் அந்தக்கிராமம் இந்நேரம் சின்னா பின்னமாயிருக்கும். கறவைகள் மொத்தமும் மடிந்திருக்கும். ஜனங்களில் பாதி பேர் இறந்திருப்பார்கள். என்படிப்பு, என் தபஸ் அவர்களைக் காப்பாற்றி விட்டது.'

தவம் என்பது என்ன. ஒரு முகப்பட்ட சிந்தனை. படிப்பின் துணை கொண்டு ஒருமுகப்படுத்திய மனதால் ஒரு விஷயத்தை சிந்திக்கிற போது அடுத்து என்ன செய்ய வேண்டும் என்று தோன்றி விடுகிறது. எதைப் பற்றியும் எளிதாய் ஒரு முடிவுக்கு வர முடிகிறது.

ஆனால், ஒருமுகப்பட்ட மனம் என்பது எளிதல்ல. அதற்கு கடும் பயிற்சி அவசியம். வைராக்கியம் அவசியம். ஒழுக்கம் அவசியம். ஒழுக்கம் என்பது மிகக் கடினமான விஷயம். புலன்கள் செய்யும் தொந்தரவைப் புறக்கணித்து,



மனதைச் சிதற விடாமல் இறுக்கி, மாதக் கணக்கில் வருடக் கணக்கில் உபவாசங்கள் இருந்து, மௌன விரதம் இருந்து புத்தியைக் கூர்மையாக்கி, மூளையின் மடிப்புகளை அதிகமாக்கி, படிக்கின்ற சகலத்தையும் நினைவுக்குள் வைத்திருக்கும் தன்மையை அதிகப்படுத்துகிறது.

ஒருநாளைக்கு நான்கு முறை பிராணயாமம் செய்வதால் புத்தி இன்னும் வலுவாகிறது. ஒருமாதம் பாதிக்கு மேல் பச்சைக் காய்கறியே உண்பதால் உடம்பு தகடு போல் இருக்கிறது.

தினமும் பல காதங்கள் நடப்பது மனதுக்கு சந்துஷ்டியும், உடம்புக்கு வலுவையும் தருகின்றது.

பெண்ணாசையோ, பொன்னாசையோ, மண்ணாசையோ இந்த கொங்கணனுக்கு இல்லை. ஏனெனில், இவைகளை சம்பாதிப்பது மிக எளிது. சம்பாதித்த மறுகணமே இவற்றை பாதுகாக்க வேண்டும் என்ற பயம் வந்து விடுகிறது. ஒரு ஆசை பயத்தைக் கொடுக்குமானால், அந்த ஆசையை எதற்காக சுவீகரிக்க வேண்டும். எங்கேனும் அரசனிடம் கை நீட்டி யாசகம் கேட்டால் பொன் கிடைக்கும். அதை யாரேனும் தாசியிடம் கொடுத்தால் சுகம் கிடைக்கும். மண்ணில் விளைகின்ற எல்லாப் பொருட்களும் கிடைக்கும்.

ஒரு கற்றறிந்த அந்தணனுக்கு எவர் வீட்டிலும் உணவு கிடைக்கும். எங்கு போய் கையேந்தினாலும் உணவு கிடைக்கும். எனவே, இடைவிடாது தவம் செய்ய என்னால் முடியும். நான் பிறந்ததே அதற்காக. என் பெருமை, என் தவம். என் தவமே என் பெருமை.

'ஒரு ஊருக்கு மட்டுமே 'கொங்கணவர் வரம்' என்று பெயர் வைத்திருக்கிறீர்களா. இந்த உலகத்திற்கே 'கொங்கணவர் வரம்' என்று பெயர் வைக்கும் காலம் ஒன்று வரும். என் தவம் அந்த புகழை எனக்குக் கொண்டு வந்து தரும்.'

உலகில் அற்புதமான விஷயம் தவம். தவம் என்பது மன ஒழுக்கம். வைராக்கியம். இந்த உலகம் தவத்தில் சிறந்தோருக்காக படைக்கப்பட்டிருக்கிறது. ஏனெனில், இந்த உலகத்தைக் காப்பாற்றுவோரே அவர்கள்தான். தபஸ்விகள் இல்லையெனில் மனிதர்கள் இல்லை. மனிதர்கள் இல்லையெனில் இந்த உலகம் வெறும் மிருகக் கொல்லை. மனிதர்களில் சிறந்தவரே இங்கு தெய்வம் எனப் போற்றப்படுவர்.

அவர் சிந்தித்தபடி நடந்தார். சிரித்தார். தொலைவில் உள்ள நகரத்தின் கொடிகள் மெல்ல அசைந்து அவரை

வரவேற்றன. அவர் மலைச் சரிவில் இறங்கி நகரம் நோக்கிப் போக, சுற்றியுள்ள தாவரங்களின் சிரிப்பொலி கேட்டது.

தாவரங்கள் சிரிக்குமென்பதை அவர் கேள்விப் பட்டிருக்கிறார். இப்பொழுதுதான் முதன் முறையாக உணர்ந்தார். என்ன அர்த்தம் என்று யோசித்தார். ஆழமாய் யோசிக்க மனதை வெறுமையாக்கிக் கொண்டார்.

தாவரங்கள் எப்போது சிரிக்கும். ஏதோ ஒரு சுலோகத்தை மூளை இடுக்கில் தேடினார்.

ஒரு செங்கால் கொக்கு கடல் நோக்கிப் பறந்து கொண்டிருந்தது. அது ஆசனவாய் விரித்து எச்சமிட்டது. அந்த எச்சம் காற்றில் வளைந்து அவர் தலையில் வந்து விழுந்தது. சிதறியது. எச்சத்தில் நண்டின் நாற்றம், மீனின் நாற்றம் அதிகமிருந்தது.

அவர் கோபமானார்.

"என்ன அவமானம் இது. நடு வானத்தில் மலம் கழிக்க எவ்வளவு தைரியம் உனக்கு. என்னைக் கண்டு தாவரங்கள் சிரித்து வணங்குகின்றன. தங்களுக்குள் என்வரவைப் பற்றி பேசுகின்றன. அதைவிட உயர்ந்த நிலையில் இருக்கும் கொக்கான உனக்கு நான் யாரென்று தெரியாதா. இது திமிர்தானே."

மனதின் கோபம் முழுவதையும் ஒன்று சேர்த்து, கண்கள் மூலம் வெளியே அனுப்பி அந்த கொக்கின் மீது நிலைக்க வைத்தார். அந்தக் கொக்கு எரிந்து சாம்பலாயிற்று. சாம்பல் தரையில் விழுந்தது.

தாவரங்கள் சட்டென்று சிரிப்பை நிறுத்தின.

"அறிவாளியை அவமதித்தால் அழிந்து போவீர்கள். இது உங்களுக்கு ஒரு பாடம்." அவர் உலகத்தை நோக்கி கத்தினார். அவர் நடக்கும் பாதையில் உள்ள சகல உயிர்களும் பதுங்கிக் கொண்டன. அவர் நகரத்தை அடையும் போது உச்சிப் பொழுது ஆகியிருந்தது.

அவர் நகரத்தின் குளத்தில் இறங்கினார். முங்கிக் குளித்தார். கரையில் அமர்ந்து ஜபதபங்கள் முடித்தார். கோவிலுக்குப் போய் இறை வழிபாடு செய்தார். வெளியே வந்தார். அவருக்குப் பசித்தது.

பக்குவமான உணவை சரியான முறையில் பரிமாற எந்த வீடு உகந்தது. அவர் பல வீடுகளைப் புறக்கணித்து ஒரு வீட்டைத் தேர்ந்தெடுத்தார். வாசலில் நின்று 'பவதி பிக்ஷாந்தேஹி' என்று கூவினார்.

வீடு உள்ளே நிசப்தமாக இருந்தது. மறுபடியும் கூவினார்.

உள்ளிருந்து ஒரு பெண் குரல், "இதோ வருகிறேன்." என்று குரல் கொடுத்தது. ஒருசிறிய நேரம் கழிந்தது.



உள்ளே சலனமே இல்லை.

மறுபடியும் 'பவதி பிக்ஷாந்தேஹி' என்று கூவினார். லேசாய் அவருக்குள் கோபம் துளிர் விட்டது.

"தயவு செய்து திண்ணையில் அமருங்கள்." என்றாள்.

அவர் திண்ணையில் அமர்ந்தார். சுவரில் சாய்ந்து கொண்டார். ஒரு சிறிய அலுப்பு அவரைச் சூழ்ந்து கொண்டது. லேசாய் கண்ணயர்ந்தார்.

நான்கு அணில்கள் ஒன்றையொன்று துரத்திக் கொண்டு, வாய் விட்டுச் சிரித்தன. அவர் திடுக்கிட்டு கண் விழித்தார்.

"என்ன விளையாட்டு இங்கே" என்று புருவம் நெறித்தார். அணில்கள் வெகுதூரம் ஓடிப் போயின.

மறுபடி பசித்தது. எழுந்து வீடு நோக்கித் திரும்பினார். 'பவதி பிக்ஷாந்தேஹி' என்று உரக்கக் கத்தினார். குரலில் அதட்டல் இருந்தது.

"சற்றுப் பொறுத்துக் கொள்ள வேண்டும்." அந்தப் பெண்மணி கையில் அன்னத்தட்டுடன் மூன்றாவது கட்டில் நின்றுப் பணிவாகப் பேசினாள்.

"உள்ளே வேலையாக இருக்கிறேன். முடித்து உங்களை வந்து கவனிக்கிறேன்."

கையில் அன்னத்தட்டு கரண்டி. அப்படியானால் என்னை வெளியே உட்கார வைத்து விட்டு உள்ளே யாருக்கோ சோறு போடுகிறாயா. 'பவதி பிக்ஷாந்தேஹி' என்று நாலுமுறை கத்தி விட்டேனே. இன்னமும் கூவ வேண்டும் என்று எதிர் பார்க்கிறாயா.

என் பசி உனக்குத் தெரியவில்லையா. என் பசி வெளியே உயிர் கொண்டு வந்தால், இந்த வீட்டையே பொசுக்கி விடும் என்பது உனக்குத் தெரியாதா."

அவர் எண்ணங்கள் கோபமாயின. பூமியில் கால் உதைத்தார்.

"என்ன திமிரடி உனக்கு." உரக்கக் கத்தினார்.

உள்ளே போக முற்பட்ட அந்தப் பெண்மணி நின்றாள். வியந்தாள். உறுத்துப் பார்த்தாள்.

"மன்னிக்க வேண்டும்" மறுபடியும் மிருதுவாகப் பேசத் துவங்கினாள்.

அவள் பணிவு அலட்சியமாக அவருக்குப் பட்டது.

"மன்னிக்க முடியாது. வாசலில் அதிதியை வைத்துவிட்டு உள்ளே யாருக்கோ சோறு போடுகிறாயே. நீ குலப்பெண்தானா. உன்னை என்ன செய்கிறேன் பார்.."

கோபத்தைக் கண்களின் வழியே கொண்டு வந்தார். அவளை நோக்கி செலுத்தினார். அவர் கோபம் அவர்களுக்கு நடுவே தரையில் விழுந்தது.

அவள் மெல்லச் சிரித்தாள்.

அவர் திகைத்தார். 'தன் கோபம் இங்கு ஏன் பலிதமாகவில்லை. இந்தப் பெண்ணை ஏன் சுட்டெரிக்கவில்லை. தடுமாறினார்.

"கொக்கென்று நினைத்தாயோ கொங்கணவா." அவளிடமிருந்து வார்த்தைகள் புறப்பட்டு அவருக்கு முன்னே சொடுக்கின.

அவருக்கு தலை சுற்றியது.

என் பெயர் உனக்கெப்படி தெரியும். இந்த நகரத்துக்கு நான் வருவது இதுதானே முதல் தடவை.

எப்படியோ பெயர் தெரிந்திருந்தாலும், கொக்கு பற்றியெரிந்தது உனக்கு எப்படித் தெரியும். நடு வனாந்திரத்தில் நடந்த விஷயமல்லவா அது.

யார் நீ.. தேவதையா.. யட்சிணியா.. இவ்வூர் காவல் தெய்வமா.. எப்படி உனக்கு இவ்வளவு தெரிகிறது. உன்னைப் பார்த்தால் படித்தவளாய் தெரியவில்லையே. நீ அந்தணர் வகுப்பும் இல்லையே. உனக்கு இந்தத் தெளிவு கிடைத்தது எங்ஙனம்.. எவரால்..

அவர் பொத்தென்று திண்ணையில் உட்கார்ந்தார். சாய்ந்தார். சிந்தித்தார். ஆழ யோசிக்க முற்பட்டு ஒரு தூக்கத்தில் சிக்கிக் கொண்டார்.

மனம் ஒருமைப்படுதலும், தூக்கமும் அருகருகே உள்ள விஷயங்கள்.

மறுபடியும் நேரம் நகர்ந்தது. வெய்யில் நகர்ந்தது. அவர் கண்விழிக்க, அவர் எதிரே இலை போடப்பட்டிருந்தது. அந்தப் பெண்மணி 'அவருக்கு விசிறிக் கொண்டிருந்தாள்.

"அம்மா.. நீ யார்."

கொங்கணவர் பயந்து கை கூப்பினார்.

அவர் பயத்துக்கு அவள் வாய் விட்டுச் சிரித்தாள்.

முதுமைக்கு நகர்ந்து போகும் மத்திம வயது. மூன்று நான்கு குழந்தைகள் பெற்ற உடம்பு. உழைத்து, உழைத்து உறுதியான தேகம். மஞ்சள் பூசிய முகம். முகத்தில் அசாதாரண பொலிவு. சுடர்விடும் கண்கள். எல்லோரிடமும் எப்போதும் சிரிக்கின்ற இதழ்கள். இடப்பக்கம் குழிவிழும் ஸ்ரீ நிதிக் கன்னம். உறுதியைச் சொல்லும் பார்வதி முகவாய். முன்பக்கம் மடிந்த சரஸ்வதி காதுகள். நெற்றியின் அகலம் ஆயுசு கெட்டி. புருவத்தின் வளைவு போகத்தின் நிறைவு. சங்கம் நிகர்த்த கண்டம். யோகிகளுக்கே உண்டான கிள்ளைக் குரல். பச்சிலை நெடி போல் மேனியின் காந்தி. பாதங்கள் இரண்டும் பிரம்மனின் வாசம். இவள் மிகப் பெரியவள் என்று அவர்



மனம் கூவிற்று.

"இல்லை அய்யா. நான் சாதாரணப் பெண்மணி. ஒரு வணிகனின் மனைவி. குடும்பத்தலைவி. எனக்கு படிப்பு அதிகமில்லை. வேத விசாரங்கள் செய்தது இல்லை, பக்தி இலக்கியம் பயின்றதில்லை. காவிய பாடம் கற்றதில்லை. நான் அறிந்தது ஒரே ஒரு விஷயம்தான்.

என் கடமைகளைக் குறைவரச் செய்யவே நான் கற்பிக்கப்பட்டேன்.

வெளியூர் போய் என் புருஷன் வீடு திரும்பிருக்கிறான். வெகுதூரம் பல இடங்களுக்கு அலைந்து கஷ்டப்பட்டு நன்கு சம்பாதித்து வந்திருக்கிறான்.

என் புருஷனின் களைப்பு நீக்க அவனுக்கு உதவி செய்து கொண்டிருந்தேன். இது என் கடமை. இது என் வேலை. இதை விட வேறெதுவும் முக்கியமில்லை.

என் புருஷனை சீராட்டுகிற போது வாசலில் கடவுளே வந்தாலும் அதைப் பற்றி எனக்குக் கவலையில்லை. அந்தக் கடவுளும் என் கடமை முடியும் வரை காத்திருக்க வேண்டியதுதான்.

எனக்காக, என் குடும்பத்திற்காகச் சம்பாதித்து வரும் புருஷனைவிட, வேறு எவரும் எனக்கு முக்கியமில்லை. நான் பத்தினி.

என் புருஷனே எனக்கு சகலமும். அவனே எஜமான். அவனே குரு. அவனே தெய்வம். அவன் இல்லையெனில் நான் இல்லை. எனவே, அவருக்குத் தொண்டு செய்வதையே மிக முக்கியமான விஷயமாக நான் கருதுகிறேன்.

அதிதி முக்கியம்தான். ஆனால், புருஷனைவிட ஒரு பெண்ணுக்கு, அதிதி முக்கிமாகி விட முடியாது. அந்த அதிதி ஞானியாக இருந்தாலும் சரி, யோகியாக இருந்தாலும் சரி.

புருஷனே முதல்வன். பிறகே மற்றவர். என்னை உங்கள் கோபம் எதுவும் செய்யாது. நீர் கொக்கை எரித்தது குற்றம். அந்த பாவம் உம்மைச் சும்மா விடாது.

பறந்தபடி எச்சமிடுவது அதன் இயல்பு. மேலும் உம் தலையைக் குறி வைத்து அது எச்சமிடவில்லை. காற்று கொணர்ந்து உமது தலையில் போட்டது. 'எரிந்து போ' என்று காற்றைச் சபிக்க வேண்டியதுதானே. பிறகு நீர் எப்படி உயிர் வாழ்வது."

அவள் சொல்லிவிட்டு கலகலவென்று சிரித்தாள். அந்தச் சிரிப்பில் உயிர் மிளிர்ந்தது. கோடிக்கணக்கான தாவரங்கள் ஒன்றாய்ச் சிரிப்பது போன்ற சப்தமாய் அது இருந்தது.

"கொங்கணவரே, தன் கடமையைச் சரியாய் செய்பவரை, நெல்முனையளவும் பிசகாதவரை, பயபக்தியுடன் பணி ஆற்றுபவரை உங்களைப் போன்றோர் சாபம் எதுவும் செய்யாது.

மந்திர ஜபங்களும், ஹோம யக்ஞங்களும், வேத விசாரங்களும் மட்டுமே உயர்ந்தவை அல்ல. இவைகளை விட உயர்ந்தது ஒருவர் தன் கடமையைக் குறைவரச் செய்வது. நீங்கள் அந்தணர். தியானமும், ஹோமமும், மந்திர ஜபமும் உங்கள் கடமை. அதே போல் எனக்கு தியானம் என் குடும்பம். எனக்கு ஹோமம் என் வீட்டு சமையல். என் புருஷன் நலமே எனக்கு மந்திர ஜபம்.

எனக்கு எங்கிருந்து இவ்வளவு ஆற்றல் வந்தது என்று வியக்க வேண்டாம். உமது கடமையைச் செய்து உமக்கு ஆற்றல் வந்தது போல, எனது கடடையை செய்து நான் இந்த ஆற்றல் பெற்றேன்.

உம்மால் கொக்கைத்தான் பொசுக்க முடியும். என்னால் உம்மையே பொசுக்க முடியும். உமது கோபத்தீயை என் புருஷன் மீது செலுத்தியிருப்பின் உம்மை நான் நொறுங்க அடித்திருப்பேன். எனது சடையால் அடித்து உங்கள் மீது நெருப்பு மூட்டியிருப்பேன்.

உயர்வு, தாழ்வு குடிப்பிறப்பில் இல்லை அந்தணரே. நீர் கொண்ட உண்மையில் இருக்கிறது. நான் உண்மையானவள். என் உண்மைதான் எனக்கு கவசம். என் ஆயுதம். எனவே அதிகம் யோசிக்காமல் நான் போட்ட உணவைச் சாப்பிட்டு விட்டு போங்கள். மறுத்துப் போனீர் என்றால் உம்மை அது பாதிக்கும்."

அந்தணர் மௌனமாக உணவு உண்டார்.

உணவு மிக ருசியாக இருந்தது. உணவு தயாரித்ததில் ஒரு அக்கறை தெரிந்தது. மிக அன்போடு தயாரிக்கப்பட்டது என்பதை உணர முடிந்தது. குடும்பத்தின் மீதுள்ள அக்கறை தெரிந்தது.

"என் புருஷன் உறங்கி விட்டான். அதனால் உணவிட வந்தேன். மறுபடி சொல்கிறேன். என் குடும்பம்தான் எனக்கு கோவில், என் புருஷன்தான் எனக்குக் கடவுள். இவர்களுக்கு உண்டான கடமையை நான் செய்வதற்கு நடுவே கடவுள் வந்தாலும் நான் கவனிக்க மாட்டேன்."

"தாயே.." கை அலம்பிய பிறகு கொங்கணவர் கை கூப்பினார்.

"என்ன"

"வணிகர் குல மகளான உனக்கு இந்த விவேகம் எங்கிருந்து வந்தது. எவரால் கொடுக்கப்பட்டது." கை கூப்பிக் கேட்டார்.

அவள் வாய் விட்டுச் சிரித்தாள்.

"வணிகர் குல மகளுக்கு எப்படி வந்தது என்பதே கேள்வியா. அந்தணரே.. இந்த ஊரின் கோடியில் மாமிசம் விற்கின்ற ஒரு கசாப்புக் கடைக்காரர் வாழ்கிறார். அவர்தான் எனக்குக் குரு. அவரிடம் போய் எல்லா விளக்கங்களும் தெரிந்து கொள்ளுங்கள்.

எனக்கு நேரமாயிற்று. இப்போது உண்டு உறங்கினால்தான் என் புருஷன் விழிப்பதற்கு முன் நான் எழ முடியும். நான் விடை பெறுகிறேன்.

என்னால் இயன்றதைச் செய்தேன். குறையிருப்பின் மன்னிக்க. நிறையிருப்பின் என் புருஷன் மகிமை. எனது உணவை உமது குடல் செரிமானம் செய்து நீர் விடும் சிறிய ஏப்பம், என் குடும்பத்தை வாழ்த்துவதாக அமையட்டும். மற்றபடிக்கு உங்கள் மீது எனக்கு எந்தக் குறையுமில்லை அந்தணரே. வாழ்க அந்தணர். வாழ்க ஆணினம்" அவள் பாடியபடியே வீட்டுக்குள் போனாள்.

கொங்கணவர் அவள் சென்ற திசை நோக்கிக் கும்பிட்டார். தெரு இறங்கினார். அவர் மனம் இறைச்சி விற்கும் கசாப்புக் கடைக்காரரைத் தேடியது.

அந்த இளைஞன் கொல்லையில் கட்டப்பட்டிருந்த ஒரு ஆட்டை அவிழ்த்து மெல்ல ஓட்டிக் கொண்டு போனான்.

மரத்தடியில் இளைப்பாறுகிற மாதிரி நின்று கொண்டிருந்த கொங்கணவரைத் தாண்டிப் போனான். தாண்டிப் போகும் போது மரியாதை செய்தான். புதர்கள் தாண்டி ஒரு இடத்திற்கு போய் ஆட்டின் முதுகை தடவிக் கொடுத்து அதனோடு பேசினான்.

"உணவுக்காக உன்னைக் கொல்லப் போகிறேன். என்னை மன்னிக்க வேண்டும்." என்று அந்த மிருகத்திடம் பிரார்த்தனை செய்தான். அதையே அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

ஆடு தின்ன குனிந்த போது 'சரக்' கென்று ஒரே வீச்சில் தலை துண்டித்தான். தோலையும் மாமிசத்தையும் பிரித்தெடுத்தான். மாமிசத்தை தோளில் போட்டபடி கடையை அடைந்தான்.

ஊர் மக்கள் காத்திருந்தார்கள். மாமிசத்தைக் கூறு போட்டான். அவரவர்க்கு வேண்டிய பகுதியை அவரவர் விரும்பிய வண்ணம் கொத்திக் கொடுத்தான். ஆட்டின் தலைக்கு இரண்டு குடும்பங்கள் போட்டி போட்டபோது 'நாளை தருகிறேன்' என்று ஒருவருக்கு சமாதானம் சொல்லி மற்றவர்க்கு வழங்கினான்.

"இன்னொரு ஆடு வெட்டேன். தலையை நான் வாங்கிக் கொள்கிறேன்." தலை கிடைக்காதவர் வேண்டிய போது மெல்ல மறுதலித்தான்.

"ஒரு நாளைக்கு ஒரு பலி போதும். நீங்கள் காசு தருகிறீர்கள் என்பதற்காக, நான் இன்னொரு பலி போடத் தயாராக இல்லை. வாக்கு தந்தது போல, நாளை வெட்டும் ஆட்டை உங்களுக்குத் தருகிறேன்." என்று நயமாய் பேசினான்.

கடையை சுத்தம் செய்தான். சிறிய எலும்புகளை உடைத்து நாய்களுக்குப் போட்டான். சிறிதளவு மாமிசம் தன் வீட்டிற்காக எடுத்துக் கொண்டான். கடையிலிருந்து சற்று தொலைவே இருந்த வீட்டிற்குப் போனான்.

அவனை நோக்கி ஓடிவந்த குழந்தைகளை அள்ளிக் கொண்டான். மனைவியிடம் அன்று சம்பாதித்த காசையும், மாமிசத்தையும் கொடுத்தான். கை, கால் கழுவிக் கொண்டான். தந்தைக்கு எதிரே உட்கார்ந்து அன்றைய ஊர் விஷயங்கள் பேசினான். தாயிடம் உறவினர்கள் பற்றிய விவரங்கள் கேட்டான்.

அவர்களை உற்சாகப் படுத்தி மெல்ல கிணற்றடிக்கு அழைத்துப் போனான். நீரிறைத்தான். குழந்தைகளை நீரூற்றி குளிப்பாட்டினான். அவன் மனைவி மாற்றுடை கொண்டு வந்து கொடுத்தாள்.

மனைவியிடம் சமையல் பற்றிப் பேசி உற்சாகப் படுத்தினான். வீட்டுப் பக்கம் திரும்பி வாசனை இழுத்து 'அடடா.. அடடா..' என்று பாராட்டினான். அவன் மனைவி முகம் மலர்ந்தாள். குழந்தைகளை அழைத்துக் கொண்டு உள்ளே போனாள்.

தாயையும், தந்தையையும் வீட்டுத் திண்ணையில் உட்கார வைத்து விட்டு அவர்கள் பூஜிப்பதற்கு வேண்டிய பூக்களையும், இலைகளையும், பழங்களையும் கொண்டு வந்து வைத்தான்.

அவர்கள் பூஜை துவக்கியதும் மெல்ல ஓடிப்போய் கிணற்றடியில் மெல்ல நீரிறைத்துக் குளித்தான். உலர்ந்த துணியை மனைவி கொண்டு வர, நன்றி சொல்லி வாங்கிக் கொண்டான். பெற்றோர்க்குப் பின்னே அமர்ந்து மனம் ஒருமைப்படுத்தி தியானம் செய்தான்.

அவன் குழந்தைகள் உணவு முடித்து, வாசலுக்கு வந்தன. அவர்களை அணைத்து தூங்கச் செய்தபடி பெற்றோர்கள் சொல்லும் வாழ்க்கைத் தத்துவங்கள் சொல்லி முடித்தான்.

மனமுருகி பூஜை செய்ததால் உள்மனம் பொங்கி நிற்க, அந்த கசாப்புக் கடைக்காரனின் பெற்றோர்கள், சிறிய வாக்கியங்களில் அழகான தத்துவங்களைச் சொன்னார்கள். அவன் வேண்டிக் கொண்டதால் அந்த வாக்கியங்களுக்கு அழகான விளக்கம் சொன்னார்கள்.

மகா வாக்கியங்கள் போல, அர்த்தச் செறிவோடும், எளிமையோடும் விளங்கிய அந்த வார்த்தைகளை அவன் எழுதிக் கொண்டான். சாதாரணப் பேச்சு மொழியில் அந்த வாக்கியங்கள் இருப்பதைப் பாராட்டினான். அவர்களைச் சுற்றி வந்து நமஸ்கரித்தான்.

இம்மாதிரி நிறைய வாக்கியங்கள் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொண்டான். அவர்களுடைய மேதமைக்காக பலமுறை நமஸ்கரித்து கைகூப்பிப் பாராட்டினான்.

அவன் மனைவி உணவு வகைகளை வாசலுக்கு எடுத்துவர, அவன் தாய்க்கும், தந்தைக்கும் இலைபோட்டு பரிமாறினான். அவர்களின் ஜீரண பக்குவத்துக்காக தனியே செய்யப்பட்ட உணவுகளை சிறிது ருசி பார்த்துவிட்டு, அதை பக்குவம் செய்த மனைவியைப் பாராட்டினான்.

அவர்களும் அந்த உணவை சுவைத்துவிட்டுப் பாராட்ட, "எல்லாம் நீங்கள் கற்றுக் கொடுத்தது." என்று அவன் மனைவி அவர்களைப் பாராட்டினாள். அந்த வயதான தம்பதிகளை நமஸ்கரித்தாள்.

அவர்கள் சாப்பிட்டு எஞ்சிய உணவை புருஷனும், மனைவியும் பிரசாதமாக எடுத்துக் கொண்டார்கள்.

வெய்யில் உச்சி வந்தபொழுது அவர்கள் இளைப்பாற கசாப்புக்கடைக்காரன் படுக்கை தயார் செய்தான்.

அவன் அவர்களுக்காக விசிற, அவன் மனைவி அவர்கள் விரும்பிய வண்ணம் நீதி நூலை உரக்கப் படித்தாள்.

குழந்தைகளும், பெரியோர்களும் கண் அயர்ந்ததும் அவன் மனைவி குளிக்கப் போனாள். அவன் இடைவிடாது குழந்தைகளும், பெரியவர்களுக்கும் விசிறினான். அவர்கள் அயர்ந்து தூங்கியதும், குளித்து வந்த மனைவிக்கு அருகே உட்கார்ந்து கொண்டான்.

இரண்டு பேரும் எதிரும் புதிருமாய் அமர்ந்து சாப்பிட்டபடி, ஊர்க்கதைகள் பேசினார்கள். சென்று வந்த பயணத்தை நினைவு கூர்ந்தார்கள். குழந்தைகளின் வளர்ச்சி பற்றி விவாதித்தார்கள். பிறப்பு, இறப்பு பற்றி பேசினார்கள். அவரவர் அபிப்பிராயங்களை விளக்கினார்கள்.

மனைவி சற்று கண்ணயர, அவன் நீதிநூல் எடுத்து படிக்கத் துவங்கினான். மாலையில் தோட்டத்தில் உள்ள

தாவரங்களுக்கு நீரூற்றினான். ஆடுகளுக்கு இரவு உண்ண கிளைகள் உடைத்து வந்தான்.

மாலை மயங்க அவன் ஆடுகள் மேய்ச்சலுக்குப் பிறகு வீடு திரும்பின. மேய்ப்பனுக்கு சோறு போட்டு கூலி கொடுத்தான். ஆடுகள் உண்பதை பார்வையிட்டான். நாளைக்கு எந்த ஆடு என்பதை தேர்ந்தெடுத்தான். பசுக்களிடம் இருந்து பால் கறந்தான்.

விழித்தெழுந்த குழந்தைகளுக்கும், பெரியோர் களுக்கும் காய்ச்சின பால் தரப்பட்டது.

வீட்டு முற்றத்தில் குழந்தைகளோடு விளையாடினான். எல்லா குழந்தைகளுக்கும் தாக்கவும், தடுக்கவும் பயிற்சி கொடுத்தான். அவர்கள் தனித்தனியே உடற்பயிற்சி செய்தார்கள். எதிரும், புதிருமாய் நின்று சண்டையிட்டார்கள். பிறகு வீட்டிலுள்ள எல்லோரும் குளித்தார்கள். பெரியவர்கள் முகம் கழுவிக் கொண்டார்கள்.

வீடு கூடிப் பிரார்த்தனை செய்தது. இருள் பரவும் முன் மறுபடியும் சிறிதளவு உணவெடுத்துக் கொண்டது. வீட்டு வாசலில் சிறிய விளக்கு ஏற்றப்பட்டது. வரலாறாகவும், நீதிக்கதையாகவும், தங்கள் வாழ்க்கை சம்பவமாகவும் கிழவனும், கிழவியும் பேச, வீடு அவர்களைக் கூர்மையாய் செவி மடுத்தது. சந்தேகங்கள் கேட்டு தெளிவு பெற்றது.

வீட்டுத் திண்ணையில் எல்லோரும் தனித்தனியே அமர்ந்து தியானம் செய்தார்கள். மறுபடியும் பசுவின்பால் குடித்தார்கள். காற்றோட்டமான வெளியில் படுத்துக் கொண்டார்கள். அவனும் அவன் மனைவியும் பாட்டுக்கள் பாட உறங்கிப் போனார்கள்.

சிறு கை விளக்குடன், உயரமான தடியுடன் மனைவியோடு அந்தக் கசாப்புக் கடைக்காரன் வீட்டை, தோட்டத்தைச் சுற்றி மெல்லப் பேசியபடி நடந்தான். கொல்லைப்புறத்தில் அவளை மிருதுவாய் அணைத்துக் கொண்டு முத்தமிட்டான். மனைவியைப் பாராட்டினான். மனைவியால் பாராட்டு பெற்றான். அவள் மடியில் படுத்து சிறிது நேரம் சல்லாபித்து விட்டு, அவன் வாசலுக்கு வந்து கட்டிலை திறந்த வெளியில் போட்டு படுக்கை விரித்துப் படுத்தான்.

கொங்கணவர் அவனுக்கு அருகே போய் நின்று கை கூப்பினார்.

"வாருங்கள் கொங்கணவரே. இதுதான் என் வாழ்க்கை. இதற்கு மேல் எனக்கு ஒன்றும் தெரியாது. உங்கள் கண்ணும், காதும் எனக்கு அருகே இருந்ததை



உணர்ந்தேன். என் பேச்சு ஏதும் உங்களுக்கு உபயோகமாய் இருந்ததா. இன்னும் ஏதேனும் தேவையா." கசாப்புக்கடைக்காரன் எழுந்து உட்கார்ந்து பணிவோடு கேட்டான்.

"நான் சொல்லாமலேயே என் பெயர் தெரியும் அளவுக்கு ஞானமும், நான் உன்னைக் கவனித்துக் கொண்டிருக்கிறேன் என்கிற சூட்சும புத்தியும், அசைக்க முடியாத நிதானமும், முழுமையான அமைதியும், கலவரமற்ற உவகையும், கனிவும், பணிவும் உனக்கு எங்கிருந்து வந்தன. யார் கற்றுக் கொடுத்தார்கள்." அவர் அவனிடம் பணிவோடு கேட்டார். அவன் பதில் சொல்லும் முன் யோசித்தான்.

"உலகத்தில் உள்ள எல்லா நல்ல விஷயங்களும் ஒருவருக்கு தந்தையின் மூலம் வருவதுதான் சிறப்பு. அதிர்ஷ்டவசமாக எனக்கு மிக நல்ல தந்தை கிடைத்திருக்கிறார். ஒருவருக்கு முதல் குரு அவன் தந்தைதான். ஒருவருக்கு இனிமையான சிநேகிதன் தந்தைதான். ஒருவருக்கு உண்மையான அமைச்சர் அவன் தந்தைதான். என் தந்தை, தன் தந்தையிடம் இருந்து சகலமும் கற்று, தானாகவும் கற்றுத் தெளிந்து, தான் அறிந்ததையெல்லாம் மிகுந்த அக்கறையோடும், அன்போடும் எனக்கு ஊட்டினார். என்னுடைய எல்லாச் சிறப்புகளுக்கும் என் தந்தையே காரணம்." அந்தக் கசாப்புக் கடைக்காரன் பேசினான்.

"நீ சொல்கிற சாஸ்திர விதி எனக்குப் புரிகிறது. ஒருவருக்கு நல்ல தந்தை அமையாமல் போனால் என்ன செய்வது. எதனால் அமையாமல் போகிறது." கொங்கணவர் அறிந்து கொள்ளும் ஆவலோடு கேட்டார். அவர் கேள்வியில் அடக்கம் இருந்தது.

"தந்தையின் சொல்லைக் கேளாமல் குடிகாரனாகவும், சூதாரியாகவும், வேசிலோலனாகவும் இருப்பின் அவனுக்கு மறு ஜென்மத்தில் நல்லதந்தை கிடைக்க மாட்டார். தந்தையை ஒரு ஜென்மத்தில் புறக்கணித்தவன், மறு ஜென்மத்தில் நல்ல தந்தை கிடைக்காமல் புறக்கணிக்கப் படுவான்."

"அப்படி தவறு செய்து புறக்கணிக்கப் பட்டவனுக்கு கற்றுக் கொள்ள என்ன வழி."

"அவனுக்கு தந்தை போலும் வேறு யாரேனும் கற்றுக் கொடுப்பார்கள். கற்றுக் கொள்ளும் ஆவல் இருப்பின் போதும், சொல்லிக் கொடுக்க குரு தந்தை போலும் வருவார். ஆச்சாரியார் தந்தை போல வருவார். சில சமயம் நண்பர்கள் கூட தந்தை போல அமைவதுண்டு. ஆனாலும்

மகனாக இருக்கிறவர்கள் தந்தையாக இருப்பவர்களிட மரியாதையாகவும், பண்ணிவாகவும், கவனமாகவும் இருந்து அவர் என்ன செய்கிறார் என்பதை உள்வாங்கி கேட்டு கொள்ள பழக்கப்பட வேண்டும். எனக்குத் தெரியும் என் அகந்தையான எண்ணம்தான் கேட்பதை தவிர்க்கிறது தன்னைவிட வயதில் மூத்த, அனுபவத்தில் சிறந்த தன் தந்தை, தனக்கு சொல்லிக் கொடுப்பதற்காகவே இங்கு பிறந்திருக்கிறார் என்பதை சிலர் மறந்து விடுகிறார்கள்..

"தந்தையையும் மீறி ஒருமகன் புத்திசாலியாக இருக்க முடியாதா. ஞானமில்லாத ஒரு தந்தைக்கு ஞானமுள்ள மகன்கள் பிறக்க வாய்ப்பில்லையா."

"நிச்சயம் இருக்கிறது. இறையருளால் ஒரு குடும்பத்தின் ஞானம் கூடிக் கொண்டே போகும். சில சமயம் வெகுவிரைவில் ஒரு தலைமுறையே உயர்ந்து விடும். இது எப்போதாவது எங்கேயாவது அமைவது உண்டு. ஆயினும் என்ன.. கற்றுக் கொள்வதற்கு உண்டான பணிவு ஒருவரிடம் இருந்தால்தான், அவ எப்பேர்ப்பட்ட ஞானியாக இருந்தாலும் சிறப்பாக வாழ முடியும். தனக்கு தந்தையை விட அதிகம் தெரிந்தாலும் தந்தை எதிரே மிருதுவாகவும், மௌனமாகவும் பேச எவன் தெரிந்தவனோ அவனே 'ஞானவான்' என்று அர்த்தம்.

மற்றபடிக்கு தந்தையை உரத்த குரலில் புறக்கணிப்பவனை 'ஞானி' என்று எவரும் ஒத்துக் கொள்ள மாட்டார்கள். எவ்வளவு தெரிந்தாலும் அவனை உயர்வானவராய் கருத மாட்டார்கள்."

"சரி தோழனே. உன் தந்தை உனக்குக் கற்றுக் கொடுத்தது என்ன. அதை நான் கற்றுக் கொள்ள ஆவலாய் இருக்கிறேன். ஒரு நண்பனை போல் உன்னிடம் கைகூப்பி கேட்கிறேன்." கொங்கணவர் அந்த கசாப்புக் கடைக்காரனை நோக்கி கைகூப்பினார்.

"அறிவிற் சிறந்த அந்தணரே, இந்த பணிவு உங்களுடைய பெருந்தன்மையைக் காட்டுகிறது. உங்கள் மேன்மையைச் சொல்கிறது. உங்களுடைய பணிவால் என் மனம் சந்தோஷமாயிற்று. உண்மையிலேயே அறிதலில் ஆவலுள்ளவன் எந்த உயர்வு, தாழ்வும் கருத மாட்டான். செய்திடும் வேலையை வைத்து மனிதர்களை எடை போட மாட்டான். உள்ளார்ந்த ஜாதிப் பிரிவுகளைச் சொல்லி இழிவு படுத்த மாட்டான்.

அறிவிற் சிறந்த அந்தணரே. என் தந்தை எனக்குக் கற்றுக் கொடுத்த ஒரே விஷயம், 'உன்னுடைய கடமைகள் என்னவோ அதை குறைவறச் செய். உன்னுடைய வேலைகள் எதுவோ அதை முழு ஈடுபாட்டோடு நடத்து. வேண்டா வெறுப்பாய் செய்கின்ற எந்த வேலையும் விஷமாகிப் போகும். வெறுப்பாக எது செய்தாலும் உனக்கு எதிராகத்தான் முடியும். ஒருவேலையை செய்கிற போது அதை முழு ஈடுபாட்டோடு செய்வது' என்பதுதான் எனக்கு என்தந்தை கற்றுக் கொடுத்த விஷயம்."

"உதாரணத்தோடு சொல்ல முடியுமா கசாப்புக் கடைக்காரரே.." அந்த அந்தணர் கை பிரிக்காமல் கேட்டார்.

"இதோ.. என்மனைவி சமைத்த உணவை என் குழந்தைகளுக்கு ஊட்டினேன். அதிலிருந்த ஒவ்வொரு சோற்றுப் பருக்கையும் என் குழந்தைகளை பலப்படுத்த வேண்டும் என்ற அக்கறையோடு செய்யப் பட்டது. அலட்சியமாகச் செய்யப்படவில்லை. 'என்னுடைய தலையெழுத்து செய்கிறேன்' என்று வேதனையுடனும் ஈடுபடவில்லை. இது என் வேலை.. இவர்கள் என் குழந்தைகள். இவர்களுக்கு உணவிடுதலை விட மிக உயர்வான விஷயம் என்னிடம் ஏதும் இல்லை என்றுதான் நான் இதைச் செய்கிறேன். இப்படி செய்கிறபோது இந்தக் குழந்தைகள் மிகுந்த பாசத்தோடு என்னிடம் ஒட்டிக் கொள்கிறார்கள்.

தொடர்ந்து சொல்கிறேன். பிறகு என்னுடைய தாய், தந்தையரை வணங்கிய போது கடனுக்காகவோ, இல்லை கடமை என்றோ செய்யவில்லை. என்னுடைய ஞானத்திற்கு காரணம்.. என் பிறப்புக்கு காரணம்.. என் வளர்ச்சிக்கு காரணம் என்ற நன்றியின் உவகையோடு நான் அவர்களை நமஸ்கரிக்கிறேன். என் கடமையை, அதாவது மகனாக அவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமையை நமஸ்காரத்தை சந்தோஷத்துடன் செய்கிறேன்.

என் மனைவியை நான் உளமார நேசிக்கிறேன். அவளுக்கும் நான் செய்ய வேண்டிய கடமைகளை ஆனந்தமாகச் செய்கிறேன். அவள் ரசிப்பதைப் பார்த்து சந்தோஷப்படுகிறேன். அவள் பாராட்டுவதைப் பார்த்து கர்வப்படுகிறேன். அவள் என் மீது காட்டும் அன்பால் இன்னும் அதிகமாய் அவளுக்கு அன்பு செய்கிறேன்.

ஒரு வேலையை உண்மையாய் உணர்ந்து ஒரு முகப்பாராட்டு செய்வதால் எல்லாருடைய ஆதரவும், பாராட்டும் கிடைக்கிறது. அப்படி ஆதரவும், பாராட்டும் கிடைக்கிற போது, என்னைச் சுற்றியிருக்கும் பிரச்சினைகள் இந்த நண்பர்களால், உறவுகளால் மிகவும் குறைந்து வருகிறது. பிரச்சினைகள் குறைகிற போது மனம் மிக மிக தெளிவாக இருக்கிறது.

'இன்று மழைவரும்' என்று உள்ளூர ஒரு குரல் சொல்கிறது. எறும்புகள் போவதை சட்டென்று கண்கள் கவனித்து விட்டு, எவ்வளவு சீக்கிரத்தில் மழைவரும்.' என்று கணக்கு போட முடிகிறது. பயிர்களின் செழிப்பை கவனித்து விட்டு, 'மேற்கொண்டு பயிர்களுக்கு என்ன செய்ய வேண்டும்' என்று என்னால் தீர்மானிக்க முடிகிறது. கறவைகளின் அசைவுகளை வைத்து அவைகளின் தேவைகளை அறிந்து கொள்ள முடிகிறது.

அதாவது அப்படி அறிந்து கொள்கின்ற ஒரு தெளிவான அமைதியான எல்லாவற்றையும் கூர்ந்து நோக்குகின்ற சமாதானமான ஒரு மனதை நான் என் உறவுகளாலும், நண்பர்களாலும் அடைகிறேன். அதை அடைவதற்குக் காரணம் நான் என் உறவுகளிடமும், நண்பர்களிடமும் உண்மையாக இருப்பது. உங்களுக்குப் புரியவில்லையா அந்தணரே.. உண்மையாக நடப்பதுதான் பிரியமாக நடப்பது. உண்மையாக நடப்பதுதான் ஆதரவாக நடப்பது. வேஷமிட்டு செய்கிற எதுவும் தவறான விளைவைத்தான் தரும். நெல்முனையளவும் எந்த இடத்திலும் நான் வேடமிடுவதே இல்லை. பொய் சொல்வதே இல்லை."

"உன் மனைவி ஏதேனும் தவறு செய்தால் நீ என்ன செய்வாய்."

"மெல்ல கண்டிப்பேன். மனைவியைக் கண்டிப்பதில் எனக்கு எந்த ஆனந்தமும் இல்லை. கண்டிப்பதற்கு எந்த அளவுகோல் தேவையோ அவளுக்கு புரியும்படி சொல்வதற்கு எந்த அளவு வேகம் தேவையோ, அந்த அளவே நான் பயன்படுத்துகிறேன். ஏனெனில், பிறரை புண்படுத்திப் பார்க்கும் சந்தோஷம் எனக்கு இல்லை. மனைவியை புண்படுத்தும் நோக்கம் எனக்கு வருவதே இல்லை.

வயதான தாய், தந்தையர்களை இழித்துப் பேசினால் பதிலுக்கு என்ன பேசமுடியும் என்று நான் யோசிப்பது இல்லை. எனக்கும் வயதாகும் என்று தெரிந்து வைத்துக் கொண்டே வயதானவர்களிடம் பேசுகிறேன்.

'நான் அடுத்த பிறவியில் பெண்ணாகப் பிறந்தால் எனக்கு எப்படிப்பட்ட கணவன் வாய்ப்பான். ஆகவே, இப்பொழுது இந்தப் பெண்ணிடம் இன்னும் இதமாகப் பேச வேண்டும்' என்று தீர்மானித்துக் கொள்கிறேன்.

'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும். ஒரு வினைக்கு எதிர் வினை உண்டு. எனவே, என் காரியங்கள் அளவோடும், அன்போடும் நடத்தப்படுகின்றன. இதை



எனக்குக் கற்றுக் கொடுத்தது என்தந்தை. அவர் தன் தந்தையிடம் கற்றுக் கொண்டார். இதை என் மகன்களுக்கு சொல்லிக் கொடுப்பதற்காகத்தான் நான் இன்னமும் அமைதியாகப் பயிற்சி பெற்று வருகிறேன். உங்களுக்கு இதுபற்றி தெளிவாக்கியது குறித்து எனக்கு மிகுந்த சந்தோஷம். நீங்கள் அறியாதவரில்லை அந்தணரே. பல்வேறு புத்தகங்கள் படித்தும் வாழ்க்கையின் நடைமுறை அன்பை நீங்கள் மறந்து விட்டீர்கள்.

கொக்கு பறந்து போகும் போது மலம் கழிப்பது இயற்கை. அது காற்றில் அடித்து உங்கள் தலையில் விழுந்தது கடவுள் செயல். இதற்கு கோபித்துக் கொள்ளலாமா. இந்த பாவம் பல ஜென்மங்களில் தொடருமே. எவ்வளவு பெரிய தவறு செய்து விட்டீர்கள் அந்தணரே.

உள்ளே தன் கடமையைச் செய்து கொண்டிருக்கிற ஒரு மனைவியை, தன் புருஷனுக்கு உபசாரம் செய்து கொண்டிருக்கிற ஒரு பெண்மணியை, எப்படி நீங்கள் அழைக்கலாம்.

உங்கள் சௌகர்யம் மட்டுமே முக்கியம் என்று நீங்கள் இருப்பதுதான் இதற்குக் காரணம். எனவே, நீங்கள் மட்டுமே முக்கியம் என்ற விஷயத்தை விட்டு விட்டு, நடுநிலையாய் நின்று எதையும் பார்க்கக் கற்றுக் கொள்ளுங்கள். அந்தப் பெண்மணியின் மீது எந்தப் பிரயோகமும் நீங்கள் பண்ண முடியாது. ஏனெனில், அவள் மிகவும் தெளிவானவள். தெளிவுள்ளவர்களை எவர் கோபமும், எவர் ஆத்திரமும், எந்தப் பிரயோகமும் எதுவும் செய்யாது.

உங்களுடைய உடமை என்ன என்பதை முதலில் புரிந்து கொள்ளுங்கள். அதை சரிவரச் செய்து வாருங்கள். உங்களை வெற்றி கொள்வதற்கு இங்கே யாருமே இல்லை. எவ்வளவு எதிர்ப்பு வந்தாலும் அது தானாய் வெந்து மடியுமே தவிர, உங்களை எதுவும் செய்து விடாது. தொடர்ந்து உங்கள் கடமைகள்ள உங்களால் செய்ய முடியும்.

அந்தணரே, எனக்கு தெரிந்ததை உங்களோடு பகிர்ந்து கொண்டேன். உங்களுக்கு உபதேசித்தாக ஒரு கணமும் நான் நினைக்கவில்லை.. இதற்கு பாராட்டப்பட வேண்டிய அவசியம் ஏதும் உண்டெனில் அவைகள் என் தந்தைக்கும், தாய்க்கும் போய்ச் சேரட்டும். என் முன்னோர்களுக்குப் போய்ச் சேரட்டும். உங்கள் ஆசீர்வாதங்கள் என்னுடைய குழந்தைகளுக்குத் தேவை." அவன் மெல்ல அவரை நோக்கிப் பணிந்தான்.

அவர் இரண்டு கைகளையும் உயர்த்தி அவனையும் அவன் குடும்பத்தையும் ஆசீர்வதித்தார். அவன் கைகளைப் பற்றி கண்கள் ஒற்றிக் கொண்டார். அவன் வீட்டுத் தோட்டத்தை விட்டு மெல்ல வெளியேறினார். நடந்தார். எரிந்து இறந்து போன அந்தக் கொக்கை நினைத்து வருத்தப் பட்டார். குளக்கரையில் அமர்ந்து தான் செய்த பாவத்துக்கு மன்னிப்புக் கேட்டவாறு அந்தக் கொக்கின் மனம் சாந்தி அடைய தர்ப்பணம் செய்யத் தொடங்கினார்.

கர்வம் கூடாது என்று இந்தக் கதை சொல்கிறது. கர்வமுள்ளவர்களால் சாதாரண மக்களைக் கூட புரிந்து கொள்ள இயலாது என்று இந்தக் கதை விவரிக்கிறது. படிப்பு மட்டுமே பெரிய செல்வம் ஆகிவிடாது. சாதரண வாழ்க்கை வாழுகின்ற எளிய மக்கள் கூட ஞானிகளாக வாழ்கிறார்கள் என்று அந்தக் கதை தெளிவாய் எடுத்துக் காட்டுகிறது.

## அம்பரீஷன்

தன்னுடைய கடமை என்பது இறைவனைத் தேடுவது. அவனுக்கு அருகே போவது, அவனோடு கலப்பது என்பது ஒரு மனிதனுக்குத் தெரிந்து விட்டால், அதன் பொருட்டுதான் குடும்பம். அதன் பொருட்டுதான் திருமணம். அதன் பொருட்டுதான் கல்வி. அதன் பொருட்டுதான் வழிபாடு. அதன் பொருட்டுதான் தொழில். அதன் பொருட்டுதான் ராஜ்ஜியம், பதவி. அதன் பொருட்டுதான் படிப்பு என்பது தெரிந்துவிட்டால் இடைவிடாது இறைவனைத் தேடுதல் இயல்பாகி விட்டால், அவனை யாரும் எதுவும் செய்ய முடியாது என்பதை அம்பரீஷன் கதை சொல்கிறது.

இங்கே கடமை என்பது குடும்பத் தேடுதல் மட்டுமல்ல. மனிதனுடைய அடிப்படையான விஷயம் இறை தேடுதல். இது அவன் இயல்பு. இந்த இறை தேடுதல் ஒழுங்காக இருக்க வேண்டுமென்றால், இந்த இறை தேடுதலைச் செம்மையாகச் செய்ய வேண்டும் என்றால் அவன் தன்னைச் சார்ந்த மக்களோடும், நண்பர்களோடும், உறவினர்களோடும், வேலையாட்களோடும், தன்னைச் சுற்றியுள்ள ஜீவ ராசிகளோடும் பிரியமாகவும், பொறுப்பாகவும் நடந்து கொள்ள வேண்டும்,

இறைவனைத் தேடுபவன் தன்னுடைய



விஷயங்களைத் தெளிவாகச் செய்வான். தன் கடமைகளை நேராகச் செயலாற்றுவான் என்பதற்கு அம்பரீஷன் கதை ஒரு அழகான உதாரணம்.

ஸ்ரீமத் பாகவதம் என்கிற நூல் பாரத தேசத்தில் பரம்பரை பரம்பரையாக அரசாண்ட மன்னர்களின் வாழ்க்கை வரலாற்றைச் சொல்கிறது. அந்த மன்னர்களில் கொடுங்கோலர்களாக சிலரும், ஞானிகளாகப் பலரும் இருந்திருக்கிறார்கள்.

அம்பரீஷன் ஒரு ஞானி. அம்பரீஷனுடைய தந்தை நாபாகன். சிவனிடமிருந்து பிரம்ம ஞானத்தை உபதேசம் பெற்றவர். பரமஞானி. அவருக்கு மகனாகப் பிறந்த அம்பரீஷன் அரசனாக இருந்தாலும் மக்களுக்கு எளிமையானவனாக வாழ்ந்து வந்தான். மக்கள் அந்த அரசன் மீது உயிரையே வைத்திருந்தார்கள்.

தந்தை ஞானியாக இருந்ததால் அம்பரீஷனுக்கு இளம் வயதிலேயே இறையின் பிரம்மாண்டம் விளங்கி விட்டது. இறைவனுடைய அருளின்றி உலகத்தில் ஒரு இயக்கமும் இல்லையென்பது மிகத் தெளிவாகப் புரிந்து விட்டது. உலகத்தை மொத்தமும் இயக்கிக் கொண்டிருப்பது இறைவனாக இருக்கும் பட்சத்தில் நான் பேசுவதும், சிரிப்பதும், நடப்பதும், நிற்பதும் நம்முடைய செயலல்ல. அவருடைய செயலே என்பது புரிந்து போயிற்று.

இது புரிந்த பிறகு அரசன் என்கிற கர்வம் அறவே இல்லாமல் அழிந்து வீழ்ந்தது. கர்வம் இல்லாத அரசனாய், சாதாரண சேவகனாய், எளியனாய், இனிமையானவனாய், சந்தோஷமுள்ளவனாய், சித்தி அடைந்தவனாய், புலன்களின் கூத்துக்கு வசப்படாதவனாய், கோபமற்றவனாய், கூச்சலற்றவனாய், அன்போடு வணங்கத் தெரிந்தவனாய், அகம்பாவம் இல்லாதவனாய், குருதுவானவனாய் ஆட்சி செய்து வந்தான்.

ஒரு அரசன் இத்துணை மென்மையாக இருப்பதால், அந்நியதேசத்து சக்திகள் அவன் தேசத்திற்கு ஊறு செய்யும் என்று நினைத்து; ஸ்ரீ மந் நாராயணன் தன்னுடைய சக்கரப்படையை அரசனுக்கு, அரசனுடைய தேசத்திற்குக் காவலாக வைத்தான்.

மனம் முழுவதும் இறையில் ஒன்றிக் கிடப்பவனுடைய தினசரி வாழ்க்கை இறைவனால் நடத்தப்படும். இறைவன் பாதுகாப்பில் அவன் மிக பலத்தோடு வாழ்வான். அவனைச் சார்ந்தவர்களும் இறைவன் பாதுகாப்பில் நிம்மதியாக இருப்பார்கள். மனம் முழுவதும் இறையோடு ஒட்டிய அந்த அரசனின்

தேசத்தை, விஷ்ணுவின் சக்கராயுதம் சூட்சுமமாக இருந்து காப்பாற்றி வந்தது.

இறைத்தன்மை மிகுந்த தேசத்தில், இறைவனுடைய ஆட்சி நடக்கும். அந்த தேசத்தில் அந்நிய சக்திகளோ, தீவிரவாதமோ, அகம்பாவமான ஆட்களோ தலையெடுக்கவே இல்லை. எடுக்கப்பட்ட நேரத்திலேயே சக்கரப் படையினால் கிள்ளி எறியப்பட்டார்கள். நல்லவர்கள் சந்தோஷத்தோடு வாழ்ந்தார்கள். வல்லவர்கள் நிதானத்தோடு நடந்து கொண்டார்கள். இத்தகைய மக்கள் வாழ்க்கையால் நாடு செழித்தது. அவரவர் வேலைகளை அவரவர்களே செவ்வனே செய்ய தேசத்தில் சுபிட்சம் பொங்கி வழிந்தது.

நகரைச் சுத்தம் செய்பவர்களுக்கும், கோவிலில் அமர்ந்து வேதம் சொல்பவர்களுக்கும் எந்த உயர்வு, தாழ்வும் இல்லை. சுத்தம் செய்பவரை, வேதம் சொல்பவர் வணங்கினார். வேதம் சொல்பவரை சுத்தம் செய்பவர்கள் நேசித்தார்கள். பெண்கள் மீது ஆண்கள் பிரியமாக இருந்தார்கள். ஆண்களை பெண்கள் அதிசயத்தோடு பார்த்தார்கள். குழந்தைகளைப் பெரியவர்கள் பரிவோடு அணைத்துக் கொண்டார்கள். பெரியவர்களைக் கண்டால் குழந்தைகள் வணங்கி எழுந்தன. கறவைகளையும், பறவைகளையும், தாவரங்களையும் மனிதர்கள் மிகவும் நேசித்தார்கள். அவைகளுக்கு அதிகம் ஊறு செய்யாமல் மென்மையாக நடத்தினார்கள். மரங்களை வெட்டுவதற்குக்கூட மரங்களிடம் அனுமதி கேட்டார்கள்.

"இன்னும் பதினைந்து தினத்தில் பௌர்ணமி முடிய உன்னை வெட்டியெடுத்து வீடு கட்டிக் கொள்ளலாம் என்று இருக்கிறேன். வாழ்ந்தது போதும் என்ற நினைப்பு உனக்கு உண்டாயின் உன் இடது பக்கக் கிளையின் இலைகளையெல்லாம் உதிர்த்துக் காட்டு. நான் புரிந்து கொள்கிறேன். புதிய தழைகளை நீ உற்பத்தி செய்தால் உனக்கு வெட்டுவதில் விருப்பமில்லை என்று எடுத்துக் கொள்கிறேன். எனவே, வருத்தம் ஏதும் இல்லாமல், பயமேதும் இல்லாமல் உன்னுடைய அபிப்பிராயத்தை எனக்குத் தெரிவி." என்று மரம் வெட்டுபவர் மரத்தோடு பேசுவார். மரம் அவருக்கு பதில் சொல்லும்.

தூண்டிலில் போட்டு, அதிகம் துடிக்கிற மீனை வேண்டாமென்று திரும்பவும் குளத்திலேயே எறிந்து விடுவார்கள்.

இரைதேடி ஒரு புலி கிராமத்திற்குள் வந்து விட்டது. கிராம மக்கள் ஒன்று சேர்ந்து, கயிறு வீசி, சுருக்கிட்டு, பிடித்து இறுக்கி, வண்டியிலேற்றி மறுபடியும் காட்டிலே



கொண்டு போய் விட்டு விட்டார்கள்.

யானைகள் கரும்புக்கு ஆசைப்பட்டு மெல்ல வயல் பக்கம் வரும். அவைகளை முரசு முழக்கி விரட்டுவார்களே தவிர, வேதனை தர மாட்டார்கள். யாரேனும் பாகனை அனுப்பி அவனுடைய யானையை விட்டு, காட்டு யானைகளை 'இங்கே வரவேண்டாம்' என்று எச்சரிக்கை செய்து அனுப்புவார்கள்.

பறவைகளுக்கு என்று ஒரு வயலில் பயிர் செய்வார்கள். அந்த வயலில் கவண் கல்வீசி பறவைகளை விரட்ட மாட்டார்கள். விகாரமான பொம்மைகளைச் செய்து பயமுறுத்த மாட்டார்கள். காற்றில் ஓசையிடும் தாமிரத் தகடுகளைக் கட்டி ஒலி எழுப்பி, மிரள வைக்க மாட்டார்கள். குருவிகள் சாப்பிடட்டும் என்று தானியங்கள் உதிர்த்து, அவைகள் கூட்டமாக வந்து கொத்திச் சாப்பிடுவதை ரசிப்பார்கள். பறவைகளின் எச்சங்கள் நல்ல உரமாகுமென்று பேசிக் கொள்வார்கள். கறவைகளை உளமார காதலித்தார்கள். அவைகள் முட்டி மோதிக் கொண்டு அவஸ்தைப்பட்ட போது துடித்துப் போனார்கள். நோயுற்ற போது கண்ணீர் விட்டு அழுதார்கள். எப்படியேனும் காப்பாற்ற அரும்பாடு பட்டார்கள்.

அம்பரீஷன் ஆட்சியில் மனித வாழ்க்கை சுகமாக இருந்தது.ஆனால், எப்போதுமே சுகமான வாழ்வுக்குத் தான் சோதனைகள் வரும். சோதனைகள் வருவதெல்லாம் புகழை அதிகரிக்கத்தான். அம்பரீஷன் என்கிற அரசனை அந்த ஊர் மக்களுக்கு மட்டுமே தெரிந்திருந்தது. பரதகண்டம் முழுவதும் அவன் புகழைப் பரப்ப எண்ணிய இறைவன், அங்கே துர்வாசர் என்கிற முனிவரை அனுப்பினார்.

துர்வாச முனிவர் வந்தபோது அம்பரீஷன் ஏகாதசி விரதத்தில் இருந்தான். அது என்ன ஏகாதசி விரதம். அது ஒருவகை உண்ணா நோன்பு. எதற்கு உண்ணா நோன்பு.

மனிதன் அறிவு வயிற்றில் படைக்கப் பட்டிருக்கிறது. வயிறு சரியில்லையெனில், ஜீரண சக்திகள் சரிவர இயங்கவில்லையெனில், மூளை சரியாக வேலை செய்யாது. புத்தி சரியாக இயங்கவில்லையெனில் மனம் எதற்கெடுத்தாலும் தடுமாறும். வாழ்க்கையில் பிரச்சினைகள் வெகு வேகமாக வளரும். தீர்க்க முடியாமல் திணறல் ஏற்படும். எனவே, வயிறு என்கிற விஷயத்தை மிக உன்னதமான முறையில் வைத்துக் கொள்ள ஏகாதசி விரதம் மிகவும் உதவுகிறது.

பதினைந்து நாளைக்கு ஒருமுறை முற்றிலுமாய் பட்டினி இருந்து, நீர் கூட அருந்தாமல் ஜீரண சுரப்பிகள்

விழித்தெழும்படி செய்வது, "உணவு வேண்டும்.. உணவு வேண்டும்.." என்று அவைகளைக் கதற வைப்பது. அன்று முழுவதும் அவைகளுக்கு உணவிடாமல், வயிற்றில் தேங்கிய உணவுகளையே அவைகள் ஜீரணம் செய்து சுத்தம் செய்யும்படி வைப்பது, இப்படி உடம்பில் சேர்ந்த கொழுப்புகளை உருவி சக்தியாக மாற்றிக் கொள்வதன் மூலம், உடம்பு இயங்குவதற்கு வேண்டிய பலத்தைப் பெற்று விடும். இதற்கு இந்த விரதங்கள் உதவுகின்றன.

துறவிகள் எப்போதேனும் ஒருமுறைதான் விருந்து உணவு எடுத்துக் கொள்வார்கள். மற்ற நேரமெல்லாம் விரத நேரம்தான். ஆனால், குடும்பத்தில் இருப்பவர்கள், போர் மறவர்கள், வெகுதூரம் பயணம் செய்யும் வணிகர்கள். உட்கார்ந்த இடத்தில் வெகுநேரம் அசையாது வேலை செய்கிற அந்தணர்கள் ஆகியோர் இந்த ஏகாதசி விரதமிருப்பது மிகவும் சிறந்தது.

இப்படி விரதமிருப்பதால் அதிக கொழுப்பு சக்தி உடம்பிலிருந்து குறைகிறது. ரத்த ஓட்டம் அதிகமாகிறது. அதனால் புத்தி சுறுசுறுப்படைகிறது. புத்தி சுறுசுறுப்பாயிருப்பதாலேயே மனம் எல்லாவற்றையும் சரி வர ஜீரணித்து, முடிவுகளைத் தெளிவாக எடுக்கிறது. கிரகிப்பதைச் சுத்தமாக செய்து, மனனம் செய்ய வேண்டியதை, வெகு வேகமாக மனனம் செய்து அமைதியாக வாழ்கிற வழியை இந்த விரதங்கள் செய்கின்றன.

இப்படி விரதமிருக்காமல் காலையும், மாலையும், மதியமும் அதிகம் உணவு உண்ணுவதால், கொழுப்புச் சத்துக்கள் ஏகமாகத் தேங்குகின்றன. நெஞ்சு, முதுகு, இடுப்பு, பிருஷ்டம், தொடை, மார்பு, கை, கால், கன்னங்கள் எல்லாவற்றிலும் கொழுப்புச் சத்துக்கள் படர்ந்து, எழுவதும், நிற்பதும், நடப்பதும் மிகப் பெரிய பிரச்சினையாகி விடுகின்றன.

எப்போதும் ஒரு உறக்கம் மனிதனைச் சுத்திக் கொண்டிருக்கும். எப்போதும் உறங்குகிற மனிதரால் எதையும் கிரகிக்க முடியாது. கிரகிக்க முடியாத மனிதர்கள் கிரகிப்பது போல் பொய் பேசவேண்டி வரும். எல்லாம் தெரிந்தது போல் நாடகமாட வேண்டிவரும். வேகமாக இருப்பது போல நடிக்க வேண்டி வரும். சுறுசுறுப்பாக இயங்குவது போல போலித்தனம் காட்ட வேண்டிவரும். ஆக, போலித்தனங்கள் அதிகமாகி விட்டால் பிரச்சினைகளும் அதிகமாகும். இதை நீக்க வேண்டுமென்றுதான் ஏகாதசி விரதம் செய்கிறார்கள்.



அம்பரீஷன் சகல வசதிகள் கொண்ட மன்னனாக இருந்த போதிலும் மிகச் சுத்தமாக ஏகாதசி விரதம் இருப்பான். அன்று முழுவதும் வேறு எந்த வேலையும் செய்யாமல் சிறிதளவு கூட உணவோ, நீரோ எடுத்துக் கொள்ளாமல் நாள் முழுவதும் ஹரியின் நாமத்தைச் சொல்வதிலேயே கழிப்பான். அதிகம் பேச மாட்டான். யாரோடும் கலந்து பழக மாட்டான்.

இன்று ஏகாதசி என்று பூஜை அறைக்குள் போய் அமர்ந்து வெகுநேரம் தியானத்தில் இருப்பான். சிறிது நேரம் தோட்டத்தில் உலாவுவான். மறுபடி ஹரியின் விக்கிரகத்துக்கு அருகே வந்து அதற்கு மாலைகள் சூட்டி மகிழ்வான். பிறகு மறுபடியும் நாமஜெபங்கள் செய்ய ஆரம்பிப்பான். மாலை நேரத்தில் ஹரியின் கீர்த்தனைகளை மற்றவர் பாட சுருண்டு உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருப்பான். இரவு முழுவதும் தூக்கமும், தூக்கமின்றியுமாய் ஒரு அமைதியான சூழ்நிலையில் இருப்பான்.

உண்ணாவிரதம் இருக்கின்ற இரவு மிக அற்புதமான இரவாக இருக்கும். வயிறு பசியைத் தாங்கி புத்தி அமைதியாக இருக்கும். இரவு குளிர் உடம்பைத் தாலாட்டும். உடம்பு சோர்வாக இருக்கும். ஆனால், வயிற்றில் பசி இருப்பதால் தூங்க முடியாது. அந்த நேரம் மிக அமைதியாய் தான் யார். தான் எங்கிருந்து வந்தோம். தன்னைச் சுற்றியுள்ள மக்கள் யார். அவர்களுடைய பிரச்சினைகள் என்ன என்பதை ஆழ்ந்து அமைதியாக யோசிக்க வேண்டும்.

ஏகாதசியில் பகல் முழுவதும் உண்ணாமல் இருந்து, இரவு முழுவதும் வெறுமே சுருண்டு கிடந்து, விடியலில் எழுந்து, துவாதசியன்று விடியற்காலை ஒரு குறிப்பிட்ட நேரத்திற்குள் சிறிதளவு உணவு எடுத்துக் கொள்வதுதான் ஏகாதசி விரதத்தின் மிகப் பெரிய மகிமை.

உடம்பை பட்டினி போட்டு வருத்துவது மட்டுமே நோக்கமல்ல. ஒரு அளவு, ஒரு கால கட்டம் பட்டினி போட்டு விட்டு அந்தக் கால கட்டம் முடிந்த பிறகு உடனடியாக, அந்த வயிற்றுக்குச் சிறிதளவு செரிக்கின்ற உணவு அளிப்பதே நல்லது.

அப்படி அளிக்காது போனால், பட்டினி கிடந்த வயிறு அமில உற்பத்தியால் நோய்ப்படும். எனவே, பட்டினி கிடப்பது ஒரு காலம். பட்டினி கிடந்த பிறகு உணவு உண்ணுவது ஒரு குறிப்பிட்ட காலம் என்று மிக ஆச்சாரமாய் இருக்க வேண்டும். இந்த ஆச்சாரம் விஞ்ஞானப் பூர்வமானது. அறிவுப் பூர்வமானது. இந்து

மதத்தின் எல்லா ஆச்சாரங்களுமே அறிவுப் பூர்வமானவை. விஞ்ஞானப் பூர்வமானவை.

இப்படிப்பட்ட அரசனுடைய மாளிகைக்கு, இறை நம்பிக்கையே வாழ்க்கை என்கிற அரசனின் அரண்மனைக்கு துர்வாச முனிவர் வந்தார். உபவாசம் இருந்த அரசன் அவரை மனமார வரவேற்றான்.

துர்வாச முனிவர் வந்த நேரம், அரசன் துவாதசி விரதத்தை முடிக்கின்ற நேரம். அதாவது உண்ணா விரதத்துக்குப் பிறகு உணவருந்தும் நேரம். முனிவரையும் தன்னோடு உணவருந்த வருமாறு அரசன் அழைத்தான்.

"நீராடிவிட்டு வருகிறேன்." என்று சீடர்கள் புடைசூழ துர்வாசர் நதிக்கரைக்குப் போனார். நதியில் குளிரக் குளிர நீராடினார். வெகுதூரம் நடந்து வந்த வெப்பம் குறைந்தது. உடம்பின் வெப்பம் குறைந்ததால் துர்வாசர் எளிதாய் தியானத்தில் ஆழ்ந்தார்.

நேரம் நகர்ந்து கொண்டே இருந்தது. விரதம் முடித்து உணவருந்த இன்னும் சில நாழிகைகளே மிச்சம் இருந்தன. அரசன் 'உணவு அருந்தா விட்டால், விரதபங்கம் வந்து விடுமே' என்று அஞ்சினான். என்ன செய்வது என்று தன் மந்திரிகளையும், குருமார்களையும் கேட்டான்.

"துளசி இலைகளை நீரில் விட்டு அருந்தினால் போதும். விரம் முடிந்த தன்மை ஏற்பட்டுவிடும். அதே நேரம் அது உணவு உண்டதாகவும் ஆகாது." என்று அறிவுரை கூறினார்கள். ஆனால், அரசன் என்ன செய்வதென்று தெரியாமல் தர்மசங்கடத்தில் தவித்தான்.

துர்வாச முனிவரோ பிழை பொறுக்காதவர். கோபத்துக்குப் பெயர் போனவர். சட்டென்று சாபம் கொடுப்பதில் பிரசித்தி பெற்றவர்.

என்ன செய்வது. அரசன் திண்டாடினான். உணவு உண்ணாமலும், அதே சமயம் உபவாசம் முடிப்பதுமான குருமார்கள் சொன்ன யோசனைப்படி துளசி நீரை அருந்தி உபவாசம் முடித்தான்.

துர்வாச முனிவருக்கு தியானத்தில் அரசனின் செய்கை தெரிந்து விட்டது.

உணவு எடுத்துக் கொண்டாலென்ன, உணவு எடுத்துக் கொண்டதாக பாவனை செய்தாலென்ன, இரண்டுமே அதிதிக்கு அவமானம்தானே.

அரசனான நீ, மக்களுக்கு தர்மத்தின் வழியைக் காட்ட வேண்டிய நீ, மிகப் பெரிய ஆச்சார சீலனாகவும், பக்தி மானாகவும் காட்டிக் கொள்கிற நீ எவ்விதம் தவறு



செய்யலாம்.

என்னை விருந்துக்கு அழைத்து விட்டு நீ மட்டும் சாப்பிடுகிறாயே.. இது எந்தஊர் நாகரீகம். யார் வகுத்த தர்மம்.. இப்படி அடாது செய்ய உனக்கு எப்படி மனம் வந்தது.

எல்லோரும் கண்டு பயப்படும் என்னையே நீ அவமானப் படுத்தத் துணிந்தால், எளிமையான சாதுக்களை நீ என்னவெல்லாம் செய்ய மாட்டாய். எங்களைப் போன்ற முனிவர்களை அவமதிக்கிற எவனையும் நாங்கள் சும்மா விட மாட்டோம்.

முனிவர்களிலும் பொறாமை மிக்கவர் உண்டு என்பதற்கு துர்வாசர் ஒரு அத்தாட்சி. அமைதியானவர்களைக் கண்டால், பதட்டமான வர்களுக்கு ஒரு பொறாமை ஏற்படும். தெளிவானவர்களைக் கண்டால், தெளிவற்றவர்களுக்கு ஒரு பொறாமை ஏற்படும். நம்பிக்கையோடு இருப்பவர்களைக் கண்டால், அவநம்பிக்கையுள்ளவர் களுக்கு ஒரு பொறாமை ஏற்படும். உண்மையானவர் களைக் கண்டால் உண்மையைத் தொடர்ந்து தேடுபவர்களுக்கு ஒரு பொறாமை ஏற்படும்.

பக்தி, பாசாங்கற்ற எளிமையைக் கொண்டு வந்து கொடுக்கும். அந்த பாசங்கற்ற எளிமை மிகப் பெரிய முகமலர்ச்சியைத் தரும். அந்த முகமலர்ச்சி கண்டு அருகிலுள்ளோர் நெருங்கி வருவார்கள். தங்கள் எண்ணங்களைப் பயமின்றி உண்மையாக வெளிப் படுத்துவார்கள். எண்ணங்களை பயமின்றி வெளிப் படுத்தினால், எல்லோருடன் உண்டான தொடர்பு இருக்கும். தொடர்பு இறுகினால் வாழ்க்கையில் நம்பிக்கை ஏற்படும். நம்பிக்கையை ஆதாரமாக வைத்து பக்தி இன்னும் பெரிதாக மலரும். அந்த பக்தி பாசாங்கற்ற எளிமையை அதிகரிக்கச் செய்யும்.

ஏதாவது ஒரு விஷயத்தில் உண்மையாக இருந்து விட்டால் கூட போதும். உண்மையாய் இருப்பது என்னவென்று தெரிந்து, மற்ற விஷயங்களிலும் உண்மையாக இருக்க மனம் முயற்சி செய்து வெற்றி பெறும்.

அம்பரீஷன் உண்மையாய் இருந்து வெற்றி பெற்றவன். தான் வெற்றி பெற்று விட்டோம் என்பது கூடத் தெரியாதவன். அதைப்பற்றி அக்கறையில்லாதவன். முனிவர் கோபமடைந்து விட்டார் என்று அவனுக்கும் தெரிந்தது. ஆத்திரப்பட்டு தண்டிக்க வருவார் என்று அவரை எதிர்பார்த்திருந்தான்.

'சரி.. என்னவேண்டுமானாலும் செய்து கொள்ளட்டும்' என்று அமைதியாய், தன்னை முழுவதுமாக இறைவனிடம் ஒப்படைத்தான். அரசன் என்கிற நினைப்பையும் அப்போது அறுத்தெறிந்தான். வெறுமே இருந்தான்.

துர்வாசர் கோபத்துடன் தன் சடாமுடியைப் பிடுங்கித் தரையில் அடித்தார். அந்த சடாமுடியிலிருந்து ஒரு பெண் பூதம் தோன்றியது. அரசனை உலுக்கி அலைக்கழித்தது. அழிப்பதற்கு பாய்ந்து வந்தது. அவன் மாளிகை வாசலில் நின்று அவனைக் கேவலமாய்ப் பேசியது. அவன் இருப்பிடம் நோக்கி கட்டைகளையும், கற்களையும் வீசியது. வீட்டிலுள்ள பெண்டிரை பயமுறுத்தியது.

அரசன் கைகூப்பி மௌனமாய் உட்கார்ந்திருந்தான். என்னைக் காப்பாற்றுதல் என்வேலை அல்ல. எல்லா உயிர்களையும் காப்பாற்றும் இறைவன் வேலை என்று அமைதியானான். 'என்னைக் காப்பாற்று' என்று கூட கேட்காமல் மௌனமாக இருந்தான்.

பெண் பூதம் வீட்டுக்குள் காலடி எடுத்து வைத்ததும், அம்பரீஷனுக்கு காவலாக இருந்த ஸ்ரீமன் நாராயணனுடைய 'சக்கரப்படை' விழித்துக் கொண்டது. சீறி சுழன்று எழுந்தது. ஒரே வீச்சில் பூதத்தை பல துண்டுகளாக வெட்டிப் போட்டது. பூதத்தை ஏவிய துர்வாசரைத் தேடி ஓடியது. துர்வாசர் சக்கரப்படையின் வெம்மை தாங்காமல் திண்டாடினார். அதன் வேகம் பார்த்து நடுங்கிப் போனார்.

தன் தபோ வலிமையால் சக்கரத்தின் தாக்குதலிலிருந்து தப்பித்துக் கொள்ள திட்டமிட்டார். ஆகாயத்துக்குத் தாவினார். கடலில் புகுந்தார். பாதாளத்தில் மறைந்தார்.

துர்வாசமுனிவர் எங்கு போனாலும் சக்கரம் அவரை விரட்டியது. தெரிந்து செய்த பாவத்தின் பலன் போல, அவரை இடைவிடாது விரட்டியது.

முனிவரின் தினசரி ஒழுக்கம் சிதறிப் போயிற்று. ஜபதபங்கள் நின்று போயின. எது தன் வாழ்க்கை என்று தீர்மானித்தாரோ, அந்த வாழ்க்கை வாழ முடியாமல் போயிற்று. அவரோடு இருந்த கூட்டம் கலைந்து ஓடிற்று. அவரின் உயர்வுகள் மொத்தமும், கிழிந்த ஆடை போல் அவிழ்ந்து காலின் கீழ் விழுந்தன.

தேவர்களும், கந்தர்வர்களும் நகைக்கும் வண்ணம் அவர் அலைந்தார். மற்றவர் பரிதாபப்படும் வண்ணம் பயந்தார். நல்லவனுக்கு எதிராக பூதத்தை ஏவிவிட்ட பாவம், அவரை வாட்டி வதைத்தது. அவர் பொறாமை



அவரை இடறி மண் கவ்வ வைத்தது. அவர் பூலோகத்தில் நிர்கதியாக்கப் பட்டார்.

பிரம்ம லோகத்திற்கும், கைலாசத்திற்கும் ஓடினார். காப்பாற்றும் படி கதறினார். பிரம்மாவும், சிவனும் 'காப்பாற்ற இயலாது' என்று கை விரித்து விட்டார்கள். 'ஸ்ரீமந் நாராயணின் ஆயுதத்தை ஸ்ரீமந் நாராயணனால் தான் தடுக்க முடியும். எனவே, வைகுந்தம் போய் கெஞ்சிக் கேளுங்கள் என்று பிரம்மன் துர்வாசருக்கு யோசனை கூறினார்.

துர்வாசரின் நிலை கண்டு ஸ்ரீமந் நாராயணன் வாய் விட்டுச் சிரித்தார்.

"நான் என் பக்தர்களுக்கு அடிமை. என் பக்தனை அவமானப்படுத்தி விட்டு என்னிடம் வந்தால், நான் எப்படி காப்பாற்றுவேன். எந்த அம்ரீபஷனை அவமானப் படுத்தினீர்களோ, எவனுக்கு எதிராய் பூதத்தை ஏவி விட்டீர்களோ, அவனிடமே போய் அடைக்கலம் கேளுங்கள். அவனிடம் மன்னிப்பு கோருங்கள். அம்பரீஷன் நல்லவன். ஞானவான். உங்களை எளிதில் மன்னிப்பான்" என்று நாராயணர் துர்வாசருக்கு வழிகாட்டினார்.

எல்லோரும் கைவிட்ட நிலையில் துர்வாசர் அம்பரீஷன் கால்களை ஓடிப்போய் பற்றிக் கொண்டார். அம்பரீஷன் பதறி எழுந்தான். பதிலுக்கு அவரை நமஸ்கரித்தான்.

சக்கரப்படைக்கு அவர் பயந்து ஓடிய ஒருவருட காலமும், தான் நீர் கூட உண்ணாமல் இருந்ததைச் சொல்லி அவரை விருந்துக்கு வருமாறு அழைத்தான்.

அவர் கரம் பற்றி அரண்மனைக்குள் அழைத்துப் போனான். அம்பரீஷன் தொட்ட குளுமை துர்வாச முனிவரை அமைதிப்படுத்தியது.

ஆணவமான தவத்தை விட, அமைதியான பக்தி மிக உயர்வு என்று அவருக்கு உணர்த்தப் பட்டது.

உங்கள் மீது பொறாமைப் பட்டவர்கள், நீங்கள் என்ன செய்தாலும், என்ன சொன்னாலும் குற்றம் கண்டுபிடித்து எதிர்க்கத் துணிவார்கள். உங்களை நோக்கி பூதம் ஏவி விடுவார்கள். அவமானப் படுத்த முயற்சிப்பார்கள்.

ஏவி விட்ட பூதமும் எதிரே வந்து ஆடும். கலவரப் படுத்தும். எப்படி இதைச் சமாளிப்பது, என்று திகில் ஏற்படுத்தும். நீங்கள் உங்கள் எல்லா முயற்சியையும் கைவிட்டு விட்டு, இறைவனைச் சரணடைந்தால் போதும். இறைவனுடைய மகிமை உங்களை வெகு நிச்சயமாய் தீதிலிருந்து காப்பாற்றும். உங்களுக்கு தீது

செய்தவரை ஓட ஓட விரட்டும். கதற அடிக்கும்.

அதனால், எதைப் பற்றியும் அக்கறை கொள்ளாது இறை நினைப்பாக இருப்பதே மிக உயர்வு. எதிரியென்று யாரும் இல்லை என்று இருப்பதே மனித வாழ்க்கையின் சிறப்பு. இந்த மனவிசாரம்தான் இடையறாத சந்தோஷம். கடவுளைத் தெரிந்ததன் அடையாளம். இறை தெரிந்து இறையாகி நிற்கும் மாண்பு.

அம்பரீஷன் விஷயம் வெறும் கதையல்ல.. அசைக்க முடியாத இறை நம்பிக்கையின் அனுபவம். 'என்னைக் காப்பாற்ற அவன் இருக்கிறான். எனவே, என் முயற்சிகள் என்று எதுவும் தேவையில்லை. எவர் என்ன மிரட்டினாலும் அமைதியாக இருப்பதே என் வாழ்க்கை' என்கிற அன்பின் தத்துவம் இது.

துன்பம் நேரும்போது இறை நினைப்பை பலப்படுத்திக் கொள்ள தெரிய வேண்டும். இதற்கு பக்திதான் எளியவழி. பக்தி என்பது பாசாங்கற்ற எளிமை.

## யயாதி

உலகத்தின் வாழ்க்கை காலத்தால் நிர்ணயிக்கப் படுகிறது. காலம் என்பது அனுபவம். ஒரு அனுபவ நிகழ்வின் நேரமும், அனுபவமும்தான் காலத்தை முடிவு செய்கின்றன.

வெகுநேரம் தூங்கினேன் என்பது மனிதனுக்கு சந்தோஷமாக இருக்கிறது. வெகுநேரம் என்பது ஒருகால அளவு.

'ஒரு பெண்ணோடு ஒருநாள் முழுவதும் சந்தோஷமாக இருந்தேன்' என்று ஒரு ஆண் கூறுவது வழக்கம். ஒருநாள் என்பது ஒருகால அளவு.

இவளைத் திருமணம் செய்து, இறக்கும்வரை நான் இவளோடு வாழ வேண்டும் என்று ஒரு ஆண் விரும்பினால் இதுவும் ஒருகால அளவு. ஆகவே, அனுபவம் என்பது கால அளவில் நிர்ணயிக்கப்படுகிறது.

அனுபவத்திற்கு அடிப்படையான ஆசையும் காலத்தோடு கட்டுப்பட்டது. இது மிக நுணுக்கமான விஷயம். அமைதியாக உட்கார்ந்து உள் வாங்கிக் கொண்டால்தான் யயாதி கதை புரியும்.

யயாதி என்கிற ஒரு அரசன் முதுமை அடைந்தபிறகும் வாழ்க்கையில் திருப்தி அடையாதவனாகி தொடர்ந்து இந்திரிக சுகங்களை அனுபவிக்க விரும்பினான். தன்னுடைய முதுமையை மகனுக்குக் கொடுத்துவிட்டு,



மகனின் இளமையை தான் வாங்கிக் கொண்டு அரசனாக இருந்து வாழ்க்கையை நன்கு அனுபவித்து, எத்தனை அனுபவித்தாலும் திருப்தி ஏற்படாது என்பதைப் புரிந்து கொண்டு மறுபடியும் மகனுக்கு இளமையைக் கொடுத்துவிட்டு யயாதி இறந்து போனான் என்பது கதை.

எத்தனை அனுபவித்தாலும் திருப்தி ஏற்படாது என்று சொல்வதற்காக இந்தக் கதையைச் சொல்வார்கள். இது மட்டும் இந்தக் கதையினுடைய நோக்கமல்ல. இந்தக்கதை வேறொரு சூட்சுமத்தையும் மிகத் தெளிவாகச் சொல்கிறது.

யயாதி ஒன்றுக்கு இரண்டு மனைவிகளை மணந்து கொண்டான். அவர்களோடு சந்தோஷமாக இருந்து பல குழந்தைகள் பெற்றான். பெண்களோடு வாழ்வது என்பது வெறும் கூடலை மட்டும் குறிக்கிற விஷயமல்ல.

பிள்ளை பெற்ற பெண்ணுக்கு அருகே அமர்ந்து அவளை மெல்ல அணைத்துக் கொண்டு, அவள் மடியில் நிற்கும் குழந்தையைத் தன்னுடைய வழித் தோன்றலை, கொஞ்சிக் கொண்டிருப்பது கூட ஒரு சுகமான அனுபவம். மனைவியோடு இணையாக நடந்து விருந்தினரை உபசரிப்பதுகூட ஒரு சந்தோஷமான கூடல்.

ஆழ்ந்து தூங்கும் மனைவியின் கால் பிடித்து தலை கோதிக் கொண்டிருப்பதுகூட இந்திர லோகத்திற்குச் சமானமான ஆனந்தம்.

பெண் என்பவளோடு பேசிக் கொண்டிருப்பதும், சிரிப்பதும், விளையாடுவதும், ஒன்றாகக் காவியங்கள் கேட்பதும், வேட்டையாடுவதும் பரமானந்தம்.

வெறும் ஆண்களாக இருக்கின்ற வாழ்க்கையில் சில பெண்கள் சுற்றி வர வாழ்ந்தால், அந்த பெண்களுக்கு நடுவேயும் ஒரு ஆணால் சிறப்பாக நிற்க முடியும். பெண் ஒரு கிரியா ஊக்கி, உற்சாகமூட்டி. பெண்ணால் வரப்பட்டு, அவள் பாராட்டும் வண்ணம் போட்டிகளில் ஜெயிப்பது பலநூறு கூடல்களுக்குச் சமானம்.

யயாதி இதையெல்லாம் இழக்க விரும்பவில்லை. சிறுவயதிலிருந்தே இடைவிடாது பெண்களின் நெருக்கத்திலிருந்து அவர்கள் வியர்வையை சுவாசித்த கிளுகிளுப்பு அவனுக்குக் குறையவே இல்லை.

ஒவ்வொரு பெண்ணும் ஒவ்வொரு ஆனந்தம். ஒவ்வொரு பெண்ணும் ஒவ்வொரு விதம். அவர்களை அறிந்து கொள்வதே மிகப் பெரிய போராட்டம். அந்தப் போராட்டம் பெரிய குதூகலம். அறிந்த பிறகு அவர்களை வழிமடக்கி தன்னிஷ்டத்திற்கு வளைப்பது இன்னொரு போராட்டம்.. இன்னொரு குதூகலம்.

யயாதி வாழ்க்கையை மிகச் சராசரி வாலிபனாகத்தான் கழித்தான். இவர்கள்தான் வெற்றி என்று நினைத்தான். உலகத்தில் பல ஆண்கள் இன்றைக்கும் இவைகளையே மிகச் சிறந்த உன்னதமான விஷயங்கள் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இருபது வயதுகளில் மிக உற்சாகமாக இருந்த பெண்கள் ஆட்டம், முப்பது வயதில் சற்று நிதானத்துக்கு வந்தது. நாற்பது வயதில் ஆட்டத்திற்கு நடுவே அடிக்கடி சோர்வு வந்தது. ஐம்பது வயதில் நிறைய இடைவெளி விட்ட பின்புதான் விளையாட முடிந்தது. அறுபது வயதில் எதுவும் முடியவில்லை. வெறும் வார்த்தைகள் மட்டுமே வேகமாக இருந்தன. உடம்பு ஒத்துழைக்கவில்லை.

ஆனால், அதிகாரமும், செல்வமும் உள்ள அரசனைச் சுற்றி புதிது புதிதாகப் பெண்கள் வந்து கொண்டே இருந்தார்கள்.

அறுபது வயது யயாதியின் மடியில் பதினேழு வயது பெண் உட்கார்ந்து கொண்டு அவரோடு கிள்ளி விளையாடினாள். "என்னை ஓடிவந்து பிடியுங்கள் பார்ப்போம்" என்று புல் வெளிக்கு ஓடினாள்.

மரங்களில் ஏறினாள். கோட்டை கொத்தளங்களில் நின்று அவனை வம்புக்கு அழைத்தாள். அவன் துரத்த முடியாதபடி மின்னலாகப் பாய்ந்து ஓடினாள். அதே மாளிகைதான், அதே மரம்தான் இப்போது முன்பு போல் வேகமாக ஓட முடியவில்லை. களைப்பும், நெஞ்சு படபடப்பும் அதிகமாக இருக்கின்றன.

இளமையில் அவனுக்கு ஈடுகொடுத்த பெண்கள் வயதாகி ஒதுங்கிக் கொண்டு அரசனைக் கேலி செய்தார்கள். முன்பு அவனோடு சந்தோஷமாக இருந்த உரிமையில் இப்போது அவனை வெறுப்பேற்றினார்கள்.

'நீஎன்ன பெரிய வீரன்' என்று உரக்கக் கத்தினார்கள்.

"விடாதே, ஓடி ஒளிந்து கொள். அரசன் தேடித் தேடி களைப்படையட்டும். அவன் தூங்கிய பிறகு முகத்தில் பன்னீரை ஊற்றிவிட்டு எழுப்பு" என்றெல்லாம் சொல்லிக் கொடுத்தார்கள்.

அந்த இளம் பெண்களும் அவ்விதமே செய்தார்கள்.

யயாதி இயலாமல் போன தன் உடம்பை பரிதாபமாகப் பார்த்தான். 'போதும்' என்று உள்மனம் சொல்லியது. போதவில்லை என்று புத்தி நினைத்துக் கொண்டது.

'எவ்வளவு அழகான பெண்கள். எத்தனை திறமையான பெண்கள். இவர்களை அடக்கி ஆழ்வது எத்தனை சுகம்' என்று மனம் பழைய நினைப்புகளில் ஈடுபட்டது. பெண்களைப் பற்றிய அனுபவம் அதிகரித்ததால் எப்படி இவர்களை வளைக்கலாம் என்கிற திட்டங்கள் வேகமாகத் தோன்றின.



அவளைத் துரத்திக் கொண்டு போய், அவள் முன்னே ஓட, சட்டென்று நின்று மார்பைப் பிடித்துக் கொண்டு சுருண்டு விழுந்து விடுவார். ஓடிய பெண்கள் பயந்து போய் திரும்பி ஓடிவந்து அவரைத் தூக்க முயற்சிக்கும் போது, இறுகத் தழுவி புல்லில் மல்லாற்றுவார். அந்தப் பெண் மறுபடியும் உதறிக் கொண்டு ஓடும்.

பிறகு வேறொரு தந்திரம் செய்வார். எப்படியாவது பெண்களை சாய்க்கின்ற பொழுது போக்கு அவருக்குள் தோன்றிக் கொண்டே இருந்தது. வயது ஆக ஆக அனுபவம் அதிகரித்தது. அனுபவத்தால் ஒரு புத்திசாலித்தனம் ஏற்பட்டது.

புத்திசாலித்தனத்தைப் புதிய பெண்கள் மீது பிரயோகிக்க எண்ணம் வந்தது. பழைய பெண்கள் ஒதுங்கிக் கொள்ள, புதிய பெண்கள் அரண்மனையை நிரப்பிய வண்ணம் இருந்தனர். இன்னும் புதிய பெண்கள் வருவார்கள் என்று அவருக்குச் சொல்லப் பட்டது.

தனக்கு வயதாவது பற்றி அவர் மிகவும் வேதனைப் பட்டார். மருந்துகளும், உடற்பயிற்சியும், உற்சாகமான உணவுகள் உண்ட பின்னரும் உடம்பு முன்போல நாண் கட்டிய வில்லாக இல்லை என்பது நன்கு தெரிந்தது. 'இளமையை மறுபடியும் தன் உடம்புக்குள் கொண்டு வருவது எப்படி' என ஆலோசித்தார். அவர்களுக்கு அவர் நிலை உணர்த்தப் பட்டது.

'அவருக்கு இளமையை யாரேனும் தந்து கொடுத்தால், முழு மனதோடு கொடுத்தால், அவர் முதுமையை அவர்களிடம் கொடுத்துவிட்டு, இளமையை வைத்துக் கொண்டு அனுபவிக்கலாம்' என்று சொல்லப்பட்டது. அதற்கான தந்திரங்கள் அவருக்குப் போதிக்கப்பட்டன.

அவர் ஒரு தெளிவான இளமையை வாழ விரும்பினார். தன் மகன்களிடம் கேட்டார். அவருடைய மகன்கள் மறுத்து ஒதுங்கி கேலி செய்துவிட்டுப் போனார்கள். கடைசி மகனான புரு, யயாதியின் கோரிக்கையைக் கேட்டு ஆச்சரியப்பட்டான்.

"நல்லது. இது எனக்கு மிகப் பெரிய வரம். உங்கள் முதுமையை நான் வாங்கிக் கொண்டு, என் இளமையை உங்களுக்கு மனதாரத் தருகிறேன்." என்று மாற்றிக் கொண்டான்.

யயாதி, மகன் கொடுத்த இளமையோடு அந்தப்புரம்

சென்று மனைவிகளோடு புதிய காமக் கிழத்திகளோடும் வாழ்க்கையை அனுபவித்தான்.

புருவுக்கு உடம்பு முழுவதும் கிழத்தனம் தோன்றியது. ஆனால், வயதோ இருபதுதான் இருந்தது. வயதினால் மனம் இளமையாக இருந்தது. இந்த இளமையான மனம் இருக்கும் போது, உடம்பு கிழத்தன்மையை அடைந்து அது படுகிற அவஸ்தைகளை புரு பார்க்க முடிந்தது. கால்கள் நிற்க முடியவில்லை. கணுக்கால்கள் வலித்தது. முழங்கால்கள் இழுத்தன. தொடை நடுங்கியது. இடுப்பு நிற்க முடியாமல் ஆடியது. நிமிர்ந்தால் முதுகு வலித்தது. இன்னும் நிமிர்ந்தால் தலை சுழன்றது. ஏதேனும் ஒரு இடத்தைப் பிடித்துக் கொண்டுதான் நிற்க முடியும் என்று தோன்றியது. மார்பு இளைத்தது. படபடப்பு அதிகரித்தது.

பார்ப்பவைகளெல்லாம் இரண்டிரண்டாகத் தெரிந்தன. உதடுகளிலிருந்து எச்சில் வழிந்தது. உதடு எச்சிலைத் தடுக்க முயற்சித்தும் சளி ஒழுகியது. உரக்கப் பேசினால்தான் காதிற்குள் செய்தி விழுந்தது. தூக்கம் எந்நேரமும் புத்தியில் பரவிக்கிடந்தது. பசியும், அதேநேரம் உணவு செரிமானமாகாத ஒரு தன்மையும் வயிற்றில் இருந்தன. தோல் வறண்டு சொறிந்து கொள்கிற நிலைமையை அடிக்கடி உண்டாக்கின.

புரு- 'இதுதான் உடம்பினுடைய கடைசி விஷயமென்றால் நான் இந்த இளம் ஆட்டத்தில் ஈடுபடாமல் இருப்பது நல்லதல்லவா' என்று புரிந்து கொண்டான். தந்தை பல வருடங்கள் தன்னுடைய இளமையோடு வாழ்க்கையை அனுபவிப்பதைத் தொலைவிலிருந்து பார்த்தான். அவனும் பயமின்றி முதுமையை அனுபவித்தான்.

வலித்தாலும் பொறுத்துக் கொண்டான். தலை சுற்றினாலும் தாங்கிக் கொண்டான். படபடப்பு ஏற்பட்டாலும் பொறுத்துக் கொண்டான். உடம்பின் நிலையாமை நன்கு புரிந்தது. உடம்பினால் மனம் பக்குவமாயிற்று. தள்ளாமையினால் ஏற்பட்ட அசதி ஓரிடத்தில் உட்கார வைத்தது. தலை சுற்றலினால் ஏற்பட்ட மௌனம் தொலைதூரம் பார்க்க வைத்தது.

இருபது வயது புரு மரணம் பற்றி சற்றும் பயமின்றி வலிகளைத் தாங்கிக் கொண்டு, தொலைதூரம் பார்த்தபடி மௌனமாய் தனியாய் அமர்ந்திருந்தான்.

உலகத்தில் மிக அற்புதமான மனிதர்கள் என்று சொல்லப்பட்ட எல்லோரும் இளமையை இப்படி கழித்து, முதுமையில் இப்படி அவஸ்தைப்பட்டு பிறகு உடம்பை உதிர்த்து, மரணத்தையும் ஏற்று வெளியே போவதை



தெள்ளத் தெளிவாக அறிந்து கொண்டான். இதுதான் இறுதிக் கட்டமெனில் நடுவே இருக்கிற ஆட்டம் எல்லாம் நிரந்தரமில்லாத விஷயங்கள். தோன்றி மறையும் விஷயங்கள்.

'எனக்குள் தோன்றும் காமம் வெறும் ஜனன உற்பத்திக்கே தவிர, வேறு எந்த அனுபவத்திற்கும் இல்லை. காமத்தில் என்னை நான் இழந்து விடக்கூடாது. என்னை இடைவிடாது கவனிக்க வேண்டிய வேலை இருக்கும் போது நான் வேறெங்கோ திரிந்துவிடக்கூடாது. ஏனெனில், இன்று இல்லையெனில் ஒருநாள் நான் உடம்பு தளர்ந்து போய் மனம் நொறுங்கிப் போய் உட்கார்ந்து , 'இது என்ன, இது என்ன வாழ்க்கை' என்று ஒரு காலகட்டத்தில் யோசித்துத்தான் ஆக வேண்டும். எப்போதோ யோசிப்பதற்குப் பதிலாக இப்போதே யோசித்தால் என்ன..' என்று அவன் யோசிக்க ஆரம்பித்தான்.

வருடங்கள்தாண்டின. தந்தை 'இளமையை வைத்து இதற்கு மேலும் அனுபவிக்க எதுவுமில்லை' என்பது போல் வாழ்க்கையை அனுபவித்தான். பல திருமணங்கள் செய்து கொண்டான். பலவிதமான உணவுகள் உண்டான். விதம் விதமான பயணங்கள் மேற்கொண்டான். எல்லாம் முடிந்து, மறுபடியும் திரும்பத் திரும்ப ஒரே காரியத்தைச் செய்து கொண்டிருக்கிறோம்' என்று உணர்ந்த வேளையில் புருவை நோக்கி நின்றார். கைகூப்பினார்.

"இது வெறும் விளையாட்டு. வெற்றுக் கேளிக்கை. எந்தப் பலனும் தராத ஒரு பயிற்சி. எனவே, உன்னுடைய இளமையை மறுபடியும் வாங்கிக் கொண்டு, என் முதுமையைக் கொடுத்து விடு." என்று கனிவோடு கேட்டார்.

அவ்விதமே நடந்தது. புரு ராஜ்ஜியத்திற்கு அரசனானான். யயாதி தவம் செய்ய காடு நோக்கித் தன் முதுமையோடு போனான். இப்பொழுது புரு இளமையுள்ள இளைஞனாய் அரச சபையில் உட்கார்ந்திருந்தான். அவன் இளமையைக் கொடுத்தபோது இருபது வயது. பதினைந்து வருடங்களுக்குப் பிறகு இளமையை மறுபடியும் வாங்கிக் கொண்டான். அப்போதும் வயது இருபதாக இருந்தது.

முப்பத்தைந்து வயது வாழ்ந்திருந்தாலும் உடம்பில் இளமை இருபதாகவே இருந்தது. எப்படி கொடுத்தானோ அப்படியே வாங்கிக் கொண்டான். ஆனால், மனம் முழுவதும் முதுமையை சுமந்ததால் ஒரு பக்குவம் ஏற்பட்டு, ஒரு அமைதி படர்ந்து, ஒரு தெளிவு பிறந்து,

மிகச் சுகமான ஒரு சூழ்நிலை அவனுக்குள் மிதந்தது.

இளமையின் நிலையாமையை, முதுமையைத் தாங்கிப் புரிந்து கொண்டதால், மறுபடியும் பதினைந்து வருட இடைவெளிக்குப் பிறகு, முன்பு போலவே இருபது வயது இளமை கிடைத்ததால், புரு அந்த இளமையை.. அதன் வலிமையை நிதானமாய்.. நல்ல அரசு செய்வதற்குப் பயன் படுத்திக் கொண்டான்.

மரணம் நிச்சயம், முதுமை நிச்சயம், முதுமையும், மரணமும் ஒன்றே. இது இறக்காமல் ஏற்படுகின்ற இறப்பு. பிறகு நிஜமான இறப்பு. எனவே, மரணம் போலும் ஏற்படும் முதுமை வருவதற்கு முன்பு நல்லதைச் செய்யத் தீர்மானித்தான். எல்லோருக்கும் உதவி செய்தான். நீதி நெறிகளைப் பரப்பினான். நல்லாட்சியை நிறுவினான்.

மிதமான உணவும், யோகமும் கொண்டு இயல்பாக முதுமையை அடைந்து, புகழோடு, உலகை விட்டு நிம்மதியாய் நீங்கினான். அவனுக்கு மறுபடி பிறப்பு என்கிற ஆசை இல்லாமல் போயிற்று.

இளமையிலேயே முதுமை என்கிற அனுபவத்தை ஏற்றுக் கொண்டு விடுவது. பலருடைய முதுமையை உற்றுப் பார்த்து தனக்கும் ஒருநாள் இந்த முதுமை வந்து விடும் என்று தெரிந்து கொள்வது, இருபது வருடங்கள் கழித்து முதுமையாகும் போது நான் எப்படி வாழ்வேன் என்று இப்பொழுதே அதற்குத் தயாராகி விடுவது, அதற்கான காபந்துகள் செய்து கொள்வது என்பதை யயாதி கதையிலிருந்து புரிந்து கொள்ளலாம்.

இளமை நேரத்தில், 'முதுமை என்றால் என்ன' என்று யோசிப்பது எல்லோருக்கும் கிடைக்காது. கிடைத்தவர்கள் பாக்கியசாலிகள்.

## குலசேகர ஆழ்வார்

இளமைக்காலத்தில் முதுமையைப் பற்றி யோசிப்பது எல்லோருக்கும் கிடைக்காது. கிடைத்தவர்கள் பாக்கியசாலிகள். அதே போல செல்வம் மிகுந்த காலத்தில் கடவுளைப் பற்றி யோசிக்கவும் எல்லோராலும் முடியாது.

பரம்பரை பரம்பரையாக அவர் செல்வந்தர். அரச குடும்பத்து வழித்தோன்றல். இளவரசராய் வாழ்ந்தவர். மன்னராய் பட்டம் சூட்டியவர். அவர் எல்லாவற்றையும் உதறி, 'அரங்கனே முக்கியம். அரங்கனே உய்யும் வழி. அரங்கனே சத்தியம்' என்று அரச சபையை விட்டு



வெளியே வந்தார். அவர் பெயர் குலசேகர ஆழ்வார்.

அது சேரதேசம். சமவெளியெல்லாம் தென்னைகள் சூழ்ந்த இடம். எல்லா சமவெளிகளைச் சுற்றியும் மலைகள் காவல் இருக்கின்ற இடம். மழை மாதம் மும்மாரி பெய்கிற இடம். குளங்களும் ஏரிகளும் நிறைந்த இடம். நீரோடைகள் சலசலத்து ஓடும் இடம். பசுமையான இடம். உறுதியான பிரம்பும், மெல்லிய மூங்கில்களும் ஏராளமாய் கிடைக்கின்ற இடம். அந்த இரண்டு தாவரங்களை வைத்துக் கொண்டு வில் கண்டு பிடித்து, அந்த வில்லில் தேர்ச்சி பெற்று விற்கலையில் சிறப்பாக உள்ள இடம். மலைநாடு என்பதால் தமிழை மக்கள் மூக்கால் பேசுகின்ற இடம். மிளகும், வெற்றிலையும், ஏலமும் விளைகின்ற இடம். செண்பகப் பூக்கள் பூத்துக் குலுங்குகின்ற இடம்.

அப்படிப்பட்ட வளமான சேர தேசத்தில் திருவஞ்சைக்களம் என்றொரு ஊர் இருந்தது. அந்த ஊரின் தலைநகராக கொல்லி நகரம் என்கிற நகரம் இருந்தது. வளம் மிகுந்த அந்த இடத்தின் தலைவராக குலசேகர் இருந்தார்.

குலசேகரப் பெருமானுக்கு விஷ்ணுவே குலதெய்வம். வைஷ்ணவமே வாழ்க்கை வழி. அரசனாக இருந்தாலும் கடவுளுக்கான யம நியமங்களைத் தவறாது செய்து வருபவர். அவரைப் போல உத்தமமான பிறவிகள் பிறந்த தேசத்தில் வறுமை இருக்குமா. பஞ்சமும், பிணியும் தலைகாட்டுமா.

மாதம் மும்மாரி பெய்து, ஊரை செழிப்பாக்க மக்களில் நல்லவர்களைப் பிறப்பித்து, அமைதி உண்டாக்கி, எல்லோருடைய வாழ்க்கையும் சீரும் சிறப்புமானதாக இருந்தது. தீமை செய்வோர் மிகக் குறைவாக இருந்தார்கள். நீதி நெறிகள் புகுத்தப்படவில்லை. சொல்லப்பட்டு வந்த நீதி நெறிகளை மக்கள் புரிந்து கொண்டு கடைபிடித்தார்கள். கண்டிக்க வேண்டிய அல்லது தண்டிக்க வேண்டிய அவசியம் அறவே இல்லாது போயிற்று.

நீர் நிலைகள் அதிகமிருப்பதால் சேர மக்களுக்கு மூன்று வேளை குளிக்கின்ற பழக்கம் இருந்தது. மூன்று வேளை குளித்தால், மூன்று வேளையும் ஜபதபங்கள் செய்வதற்கு அவர்கள் அசையாது உட்கார்ந்தார்கள். ஊரில் ஜபதபங்கள் அதிகரித்ததால் மழை அளவாகப் பெய்தது. விளைச்சல் அதிகமாக இருந்தது.

குலசேகர பெருமானுக்கு, அரசபட்டம் ஏற்பதற்கு முன்னரேயே திருமணமாயிற்று. அழகான மனைவியோடு [illegible]டி ஆண்மகவொன்றும், பெண் மகவொன்றும் பெற்றார்.

நாடு முழுவதும் சுற்றி எல்லைகளைப் பலப்படுத்தி சேரதேசத்தை தனித்த பெரும் நாடாக மாற்றினார்.

போர்க் கோலமில்லாமல் சாதுக்களாக நகருக்குள் எவர் நுழைந்தாலும் அவர்களை சேர தேசம் நன்கு வரவேற்று உபசரித்தது. எனவே, சேர தேசத்திற்கு, பாரதத்தின் தெற்குப் பக்கம் தனித்த மரியாதை ஏற்பட்டது.

'இதற்கு மேல் இந்த வாழ்க்கையில் செய்வதற்கு என்ன இருக்கிறது' குலசேகர பெருமான் யோசித்தார்.

'வேண்டுமென்ற செல்வம் இருக்கிறது. அரச பதவி இருக்கிறது. அழகான மனைவி இருக்கிறாள். அற்புதமான குழந்தைகள் இருக்கின்றன. இதற்குமேல் ஏதேனும் தேவையா.'

குலசேகர பெருமான் யோசிக்க, அவர் மனம் இறைவனை நாடியது. சரணாகதி தத்துவத்தின் பால் மனம் பற்றுக் கொண்டு ஈர்க்கப்பட்டது. சபையிலிருந்த புலவர்கள் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு விதமான வெவ்வேறு கதைகளைக்கூறி மன்னருக்கு சரணாகதி தத்துவத்தை விளக்கினார்கள். பல்வேறுவிதமாய் எடுத்துக் கூறினார்கள்.

மன்னர் இடுப்பில் கத்தி அணிவதை விட்டுவிட்டு வெறும் மேல் துண்டும், இடுப்பு வேட்டியுமாய் புலவர்களுக்கு எதிரே கைகட்டி அமர்ந்து இறைவனைப் பற்றி விவாதித்தார். சாப்பிடும் போதும், தூங்கும் போதும் இறைவனைப் பற்றியே யோசித்தார்.

குலசேகரனுடைய இந்த தன்மையை கவனித்த மந்திரிமார்கள் மிகுந்த அக்கறையோடு செயல் பட்டார்கள். அரசரை பாகவதக் கதைகளில் மூழ்கியிருக்கச் செய்து நல்ல நிர்வாகத்தை தாங்கள் எடுத்துச் செய்தார்கள். வாழ்க்கை எல்லா விதத்திலும் சுகமாக இருக்க, இடையறாது குலசேகரப் பெருமான் இறைவனைப் பற்றியே யோசித்துக் கொண்டிருந்தார்.

ஒருநாள் அவருடைய கனவில் இறைவன் காட்சியளித்து 'தான் யார்' என்பதை அவருக்கு சூட்சுமமாக உணர்த்தினான். எது கடவுள், அதை எப்படி அடைய வேண்டும் என்று விளக்கிக் காட்டினான். பல பிறவிகள் தவம் செய்து கிடைக்க வேண்டிய ஒரு விஷயம் பூர்வ புண்ணியத்தால் குலசேகர ஆழ்வாருக்கு கனவிலே கிடைத்தது. குலசேகரர் அதைப் புரிந்து கொண்டார். அரசியல் விஷயங்கள் எல்லாவற்றையும் மந்திரிகளிடம் விட்டுவிட்டு முற்றிலுமாய் இறைவனைப் பற்றியே யோசிக்க ஆரம்பித்தார்.

அப்போது சோழ தேசத்திலிருந்து தமிழ் மொழியை



நன்கு கற்ற ஒரு புலவர், ராமகாதையை வடமொழியிலிருந்து அழகிய தமிழிலே மொழி பெயர்த்து பாவம் சொட்டச் சொட்ட விளக்குகிறார் என்று மன்னர் கேள்விப்பட்டார். அவரை வரவழைத்தார். மரியாதை செய்தார்.

அவர் ஓய்வெடுத்து உற்சாகமானதும் சபையைக் கூட்டி அவரை மேடையில் அமர்த்தி, தான் கீழே அமர்ந்து கொண்டு ராமபிரானைப் பற்றி கதை கேட்க ஆரம்பித்தார்.

விஷ்ணுவின் சிறப்போடு கதை தொடங்கியது. அயோத்தியின் அழகு பற்றிய வர்ணனைகள் விவரிக்கப் பட்டன. மக்களைப் பற்றி விவரங்கள் சொல்லப் பட்டன. 'தசரதன் யார். அவன் மனைவியர் எத்தகையவர்' என்று விளக்கப் பட்டது. யாகத்திலிருந்து பூதம் தோன்றியதும், பூதம் பாயாசம் கொடுத்ததும், அந்தப் பாயாசத்தை மனைவியர் பங்கிட்டுக் கொண்டதும் விலாவரியாகச் சொல்லப்பட்டது.

மூன்று மனைவியரும் பாயாசம் குடித்த போது குலசேகர பெருமானுக்கு நாக்கு தித்தித்தது. தானும் பாயாசம் குடித்தது போல உடம்பில் ஒரு புத்துணர்ச்சி கிளம்பியது. தானும் யாகத்திலிருந்து கிளம்பிய தேவனைப் பார்த்ததாக ஒரு எண்ணம் தோன்றியது.

"அவன் நீலநிற ஆடை அணிந்திருந்தானா.." என்று மன்னர் புலவரைப் பார்த்துக் கேட்டார்.

புலவர் வடமொழிக் காவியத்தைப் புரட்டிப் பார்த்துவிட்டு, "ஆமாம், அப்படித்தான் எழுதப் பட்டிருக்கிறது.." என்று சொன்னார்.

"ஆனால், நீங்கள் சொல்லவில்லையே.."

"இல்லை. அது முக்கியமில்லை என்று விட்டு விட்டேன்."

"இனி எந்த ஒரு விஷயத்தையும் விட வேண்டாம். எல்லாவற்றையும் சொல்வதற்கு முயற்சி செய்யுங்கள். நாங்கள் கூர்ந்து கேட்கிறோம்.." என்று குலசேகரப் பெருமான் சொல்ல சோழ தேசத்துப் புலவர் தலையசைத்தார். மிகக் கூர்மையாகவும், நுணுக்கமாகவும் இராமாயணம் சொல்வதற்கு ஒப்புக் கொண்டார். மனசுக்குள் திட்டமிட்டார்.

பகலெல்லாம் படித்து குறிப்புகள் எடுத்தார்.

'மன்னரே, இத்தனை ஆர்வமாக இராமாயணம் கேட்கிற போது சொல்வது தன் கடமையல்லவா என்று சிந்தித்தார். மன்னர் தினம் தினம் கொடுக்கின்ற பரிசுகளைப் பார்த்து சந்தோஷித்தார். தன் வீட்டிற்கு வேண்டிய மட்டும் நெல்லும், பருப்பும் தனியே வண்டியில்

அனுப்பி வைத்தார்.

இன்னொரு வண்டியில் சேரதேசத்தில் விளைந்த பொருள்களை அனுப்பி, அவைகளை விற்றுக் காசக்கி உபயோகப்படுத்திக் கொள்ளுமாறு மனைவிக்குக் கடிதமெழுதினார். 'வீடு சௌக்கியமாக இருக்கிறது. அதற்குக் காரணம் குலசேகரப் பெருமான் என்று தெரிந்ததும் இன்னும் ஆழ்ந்து அனுபவித்து ராமாயணம் சொல்வதற்கு திட்டமிட்டார். நாடக பாணியில் ராமாயணத்தை தொடர்ந்து நடத்தினார்.

சுபயோக சுபதினத்தில் இராமர் ஜனனமானார். இராமருக்குப் பின் பரதர் பிறந்தார். பரதருக்குப் பிறகு லஷ்மணனும், லஷ்மணனுக்குப் பிறகு சத்ருகனனும் பிறந்தார்கள். குழந்தை பிறந்ததும் அவர்களை தொட்டியில் இடும் வைபவம் நடந்தது. தசரதன் எல்லோருக்கும் காப்பரிசியும், தங்கக் காசும் கொடுத்தான்.

"சொல்லவே இல்லையே, ராமர் ஜனித்தற்கு தசரதர் கொடுத்திருக்கிறார். இப்போது மறுபடியும் இராமர் இந்த சேர தேசத்தில் ஜனித்திருக்கிறார். அதற்கு நாம் காப்பரிசி கொடுக்க வேண்டாமா. இனிமேல் முன் கூட்டியே கொடுக்க சொல்லுங்கள்." என்று சொல்லி குலசேகரர் உடனடியாக எல்லோருக்கும் அரைப்படி அரிசியும், ஒரு தங்கக் காசும் கொடுத்தார். வந்தவர்கள் அனைவரும் காசும், அரிசியும் வாங்கிக் கொண்டு குழந்தை ராமரை வாயார வாழ்த்தினார்கள்.

சோழ தேசத்து தமிழ்ப்புலவர் மந்திரிமார்களை கைதட்டி கூப்பிட்டார்.

"நண்பர்களே.. நாளை இராமருக்கு வித்தியாப்பியாசம் ஆரம்பம். வித்யாப்பியாசம் ஆரம்பிக்கிறபோது எல்லோருக்கும் அப்பம் கொடுப்பது வழக்கம். எனவே, ஆயிரத்து சொச்சம் அப்பத்திற்கு ஏற்பாடு செய்யுங்கள்" என்று சொன்னார்.

'இராமர் வில்வித்தை, குதிரையேற்றம், யானையேற்றம் எல்லாம் கற்றுக் கொள்ள விஜயதசமி அன்று குருவை வணங்கி எழுந்த போது, ஒருகூடை அப்பம் குருவுக்குக் காணிக்கையாகக் கொடுக்கப்பட்டது. முதல் அப்பத்தை எடுத்து குரு பிளந்து இராமனுக்கு ஊட்டி விட்டார்.

உடனே சபையில் நூறு அப்பங்கள் வைக்கப்பட்டன. எல்லா அப்பங்களும் எல்லோருக்கும் விநியோகம் செய்யப்பட்டன. அரசர் சந்தோஷமானார். கேட்டு இரண்டு அப்பங்கள் வாங்கிக் கொண்டு இராமனுடைய வித்தை நன்கு பலிதமாக வேண்டுமென்றும், அவன் நன்கு படிக்க வேண்டும் என்றும் பிரார்த்தனை செய்து கொண்டு அந்த அப்பத்தை உண்டார்.



இராமருக்கு பத்து வயது.

திடீரென்று விஸ்வாமித்திரர் உள்ளே நுழைந்த போது சபை கலகலத்துப் போயிற்று. 'விஸ்வாமித்திரர் எப்படி நுழைந்தார்' என்று சோழப்புலவர் விவரமாக விளக்கிக் கொண்டிருந்து, வசனங்கள் பேச, சபை உறைந்து போய் பார்த்துக் கொண்டிருந்தது.

"தசரதா.. இப்போது உன் மக்கள் இருவரையும் என்னோடு அனுப்புகிறாயா, இல்லையா.." என்று விஸ்வாமித்திரர் கேட்க, தசரதன் மண்டியிட்டு விஸ்வாமித்திரரை நோக்கி புலம்புகிறார்.

"நான் வருகிறேன். என் எல்லா படைகளோடும் வருகிறேன். இங்குள்ள அரசர்கள் அத்தனை பேரையும் திரட்டிக் கொண்டு வருகிறேன். தயவு செய்து என் குழந்தைகளை மட்டும் கேட்காதீர்கள். இரண்டு சிறு பாலகர்கள் ராட்சஸர்களை எதிர்த்து எப்படி போராடுவார்கள்." என்று அழுதார்.

குலசேகரப் பெருமான் கண்ணீர் விட்டு அழுதார். 'ஏன் இப்படி விஸ்வாமித்திரர் குழந்தைகள் வேண்டுமென்று பிடிவாதம் பிடிக்கிறார்' என்று சொன்னார்.

அப்போது வசிஷ்டர் எழுந்து, "யார், எதைக் கேட்கிறார்கள் என்று உனக்கு ஏன் புரியவில்லை மன்னா." என்று பேச ஆரம்பித்தவுடன் தசரதர் முகம் துடைத்துக் கொண்டார்.

"கேட்பது விஸ்வாமித்திர மகரிஷி. உன்னுடைய இரண்டு குழந்தைகளையும் கேட்கிறார். உன்னிடம் வாங்கிய குழந்தைகளை அவர் தானே எடுத்துக் கொள்வதாகவோ சொல்கிறார். ஒரு உதவிக்கு அழைத்துப் போய் மறுபடியும் கொண்டு வந்து விடுகிறேன் என்று சொல்கிறார். ஒரு முனிவர் உன் மகன்களை வேண்டுமென்று கேட்பது எவ்வளவு பெரிய விஷயம். இராமன் பாக்கியவான். அதனால்தான் ஒரு முனிவர் அவனை வேண்டுமென்று கேட்கிறார். நான் சொல்லித் தருகிறேன் என்று தானே முன்வந்து அவனை அழைத்துப் போகக் காத்திருக்கிறார். இந்த நேரத்தில் மாட்டேன் என்று சொல்ல உன்னால் எப்படி முடிகிறது. விஸ்வாமித்திரரைப் பற்றி நீ அறிந்தது அவ்வளவுதானா. எந்தக் கவலையும் படாமல் உடனே அனுப்பி வை" என்று வசிஷ்டர் சொன்னார்.

"ஆமாம், அப்படித்தான் செய்யவேண்டும். இந்த தசரதன் ஒரு முட்டாள். எதற்காக இப்படி அழுகிறார். அடப்பாவி. நானாக இருந்தால் நானும் கூட அல்லவா போயிருப்பேன். எனக்கும் கற்றுக் கொடுங்கள் என்றல்லவா சொல்லியிருப்பேன். ஆனால், விஸ்வாமித்திர முனிவர் இப்போது எப்படி வருவார்." என்று ஏங்கினார் குலசேகரர்

விஸ்வாமித்திர முனிவரோடு இராமனும், இலட்சுமணனும் காட்டுக்குப் போக, குலசேகரப் பெருமான் தானும் பின் தொடர்ந்தார்.

தன் மனதுக்குள் அவர்களோடே வாழ்ந்தார்.

குலசேகரப் பெருமானின் மனம் எல்லா நேரமும் ராமரைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தது. அந்த அரண்மனையில் ஏதோ ஒரு இடத்தில் ராமர் கொலு வீற்றிருப்பதாகவும், அவரைச் சுற்றிச் சுற்றி தான் நடந்து கொண்டிருப்பதாகவும் ஒரு எண்ணம் அவருக்கு வந்தது.

ராமன் வெறும் கதையல்ல. ராமன் உயிருள்ள உணர்வுள்ள ஒரு விஷயம். ராமன் இல்லையெனில் குலசேகரப் பெருமான் இல்லை. சரணாகதி தத்துவம் என்று வாய் வார்த்தையாகச் சொல்லாமல், வெறும் பொய்யாக நீட்டி முழங்காமல், சரணாகதி தத்துவத்தின் உண்மையான சொரூபமாய் குலசேகப் பெருமான் இருந்தார். அருகே ராமன் இருக்கின்ற அச்சத்தோடு நடந்தார். அதிகம் கூச்சல் போடாமல் இருந்தார். கோபப்படாமல் இருந்தார். ராமனுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடே எப்போதும் இருந்தார். ராமர் தன்னைக் கவனித்துக் கொண்டிருக்கிறார் என்ற அச்சத்தோடு இருந்தார்.

இதுதான் சரணாகதி தத்துவத்தின் அடிவேர். கடவுள் இருக்கிறார் என்று வெறுமனே நம்புவது அல்ல. தன்னை கடவுளோடு பழக்கப்படுத்திக் கொள்வது. அண்மையில் கடவுள் இருக்கிறார் என்ற அச்சத்தோடு நடந்து கொள்வதுதான் சரணாகதி தத்துவத்தின் உயர்ந்த நிலை. உன்னதமான இடம்.

இது குலசேகரப் பெருமானுக்கு இயல்பிலேயே கைவந்து விட்டது. ராமர் தாடகையை வதம் செய்த போது பல்கடித்து அவஸ்தைப் பட்டார். ராமர் அவளை ஜெயித்த போது சந்தோஷமடைந்தார். ராமர் மிதிலைக்குப் போன போது தானும் விரைந்தார். உப்பரிகையின் மீது நின்ற சீதாப்பிராட்டியைப் பார்த்து ராமர் கண்ணோடு கண் கலந்த போது தலை குனிந்து கொண்டார். 'நாம் பாக்கலாமா,



அவள் ராமரின் மனைவியல்லவா' என்று வெட்கப்பட்டார். லக்ஷ்மணனைப் போல கால்களை மட்டும் மனசுக்குள் கொண்டு வந்து ஒருமுறை நமஸ்கரித்து விட்டு என்னை ஆசிர்வதிக்க வேணும் என்று கேட்டுக் கொண்டு விலகிப் போனார். ராமர் வில்லெடுக்க மனம் குவித்தார். வளைக்கப் பதறினார். உடைக்க எகிறி குதித்தார். சீதை ஓடி வந்து மாலையிட துள்ளிக் குதித்தார்.

அன்று இரவும், மறுநாளும் அவருடைய அரண்மனையில் ராமனுடைய கல்யாண வைபவம் மிகச் சிறப்பாக நடந்தேறியது. அரசனுடைய குணத்தை தெரிந்து கொண்ட மந்திரிகள் அதற்கு தயாரானார்கள். அவர்களும் முழுவதுமாய் அதில் ஈடுபட்டு ராமருக்குத் திருமணம். இது கல்யாண விருந்து. நன்றாக சாப்பிடுங்கள் என்று உபசரித்தார்கள். எங்கோ, என்றோ வாழ்ந்த ராமனை அந்த சேர தேசத்தினர் முழுவதுமாய் மனதில் நினைத்து தங்கள் தலைவன் எப்படி கொண்டாடுகிறானோ அதே போல் தாங்களும் கொண்டாடி ராமருடைய திருமணத்தை நன்கு அனுபவித்தார்கள். எல்லார் நெஞ்சிலும் ராமநாமம் இடையறாது ஓடிக் கொண்டிருந்தது. மன்னர் எவ்வழி மக்கள் அவ்வழி.

திருமணமாகி எல்லோரும் திரும்பிக் கொண்டிருக்கிறார்கள். ராமனுக்கெதிரே பரசுராமன் வில் வளைத்து மிரட்டிக் கொண்டிருக்கிறான். 'என் கையில் இருப்பது என் தந்தை ஜமதக்னி அடைந்த விஷ்ணு தனுசு. இதற்கு பதில் சொல்லிவிட்டு தொடர்ந்து நடை போடு' என்று பரசுராமர் சொல்ல, பரசுராமனின் அகம்பாவத்தை ராமர் அடக்குவது தெளிவாகச் சொல்லப் பட்டது.

மன்னன் அசையாது கேட்டுக் கொண்டிருந்தான். நல்லவர்களுக்கு எப்படியெல்லாம் சோதனை வருகிறது என்று புலம்பினான்.

அயோத்திக்கு போய் மனைவியோடு ராமர் சந்தோஷமாக வாழும் காலத்தில் கூனி என்பவள் கோபப் பட்டு கைகேயியைத் தூண்டியதும், கைகேயி தசரதனை மூன்று வரங்கள் கேட்டதும், அதில் ஒருவரம் ராமன் காட்டிற்குப் போக வேண்டும் என்றும் இன்னொரு வரம் பரதன் நாடாள வேண்டும் என்றும் கேட்டது விவரிக்கப் பட்டது. அரசன் கண்ணில் ஜலம் பெருகக் கதை கேட்டான்.

ராமன் தந்தையின் சொல்படி கிளம்பினான். மரவுரி தரித்து, தம்பியோடும் மனைவியோடும் அயோத்தியை

விட்டு கானகம் போனான்.

குலசேகரப் பெருமான் புலம்பினான். இப்படிப்பட்ட தவறை அயோத்தி மக்கள் எப்படி செய்தார்கள் என்று கொதித்துப் போனான். மந்திரிகள் அவனை சமாதானப் படுத்தினார்கள்.

தசரதன் இறந்ததும், ராமன் நீத்தார் கடன் செய்தார்.

அரசன் அந்தணர்களுக்கெல்லாம் தானம் வழங்கினான். தசரதனுடைய ஆன்மா சாந்தியடை வதற்காக பிரார்த்தனை செய்யுமாறு கேட்டுக் கொண்டான். அள்ள அள்ளக் குறையாத செல்வம் இருப்பதால் ராமாயணம் குதூகலமாய் நடந்து கொண்டிருக்கிறது.

பன்னிரெண்டு வருடங்கள் ராமனும், சீதையும் பல்வேறு பர்ணசாலைகளில், பல்வேறு வனப்பகுதிகளில் சந்தோஷமாக வாழ்ந்து வந்தது விவரிக்கப்பட்டது.

அரசனும் சந்தோஷமானான்.

'ஒருகட்டத்தில் பதினைந்தாயிரம் துஷ்ட அரக்கர்களுடன் ராமர் ஒருவராகவே தனித்து போர் செய்ய நேரிட்டது' என்று வால்மீகி ராமாயணத்திலிருந்து ஒரு பகுதியை தமிழ்ப்புலவர் விளக்கிக் கொண்டிருந்த போது குலசேகரப் பெருமான் பதறி எழுந்தார்.

'பதினைந்தாயிரம் பேர்களுடன் ஒருமனிதன் எப்படி தனித்துப் போட்டியிட முடியும். எங்கே படை. உடனே கிளம்பட்டும். சகல வீரர்களும் என்னோடு பின் தொடரட்டும். குதிரைகளை ஆயத்தம் செய்யுங்கள். தேர்களை ஓட்டிக் கொண்டு வாருங்கள். யானைகளை முன்னே அனுப்புங்கள். ஒற்றர்களை விரைவாக விரட்டுங்கள்' என்று பலவிதமான உத்தரவுகளைப் பிறப்பித்து, படைகளை தயார் நிலையில் வைக்கச் சொல்லி தானும் கவசம் தரித்து, வாள் எடுத்து, வில் எடுத்து சபை நடுவே நின்றான். வாருங்கள் போகலாம். போய் ராமருக்கு உதவியாக இருக்கலாம். என்று சொன்னான்.

மந்திரிகள் மெல்ல சமாதானம் செய்தார்கள்.

ராமாயணக் கதை முடிந்துவிட்டது. ராமர் சகலரையும் வென்று ராவணனைக் கொன்று வெற்றிக் கொடியோடு திரும்பி விட்டாரென்று சோழப் புலவரையே சுருக்கமாகச் சொல்லச் சொன்னார்கள்.

தன் நிலை மறந்த மன்னன் மெல்ல மெல்ல அமைதியானான். ராமநாமத்தையே உள்ளுக்குள் இடையறாது சொல்லத் துவங்கினான்.

மந்திரிகள் வருந்தினார்கள் இவனென்ன அரசன்.. இப்படி பித்துப் பிடித்தது போல நடந்து கொள்கிறானே.. இவனோடு எப்படி ராஜ்ய பரிபாலனம் செய்வது என்று



கவலைப் பட்டார்கள்.

ராமாயணம் சொல்கிறவர்களால் தானே இந்த வேதனை.. அரசன் அனுபவித்து கேட்கிறான் என்பதை உணர்ந்து இந்த ராமாயணம் சொல்பவர்கள் நன்றாக கிண்டிக் கிளறி அதிக பட்சமாக வசனங்களோடும் நாடகத் தன்மையோடும் சொல்ல, அரசன் தன் வசம் இழந்து விடுகிறான். எனவே, இவர்களை அண்டவிடாமல் விலக்கி வைப்பதுதான் நல்லது. இருக்கின்ற சிலரையும் நாம் ஏதாவது சொல்லி விரட்டி விட வேண்டும் என்று மந்திரிகள் தீர்மானித்தார்கள்.

ராமனுக்கு அற்புதமான கோவில் எழுப்பிய அந்த அரசனை நோக்கி, "ராமர் கழுத்திலிருந்த நவரத்ன மாலையை யாரோ எடுத்துக் கொண்டு போய் விட்டார்கள். அநேகமாக இந்த கதை சொல்கிற ஆட்களாகத்தான் இருக்கும். அவர்கள்தான் கடைசியில் வலம் வந்தார்களாம்." என்று நகையை மறைத்து வைத்துக் கொண்டு பொதுவாய் புலவர்கள் மீது குற்றம் சொன்னார்கள்.

அரசன் பதறிப் போனான். ராமகதை சொல்பவனுக்குத் திருடுகின்ற எண்ணம் ஒருநாளும் வராது. ராமன் மீது நம்பிக்கையில்லாமல் யாராலும் ராமர் கதை சொல்ல முடியாது. ராமன் மீது நம்பிக்கையுள்ளவனை திருடன் என்று சொல்ல உங்களுக்கு எப்படி தைரியம் வந்தது.

நான் சொல்கிறேன். ஒரு பானை நிறைய விஷமுள்ள பாம்புகளை எடுத்து வாருங்கள் என்று கட்டளையிட்டான்.

மந்திரிகள் விழித்தார்கள்

'எடுத்து வரப் போறீர்களா, இல்லையா..' அரசன் சீறினான்.

அவர்கள் உடனடியாக ஒரு பானை நிறைய விஷப்பாம்புகளை கொண்டு வந்தார்கள்.

"நவரத்ன மாலையை எடுத்தது ராமகதை சொல்லும் பாகவதர்கள்தான் என்று இங்கு சொல்பவர்கள் எவரேனும் உண்டோ..." என்று அரசன் உரக்கக் கத்தினான்.

மந்திரிகள் 'நாங்கள்தான்' என்று கை தூக்கினார்கள்.

"அப்படியானால் உங்கள் கைகளை இந்த பானைக்குள் விடுங்கள். உங்களை பாம்பு தீண்டாமல் இருக்குமானால் நீங்கள் சொல்வது உண்மை. உங்களை பாம்பு தீண்டினால் நீங்கள் சொல்வது பொய். நீங்கள் நரகத்திற்குப் போவீர்கள்.. ம்.. சீக்கிரம் கைவிடுங்கள்." என்று கட்டளையிட்டான். மந்திரிகள் பயந்து பின் வாங்கினார்கள். மன்னிப்பு கேட்டார்கள்.

"உங்களுக்கு மட்டும் உத்தரவிட்டு விட்டு நான் மௌனமாக இருப்பேனா. இதோ நான் கை விடுகிறேன்."

குலசேகரன் தன் வைர மோதிரத்தைக் கழற்றி உள்ளே போட்டுவிட்டு, பானைக்குள் கைவிட்டு வெகுநேரம் வைத்திருந்து பின் அந்த வைர மோதிரத்தை எடுத்து விரலில் மாட்டிக் கொண்டான். பாம்புகள் அவனைத் தீண்டவே இல்லை.

"பாகவதர்கள், ராமகதை சொல்பவர்கள் ஒருநாளும் பொய் சொல்ல மாட்டார்கள். எனவே, மறந்து போயும் பாகவதர்கள் மீது பழி சுமத்தாதீர்கள். நான் சற்று பித்தனாய் நடந்து கொண்டு விட்டேனல்லவா. அதுதான் உங்களை வருத்தியிருக்கிறதல்லவா. தவறு அவர்கள் மீதல்ல. என் மீது. நான் உணர்ச்சி வசப்பட்டு விட்டேன். இறைவனுக்கு அருகே போய்விட்டேன். இறைவனுக்கு அருகே போய் விட்டவனுக்கு இந்த ராஜ்ய பரிபாலனம் தேவையில்லை. நீங்களே என்னுடைய பிள்ளையை அரசனாக்கி, அவனுக்குத் துணையாக நின்று ஆட்சியை நடத்திக் கொண்டு வாருங்கள். நான் ஸ்ரீ ரங்கம் போகிறேன். அங்கு போய் அரங்கனை தரிசித்து அங்கேயே இருந்து விடுகிறேன்." என்று சகலமும் உதறி, குலசேகரப் பெருமான் கிளம்பினார்.

"இறைப்பித்து ஏறியவர் தன்னை மறைத்துக் கொண்டு வாழ இயலாது. மறைப்பு இருக்கிறவருக்கு இறை அனுபவம் கிடைக்காது. எனவே, நான் அரசாளத் தகுதியற்றவன். இத்தனை நாள் என்னை ஆதரித்து என்னுடைய பித்தான செய்கைகளைப் பொறுத்துக் கொண்ட பெரியவர்கள் அனைவருக்கும் என்வணக்கம். நான் ஏதேனும் குற்றம் குறைகள் செய்திருப்பின் மந்திரிகளும், மக்களும் என்னை மன்னிக்க வேண்டும்" என்று கைகூப்பினார்.

சபை எழுந்து நின்று வாய்விட்டு அலறியது. மன்னன் காலில் விழுந்து அழுதது. அங்கேயே தங்கியிருக்கும் படி கேட்டுக் கொண்டது.

ஆனால், மன்னர் குலசேகரப் பெருமான் வெளியேற முடிவு செய்தார். 'இனி இறையைத் தவிர, இறை விஷயம் தவிர, வேறு எதையும் சிந்திப்பதே இல்லை.' என்று கங்கணம் கொண்டார். சேர தேசத்திலிருந்து குதிரையேறி ஸ்ரீ ரங்கம் நோக்கிச் சென்றார். அங்கு அரங்கன் மீது பல பாடல்கள் இயற்றினார். செல்வம் முக்கியமில்லை என்பதை, அரசாட்சி பெரிதில்லை என்பதை எளிய தமிழ்பாக்களால் விளக்கினார்.

பின்னர் குலசேகர ஆழ்வார் என்று போற்றப்பட்ட குலசேகரப் பெருமான் திருவேங்கடத்துக்கும் சென்றார் அங்கு சென்று அந்த எழில் சூழ்ந்த மலைக்கு நடுவே



அமர்ந்து அற்புதமான பாடல்கள் எழுதினார். எளிமையும், இனிமையும் உருக்கமும் கொண்ட பாடல்கள் அவை.

'அனாத செல்வத்து அரும்பையர்கள் தற்சூழ வான்ஆளும் செல்வமும், மண்-அரசும் யான் வேண்டேன். தேன் ஆர் பூஞ்சோலைத் திருவேங்கடச் சுனையில் மீனாய்ப் பிறக்கும் விதி உடையேன் ஆவேனே.'

என்று செல்வம் முக்கியமில்லை என்பது பற்றி பேசுகிறார். அரசராக இருந்து ஆட்சி செய்து விஷயத்தை சாதாரணமாகப் புறந்தள்ளி,

'கம்பமத யானைக் கழுத்தகத்தின் மேல் இருந்து இன்பு அமரும் செல்வமும் இவ் வரசும் யான் வேண்டேன். எம்பெருமான் ஈசன் எழில் வேங்கட மலைமேல் தம்பகமாய் நிற்கும் தவம் உடையேன் ஆவேனே.'

என்று பொங்கிப் பிரவாகமாய் தன்னை வெளிப் படுத்திக் கொள்கிறார்.

***'மன்னு புகழ் கோசலைதன் மணிவயிறு வாய்த்தவனே***
***தென் இலங்கைக் கோன் முடிகள்சித்துவித்தாய்***
***- செம்பொன்சேர்.***
***கன்னி நன் மா மதில் புடைசூழ் கணபுரத்து என்***
***- கருமணியே***
***என்னுடைய இன்னமுதே ராகவனே தாலேலோ'***
***'புண்டரிக மலரதன் மேல் புவனி எல்லாம்***
***படைத்தவனே***
***திண்திறலாள் தாடகைதன் உரம் உருவச்சிலை***
***-வளைத்தாய்***
***கண்டவர்தம் மனம் வழங்கும் கணபுரத்து என்***
***கருமணியே***
***எண் திசையும் ஆளுடையாய் ராகவனே தாலேலோ'***

என்று மனமுருகி, தாயாகித் தாலாட்டுகிறார்.

இறையருள் உள்ளே புகுந்து விட்டால், அரசாட்சியாவது.. மனசாட்சியாவது.. இறைவன் மட்டுமே சாட்சி. அந்த வாழ்க்கை முற்றிலும் வேறானது. அந்த வாழ்க்கை முழுவதும் சந்தோஷமானது.

## கோச்செங்கண்ணார்

சுபோதரர் என்கிற அந்த அரசன் உறையூரைத் தலைநகராகக் கொண்டு சோழ மண்டலத்தை ஆண்டு வந்தான். அது இடைச் சங்க காலம். இறையருள் எல்லோர் மனதிலும் ததும்பி இருந்த நேரம். மக்கள் வைராக்கிய புருஷர்களாய் விளங்கிய காலகட்டம். வாழ்க்கை

எப்படியிருப்பினும், இறைநெறி தவறாது வாழ்ந்து வந்த மக்கள் இருந்த பகுதி அது.

சுபோதரரின் மனைவி கமலவல்லி நிறைமாத கர்ப்பிணியாக இருந்தாள். அவளுக்கு வலி எடுத்து விட்டது என்று அந்தப்புரத்திலிருந்து செய்தி கொண்டு வந்து அரசனிடம் சொன்னார்கள். அரசன் பெரியோர்களையும், ஜோசியர்களையும் கலந்து ஆலோசித்தான்.

"மன்னரே, அரசிக்கு பிறக்கப் போவது ஆண்குழந்தை என்று நன்றாகத் தெரிந்து விட்டது. அவள் முகத்தைப் பார்க்கும் போது, வயிற்றைப் பார்க்கும் போது, அவள் நடையைப் பார்க்கும் போது, மூச்சு விடுவதைப் பார்க்கும் போது உள்ளுக்குள்ளே ஆணைச் சுமந்திருக்கிறாள் என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது. ஆனால், பிறக்கின்ற அந்த ஆண்குழந்தை இன்னும் ஒரு முகூர்த்தம் தாண்டிப் பிறந்தால் மிக உயர்வான ஒரு இடத்தை அடைவான். புகழ் பெற்ற மன்னனாவான். இறையருள் பெற்ற ஞானியாவான். இது எங்களுடைய எண்ணம்." என்று அனைவரும் ஒருமித்த குரலில் சொன்னார்கள்.

மன்னர் இந்தத் தகவலை அரசிக்கு எப்படிச் சொல்வது என்று யோசிக்க, அங்கு காத்திருந்த சேடி இந்தப் பேச்சைக் கேட்டுவிட்டு அந்தப்புரத்துக்கு ஓடினாள். அரசவையில் இப்படிப் பேசிக் கொள்கிறார்கள் என்று அரசியிடம் தெரிவித்தாள்.

"அப்படியா, இன்னும் ஒருமணி நேரம் தாமதித்துப் பிறந்தால் என்மகன் இறையருள் பெற்ற ஞானியாவானா.. புகழ் பெற்ற மன்னனாவானா.. அப்படியானால் ஒரு முகூர்த்தம் கழித்தே நான் இவனைப் பெற்றுக் கொள்கிறேன்." என்று சொன்னாள்.

'ஆனால், குழந்தை பிறப்பது நம் கையிலா இருக்கிறது. இறைவன் எப்படி தீர்மானிக்கிறானோ அப்படித்தானே பிறக்கும். நம்மால் பிறப்பைத் தடுக்கிற காரியம் கை கூடுமோ' சேடிப் பெண்கள் கேட்டார்கள்.

"என் கால்களைக் கட்டி விடுங்கள். கயிற்றால் என் கால்களைத் தூக்கி என்னைத் தலைகீழாகத் தொங்க விடுங்கள். அதுவரை எனக்கு என்னவானாலும் பரவாயில்லை. தவறான முகூர்த்தத்தில் குழந்தை பிறக்காமல், நல்ல முகூர்த்தத்தில் குழந்தை பிறந்தால் அது ஊருக்கு நன்மையல்லவா.. ஊரின் நன்மைக்காக நான் மரணமடைவது பற்றியும் கவலைப்படவில்லை. சோழர் குலம் செழிப்பாக இருப்பதற்காக நான் என்னையும் வருத்திக் கொள்ளவும் தயங்க மாட்டேன். எனவே, நான் சொன்னபடி கால்களைக் கட்டி என்னைத் தலைகீழாகத் தொங்க விடுங்கள்." என்று வேண்டினாள்.

சேடிகள் பயந்தார்கள். ஆயினும், அரசி கமலவல்லி தன் கால்களைத் தானே கட்டிக் கொண்டாள். கயிற்றை உத்திரத்தில் வீசச் சொன்னாள். மறுமுனையைப் பிடித்து, தன் கால்களைப் பிணைத்திருந்த கயிற்றைத் தானே இழுத்து தலைகீழாகத் தொங்கினாள். தான் தலைகீழாக ஆனதும், கீழேயுள்ள கட்டில் காலில் கயிற்றை சுருக்குப் போட்டு இறுக்கினாள். மற்றவர் உதவியின்றி தானே தலைகீழாகத் தொங்கினாள். பிரசவ வேதனைத் தாங்கியபடி பேரவஸ்தைப் பட்டாள்.

குழந்தையும் உள்ளுக்குள் திசை திரும்பியது. திணறியது. வெளியே வர பேரவஸ்தைப்பட்டது.

குழந்தையின் ஒவ்வொரு அசைவையும் உணர்ந்து, தலைகீழானதால் மூச்சடைக்க, கருப்பையிலும் இடுப்பிலும் தாங்கொண்ணா வலி ஏற்பட, ஒரு முகூர்த்தமும் அரசி சகிக்கவே முடியாத வேதனையை அனுபவித்தாள்.

சரியாய் ஒரு முகூர்த்தம் கழிந்தது. வேலையாட்கள் கயிற்றை இறக்கினார்கள். கால்களைத் தளர்த்தினார்கள். குழந்தை வேகமாக வெளியே வந்து விழுந்தது. கையில் ஏந்திக் கொண்டார்கள். அதை அள்ளி எடுத்து காவிரி நீரில் கழுவி பெற்ற தாய்க்குக் காட்டினார்கள். குழந்தை வயிற்றுக்குள் கவிழ்ந்து கொண்டிருந்ததால் அதன் கண்கள் சிவந்து கிடந்தன.

தாய் குழந்தையை வாங்கி உச்சி முகர்ந்தாள். நெஞ்சோடு அணைத்துக் கொண்டாள். சிவந்த கண்களைப் பார்த்தாள். 'செங்கண்ணா' என்று கூப்பிட்டாள். ஆரத்தழுவிக் கொண்டாள். உயிர் விட்டாள்.

ஜோசியர்கள் பொய்க்கலாம், ஜோசியம் பொய்ப்பதில்லை. சரியான முகூர்த்த நேரத்தில் ஒரு உயிர் தியாகத்தோடு பிறந்த செங்கண்ணான் சீரும், சிறப்புமாய் வளர்ந்தான். உரிய வயதில் இளவரசனாய் இருக்கும் போதே சோழதேசம் முழுவதும் பயணம் செய்தான். 'எப்படி அரசாள வேண்டும்' என்று மந்திரிகளிடமும், சாதுக்களிடமும், வேத விற்பன்னர்களிடமும் அறிந்தான். எல்லைகளை தடுக்க சபதம் செய்தான்.

சேரதேசத்து கப்பல்கள் சுற்றி வந்து அடிக்கடி சோழத் துறைமுகத்தையும், பாண்டியத் துறைமுகத்தையும் தாக்குகின்றன என்று தெரிந்து மலையேறி நிலம் வழியே

நடந்து சேர்தேசத்தை அடைந்து அங்கே கணைக்கால் இரும்பொறை என்ற சேர மன்னனைப் போரில் வென்று, வாகை சூடி அவனை சிறைப்பிடித்து இழுத்து வந்தான்.

பாரதத்தின் தெற்குப் பகுதி முழுவதும் அப்போது தமிழ்தான் பேசப்பட்டு வந்தது. சேர தேசத்திலுள்ளவர்களும் தமிழை இன்னும் இனிமையாக உச்சரித்து பேசினார்கள். தமிழிலே கவிதைகள் வாசித்தார்கள். தமிழில்தான் சேரதேசத்திலும் ஆணைகள் எழுதப்பட்டன. கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டன.

பாண்டியர்களிடையேயும் தமிழ் உன்னதமான இடத்தைப் பெற்றிருந்தது. பெரும் புலவர்கள் பாண்டிய மன்னனிடம் அடைக்கலமாகி, அங்கு சுகமாக அமர்ந்து காவியங்கள் செய்து கொண்டிருந்தார்கள். தமிழர் நாகரிகம் பிளவு படாமல் இருந்த காலமது. எல்லைகள் மட்டும் சேரம், சோழம், பாண்டியம் என்று பிரிந்திருந்தது. தேவையில்லாமல் அவ்வப்போது இதில் யார் பெரியவர் என்ற மோதல் நிகழ்ந்து கொண்டுதான் இருந்தது.

இப்படிப்பட்ட மோதல்கள் இவர்களிடையே இல்லாமல் போவதற்கும், தனித்தனியே அமைதியாய் வாழ்வதற்கும் பெரிய புலவர்கள் பலர் முயற்சி செய்து வந்தார்கள். அறிஞர்கள் சமாதானம் ஏற்படுத்தினார்கள். அதற்காகவே நீண்ட பயணங்கள் மேற்கொண்டார்கள். காலால் நடந்து மலையேறி, இறங்கி, பலநாள்கள் பயணப்பட்டு ஒருவரின் பெருமையை மற்றவர்க்குச் சொல்லி, ஒருவரின் அன்பை மற்றவருக்குத் தெரிவித்து சுமூகமான சூழ்நிலை ஏற்பட முயற்சித்தார்கள். என்றாலும், அறிஞர்களின் வார்த்தையை மீறி சிலசமயம் கோபாவேசப்பட்டு மன்னர்கள் சச்சரவிட்டுக் கொண்டார்கள்.

ஆனால், இப்போது செங்கண்ணானின் திறமைக்கெதிரே பாண்டியரோ, சேரனோ நிற்க முடியவில்லை. பாண்டியனுடைய முந்தைய படையெடுப்புகள் ஞாபகம் வைக்கப்பட்டு, சேரனுடைய மரக்கலங்கள் பூம்புகாரைத் தாக்குகின்றன என்று கேள்விப்பட்டு, இந்தத் திமிரை அடக்குவதற்காக, பாண்டியனை மிரட்டி வைத்து, பிறகு சேரதேசத்திற்கு உள்ளே புகுந்து சேரனையும் அடக்கி, கை கால்களில் விலங்கு போட்டு சேர்மன்னன் கணைக்கால் இரும்பொறையை செங்கண்ணான் உறையூருக்குக் கொண்டுவந்து அவனைச்சிறையில் அடைத்தான்.

கணைக்கால் இருப்பொறைக்கு மனம் கொதித்தது. செங்கண்ணான். படையெடுத்து வருகிறான் என்று ஒருமாதத்திற்கு முன்பாகவே தெரிந்து, போர் நிகழப் போகிறது என்று ஆயத்தமாக இருந்து செங்கண்ணானின் மிகப்பெரிய பலம் பொருந்திய படைக்கு முன்பு அவனுடைய சிறுபடை தாக்குப்பிடிக்க முடியாமல் போர் நடந்த கால் நாழிகையில் அவன் கைது செய்யப்பட்டது மனதிற்கு மிகுந்த வேதனையை அளித்தது.

அங்கேயே எதிரிகளைத் தாக்கி துவம்சம் செய்து இறந்து போய் விடலாம் என்று முழுமுயற்சி செய்தபோது, செங்கண்ணான் வந்து வாளைத் தட்டிவிட்டு மல்யுத்த வீரர்களை ஏவி, கை,கால்களைப் பிணைத்து சேரதேசம் முழுவதும் அவனை வண்டியில் நிற்கவைத்து பூட்டியபடி வலம் வரச் செய்தான். சேரமன்னன் என்று எழுதிய பலகையை அவன் நெஞ்சில் தொங்க விட்டிருந்தான்.

சோழ தேசத்திலும் அவனை அப்படியே பவனி வரச் செய்தான். சோழ தேசத்திலுள்ள ஆண்களும். பெண்களும் குழந்தைகளும் கை கொட்டிச் சிரித்தார்கள். வணிகர்கள் எள்ளி நகையாடினார்கள். விவசாயம் செய்தவர்கள் சேர மன்னன் எதிரே கூத்தாடினார்கள். குப்பையை வாரி முகத்தில் வீசினார்கள். செருப்பை கீரிடத்தில் செருகினார்கள்.

போர் என்பது ஆத்திரம் மிக்கது.. ஆத்திரத்தால் ஏற்படுவது.. ஆத்திரத்தை அதிகரிப்பது.

கணைக்கால் இரும்பொறைக்கு உடம்பு துடித்தது. பழிக்குப் பழி என்ற வேகம் அதிகரித்தது. ஆனால், பழிவாங்க முடியாது. விலங்குகள் போடப்பட்டு, வெளிதேசத்தில் இழுத்து வரப்படுவது அவனுக்கு மிகுந்த வேதனையாக இருந்தது.

வழியில் நிற்க வைத்து ஊர் மக்கள் பார்க்க அவனுக்கு உணவும், நீரும் கொடுக்க முறப்பட்டார்கள். கைகள் பிணைக்கப்பட்ட நிலையில், உணவை காலால் கோபம் தாங்காமல் கணைக்கால் இரும்பொறை எட்டி உதைத்தான்.

"அப்படியா.. நீயாகக் கெஞ்சிக் கேட்கிறவரை உனக்கு, உணவோ, நீரோ தரப்பட மாட்டாது." என்று சேனாதிபதி சொல்ல, காவலர்கள் அவனை இழுத்துக் கொண்டு போனார்கள். சிறையிலடைத்தார்கள்.

கணைக்கால் இரும்பொறை உணவு கேட்கவில்லை. தண்ணீரும் கேட்கவில்லை. உடம்பெல்லாம் போர் செய்த இரத்தக் காயங்கள், சிறிதளவு உணவும் எடுக்காத நிலை. நீரே குடிக்காததால், நெஞ்சு வறண்டு வெடித்து விடுவது போன்ற ஒரு வேதனை.

கணைக்கால் இரும்பொறை மானம் கருதி, மக்கள்

பேசிய சொல் கருதி மௌனமாக இருந்தான். அவனுக்கு உணவு வேண்டுமா என்று காவலர்கள் அவ்வப்போது விசாரித்தார்கள். அவன் அந்தக் கேள்விக்கு மறுமொழி சொல்லாதிருந்தான். ரத்தப் போக்கினாலும், உணவின்மையினாலும் துவண்டு சரிந்து விழுந்தான். கம்பிக்குள் முகம் புதைத்து தன் நிலையை எண்ணிக் கதறினான்.

அவன் காயங்களுக்கு மருந்தும் வைத்துக் கொள்ளவில்லை. உணவும் சாப்பிடவில்லை. ஒரு குவளை நீரும் எடுத்துக் கொள்ளவில்லை என்று புலவர்களுக்குத் தெரிந்தது. அவர்கள் செங்கண்ணானிடம் ஓடி வந்தார்கள்.

"இது நியாயமில்லையே, அவனும் உன்னைப் போல் ஒரு மாவீரனல்லவா. அவன் கோபத்தால் சோறை உதைப்பது என்பது ஒரு சாதாரண செய்கை. அதைப் பெரிது படுத்தாமல் அவனுக்கு சோறும், நீரும் தரவேண்டும்."

'போர் என்று வந்தது. அதில் நான் ஜெயித்து விட்டேன். இந்த முறை ஜெயதேவி என்பக்கம் இருக்கிறாள். இன்னொரு முறை உன்பக்கம் இருப்பாள். எனவே, நீ நீர் குடித்து சோறெடுத்துக் கொள். நான் உன்னை விடுதலை செய்கிறேன். வேண்டுமென்றால் மறுபடி போர்க்களத்தில் சந்திக்கலாம். ஆனால், ஒரு பொழுதும் சிறையில் உயிர் விடாதே என்று நீங்களே கொண்டுபோய் நீர் கொடுங்கள். சோறு கொடுங்கள்." என்று வேண்டினார்கள்.

குறிப்பாய், பொய்கையார் என்ற புலவர் மன்னனுக்கு இதை திரும்பத் திரும்ப பல்வேறு விதமாய் எடுத்துச் சொன்னார்.

"உன்னைப் போல் அவனும் அரசன். சிறந்த ராஜதந்திரி. மக்களால் நேசிக்கப்படுகிறவன். சங்கப் பாடல்களை மனனம் செய்தவன். புலவர்களை ஆதரிக்கிறவன். தமிழ் என்றால் எழுந்து நின்று மரியாதை செய்கிறவன். தயாள குணம் மிக்கவன். இறைபக்தி மிக்கவன். உனக்கும் அவனுக்கும் எந்த விஷயத்திலும் வித்தியாசமில்லை. பின்பு எதற்குப் பகை. ஏன் பகை.

பரம்பரை பரம்பரையாக வரும் இந்தப் பகை இன்னும் நீடிக்கத்தான் வேண்டுமா. உனக்கு இணையான அந்த வீரனை சபைக்கு அழைத்து வந்து, கௌரவப்படுத்து. போரிலே ஜெயிப்பதும், தோற்பதும் கடவுளுடைய விருப்பம். இந்தப் போரில் நீ தோற்றிருந்தால் உன் நிலைமை எப்படி இருந்திருக்கும். நீ இந்தப் போரில்



ஜெயித்ததற்கு கடவுள் அருளே காரணம்.

அவன் உன்னைவிட வேறு எந்த விதத்திலும் குறைந்தவனல்ல. அவனை வழியெல்லாம் கட்டி வைத்து அழைத்து வந்ததும், மக்களால் அவனைத் துன்புறுத்தியதும், அவன் தலையில் பாதுகைகளை வைத்ததும், பிறகு சிறையில் அடைத்ததும் நல்லதல்ல.

தமிழறிந்த சான்றோனாகிய நீ, தமிழறிந்த இப்னொரு மன்னனை இப்படி செய்வது தகாது. என்னைப் போன்ற புலவர்களுக்கு அரணாக நிற்கின்ற அவனை அவமானப் படுத்துவது தமிழை அவ்மானப் படுத்துவது போலாகும்.

நாம் எல்லைகளால் பிரிக்கப் பட்டிருந்தாலும் மொழியால் ஒன்று பட்டிருக்கிறோம். மதத்தால் ஒன்றுபட்டிருக்கிறோம். உன் வீரத்தை நிலைநாட்டி விட்டாய். அதற்காக, அவனை அவமானப் படுத்த வேண்டிய அவசியமில்லை. எனவே, உன் கையாலேயே நீரும், சோறும் அவனுக்குக் கொண்டுபோய் கொடுத்து அவனை சபைக்கு அழைத்து வா. உரிய மரியாதை செய். திரும்ப அவன் தேசத்திற்கு அனுப்பி வை." என்று பொய்கையார் சொல்ல, தன் தவறு என்ன என்பதை மெல்ல செங்கண்ணான் உணர்ந்தான்.

தான் சற்று அத்துமீற, தன் படைவீரர்கள் அதிகம் அத்து மீறியதும், படைவீரர்கள் அதிகம் அத்துமீற, படைவீரர்களைச் சுற்றியிருந்த சோழ மக்கள் அதீத அளவில் அத்துமீறியதும் நடந்து விட்டது என்பதை உணர்ந்து கொண்டான். வெற்றிக் களிப்பில் செய்த தவறு இது என்று புரிந்து கொண்டான். இதே விதமாய் தன் முன்னோர்கள் தோற்று கைது செய்யப்பட்ட போது, சேர மக்கள் இவ்விதம் நடத்தவில்லை. மரியாதையாக நடத்தினார்கள். அவனைத் தனியே ஊருக்குத் திருப்பி அனுப்பினார்கள் என்பதை நினைவுக்குக் கொண்டு வந்தான்.

அவன் இங்கே ஆழ்ந்து யோசிப்பதற்குள் சிறைச்சாலையில் நிலைமை வேறு விதமாக இருந்தது.

வெட்டுக் காயத்தினால் ரத்தப் போக்கு ஏற்பட்டு வலுவிழந்த நிலையிலிருந்த கணைக்கால் இரும்பொறைக்கு சோறும், நீரும் உண்ணாத காரணத்தினால் மயக்கம் உண்டாயிற்று. இருதயத் துடிப்பு அதிகரித்தது. வயிறு பிசைந்தது. மண்டை கனத்தது. கண்கள் இருண்டன. நாடித் துடிப்பு இடம் மாறிற்று. அவன் மெல்ல தன் எதிரே வைக்கப்பட்டிருக்கிற நீர் கலசத்திற்கு கை நீட்டினான். கண் சரிவரத் தெரியாமல் போனதால் நீர் கலசத்தில் கைபட்டு கலசம் சாய்ந்து

விட்டது. இந்த சப்தம் கேட்டு காவலாளி ஓடிவந்தான்.

"என்ன திமிர் இருந்தால் இத்தனைக்குப் பிறகும் நீரை எட்டி உதைப்பாய். இனி உனக்குச் சோறும் கிடையாது. நீரும் கிடையாது." என்று அருகே வைத்திருந்த சோற்றுக் கலசத்தையும் கைவிட்டு எடுத்துக் கொண்டுபோய் காக்கைகளிடம் விசிறிப் போட்டான்.

போனவனைக் கூப்பிடக் கூட கணைக்கால் இரும்பொறைக்கு தெம்பில்லை. அவனுடைய முகம் கம்பியில் பதிக்கப் பட்டு வெறித்த பார்வையோடு வாசலையே பார்த்துக் கொண்டிருக்க, அந்த வெறித்த பார்வையோடே அவனுடைய உயிர் பிரிந்து விட்டது.

உயிர் பிரியும் போது கணைக்கால் இரும்பொறையின் மனதுக்குள் ஒரு யானை உருவம் வந்தது. அந்த யானை கோவில் கட்டுவதாய் வலை கட்டிய சிலந்தியை உறிஞ்சி இழுத்துக் கொன்றதாய் நினைவுக்கு வந்தது.

அதேபோல் கோச்செங்கண்ணான் ஆழ்ந்து யோசிக்கும் போது அவனுக்குள்ளும் ஒரு மனமயக்கம் ஏற்பட்டது. தன் உருவம் ஒரு சிலந்தி உருவமாக மாறுவதும், கோவில் கட்ட வேண்டும் என்ற எண்ணத்தில் சிவலிங்கத்தின் மீது வலைப்பின்னியதும் நினைவுக்கு வந்தது.

தன்னை ஒரு யானை இழுத்து நசுக்கியதும், நசுக்கப் படும் போது தன் விஷம் முழுவதையும் பிரயோகம் செய்து யானையின் துதிக்கையைக் கடித்துக் கொன்றதும் நினைவுக்கு வந்தன. தான் சிலந்தியாகவும், கணைக்கால் இரும்பொறை பெரிய யானையாகவும் முன்னொரு சமயம் இதே இடத்தில் பிறந்திருக்கிறோம் என்பதும் மனதிற்குள் நிழலாடிற்று.

அவன் திடுக்கிட்டு எழுந்தான். போதுமே, போன ஜென்மத்துச் சண்டை இந்த ஜென்மத்திலும் எதற்கு.. பூச்சியாய், மிருகமாய் இருக்கும் போது ஏற்பட்ட கோபத்தை மனிதனானதற்குப் பிறகும் தொடர்வதா.. வேண்டாம். வேண்டாம் என்ற நினைப்பு வர, அவன் பொய்கையாரோடு தேரேறி சிறைச்சாலை நோக்கி ஓடினான்.

சிறைச்சாலையை அடைந்தான். உள்ளுக்குள் ஓடி கதவுகளைத் திறக்கச் சொன்னான். ஆனால், கணைக்கால் இரும்பொறையின் உயிரற்ற உடலைத்தான் கோச்செங்கண்ணானாலும், பொய்கையாராலும் பார்க்க முடிந்தது. பொய்கையார் வாய் விட்டுக் கதறினார்.

"ஒரு வீரனுக்கு இப்படி ஒரு சாவு நல்லதா.. இது நியாயம்தானா.. இந்த ஆவி உன் தேசத்தைச் சபிக்குமே.. இந்த பாவத்தை நீ எப்படி போக்குவாய். உன் மக்கள் இழிவு செய்தார்களே. அந்தக் கேவலத்தை எப்படி நீக்குவாய். ஒரு அரசனை இவ்விதம் நடத்தியிருக்கிறாயே. இந்தப் பாவத்தை எப்படி கழுவுவாய்." என்று வாய்விட்டு கதறினார்.

செங்கண்ணான் மனம் குலைந்தான். இடுப்பிலிருந்த வாளைக் கழட்டி கணைக்கால் இரும்பொறையின் தலைக்கு நேரே வைத்தான். இனி போர் செய்வதில்லை என்று சத்தியம் செய்தான். போருக்குப் பதில் எழுபது சிவன் கோயில்களும், ஐந்து வைணவ விண்ணகரங்களும் தன் வாழ்நாளில் கட்டினான்.

திருவானக்கா என்கிற அந்த இடத்தில் மண்டபங்கள் எழுப்பி எல்லா பக்கமும் கொடி, மரம் நட்டு அந்தக் கோயிலை புதுப்பித்தான். தான் பார்த்துப் பேச முடியாத தன் பகைவனாய் இருந்த கணைக்கால் இரும்பொறையின் மனக்கேதம் தீர்ப்பதற்காகவே இறைவழிபாடுகள் இடையறாது செய்தான்.

அப்படி சிவபெருமானே கதி என்று இடையறாது இறைவழிபாடுகள் செய்த கோச்செங்கண்ணானை அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒரு நாயன்மாராக மக்கள் ஏற்றுக் கொண்டார்கள். வணங்கி வாழ்த்தினார்கள்.

ஒரு வினையின் தொடர்ச்சி இன்னொரு வினையை ஏற்படுத்தாமல் முடிவதில்லை. வினை தொடராமல் இருக்க, இறைவழிபாடு மட்டுமே உதவி செய்யும். இல்லையெனில், மறுபடி, மறுபடி பிறந்து ஒருவரையொருவர் கொல்லுகின்ற கொலைத் தொழிலைத்தான் நாம் செய்து கொண்டிருக்க வேண்டிவரும்.

## அஜாமிளன்

**ம**னித மனத்தின் யோக்கியதையை, இந்துமதம் போல் துல்லியமாக, மனித மனங்களில் பதித்து, அதை அவரவர்க்கே தெளிவு படுத்தி, மனிதர்களை கரையேறச் செய்யும் ஒருமதம் உலகில் எதுவுமில்லை. எவருக்கும் சட்ட திட்டங்களால் கடவுள் தன்மை வந்து விடாது என்று இந்த மதத்துக்கு நன்கு தெரியும். எப்போது சட்ட திட்டங்கள் ஏற்படுகின்றனவோ, அப்போதே அதை மீறுவதற்கு உண்டான ஒரு முரட்டு குணத்தையும், முட்டாள் தனத்தையும் மனிதன் கைக் கொண்டு விடுகிறான் என்று அதற்குத் தெரியும்.

எனவே, ஒழுக்க விதிகள் மட்டும் மதங்கள் ஆகாது என்பதைப் புரிந்து கொண்டு, மனிதன் கரை சேர இந்து மதம் பல்வேறு கதைகளை உவமான உவமைகளுடன் உங்களுக்குச் சொல்கிறது. 'அன்பு செய்; அன்பு செய்' என்று ஆத்திரத்தோடு சொல்லும் முட்டாள்களை இந்து மதம் பார்த்திருக்கிறது.

சகோதரத்திற்காகச் சண்டை என்று அடுத்தவரை கத்தியால் வெட்டுகிற அற்பர்களை இந்துமதம் பார்த்திருக்கிறது. கருணையே வடிவான கடவுளின் பெயரால் பெரும்போர்கள் நடப்பதை இந்துமதம் கண்டு சிரித்திருக்கிறது. மனிதன் என்பவன் மிக தந்திரக்காரன். எல்லா சட்டத் திட்டங்களுக்கும் சாக்கு போக்கு சொல்லிவிட்டு, தன்னையும் ஏமாற்றி, பிறரையும் ஏமாற்றுகின்ற திமிருடையவன் என்று இந்துமதம் புரிந்து வைத்திருக்கிறது.

அதே நேரம் ஒழுக்கமாயிருக்க ஒரு நல்ல சூழ்நிலை வேண்டுமென்பதை இந்துமதம் புரிந்து வைத்திருக்கிறது. சூழ்நிலை மாறுபட்டால் ஒழுக்கம் கடைப்பிடிப்பவர்கள் எல்லாம் தவறுவதற்கு சூழ்நிலை காரணமாக இருந்திருப்பதை உங்களுக்கு எடுத்துச் சொல்கிறது. ஒழுக்கம் என்பது குடிபிறப்பு அல்ல. ஒழுக்கம் என்பது தனி மனித வைராக்கியத்தோடு சம்பந்தப் பட்டது. சூழ்நிலையைத் தாண்டி வைராக்கியமாக இருக்க முடியவில்லையெனில், ஒழுக்கம் கெட்டுப் போய் உங்களை அதல பாதாளத்திற்குத் தள்ளும். பிறகு மீளுவது கடினம் என்று எச்சரிக்கிறது.

'சரி; என்னை மீறி ஒழுக்கக்கேடு நடந்து விட்டது. நான் திசை திரும்பி விட்டேன். நான் என்ன செய்வது' என்று எவரேனும் பதறினால் அவருக்கு எப்படி உதவி செய்வது என்பதை ஆதரவாகப் பார்க்கிறது. 'எத்தனை ஒழுக்க விதிகளை உனக்கு எந்த மதம் கற்றுக் கொடுத்தாலும், உன்னால் ஒருநேரம் கெட்டு அலையத்தான் முடியுமே தவிர, இறுக்கமாக இருக்க இயலாது' என்று மெல்லியதாய் இடித்துக் காட்டுகிறது. அதேசமயம் மனிதர்களை கரையேற்றுவதில் இந்துமதம் மிகஆதரவாக இருக்கிறது.

தண்டிப்பதில் இந்துமதத்திற்கு நம்பிக்கையே இல்லை. உணர்த்துவதுதான் இந்துமதத்தின் முக்கிய குறிக்கோள். இந்தக் கதை உங்களுக்கு என்ன உணர்த்துகிறது என்பதை ஆழ்ந்து படித்துப் புரிந்து கொள்ளுங்கள்.



கன்யாகுப்தம் என்ற ஊரில் அஜாமிளன் என்ற இளைஞன் வாழ்ந்து வந்தான். அவனுடைய தந்தை நெறிப்பட்ட ஒரு வாழ்க்கை வாழ்ந்து வந்தார். வேதங்களை ஓதுவதும், இறைவன் புகழைப் பாடுவதும், அக்னி வளர்த்து தேவதைகளை மகிழ்விப்பதுமான தெளிவான ஒரு வாழ்க்கை வாழ்ந்து வந்தார். இயற்கை அளித்த பொருளை எடுத்து, இயற்கைக்கே மறுபடியும் தானம் கொடுக்கின்ற ஹோமங்களைச் செய்து வந்தார்.

அருகம்புல், தர்ப்பை, சமித்து என்கிற அரசங்குச்சி, ஆலமொக்கு, புஷ்பங்கள், வில்வஇலை போன்றவைகளைச் சேமிக்க தன் மகனை காட்டிற்கு அனுப்பினான். அஜாமிளன் இவைகளை சேமிக்க, பலகூடைகளும், கையில் மூங்கில் கழியுமாகக் கிளம்பினான். மெல்லிய ஓலைக் கூடைகளில் இவைகளை நிரப்பி, மூங்கிலின் இருபக்கமும் தொங்கவிட்டு, நகரத்துக்குத் தூக்கி வந்து விடுவான். நல்ல தர்ப்பை கிடைக்க வேண்டுமெனில் காட்டின் உட்பகுதிக்குப் போயே ஆக வேண்டும்.

விடியற்காலை எழுந்திருந்து, குளித்து, ஸந்தியா வந்தனம் செய்து, காயத்ரி ஜபம் சொல்லி முடித்து, வெளிச்சம் பரவிய நேரத்தில் வயிறு நிரம்ப கஞ்சி குடித்து, ஒரு வாழையிலைச் சருகில் பகல் நேரத்துக்காகத் தயிர் சாதம் பொட்டலமாகக்கட்டி, தனியே முதுகில் தொங்க விட்டுக் கொண்டு கையில் கழியும், கூடைகளுமாய், காடு நோக்கிப் போனான். தர்ப்பைகளை அறுத்து, கட்டுக் கட்டாகக் கட்டி ஒரு மரத்தடியில் போட்டான். இன்னும் உள்ளே நடந்து வில்வ இலைகளைப் பறித்து கூடையில் அழுத்தி வைத்தான். பிறகு சமித்துகளை அரசமரத்திற்கு அடியில் தேடி அவைகளையும் கட்டாகக் கட்டி கூடைக்குள் அடுக்கிக் கொண்டான்.

ஆலமரத்திலேறி உச்சி வரை போய், ஆல மொக்குகளை பார்த்துப் பரிசோதித்து, பறித்து, கீழே போட்டு அவைகளை கட்டாகக் கட்டி அடுக்கி வைத்தான். அருகம்புல்லைக் கட்டி மேல் துண்டை நீரில் நனைத்து, அந்தக் கட்டுகளையும் அதில் சுற்றி வைத்தான். கடைசியாய் புஷ்பங்கள் பறித்தான். கூடைக்குள் அவைகளைப் பத்திரமாக வைத்தான். இடுப்பு வேட்டியை அவிழ்த்து நீரில் நனைத்து அந்தக் கூடையைச் சுற்றினான்.

இப்போது மூங்கில் கழியில் கூடைகளை மாட்டி திரும்பி விடலாம். ஒரு ஏரிக்கரையில் அமர்ந்து கொண்டு

எடுத்து வந்த தயிர் சாதத்தைச் சாப்பிட்டான். கைகழுவி வாய் கொப்புளித்தான். இடுப்பு வேட்டியை ஈரமாக்கி, இலைகளையும், பூக்களையும் மூடிக் கொண்டிருக்க, இடை கோவணத்தோடு கட்டுமஸ்தான உடம்போடு அந்த பொருள்களை தடியில் மாட்டி தோளில் சுமந்து கொண்டு நகரம் நோக்கி விரைவாக நடந்தான்.

அவை மெல்லிய பொருளாக இருப்பினும் இறுக்கமான கட்டாக இருந்ததால் நல்ல கனம் இருந்தது. ஆனால் அடுத்த ஒரு சாரத்திற்கு இந்த பொருள்கள் போதும். அப்பா மிகவும் சந்தோஷப்படுவார். சமித்துகள் அதிகம் இருப்பதாலேயே, மூன்று வேளையும் ஹோமம் செய்யும் ஆவல் ஏற்படும். பிறர் வீட்டிற்கு தானே போய் ஹோமம் செய்யட்டுமா என்று கேட்கிற எண்ணம் ஏற்படும். அருகம்புற்கள் அதிகம் இருப்பதாலேயே பூஜை செய்கிற எண்ணம் ஏற்படும். பூக்கள் அதிகம் இருப்பதாலேயே அலங்காரம் செய்து வழிபடுகிற ஆசை தோன்றும்.

தர்ப்பையைப் பார்த்து அப்பா மிகவும் சந்தோஷப் படப் போகிறார். உறுதியாகவும், உயரமாகவும் இந்த தர்ப்பை மூலம் பலஹோமங்களை, யாகங்களை அவர் செய்து வைப்பார். இப்படி செய்வதால் அவருக்கு ஒரு மன நிறைவும், பொருள் வரவும், வீட்டில் செழிப்பும், பல பேருடைய அன்பும், ஆதரவும் கிடைக்கின்றன. அஜாமிளனின் தந்தையைப் பலரும் போற்றுகிறார்கள். எது கேட்டாலும் தருகிறார்கள். வீட்டிற்குக் கூரை மாற்றவோ, வாசற்காலை திருத்தியமைக்கவோ, தரைக்குக் காரை மெழுகவோ எவர் வந்தாலும் காசு வாங்குவதில்லை.

மாறாய் என் பெயருக்கோ, என் மகன் பெயருக்கோ ஒரு ஹோமம் செய்யுங்கள். எங்களுக்கு இந்தப் பிரச்சினை இருக்கிறதென்று கைகூப்பிக் கேட்கிறார்கள். மிக அக்கறையோடு வேலைகளை செய்து முடிக்கிறார்கள். விறகு வெட்டுபவர் அப்பா கொடுக்கிற உணவிற்காக மட்டும் விறகு வெட்டுவதில்லை. அப்பா கையால் கொடுக்கிற விபூதிக்காகவும் விறகு வெட்டுகிறார். 'வயிற்றில் வலி இருந்தது. நீங்கள் தடவச் சொன்னீர்கள். மூன்றாம் இரவு வயிற்று வலி போய் விட்டது' என்று நெடுஞ்சாண் கிடையாக வணங்குகிறார்.

மன்னர்களும், மந்திரிகளும், சேனாதிபதிகளும் வீட்டுவாசலுக்கு வந்து நிற்கிறார்கள். தங்களுடைய சொந்தப் பிரச்சினையையும், தேசப் பிரச்சினையையும் அப்பாவுடைய ஆலோசனையோடு விவாதிக்கிறார்கள்.



மன்னருடைய பிறந்த நாளன்று வீட்டில் மிகப் பெரிய ஹோமம் நடந்தது. அரசியார் வந்து பிரசாதம் வாங்கிப் போனாள். பைநிறைய பொற்காசுகள் கொடுத்துவிட்டு போனாள். அந்த பொற்காசுகள் பற்றி அப்பா அலட்டிக் கொள்ளவே இல்லை. வந்து வேதம் சொன்ன அந்தணர்கள் அனைவருக்கும் அந்தப் பொற்காசுகளைக் கொடுத்து விட்டார்.

அரசர் கொடுத்த திரவியங்களை, மற்றவர்களுக்கான ஹோமத்திற்கு செலவழித்தார். இப்பொழுது கூட வீட்டில் மூன்று பானை பசுநெய் இருக்கிறது. அம்மா இலையில் சோறு போட்டு நெய் ஊற்றி, 'கையை நீட்டு' என்று மெல்லியதாய் அதட்டுவாள். கை நீட்டினால், உள்ளங்கை முழுவதும் நெய் விடுவாள். அல்லது தொன்னை முழுவதும் நெய் வாரி எடுத்து இலை மீது வைப்பாள். அந்தப் பசுநெய்யை ஒரு தொன்னை குடித்தால் போதும், உடம்பு சூடு அதிகரிக்கும். தொடர்ந்து ஒருநாள் முழுவதும் வேலை செய்வதற்கு உண்டான சக்தியை அது கொடுத்துவிடும்.

"நெய் சாப்பிட்டு விட்டு வீட்டில் உட்கார்ந்து கொண்டு இருக்காதே. காட்டிற்குப் போ. இன்னும் ஏதேனும் எடுத்து வா" என்று அப்பா விரட்டுவார். இன்று காலையும் இரண்டு தொன்னை நெய் சாப்பிட்டாகி விட்டது. நெய் சாப்பிட்ட பிறகு இப்படி கனத்தைத் தூக்கிக் கொண்டு பலகாத தூரம் மலைச்சரிவுகளிலும், மேடுகளிலும் ஏறி இறங்குவது சந்தோஷமாக இருக்கிறது. உடம்பு இத்தனை சுமையை இத்தனை தொலைவு தாங்கி கடக்கிற போது அயர்ச்சியுறாமல், 'இன்னும் ஓடுவேன், இதற்கு மேலும் ஓடுவேன்' என்று உற்சாகம் கொள்கிறது.

அஜாமிளன் சற்று இளைப்பாறினான். இங்கிருந்து கன்யாகுப்தத்தின் எல்லை துவங்குகிறது. இன்னும் அரைகாதம் காடு இருக்கிறது. பிறகு பாதை ஆரம்பித்து வயல்வெளிகள் வந்து, அந்த வயல்வெளிகளைத் தாண்டி நடந்தால் ஊர் வந்துவிடும். அரைகாதம் காடும், ஒரு காதம் வயல்வெளியும், வெகு சீக்கிரத்தில் தாண்டிவிட முடியும். ஊருக்குள் போவதென்றால் கோவணத்தோடு போவது அழகாக இருக்காது. அவன் வேட்டியை தொட்டுப் பார்த்தான். சற்று உலர்ந்திருந்தது.

உதறி இடுப்பில் கட்டிக் கொண்டான். மேல் துண்டு நன்கு காய்ந்திருந்தது. அதை தலைப் பாகையாக்கினான். மறுபடியும், கோல் தூக்கி தோள் மீது வைத்துக் கொண்டான். தொலை தூரத்தில் எங்கிருந்தோ ஒரு முனகல் சத்தம் கேட்டது அவன் காதுகளை

கூர்மையாக்கினான்.

மானின் குரல் போல ஒரு சப்தம் எழுந்தது. 'ஏதேனும் பெண் மான் அவஸ்தைப் படுகிறதா. எங்கேனும் சிக்கிக் கொண்டிருக்கிறதா. என்ன முனகல் இது' அவன் மறுபடியும் உற்றுக் கேட்டான். தொலை தூரத்தில் ஒரு சலசலப்பு தெரிந்தது. கூடவே ஒரு ஆண்குரல் கேட்டது. அட பெண்மானை ஏதாவது பொறி வைத்துப் பிடிக்கிறார்களா. வேடன் எவனாவது இங்கு வேலை செய்து கொண்டிருக்கிறானா. மான்களைத் துன்புறுத்த வேண்டாமென்று அப்பா சொல்வாரே. எதற்காக இந்த வேடன் இப்படி பிடிக்கிறான். யார் அது. சற்று கோபத்தோடு அவன் அந்த புதருக்கருகே போனான்.

பார்த்துவிட்டு முகத்தை மூடிக் கொண்டு ஓடி விடப் போகிறான் என்பதாய் பதுங்கி பதுங்கிப் போனான். புதர் தாண்டி இப்போது முனகல் சத்தம் அதிகம் கேட்டது. அவன் எட்டிப் பார்த்தான். அங்கு ஆணும், பெண்ணுமாய் இரண்டுபேர் புணர்ந்து கொண்டிருந்தார்கள்.

திடுக்கிட்டு பின்வாங்கி அஜாமிளன் கண்களை மூடிக் கொண்டான். 'என்ன கருமம் இது. இந்த பட்டப் பகலில் வெட்ட வெளியில் என்ன அசிங்கமிது.'

இப்படி காட்டுக்கு வந்து பகலிலே ஆட்டம் போட வேண்டுமென்றால், இந்த ஊரில் எவனுக்கோ திமிர் அதிகமாகி விட்டது என்று அர்த்தம். இப்போது இதைக் கண்டிக்காமல் போனால், நாளை இந்த இடத்திற்கு கூட்டம் கூட்டமாய் மக்கள் வர தலைப்பட்டு விடுவார்கள். இந்தமாதிரி விஷயங்கள் காட்டில்தான் சௌகரியம் என்று அலைய ஆரம்பித்து விடுவார்கள். அது காட்டுக்கும் நல்லதல்ல; நாட்டுக்கும் நல்லதல்ல. எனவே, இங்கிருந்தபடியே கைதட்டி எழுந்து போங்கள் என்று சொல்வதுதான் சிறப்பு என்று கைகளை விரித்தான். ஆனால், கைத் தட்டுவதற்கு முன் இன்னொரு முறை பார்த்து விடலாம் என்று தோன்றியது.

இப்பொழுது அவள் முகத்தை பார்க்க முடிந்தது. அவன் யாரென்று அஜாமிளனுக்குத் தெரிந்து போயிற்று. அவன் இந்த நகரத்தின் காவல் காரன். அவள் கன்யாகுப்தத்தின் பெயர் போன ஒருதாசி. அஜாமிளன் திருமணமானவன். ஆனால், அவன் மனைவி இன்னும் பூப்படையவில்லை. அவன் மனைவிக்கும் அவனுக்கும் பன்னிரெண்டு வயது வித்தியாசமிருந்தது. அவள் பூப்படைய இன்னும் ஓரிரு வருடங்கள் ஆகுமென்று அவள் வீட்டில் சொல்லியனுப்பினார்கள். எனவே, அதுவரை அவன் காத்திருக்க வேண்டியது என்பது



வீட்டினுடைய கட்டளையாக இருந்தது. அவள் பூப்படைந்து வந்து குடித்தனம் நடத்துவதற்கு முன்பு, இன்னும் பல்வேறு வேத விஷயங்களை அஜாமிளன் கற்றுக் கொள்ள வேண்டுமென்று தந்தையார் விருப்பப் பட்டார்.

வெறும் எடுபிடியாக இல்லாமல், காட்டுக்குப் போய் புல்லறுத்து வரும் சுமைதாங்கியாக இல்லாமல், பல பாடங்களை மனனம் செய்து, தனியே ஹோமம் செய்யக் கூடிய ஒரு தகுதியை அவன் பெற வேண்டுமென்று அவர் விரும்பினார். தினசரி ஜபம் செய்து மந்திர பலத்தைக் கூட்டிக் கொள்ள அடிக்கடி வற்புறுத்தி வந்தார். அந்தணர்களுக்கு அருகே உட்கார்ந்து தத்துவ விஷயங்களை விவாதிக்க வேண்டுமென்றும், அப்படி நடக்கும் விவாதங்களை காது கொடுத்துக் கேட்க வேண்டுமென்றும் ஆசைப்பட்டார்.

அவனுக்கு மனனம் செய்யும் வேகம் போதாது என்று கவலைப்பட்டார். ஒரு பாடத்தை ஒருமுறை படித்தவுடனேயே அந்தப் பாடம் முழுவதும் மனப்பாடமாகி விட வேண்டும். அதுதான் படிப்பென்று வற்புறுத்தினார். ஆனால், அஜாமிளனால் அப்படி ஒரு படிப்பை படிக்க முடியவில்லை. மூன்று நான்கு முறைகள் படித்தால்தான் பாடம் மனப்பாடமாகிறது. ஒருமாதம் அந்த பாடத்தை படிக்காது போனால் மறந்து போகிறது. அஜாமிளன் மக்கு பையனாகவும் இல்லை. மிகுந்த கெட்டிக்காரனாகவும் இல்லை. நடுவாந்திரமாக இருந்தான்.

அது அவன் தந்தைக்கு சற்று கோபத்தைக் கொடுத்தது. 'உழைப்பு போதாது, மனம் ஒருமுகப் படுவது போதாது. எப்போதும் மனதை சிதறடித்துக்கொண்டே இருக்கிறாய். காட்டிலிருக்கும் போது வீட்டை நினைத்துக் கொள்கிறாய். வீட்டிலிருக்கும் போது காட்டை நினைத்துக் கொள்கிறாய். என்ன செய்கிறாயோ, அதில் மனதை முழுவதுமாக ஈடுபடுத்திக் கொள். நகராதே' என்று பலமுறை எச்சரித்தார். ஓலைச்சுவடியை எடுத்துப் படிக்கத் துவங்கினால், சுற்றுச் சூழலை மறந்துவிட வேண்டும். தேள் கொட்டினாலும் உதறிவிட்டுத் தொடர்ந்து படிக்க வேண்டும்.

அப்படியா, தேளா, என்னையா கொட்டியது என்று கேட்க வேண்டும். இதுதான் படிப்பதற்கு அடையாளம் என்று உதாரணங்கள் காட்டுவார். தேள் கொட்டினால் உரக்கக் கூவாமல், படிப்பில் ஊன்றிவிடுகிற அளவிற்கு அஜாமிளன் மனோநிலை பக்குவமடையவில்லை.

அதேசமயம் அவன் ஒன்றும் தெரியாதவனாகவும் இல்லை. நிதானமாய் அவன் சக்திகேற்ப பாடங்களை அவன் படித்துக் கொண்டிருந்தான்.

பாலாசிரியர்கள் அவனைப் பாராட்டினார்கள். அடிப்படை விஷயங்களை அவன் நன்கு தெரிந்து கொண்டு விட்டானென்று அவன் தந்தையிடம் கூறப்பட்டது. வேதத்தில் சில சாகைகளைப் பிசிறில்லாமல் சொல்கிறான் என்று நற்சான்றிதழ் வழங்கினார்கள். ஒரு குழுவாக இயங்குவதற்கு அவன் தகுதியாகி விட்டான் என்றும், தனித்தியங்கும் வலிமை சில வருடங்களில் வந்து விடும் என்றும் சொன்னார்கள். இலக்கணத்தில் அதிக கவனம் செலுத்தும்படி அவருக்கு எச்சரிக்கை விடுத்தார்கள். படிப்பில் ஒரு மாற்று குறைவே தவிர, மற்றபடிக்கு அஜாமிளன் மிக நல்ல பையன்.

மிக அமைதியானவன். அதிகம் பேசாதவன். சொன்ன சொல்லுக்கு உடனே கீழ்ப்படிகிறவன். அதிகம் தூங்காதவன். குருவுக்கு வேண்டிய பணிவிடைகளை ஒருமுகத்தோடு செய்பவன். குருவின் வீட்டுப் பெண்களை மிக மரியாதையோடு நடத்துகிறவன். முழுமையான இறை நம்பிக்கை உடையவன். மனமுருகிப் பாட்டு பாடுபவன். பொய் சொல்லாதவன். அதிகம் பொருளுக்கு ஆசைப்படாதவன். அகங்காரமில்லாதவன். அதிகாரம் காட்டத் துடிக்காதவன். இவனைப் பற்றி நீங்கள் அவமானப் பட எதுவுமில்லை என்று அவன் தந்தையிடம் பாலாசிரியர்கள் சொல்ல, அவன் தந்தை அவன் தலையில் கைவைத்து ஆசீர்வதித்தார்.

ஆசிரியர்களிடம் பாடம் கற்றது போதும். என்னிடம் வந்து வித்தை கற்றுக் கொள் என்று அவனை தன்னோடு வைத்துக் கொண்டார். சுக்ர உதயத்தின் போது எழுப்பி, பல் தேய்க்கச் சொல்லி, பின்பக்கம் அனுப்பி, கை கால்கள் கழுவி வரச் சொல்லி, சூரிய உதயம் துவங்கும் நேரத்தில் அவனை மந்திர ஜபம் செய்யச் சொல்லி உத்தரவிடுவார்.

"எதற்காக இந்த நேரத்தில் உன்னை மந்திர ஜபம் செய்யச் சொல்லுகிறேன் தெரியுமா" என்று ஒரு பிற்பகலில் அவனைக் கேள்வி கேட்டார்.

"நாம் அந்தணர்கள். அதற்காகத்தான் நாம் மந்திர ஜபம் செய்கிறோம்.."

"இல்லை. யார் வேண்டுமானலும் மந்தி ஜபம் செய்யலாம். மொழியும், மொழியினால் ஏற்பட்ட மந்திரங்களும், எல்லா குலத்தாருக்கும் உண்டானவை. நாம் இதில் ஈடுபடுவது போல, மற்றவர்கள் ஈடுபடுவதில்லை. ஈடுபட முடிவதில்லை. எனவே, அந்தணர்கள் மந்திர ஜபம் செய்பவர்கள் என்றாகி விட்டது. மந்திர ஜபம் செய்ய மன அடக்கம் தேவை. மன அடக்கம் இருந்தால்தான் மந்திர ஜபம் செய்ய முடியும். மன அடக்கம் எப்போது வரும். விடிகாலை எழுந்தவுடன், வயிறை சுத்தம் செய்து கொண்டு முகம் கழுவிக் கொண்டு, பல் தேய்த்து, அமைதியாக யார் உட்கார்ந்து மந்திர ஜபம் செய்கிறார்களோ, அவர்களுக்கு மன அடக்கம் எளிதில் வரும்."

"மன அடக்கம் வருவதற்கு வேறு என்ன செய்ய வேண்டும்."

"மௌன விரதம் அனுஷ்டிக்க வேண்டும். அது மட்டுமா.. மௌன விரதம் அனுஷ்டிக்க சாத்வீகமான உணவுகளையே உட்கொள்ள வேண்டும். அடிக்கடி வயிற்றை காயப்போட்டு உடம்பை சுத்தம் செய்ய வேண்டும். எந்த உணவால் கோபம் விளையாதோ, எந்த உணவு உண்டால் மன அடக்கம் ஏற்படுமோ, அந்த உணவுகளை மட்டும்தான் நாம் உண்ண வேண்டும். ரத்த ஓட்டத்தை அதிகப்படுத்துகிற உணவுகளிலிருந்து விலகியிருக்க வேண்டும்.

கோபமும், காமமும் அருகருகே இருப்பவை. கோபம் அதிகமுள்ளவனுக்கு காமம் அதிகமிருக்கும். காமத்தில் ஈடுபட்டவனுக்கு கோபம் அடிக்கடி வரும். எனவே, இவையிரண்டையும், ஒருசேர வெட்டி வீழ்த்துகிற உபாயத்தை அந்தணர்கள் கற்றுக் கொள்ள வேண்டும். மனிதனின் மிகப் பெரிய சத்ருக்கள் கோபமும், காமமும் மட்டுமே." அப்பா அமைதியாக விளக்கினார்.

"காமம் தவறென்றால், எனக்கு ஏன் திருமணம் செய்து வைத்தீர்கள் தந்தையே." அவரையே கூர்மையாகப் பார்த்தபடி அஜாமிளன் கேட்டான்.

"நெறிப்பட்ட காமம்- வம்ச விருத்திக்காக ஏற்படுகிற காமம் மிக உன்னதமானது. விளக்கிலிருக்கிற நெருப்பிற்கும், மூங்கில் புதரின் அடியில் சிக்கிக் கொண்ட நெருப்பிற்கும் வித்தியாசமிருக்கிறதல்லவா. இரண்டும் நெருப்பு என்று விழுந்து வணங்க முடியுமா. விளக்கைத் தூண்டி விடுகிறோம். மூங்கில் புதரில் ஏற்பட்ட நெருப்பை மண் போட்டு அணைக்கிறோம். இரண்டிற்கும் எவ்வளவு பெரிய வித்தியாசமிருக்கிறதோ, அதே போல மனைவி மீது ஏற்படுகிற காமத்துக்கும், மற்ற பெண்கள் மீது ஏற்படும் காமத்திற்கும் வித்தியாசமிருக்கிறது. வீடு முழுவதும் ஒளி பரப்பி, ஒரு அற்புதமான சூழ்நிலையை வீட்டில் உள்ள விளக்கு ஏற்படுத்தும். காட்டில் உள்ள மூங்கில் மரங்கள் பற்றிக் கொண்டால் ஒரு காடே அழியும். பல்வேறு

விதமான இழப்புக்கள் ஏற்படும். அணைக்கவே முடியாதபடி மிகப்பெரிய தீ உருவாகி இயற்கையை நாசப்படுத்தும்.

காற்றுத் தீ எப்படி வெப்பத்தைப் பரப்பி பச்சை மரங்களையெல்லாம் பாழாக்குகிறதோ, நிர்மூலம் செய்கிறதோ, அதேபோல தகாத காமத்தால், நோய் உருவாகி அந்த நோய் சுற்றியுள்ள மற்றவர்களுக்கும் பரவுவதற்கு வாய்ப்பு உள்ளது. ஒரு நாகரீகமே இதனால் அழிந்து போகவும் முடியும். நெறிப்படுத்தப் பட்ட காமம் நல்லது என்பதை புரிந்து கொள்."

"சரி.. மனதை நெறிப்படுத்த மந்திர ஜபம் ஏனப்பா செய்ய வேண்டும்." பிள்ளை மீண்டும் கைகட்டிக் கேட்டது.

"இது நல்ல கேள்வி. பதில் சொல்கிறேன். ஆழமாய் மனதில் பதிய வைத்துக் கொள். மந்தி ஜபம் என்பது ஒரு உபாயம். எதற்கான உபாயம். மன அடக்கம் பெற, மந்திர ஜபம் உதவுகிறது. விடிகாலையில் குளுமையான நேரத்தில், இயல்பாகவே மனம் அடங்கி இருக்கும். அந்த நேரத்தில் முகத்திலும், தலையிலும் சில்லென்ற நீர் பட்டு குளுமையாகி, வயிற்றிலிருக்கும் சுமைகள் கீழே இறங்கி வாயின் கொழகொழப்பை தந்தசுத்தி செய்து நீக்கிவிட்டு, நிரம்ப நீர் அருந்தி உட்கார்ந்து கொண்டால், அந்த அமர்வே மிகுந்த அமைதியைக் கொடுக்கும்.

அப்படி அமர்ந்த பிறகு ஒரு குறிப்பிட்ட ஒலியை திரும்பத் திரும்பச் சொல்வதால் மனம் ஒருமுகப்படுவதற்கு முயற்சி செய்கிறது. மந்திர ஜபம் செய்கின்ற போது ஆரம்பத்தில் அலைகின்ற மனம், பிறகு மந்திரத்தின் மீது மெல்ல மெல்ல படிகிறது. மந்திரத்தின் மீது மெல்லப் படிந்த மனம், தன்னைப் பார்ப்பதற்கு வேகமாய் முயற்சி செய்கிறது. மந்திர ஜபத்தின் மீது கவனம் அதிகரிக்க மனதைப் பார்ப்பது எளிதாகிறது. மனதை உற்றுப் பார்த்தால், மனம் ஆட்டங்களை நிறுத்திவிட்டு சுருங்கத் துவங்கும். பேசாமல் இருக்கும் பேசாமல் இருக்கின்ற மனதிற்கு கீழே ஆத்ம பிரகாசிப்பதை நீ தெரிந்து கொள்ளலாம்."

"இது எப்போது நேரும் தந்தையே.."

"இது அவரவர் கருமத்தைப் பொறுத்தது. சிலருக்கு உட்கார்ந்த சில நொடிகளில் நேரும். சிலருக்கு பல வருடங்கள் ஆகும். சிலருக்கு வராது போகும். எனினும் இதை இடைவிடாது முயற்சி செய்ய வேண்டும். எல்லா குலத்தோரும், எல்லா இனத்தோரும், இவ்விதமாகத்தான் மனதை அடக்குகிற வழியைக் கடைப்பிடித்தா



வேண்டும். ஆனால், மற்றவர்கள் இதைப் புறக்கணிக்க, அந்தணர்கள் மட்டும், இதை குலத்தொழிலாக, பரம்பரை விஷயமாக மாற்றிக் கொண்டு விட்டார்கள்.

மனம் எனும் முரட்டுக் குதிரையை அடக்கப் பழக்கப் பட்டவர்களுக்கு கோபம் வராது. கண்மண் தெரியாத காமம் எழாது. அவன் தொழில் சுத்தமாக இருக்கும். எது செய்தாலும் அதில் முழுமையாக ஈடுபட முடியும். செய்யும் தொழிலில் முழுமையாக ஈடுபட்டால் அவனுக்கு வெற்றி நிச்சயம். வெற்றி பெற்றவனுக்கு அருகே திருமகள் துணையாக நிற்பாள். செல்வச் செழிப்பு அவன் வீட்டிற்குள் ஏற்படுகிறது. நல்ல அந்தஸ்து கிடைக்கிறது. மரியாதை வருகிறது.

ஊர் அவனைப் புகழத் துவங்குகிறது. இதற்கெல்லாம் அடிப்படை மனவடக்கம். மனவடக்கத்திற்கு அடிப்படை மந்திர ஜபம்."

"அப்பா.. என் கேள்வி தவறாக இருந்தால் தயவு செய்து மன்னித்துக் கொள்ளுங்கள். மந்திர ஜபம் செய்யாது போனால் என்ன ஆகும் என்பதையும் எனக்குச் சொல்லுங்கள்."

அப்பாவிற்கு லேசாய் கோபம் வந்தது. ஆனால், கேள்வியின் நியாயத்தைப் புரிந்து கொண்டார். கண்மூடி சிறிதுநேரம் யோசித்தார்.

"விடியல் நேரம் தூங்குகிறவர்கள் வீட்டில் தரித்திரம் தாண்டவமாடுகிறது. அவன் தகப்பன் பணக்காரனாக இருந்தாலும், அவன் மரண நேரத்தில் தரித்திரனாகவே இறக்கிறான். விடியல் நேரத்தில் ஏற்படுகின்ற சுவாசம் உடம்பையும், மனதையும் நன்கு குளிர்விக்கிறது. புத்துணர்ச்சி கொடுக்கிறது. இந்தப் புத்துணர்ச்சியால் மூளையும், இதயமும் பலம் பெறுகின்றன.

காற்றை சுவாசிக்காமல், ஆழ்ந்து உள்ளே இருக்காமல், கைகளை விரித்து நெஞ்சு நிறைய நிரப்பி, உள்ளுக்குள் தேக்கி, பின் மெல்ல வெளியே விடவும். நாடி சுத்தி என்கிற அற்புதமான இயக்கத்தை செய்யாமல் பாதி பாதியாய் மூச்சு விட்டு தூங்குகிறவனுக்கு வயிறு சம்பந்தமான உபாதைகள் முதலில் ஏற்படும்.

பிறகு தலை நோவும். விழித்த பிறகும், அவன் மூளை முழுவேகத்தில் வேலை செய்யாது. வெறுமே விஷயங்களில் மிதந்து கொண்டிருக்கும். எவர் சொன்னாலும் காதில் ஏறாது. எதன் மீதும் பற்று கிடையாது. சூரியன் மேலெழும்பும் வரை வெறுமே ரிந்து கொண்டிருப்பான். ஒரு அற்புதமான நேரத்தை இழந்து விட்டு அடுத்து எப்போது தூங்கலாம் என்று

நினைத்துக் கொண்டிருப்பான். உடம்பில் சோம்பல் ஆழ்ந்து படிந்துவிடும். இப்ப விட்டாக்கூட தூங்கிடுவேன் என முட்டாள்தனமாகப் பேசுவான்.

புத்தியில் தூக்கமிருப்பவனால் எந்த வேலையையும் தெளிவாகச் செய்ய முடியாது. வேலை தெளிவாகச் செய்ய முடியாதவன், அந்த வேலையைத் தெளிவாகச் செய்வது போல் நடிப்பான். இதற்காகப் பொய் சொல்லத் துவங்குவான். அல்லது வேலையைத் தெளிவாகச் செய்பவரிடம் போட்டி போடுவான். பொறாமைப்படுவான். அவரைப் பற்றி புறம் சொல்வான். எனவே, ஒருகூட்டத்தின் வேலையையே நாசம் செய்வதற்கு அவன் முயற்சி செய்வான். ஒரு கூட்டத்தில் ஒரு ஆள் இவ்விதமிருந்தாலும், அந்தக்கூட்டம் நொடித்துப் போய், மொத்த இயக்கமும் தயங்கிப் போவதற்கான சாத்தியக் கூறுகள் அதிகம்.

ஒரு தூங்கு மூஞ்சி ஒரு படையை கெடுப்பதற்குப் போதுமானவன். வெற்றி பெறாததால் அதற்குக் காரணம் சொல்ல புதிது புதிதாய் அவன் யோசிப்பான். எவர் வேலைக்கு உத்தரவிட்டாரோ அவரையே குறை சொல்லுவான். நீதிக்குக் கட்டுப்படாமல் நடந்து கொள்வான். எதிர்ப்பாளனாக மாறுவான். 'இந்த மந்திர ஜபமே தப்பு. இந்தக் காலையில் எழுந்திருக்கிற விஷயமே பிசகு' என்று ஏகத்தாளமாய் பேசுவான். தன்னால் செய்ய முடியாததை வேறு யாரும் செய்யக் கூடாது என்று நினைத்துக் கொள்வான். இந்த விஷவித்து சில சமயம் வளர்ந்து ஒரு தேசத்தையே மண்மூடிச் சரித்து விடுவது உண்டு.

இப்படிப்பட்ட திருட்டுக் கோமாளிகளை எதிர்த்து நிற்க வேண்டுமென்றால் அவருக்கு மன அமைதியும், கோபமற்ற தன்மையும், கூரான புத்தியும் வேண்டும். மன அமைதி பெறாதவர்கள், கோபத்தால் மட்டும் சீரழிவதில்லை. அவர்கள் தங்கள் மன அமைதியை காமத்தில் தீர்த்துக் கொள்ள முயற்சிக்கிறார்கள். அமைதியாய் உட்கார்ந்திருக்கிற சந்தோஷத்தை மறந்து விட்டு வேகமாய் இயங்குகின்ற காமத்தில சந்தோஷத்தைக் காண முயற்சிக்கிறார்கள். அதிகமாக உண்கிறார்கள். வேகமாக உண்கிறார்கள். பேசிக் கொண்டே உண்கிறார்கள். தவறாக உணவுப்பழக்கம் விரைவாக ஏற்பட்டு விடுகிறது. அதனை வளைக்க முடியாமல், அடக்க முடியாமல் போய் விடுகிறது. கண் இடத்தில் கால் வைக்கும்படி ஆகிவிடுகிறது.

அந்த இடத்தில் போய் நிற்க காமமும் தெரியும். காம



கொடுத்து வரும் காமத்தால் மனநிறைவு ஏற்படுவதில்லை. மனநிறைவு ஏற்பட வேண்டுமென்று அதிகம் காசு கொடுக்க ஒருவன் முயற்சிப்பான். அதிகம் காசு காமத்திற்கு மட்டுமே செலவானால், சம்பாதிப்பது அதிகமாக வேண்டுமல்லவா. அப்போது எப்படியாவது சம்பாதிக்க வேண்டும் என்கிற எண்ணமும் வந்துவிடும்.

பொய்யும், புரட்டும் தானாக ஏற்பட்டு விடும். தவறான வழியில் சம்பாதிப்பது வேகமாக நடக்கும். தவறான வழியில் சம்பாதிப்பதைக் கவனித்த ஊர் அவனை ஒதுக்கி வைக்கும். ஊரால் ஒதுக்கப்பட்டு தனிமையில் திரிபவன், மதம்பிடித்த யானையைப் போலவும், நோய்பிடித்த நாயைப் போலவும் மாறி விடுகிறான். அவன் விஷம், அவனையே கொன்று விடுகிறது. பரிதாபமான மரணத்தை அவன் ஏற்படுத்துகிறான். இப்படி புலம்பலான ஒரு மரணம் வராமலிருக்க நீ மந்திர ஜபம் செய்ய வேண்டும்" என்று தந்தை அவனுக்கு விளக்கிச் சொன்னார்.

அவன் தந்தையை மீண்டும் வணங்கி எழுந்தான். "எனக்கு மந்திர ஜபம் சித்திக்க வேண்டும் என்று ஆசீர்வதியுங்கள் அப்பா" என்று நமஸ்கரித்தான். தந்தை சொற்படி மந்திர ஜபம் செய்தான். மந்திர ஜபம் செய்ய வைராக்கியம் என்று ஒரு விஷயம் தேவை. என்ன ஆனாலும் சரி, சுக்ர உதயத்தின் போது எழுந்துவிட வேண்டுமென்று உதறி எழுந்திருப்பது எல்லோராலும் முடியாத காரியம். உலுக்கி எழுப்பினாலும், புரண்டு படுத்து 'சிறிது தூங்குகிறேன்' என்று தான் பலருக்கும் சொல்லத் தோன்றும்.

இரவுநேரம் கூத்து பார்த்து விட்டு சுக்ர உதயத்தின் போது எழுந்திருக்க வேண்டுமென்றால், முதல் நாள் அன்று சற்று சிரமமாகத்தான் இருக்கும். ஒருமுறை இன்று மட்டும் தூங்கிக் கொள்கிறேன் என்று வைராக்கியம் தளர்ந்தால், மறுநாளும் அந்த வைராக்கியம் தளர்வதற்கு மனம் ஆசைப்படும். 'என்ன ஆனாலும் சரி.. எப்போது தூங்கினாலும் சரி.. தூக்கம் கால் நாழியாக இருந்தாலும் சரி.. எழுந்து சுக்ர உதயத்தின் போது ஜபம் செய்ய வேண்டும் என்கிற வைராக்கியம் மிக மிக முக்கியம்.

வைராக்கியமில்லாதவர்களை மிருகங்கள் என்று எளிதில் சொல்லி விடலாம். கிளை ஒடித்து ஒடித்து பழக்கப்பட்ட யானை, பசியில்லாத போது கிளை ஒடித்துக் கொண்டிருப்பது போல, ஒரு நியதிக்குக் கட்டுப் படாமல் சஞ்சலப்பட்டுக் கொண்டிருப்பது போல, வைராக்கியமில்லாத மனிதர்கள் ஆடிக்கொண்டே

இருப்பார்கள். அதிகம் பேசிக் கொண்டே இருப்பார்கள்.

அப்பா ஜபம் செய்ய சொல்லித் தரலாம். ஜபம் செய்வதன் பலன்கள் என்ன என்று சொல்லித் தரலாம். ஜபம் செய்யாது போனால் என்ன நடக்கலாம் என்பதை விவரிக்கலாம். ஆனால், வைராக்கியம் என்பதை ஒவ்வொரு தனிமனிதனும், அவனேதான் கைக் கொள்ள வேண்டும்.

தாய் சுக்ர உதயத்தின் போது எழுப்பி, போய் கை,கால் அலம்பி ஜபம் செய் என்று சொன்னதும், போய் பல் தேய்த்து கை,கால் அலம்பி, வயிறு சுத்தம் செய்து கொண்டு, பிறகு வீட்டிற்கு வந்து தண்ணீர் குடித்துவிட்டு 'நான் கோவிலுக்குப் போய் ஜபம் செய்கிறேன்.' என்று துண்டை தலை மீது போட்டுக் கொண்டு, கோவிலுக்குப் போய் சிறிது நேரம் அமர்ந்துவிட்டு தூணில் சாய்ந்தபடி கொஞ்சநேரம் கண்மூடி இருந்து விட்டு, 'அட ஜபம் நாளைக்கு செய்து கொள்ளலாம் என்று கால் நீட்டி அஜாமிளன் படுத்து விடுவான். அவனுக்கு ஜபம் செய்ய வேண்டுமென்று ஆசை இருந்ததே தவிர, செயல் படுத்த முடிவதில்லை.

அதனுடைய நன்மை, தீமைகள் புரிந்ததே தவிர, கைக்கொள்ள முடியவில்லை. பச்சைக் கடலை நெருப்பில்லாமல் வறுபடுமா. வெறுமே சட்டியில் போட்டு இடதும், வலதுமாய் புரட்டிக் கொண்டிருந்தால், உலர்ந்து விடுமா. வைராக்கியம் என்ற நெருப்பில்லாத போது கடலை வறுபடாது. பச்சைத் தன்மை உலராது. அது வெறும் மரக்கத்தி சண்டையாய் போய்விடும். உண்மையான போர்வீரன் மரக்கத்தியை இடுப்பில் சொருகிக் கொள்வானா. நடிகன்தான் சொருகிக் கொள்வான். அதே ஒருபோர்வீரனைப் போல வீராவேசமாக வசனம் பேசினாலும், நடந்தாலும், திரும்பினாலும், புருவத்தை நெரித்தாலும் இடுப்பிலிருந்தது மரக்கத்தி தானே. அது எதற்கும் பயன்படாத ஒருவிஷயம்தானே.

உண்மையான கத்தியை வைத்திருப்பது போல் நடிக்கலாமே தவிர, அங்கே இருக்கின்ற வீரம் மிகப் போலியானது. உண்மையான கத்தி உருவப்படுகிற போது, மரக்கத்தி தரைக்குப் போய் விடுகிறது. மரக்கத்தி ஏந்துபவன் காலில் விழுந்து விடுகிறான். ஆனால், மனம் கோமாளித்தனமானது. மரக்கத்தியை இடுப்பில் வைத்துக் கொண்டு உண்மையான வீரன் போல் பலர் நடித்துக் கொண்டிருக்கிறார்கள். நடிக்கிறோம் என்பதையும் மறந்துவிட்டு தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

வைராக்கியம் என்பது கூரிய கத்தி. உறுதியான ஆயுதம். இடைவிடாது ஒரு போர்வீரன் அதை இடுப்பில் வைத்திருக்க வேண்டும். போர் வீரனுக்கு தன் கத்தியின் மீதுள்ள மரியாதையும், பெண்ணுக்கு தன் கற்பின் மீதுள்ள மரியாதையும், வணிகனுக்கு செல்வத்தின் மீதுள்ள மரியாதையும் போல நல்லோருக்கு வைராக்கியத்தின் மீது மரியாதை வரவேண்டும். இதை இழக்க முடியாது என்று இறுகப் பற்றிக் கொள்ள வேண்டும். அஜாமிளன் அதை அவ்வப்போது இழந்து பலவீனமாக இருந்தான். சொல்லிக் கொடுக்க ஆள் இருந்தும், கற்றுக் கொள்கிற சூழ்நிலை இருந்தும், கற்றுக் கொள்ளாமல் கோவிலில் போய் தூங்குகிறவனாக, நடிப்பவனாக, ஏமாற்றுகிறவனாகத் தன்னை மாற்றிக் கொண்டான்.

அவன் நடிப்பு அவனை ஏமாற்றியது. அவன் வைராக்கியம் பலவீனமாக இருந்தது. கண்ணெதிரே ஒரு ஆணும், பெண்ணும் புணர்ந்திருக்கும் போது அதை விதிவசத்தால் பார்த்துவிட்ட அஜாமிளன், அதிலிருந்து விலகத் தெரியாதவனாய் தவித்துக் கொண்டிருந்தான். என்ன பார்க்கிறோம். எதற்குப் பார்க்கிறோம் என்று கேள்வி கேட்கத் தெரியாமல், பார்ப்பது ஒரு சந்தோஷமான விஷயமாக அவனுக்கு மாறிப் போயிற்று. கேள்வியின் பலத்தால் விசாரித்து ஒரு முடிவெடுக்கத் தெரியாமல், அவன் அந்த விதி காண்பித்த வழியில் கால் வைத்து மாட்டிக் கொண்டான்.

விதியை மதியால் வெல்லலாம் என்பது பழமொழி அல்ல. அது ஒரு வித்தை. நடுக்காட்டில் தானியங்கள் சிதறிக் கிடப்பதைப் பார்த்த பறவைகள், தரையிலிறங்கின. வலையில் சிக்கிக் கொண்டன. வலையில் சிக்காது கிளையில் அமர்ந்த பறவைகள், கூடி யோசித்து அவைகளும் தரையில் இறங்கி ஒட்டு மொத்தமாய் சிறகடித்துப் பறந்து, வலையில் சிக்கிக் கொண்டு வேறிடம் போயின. தங்களை விடுவித்துக் கொண்டன. இதுதான் விதியை மதியால் வெல்வது.

வைராக்கியம் இருந்தால்தான் இந்த அமைதி ஏற்படுகிறது. இந்த அமைதியிருந்தால்தான் மதி சரியாக செயல்படும். தான் செய்வது சரியா என்று செய்யும் நேரத்திலேயே விசாரித்து அறிகின்ற திறன், அவன் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும்.

தினந்தோறும் தெளிவாகச் சிந்தித்துப் பழக்கப்பட்டவன்தான் பிரச்சினைகள் ஏற்படும் போது தெளிவாகச் சிந்திப்பான். குற்றமுள்ளவர்களைச் சந்திக்கும் போது குணவானாகப் பதில் சொல்லுவான். சத்திரக்காரர்களை அணுகும் போது அமைதியாகப்

பேசுவான். வெறி பிடித்த கூட்டத்திற்கு நடுவே அமைதி காப்பான். எத்தனை விதமாக எவர் காமத்தைத் தூண்டினாலும், கண் அதில் பதியாது. மனம் உள்ளுக்குள் திரும்பி இது தேவையற்றது என்று இடைவிடாது புறக்கணித்து, அந்த இடத்தை விட்டு விலகுவதற்கு முற்றிலும் தயாராவான்.

மரக்கத்தி அஜாமிளனால் நடிப்பு அஜாமிளனால், இந்த விஷயத்திலிருந்து மீள முடியவில்லை. உயரமும், அகலமுமாக ஒரு கட்டுமஸ்தான தாசி துணியின்றி தரையிலே படுத்துக் கொண்டிருக்கிற போது அவளைப் பார்க்காமல் போக முடியவில்லை. அவன் சம்மணமிட்டு உட்கார்ந்து புதர்களை விலக்கி அந்த ஆணையும், பெண்ணையும் பார்த்துக் கொண்டிருந்தான். கூடை சரிந்து பூக்கள் தரையில் சிந்தின். பிறகு பொறுக்கிக் கொள்ளலாம் என்று அவன் அங்கேயே உட்கார்ந்து விட்டான்.

"உன் வீட்டிலே ஏகப்பட்ட கும்பல். எப்போதும் விருந்தாளிகள். கால் நாழிகைக்கு ஒருமுறை கதவு தட்டல். எனவேதான் உன்னை அமைதியான இடத்திற்குக் கூட்டி வந்து விட்டேன். என்ன இப்போது கை நிறைய காசு கொடுத்தும் உனக்கு திருப்தி ஏற்படவில்லை." என்று அந்த ஆண் பேசுவது காதில் விழுந்தது.

'இன்னும் ஒரு காசு கொடு' என்று அவள் நச்சரிப்பதும் கேட்டது. அவன் பையிலிருந்து காசு அனைத்தையும் அவள் முன்னே கொட்டினான். அவள் அதை அப்படியே அள்ளியெடுத்து துணியில் போட்டு முடிந்து கொண்டாள்.

"இப்போது என்ன செய்ய வேண்டும்" என்று கேட்டாள். அவன் குடுவையிலிருந்து மதுவை அவளிடம் நீட்டினான். அவள் குடிக்கத் துவங்கினாள். அவள் குடித்த மதுவை அவனுக்கு நீட்டினாள். அவனும் குடிக்கத் துவங்கினான். குடிவெறியில் அவர்கள் கண்டதும் பேசினார்கள். கண்டபடி நடந்து கொண்டார்கள். மீண்டும் உக்கிரம் பெற்றார்கள்.

அஜாமிளன் வைராக்கியம் செத்து சுண்ணாம்பாயிற்று. புதரிலிருந்த பூச்சி ஒன்று மூக்கில் நோண்ட அவன் 'ஹச்' என்று தும்மினான். அவர்கள் திடுக்கிட்டு எழுந்தார்கள். அந்த போர்வீரன் வாளை உருவிக் கொண்டு யாரென்று கேட்டான். பயத்தோடு அஜாமிளன் எழுந்து நின்றான்.

"அடேய் பார்ப்பனச் சிறுவனே. உனக்கிங்கு என்ன வேலை." என்று போர்வீரன் விறைப்பாகக் கேட்க,



அஜாமிளன் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, "உனக்கிங்கு என்ன வேலை. இந்த வேலை செய்யவா காட்டிற்கு வந்தாய்." என்று பதிலுக்கு அதட்டினான். ஊர்க்காவலன் என்று சொல்லிக் கொண்டு ஊரிலிருக்கிற தாசிப் பெண்ணை காட்டிற்குக் கூட்டிவந்து இப்படி ஒரு அசிங்கம் செய்கிறாயே. இதை வனதேவதை பொறுப்பாளா. நீ இருக்கிற இடம் வனதேவதையின் கோவில் என்பது உனக்குத் தெரியாதா. இந்த புல்வெளியில் ஒரு பெண்ணோடு சுகிக்க உனக்கு எப்படி மனம் வந்தது. இரு இப்போதே போய் உன்னை ஊராரிடம் சொல்லி என்ன செய்கிறேன் பார்." என்று திரும்பினான்.

போர் வீரனுக்கு பயம் வந்து விட்டது. ஊராருக்குத் தெரிந்தால் வேலை போய்விடும். ஊர் கூடி தலையில் அடிக்கும் அபராதம் கட்டச் சொல்லும். வாரா வாரம் இங்கு வந்து இந்த தாசியைச் சுகிக்கலாம் என்ற எண்ணமும் குப்பையாகப் போகும். எனவே, இந்த பார்ப்பனனை உயிரோடு விடக்கூடாது என்று தீர்மானித்தான். மீறி இவன் போகாமல் இருந்தால், பின் மண்டையில் அடித்துக் காயப்படுத்தி, நரிகள் இருக்கின்ற இடத்தில் போட்டுவிட்டு வந்துவிட வேண்டும். நரிகள் கடித்து குதறிவிட்டது என்று பொய் சொல்லிவிட வேண்டும். இல்லையெனில் எங்களோடு சேர்ந்துவிடு என்று இந்த பார்ப்பனனையும், இதில் இழுத்துவிட வேண்டும்.

தலையில் அடிபட்டு இவன் இறப்பதும், இந்த காரியத்தில் ஈடுபடுவதும் ஒன்றே. இவையிரண்டில் ஏதேனும் ஒன்று இவனை செய்தாக வேண்டும் என்று அவன் தீர்மானித்தான்.

"அடேய் சிறுவனே, எதற்கு ஊருக்குப் பேய் இதைச் சொல்லப் போகிறாய். இப்படிப்பட்ட அழகான பெண்ணை இதற்குமுன் நீ பார்த்திருக்கிறாயா. உனக்குத் திருமணமாகி உன் மனைவி இன்னும் பூப்படையவில்லை என்று கேள்விப்பட்டிருக்கிறேன். இருபது வயதாகியும் பெண் சுகமற்று வெறுமே புல் தூக்கிக் கொண்டு ஓடுகிறாயே. இதோ இவளைத் தூக்கிப்பார். எவ்வளவு மெத்மெத்தென்று இருக்கிறாள். எந்த இடம் தொட்டாலும் சுகமாக இருக்கிறது. இதற்கு முன் ஒரு பெண்ணை இப்படி தூக்கியிருக்கிறாயா. இவ்விதம் பார்த்திருக்கிறாயா. இப்படி இறுக்கி அணைத்திருக்கிறாயா." என்று அவன் ஆசை காட்டினான்.

அஜாமிளனுக்கு மனம் படபடத்தது. உடம்பு நடுங்கியது. வாய் குழறியது. கண்கள் திகைப்பில்

நிலைகுத்தின. இடுப்பில் உஷ்ணம் பரவியது. தலைக்கு ரத்தம் ஏறியது. கால்கள் கனத்துக் தவித்தன. உள்ளங்கால்களில் ஒரு குறுகுறுப்பு ஏற்பட்டது. மார்புகளில் ஒரு தினவு தொடர்ந்தது. போர்வீரன் அவளை தூக்கிக் கொண்டு வர, அவள் குடிபோதையில் வாய்விட்டுச் சிரித்தாள்.

அந்தப் போர்வீரன் அஜாமிளன் எதிரில் அவளை இறக்கினான். அவள் அஜாமிளனின் முகத்தைத் தடவினாள். உதட்டை வருடினாள். கழுத்தை நீவினாள். தோளையும், மார்பையும் தழுவி மெல்ல அவன் மேல் வயிற்றில் முத்தமிட்டாள்.

"ஆஹா.. அருகம்புல் வாசனை. அந்தணனே இத்தனை தள்ளி நின்று முகரும் போதே உன் மீது இவ்வளவு சுகந்தமான வாசனை வீசுகிறதே. உன்னை இறுக்கி கட்டிக் கொண்டு பிடரியில் முகம் புதைத்து மூச்சிழுத்தால் கிறுகிறுத்து செத்துப் போவேன் என்று நினைக்கிறேன். அப்படி ஒருமுறை செத்துப் போகட்டுமா." குழைவாய் கேட்டாள்.

அஜாமிளன் மெல்லப் பின்வாங்கினான். அவள் முன்னேறினாள்.

"தயவுசெய்து போகவேண்டாம் அந்தணனே. இந்தக் காவல்காரன் காய்ந்த மீனைப் போல நாற்றமெடுக்கிறான். இவன் பற்களிலிருந்து ரத்த வாசனை வீசுகிறது. இவன் வியர்வையில் மாமிச நாற்றம் அடிக்கிறது. இவன் மூச்சு சகிக்க முடியாத அளவுக்கு உஷ்ணமாக இருக்கிறது. இவன் பெண்ணை ஆளத் தெரியாமல், பேய் மாதிரி இறுக்குகிறான். நாய் போல இயங்குகிறான்.

அந்தணனே, இந்தப் பெண்ணுக்கு இரங்கி இவளை வாழ்விக்க அருகே வரவேண்டும். நீ தர்மம் தெரிந்தவன்தானே. ஒருபெண் கையேந்தி கூடுவதற்கு வா என்றால், அதை மறுப்பது ஆணுக்கழகல்ல. அது அதர்மம் என்பதை அறியாயா. நான் உன்னை, என்னருகே வா, என்னை வந்து தொடு. என்னோடு சந்தோஷமாக இரு என்று வரவேற்கிறேன். அந்தணனே, நீ தொடுவதால் என்குலம் மேன்மையடையும். என் வாழ்க்கை உயரும். அருகே வா." என்று அவள் மயங்கியது போல அவன் மேலே சாய்ந்தாள்.

அஜாமிளன் தவித்தான். திகைத்தான். அவளை புதரிலிருந்து விலக்கி எடுத்து வந்து மறுபடியும் அந்த வெட்ட வெளியில் கிடத்தினான். வெறுமே அவளைப் பார்த்தான். அவள் மயங்கியவள் போலவே இருந்தாள். அவன் திரும்பிப் போக முயற்சிக்க, சட்டென்று அவன்



காலைப் பற்றிக் கொண்டாள். என்னை விட்டுப் போகாதீர்கள். என்று தலை தூக்கிக் கெஞ்சினாள்.

அவன் தவித்தான். உணர்ச்சிகளைத் தாங்க முடியாமல் அவஸ்தைப் பட்டான்.

"அந்தணனே, நீர் அஜாமிளன்தானே. உம்மை நான் அறிவேன். நான் வேண்டுமானாலும் சற்று விலகியிருக்கிறேன். நீங்கள் இவளை ஆசீர்வதியுங்கள்" என்று சொல்லிவிட்டு, தன் உடைவாளை இறுக்கிக் கட்டிக் கொண்டு காவல்காரன் அந்த இடத்தை விட்டு வெளியேறினான். ஆற்றங்கரை நோக்கி நடக்கத் துவங்கினான்.

அஜாமிளன் அந்தப் பெண்ணையே பார்த்துக் கொண்டிருக்க, அவள் அவன் கைகளைப் பற்றி அருகே உட்கார வைத்தாள். அஜாமிளன் தன் வசம் இழந்தான்.

இந்த மறுப்பெல்லாம் நடிப்பு என்பது உற்றுப் பார்த்தால் தெரிந்து விடும். பார்த்த க்ஷணத்திலேயே 'சே' என்று உதறிப் போக முடியாத மனம் வேறு எப்போதும், எதன் பொருட்டும் விலகிப் போகாது. ஒரு எண்ணம் தோன்றும் நேரத்திலேயே.. முளைவிடும் நேரத்திலேயே அதைக் கிள்ளியெறிய ஒருவன் பழக்கப்பட்டிருக்க வேண்டும். தாமதப்படுத்தினால் காமம் விகசித்து எழுந்து அவனைச் சுற்றிக் கொண்டு சாய்த்து தரையில் போட்டுத் தேய்த்து விடும்.

அஜாமிளனை, அந்தப் பெண் தரையில் போட்டுத் தேய்த்தாள்.

"அடேய் அஜாமிளா.. பூக்களையே காணோமே." தந்தை உரத்துக் கேட்டார்.

"பூக்கள் இல்லையப்பா.."

"என்ன சொல்கிறாய். மாசி மாதம் பூக்கள் இல்லையா. காட்டில் பூக்கள் இல்லையென்றால் வேறு எங்குதானடா இருக்கும். பறிக்க மறந்து விட்டேனென்று சொல்."

"இல்லையப்பா.. பறித்தேன். அந்தப் பூக்கள் நன்றாக இல்லை. வழியிலேயே கொட்டி விட்டு வந்து விட்டேன்."

அப்பா அவனை வியப்போடு பார்த்தார். அருகம்புல்லையும், சமித்துகளையும் எடுத்து வைத்துக் கொண்டார். அவருக்கு அஜாமிளனை ஏனோ பிடிக்கவில்லை. அஜாமிளன் உணவெடுத்துக் கொண்டு தூங்கப் போனான். தூக்கம் முழுவதும் அந்த தாசிப் பெண்ணையே வலம் வந்தாள். அவள் அவனை பலமுறை கூடலுக்கு அழைத்தாள்.

அஜாமிளன் சுக்கிரன் உதயத்தின்போது எழுப்பப் பட்டான். பல் தேய்த்து பிறகு நான் கோவிலுக்குப் போய்

ஜபம் செய்கிறேன் என்று சொல்லிவிட்டு படியிறங்கினான். கோவிலுக்குப் போனவுடன் துண்டால் தரை உதறி, தலைக்குக் கல் வைத்து படுத்துக் கொண்டான். மறுபடியும் கற்பனைகளோடு தூங்கப் போனான்.

விடியும்வரை, கோவிலில் ஆட்கள் நடமாடும்வரை அயர்ந்து தூங்கிக் கொண்டே இருந்தான். ஒரு அந்தணன் விடியல் நேரத்தில் கோவிலில் தூங்குவது ஊராருக்கு வியப்பாக இருந்தது. 'கலி சமீபித்து விட்டது என்பதற்கு அர்த்தம்' என்று அவர்கள் பேசிக் கொண்டார்கள்.

சூரியன் மேலெழும்பிய வேளையில் அந்த தாசி இடுப்பில் நீர்க்குடத்துடன் தோளில் மதுக்குவளையுடன், மறுதோளில் பெரிய துணி விரிப்புடன், தலை மீது உணவுக் கூடைகளுடன் காடு நோக்கிப் போவதை அஜாமிளன் பார்த்து விட்டான். அவனைத் தாண்டிப் போகும் போது அந்த தாசி யாருக்கும் தெரியாமல் கண்சிமிட்டி சிரித்தாள். அவள் போன சிறிது நேரத்திற்கெல்லாம் அந்தக் காவல்வீரன் அதே போல மதுக்குடுவையுடன் பெரிய போர்வையுடன் அவளைத் தொடர்ந்தான். அவன் கையில் தீப்பந்தத்துடன் கூடிய ஈட்டி இருந்தது. அந்தக் காவல்காரன் அஜாமிளனைத் தாண்டும் போது வணங்கிக் கும்பிட்டான்.

"ஐயா.. காட்டில் பூக்கள் இருக்கிறது. பறிப்பதற்கு வருவீர்களா." என்று கனிவாகக் கேட்டான். அவன் கேள்வி அஜாமிளனுக்குப் புரிந்தது.

"இதோ வருகிறேன்" என்று சொல்லி, கூடைகளையும் மூங்கிலையும் எடுத்துக் கொண்டு அஜாமிளன் அவனைப் பின்தொடர்ந்தான். காட்டுக்குள் புகுந்தான்.

"மது அருந்துங்கள். உங்களை மறந்து செயலில் ஈடுபடுங்கள்." என்று காவல்காரன் உற்சாகப்படுத்த, அஜாமிளன் என்கிற அந்தணன் முதன்முதலாய் மது அருந்தினான். தன்னை மறந்தான். பேயாய் ஆட்டம் போட்டான். பூக்கள் நிறைந்த புதரில் எருமை புகுந்தது போல அந்தத் தாசியை அனுபவித்தான். அந்தத் தாசியும், 'எவரும் இப்படி ஒரு சுகம் தந்ததில்லை' என்று அவனைப் பாராட்டினாள்.

"ஐயனே, வெறும் காலி பூக்குடலைகளோடு வந்திருக்கிறீர்களே இது நியாயமா. எனக்கு உண்டானதைத் தரவேண்டாமா." என்று கிளம்பும் போது கேட்டாள்.

"நிச்சயம் தருகிறேன்." என்று அஜாமிளன் சொல்லிச் சென்றான்.



யாகத்துக்குப் போன ஒரு செல்வந்தர் வீட்டில் ஒரு குழந்தையின் கழுத்தில் இருந்த நகைகளை மெல்லக் கழற்றி மடியில் இறுக்கிக் கொண்டு வெளியே வந்தான். அவள் வீட்டுக் கொல்லைப் புறத்திலிருந்து அவளை வெளியே அழைத்து கையில் நகைகளைத் திணித்தான்.

"அடேயப்பா.. இவ்வளவு நகைகளா. இன்னும் நான்கு வாரங்கள் நாம் சந்தோஷமாக இருக்கலாம்." அவள் அவனுக்கு உறுதி கூறினாள்.

அஜாமிளன் அடுத்தமுறை எப்பொழுது வரும் என்று சிந்திக்கத் துவங்கினான். காமம் என்ற காட்டாற்றுச் சுழல் அவனை இழுத்துக் கொண்டு போயிற்று.

வெகு விரைவிலேயே அஜாமிளனுடைய தாசித் தொடர்பு ஊருக்குத் தெரிந்தது. ஊருக்குத் தெரிந்த சில நாட்களுக்குப் பிறகு வீட்டிற்குத் தெரிந்தது.

அவன் தந்தை இடிந்து போனார். 'என்ன துணிச்சல் உனக்கு. வீட்டை விட்டு வெளியே போ' என்று அவனை விரட்டினார்.

அன்று தாசி காட்டிற்குப் போகும் நாள். இதுதான் சாக்கு என்று அவன் வெளியே போய் விட்டான். பிறகு மறுபடியும் அவன் வீட்டிற்கு வரவே இல்லை. அவன் மனைவி பூப்படைந்தாள் என்று செய்தி கேட்ட பிறகும் அவன் வீட்டிற்குத் திரும்பவில்லை. தந்தையை, தாயை, மனைவியை, உறவினரை புறக்கணித்து விட்டு வெளியூருக்குப் போய் விதவிதமாக சம்பாதித்தான். ஜோசியம் தெரியுமென்று பொய் சொன்னான். குறி சொல்வதாக, புருவத்தை நெரித்து, அதட்டலாய் பேசி, ஆவேசமாய் ஆடி ஏழை ஜனங்களைப் பயமுறுத்தி பணம் பறித்தான்.

"மிகப்பெரிய யாகம் செய்யப் போகிறேன். அந்த யாகம் நான் மட்டும் தனிமையாய் செய்வது. இந்த தேசம் சுபிட்சமாக இருக்கவேண்டும் என்று செய்யப் படுவது. முதலில் எவர் தானம் கொடுக்கின்றாரோ, அவர் பெயருக்குச் செய்து விட்டு, பிறகு தேசத்திற்குச் செய்யப் போகிறேன். பொருளுதவி தேவை" என்று செல்வந்தர்களிடம் போனான்.

அவர்கள் அவனை நம்பி பணம் கொடுத்தார்கள். அவன் அதை தாசியிடம் கொடுத்தான். தாசியே ஹோமகுண்டம். அவளிலிருந்து பீறிடும் காமமே ஹோம பதர்த்தம். அவளை மறக்க அவனால் முடியவே இல்லை.

இத்தனை சுகம் கொடுக்கிறவளை, இத்தனை சந்தோஷம் கொடுக்கிறவளை ஏன் புறக்கணிக்க வேண்டும். காமம் என்பது ஒரு அற்புதமான விஷயம். அது

யாரிடமிருந்து கிடைத்தால் என்ன. பசிக்கு உணவு. காமத்திற்குப் பெண்.

'நன்கு சாப்பிடச் சொல்லுகின்ற மனிதர்கள், காமத்தை மட்டும் ஏன் புறக்கணிக்கிறார்கள். காமம் இல்லாத வாழ்க்கை நீரில்லாத ஆறு. அணில் கடித்த பழம் நல்ல ருசியாக இருப்பதில்லையா. அதுபோல்தான் இந்த தாசியும். நான் ரசனையுள்ளவன். அதனால் ருசியுள்ளதைத் தேடி உண்கிறேன்' என்று சமாதானங்கள் சொல்லிக் கொண்டான்.

அஜாமிளனுக்கும் அந்தத் தாசிக்கும் குழந்தைகள் பிறந்தன. அவைகளைப் பராமரிக்க அவன் இன்னும் அதிகம் சம்பாதிக்க வேண்டியதாயிற்று. காடுகளுக்கு உள்ளே போய், அருகம்புல்லும், தர்ப்பையும் எடுத்து வந்தவன், கத்தியை எடுத்துக் கொண்டு போய் வழிப்பறிக் கொள்ளை நடத்தினான். கூட்டமாக வருகிறவர்களை முகமூடி அணிந்து கொண்டு தாக்கி, அவர்களுடைய செல்வத்தைப் பறித்து, தாசியிடம் கொடுத்தான். மாட்டிக் கொள்ளாமல் இருப்பதற்கு ஏகப்பட்ட பொய்கள் சொன்னான். அவனுக்குப் பல குழந்தைகள் பிறந்தன. எண்பத்தைந்து வயது வரை அவன் ஆரோக்கியமாக வாழ்ந்தான். எண்பத்தாறாம் வயதில் அவனுக்கு உடல் தளர ஆரம்பித்தது.

அவனுடைய பத்தாவது மகனுக்கு நாராயணன் என்று அஜாமிளன் பெயரிட்டிருந்தான். அந்த நாராயணன் தாசியின் வனப்பும், அஜாமிளனின் புத்தியும் கொண்டிருந்தான். மிகத் தந்திரசாலியாக இருந்தான். அப்பாவியாக நடித்தான். மற்றவர்களை எளிதில் எடை போட்டான். ஏமாற்றினான். குழந்தைத்தனமில்லாத குறும்புகள் செய்தான்.

அவன் விளையாட்டுகளை உடம்பு நொந்து போன அஜாமிளன் ஆவலோடு பார்த்தான். அவன் செய்யும் குறும்புகளை நன்கு ரசித்தான். எப்பொழுதுமே அவனோடேயே இருந்தான். அவனோடு உண்பது, அவனோடு உறங்குவது, அவனோடு பேசுவது எல்லாமே அஜாமிளனுக்கு சந்தோஷத்தைக் கொடுத்தது.

அஜாமிளனுடைய விதி முடிந்து, அவன் உயிரைப் பறித்துக் கொள்ள, தர்மதேவரின் தூதுவர்களான எமகிங்கரர்கள் தரையிறங்கினார்கள். அவன் வீட்டிற்குள் நுழைந்தார்கள் அவன் கட்டிலைச் சூழ்ந்து கொண்டார்கள்.

சட்டென்று ஒரு இருட்டு படர்ந்து, வெம்மை அதிகரித்து மூச்சுத் திணறுவதை அஜாமிளன்



உணர்ந்தான். யாரோ தன்னைச் சுற்றி நிற்கிறார்களே என்று பயத்தோடும் மிரட்சியோடும் பார்த்தான். கோரமான உருவங்கள் சூலங்களுடன் அவனைச் சுற்றி நிற்பதைக் கண்டு திடுக்கிட்டான்.

அவர்கள் அவனுடைய பிராணனை குத்தியெடுக்க முயற்சி செய்தார்கள். விலாவில் ஈட்டி சொருகி, இருதயத்திற்கு அருகே உயிர் நாளத்தைத் திருகினார்கள்.

அஜாமிளனுக்குத் தாங்க முடியாத வலி ஏற்பட்டது. அவன் வாய்விட்டு அலற, ஒரு எமகிங்கரன் சத்தம் எழாமல் செய்தான்.

அஜாமிளன் கை, கால்களை வீசி மூச்சுக்குப் போராடினான். இன்னொருவன் அவன் நினைவைப் போக்க, முயற்சி செய்ய அஜாமிளன் அதையும் எதிர்த்துப் போராடினான்.

வீட்டில் வேறு யாருமில்லை. குழந்தை மட்டும் முற்றத்தில், வாழை மட்டையில் படகு செய்து நீர்த்தொட்டியில் விளையாடிக் கொண்டிருந்தான். அவனை துணைக்கு அழைக்க வேண்டுமென்று அஜாமிளன் திரும்பி, கைநீட்டி, 'நாராயணா' என்று உரக்கக் கத்தினான். அவர்கள் இன்னும் அழுத்தித் திருகினார்கள். அஜாமிளனின் உயிர் அவன் உடம்பை விட்டுப் பிரிந்தது.

அந்தக் குழந்தை திரும்பித் தகப்பனைப் பார்த்தது. தன்னை நோக்கி கைநீட்டி, கூவியதைக் கேட்டது. 'இன்னொரு முறை கூப்பிடட்டும். அப்போது போகலாம்' என்று மறுபடியும் விளையாடத் துவங்கியது.

அஜாமிளன் கட்டிலில் சரிந்து விழுந்தான். அவன் உடல் சூடு குறைந்து சில்லிடத் துவங்கியது. அவன் உயிர் எமகிங்கரர்களால் கட்டப்பட்டது.

அவர்கள் வீட்டை விட்டு வாசல் வழியே வெளியேறத் துவங்க, உள்ளுக்குள் 'தபதப'வென்று வைகுண்டத்தில் வாசம் செய்யும் விஷ்ணுவின் தூதர்கள் நுழைந்தார்கள். அந்த எமகிங்கரர்களை விலக்கி, அஜாமிளனின் சூட்சும ரூபத்தை கட்டியிருக்கும் பாசக் கயிற்றை அறுத்தார்கள். அஜாமிளனை அணைத்துக் கொண்டு ஆசுவாசப் படுத்தினார்கள்.

விஷ்ணுவின் தூதர்களைப் பார்த்து எமகிங்கரர்கள் திகைத்தார்கள். வணக்கம் தெரிவித்தார்கள்.

"விஷ்ணுவின் தூதர்களே உங்களுக்கு நமஸ்காரம் என்னவாயிற்று உங்களுக்கு. ஏதோ உள்ளே வந்து விட்டீர்களா. நாங்கள் எங்கள் கடமைகளைச் செய்து கொண்டிருக்கிறோம். உங்களுக்கு இதில் ஏதேனும்

தொந்தரவு உண்டா. இருப்பின் தெரிவித்து விட்டு எங்கள் கடமையைச் செய்ய அனுமதி கொடுங்கள். இவருடைய மரணநேரம் சமீபித்து விட்டது. மிகத் துல்லியமாக கணக்குப் போட்டு இவர் உயிரைக் கவர்ந்து போகிறோம். இவர் மரணமடையக் கூடாது என்று நீங்கள் நினைக்கிறீர்களா." மரியாதையாகக் கேட்டார்கள்.

"இல்லை. அஜாமிளன் மரணமடையும் நேரம் நெருங்கி விட்டது என்பதை நாங்களும் புரிந்து கொண்டிருக்கிறோம். ஆனால், அஜாமிளனை நீங்கள் பற்றிக் கொண்டு போவதற்கு உங்களுக்கு உரிமையில்லை என்பது எங்கள் கருத்து. அஜாமிளனைத் தயவு செய்து எங்கள் வசம் ஒப்படைத்து விடுங்கள்."

"எங்களுக்குப் புரியவில்லை. விஷ்ணுவின் தூதர்களே. அஜாமிளன் அந்தணனாக இருந்தாலும் தாசியே கதியாகக் கிடந்தவன். தாசிக்குக் காசு கொடுப்பதற்காக பொய்கள் சொன்னவன். திருட்டுக்கள் செய்தவன். வழிப்பறிக் கொள்ளை நடத்தியவன். அந்தணனுடைய கடமைகள் எதுவும் செய்யாமல், நூற்றுக்கணக்கான அயோக்கியத்தனங்கள் செய்தவன். இந்த தாசியையும் வாடகைக்கு விட்டு சம்பாதித்தவன். இவ்வளவு இழி பிறப்பாய் ஒரு அந்தணனை நாங்கள் பார்த்ததே இல்லை. இவனை நரகத்திற்கு அழைத்துப் போய் மிகக் கடுமையாகத் தண்டித்து, மறுபடியும், மறுபடியும் பல பிறவிகள் பிறக்கச் செய்து பிறகே கரையேற்ற வேண்டுமென்று எங்களுக்கு சொல்லப்பட்டிருக்கிறது. வேண்டுமென்றால் இவன் பாவக்கணக்கை காட்டுகிறோம் பாருங்கள்." என்று ஓலையை எமகிங்கரர்கள் நீட்டினார்கள்.

"இல்லை.. உங்கள் பேச்சை நாங்கள் மறுக்கவே இல்லை. ஆனால், அஜாமிளன் மரணமடையும் போது கடைசியாகச் சொன்ன வர்த்தை என்னவென்று நீங்கள் அறிவீர்களா." என்று விஷ்ணுவின் தூதர்கள் கேட்டார்கள்.

எமகிங்கரர்கள் மௌனமாக இருந்தார்கள். ஞாபகப் படுத்திப் பார்த்தார்கள். "நாங்கள் எங்கள் வேலையிலேயே மும்முரமாக இருந்து விட்டோம். அவர் என்ன கூச்சலிட்டார் என்று தெரியவில்லை." என்று சொன்னார்கள்.

"நாராயணா என்று வாய் நிறைய அழைத்தார். எப்பொழுது ஒருவர் மரண நேரத்தில் நாராயணன் பெயரைச் சொல்கிறானோ அவனுக்கு எம பட்டணத்தில் எந்த வேலையும் இல்லை. அவன் செய்த எல்லா பாவங்களும் அந்த ஒரு வார்த்தையில் அடிபட்டுப் போகின்றன. எனவே, வைகுண்டத்திற்குப் போக



வேண்டிய இந்த உயிரை, இந்த அஜாமிளனை, நீங்கள் நரகத்திற்கு எடுத்துப் போவதை நாங்கள் அனுமதிக்க முடியாது. தயவு செய்து நீங்கள் போய் விடுங்கள்." என்று விஷ்ணுவின் தூதர்கள் சொன்னார்கள்.

எமகிங்கரர்கள் அஜாமிளனின் வீட்டு வாசல் திண்ணையில் உட்கார்ந்து கொண்டார்கள். விஷ்ணுவின் தூதர்கள் எதிர் திண்ணையில் அமர்ந்து கொண்டார்கள். நடுவே அஜாமிளன் உயிர் சுருண்டு கிடந்தது.

"விஷ்ணுவின் தூதர்களே, மறுபடியும் உங்களுக்கு நமஸ்காரம். உங்களை நாங்கள் எதிர்ப்பதாக நினைத்துக் கொள்ள வேண்டாம். ஆனால், இத்தனை பாவம் செய்த ஒருவனை ஒரே ஒரு வார்த்தை சொன்னான் என்பதற்காகக் காப்பாற்ற வருகிறீர்களே. இந்த நியாயத்தைத்தான் எங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை.

இது சரியென்றால், இந்த உலகத்தில் தர்மமென்பதே இருக்காதே. எல்லா மனிதர்களும் தங்கள் இஷ்டத்திற்கு வாழ்ந்து விட்டு, கடைசியாய் ஒருவார்த்தை 'நாராயணா' என்று கூவி விட்டு மரணமடைந்து இருக்கலாமே. எங்களுக்கு வேலையே இல்லாது போயிருக்குமே. அத்தனை பேருக்கும் வைகுண்ட பதவியை இப்பொழுதே நிச்சயம் கொடுத்து விடலாமே. இது அதர்மமாகாதா.

ஒருலட்சம் பொன் ஒருவன் திடீரென்று வைத்துக் கொள்வோம். அது பாவம்தான். அந்த ஒருலட்சம் பொன்னிலிருந்து ஐயாயிரம் பொன் எடுத்து அந்தணர்களுக்குக் கொடுத்து மிகப் பெரிய ஹோமம் செய்து தான் செய்த திருட்டுக்குப் பரிகாரம் என்று சொல்லி விட்டால், மிச்சமிருக்கிற தொண்ணூற்று ஐந்தாயிரம் பொன் அவனுடைய சொத்தாகி விடாதா. இது திருட்டு இல்லை என்று முடிவாகி விடுமா. இதில் எங்கே தர்மம் இருக்கிறது." என்று கேட்டார்கள்.

"ஹோமம் செய்தால் அது பிராயச்சித்தமா. பாவம் போகுமா என்பது சந்தேகத்திற்கு உரியதுதான். ஆனால், 'நாராயணா' என்ற ஒரு வார்த்தை மரணநேரத்தில் சொன்னால், அவன் மொத்த பாவமும் தீர்ந்து போகும் என்பது வெகு நிச்சயம். ஒரு சிறு பொறி, நெருப்பு ஒரு காட்டையே அழிப்பது முடியுமெனில், 'நாராயணா' என்கிற வார்த்தை ஒருவன் பாவத்தை முற்றிலும் அழிப்பதும் முடியும். நாராயணன் என்கிற பெயர் ஒரு அக்கினித் துண்டு. நெருப்புக் கங்கு. இதனால் காட்டையே அழிக்க முடியும்.

எனவே, அஜாமிளனை விட்டு விட்டு தயவுசெய்து விலகி விடுங்கள்."

"உங்கள் பேச்சு ஆச்சரியமாக இருக்கிறது. விஷ்ணுவின் தூதர்களே. கள் பானையை ஒரு புண்ணியமான நதி தீரத்தில் வைத்து, நதி நீரால் பலமுறை சுத்தம் செய்தாலும் அந்தப் பானையின் வாசனை போகுமா. இந்தப் பாவி எத்தனை முறை நாராயணா என்று சொன்னாலும், இவன் செய்த பாவங்கள் கணக்கிடலங்காதவை ஆயிற்றே. அவைகளிலிருந்து இவன் விமோசனம் பெறுவனா. நீங்கள் விடு என்று சொன்னதால் விலகி இருக்கிறோமே தவிர, இவன் தண்டிக்கப்பட வேண்டியவன் என்பதில் எங்களுக்கு எந்தவித சந்தேகமும் இல்லை. தண்டிக்கப்பட வேண்டிய ஒருவனைத் தண்டிக்காமல் இருப்பதும் அதர்மம். அந்த அதர்மத்தைத் தயவு செய்து நீங்கள் செய்து விடாதீர்கள்." என்று கிங்கரர்கள் விஷ்ணுவின் தூதர்களிடம் வேண்டினார்கள்.

"சரி.. அப்படியானால் உங்களை நாங்கள் ஒன்று கேட்கிறோம்." விஷ்ணுவின் தூதர்கள் பணிவாக ஆரம்பித்தார்கள்.. 'இவனுக்கு எதற்கு தண்டனை."

"இவன் தொடர்ந்து பாவம் செய்யாதிருப்பான். அதற்காகத்தான் தண்டனை. பாவம் செய்தால் இவ்விதம் தண்டிக்கப்படுவாய் என்பதுதான் தண்டனையின் நோக்கம்."

"சரி.. அப்படியானால் இவன் நரகத்திற்குப் போய் வந்தவுடன் பரிசுத்தனாகி விடுவானா. மறுபடியும் பாவமே செய்யாமல் போய் விடுவானா." விஷ்ணுவின் தூதர்கள் மறுபடியும் கேட்டார்கள்.

"இல்லை.. அப்படி சொல்வதற்கில்லை. தண்டனை அனுபவித்து விட்டு வந்து மறுபடியும் இதே பாவத்தை முன்னிலும் வேகமாக இவன் செய்யக் கூடும்."

"அப்படியானால் உங்கள் தண்டணையின் நோக்கம் நிறைவேறவில்லையே. நோக்கம் நிறைவேறாமல் ஒரு காரியத்தை தர்மராஜரின் தூதர்கள் செய்வது தர்மமாகுமா." விஷ்ணுவின் தூதர்கள் வினயமாகக் கேட்டார்கள்.

எமகிங்கரர்கள் பதில் சொல்ல முடியாமல் தவித்தார்கள்.

"என்ன சொல்கிறீர்கள். பிராயச்சித்தங்கள் செய்தால் பாவம் செய்தது தீர்ந்து விடாது. தண்டனை தருவதால் மீண்டும் பாவம் செய்யாமல் இருப்பான் என்று சொல்வதற்கில்லை. ஆனால், நாராயணன் என்று வாய் நிறைய இவன் அழைத்தானே, இப்படி கடவுள் பெயரை அழைத்த பிறகு இவன் செய்த பாவங்கள் அனைத்தும் தொலைந்து போகிறது. தொடர்ந்து பாவங்கள் செய்ய மாட்டான் என்கிற உன்னத நிலையும் இவனுக்கு ஏற்படுகிறது.

மறுபடியும் சொல்கிறோம். தர்மதேவரின் தூதர்களே, கடவுள் நாமத்தை மரண தறுவாயில் உரக்கச் சொல்லுகிற போது அந்த ஜென்மாவில் செய்த அத்தனை பாவங்களும் போவது மட்டுமில்லாமல், இனி தொடர்ந்து பாவங்களே செய்யாமல், சுத்த ஆத்மாவாக இவன் விளங்குவான். இதில் எந்த சந்தேகமும் வேண்டாம். அப்படி சந்தேகமிருப்பின் இவனை நீங்கள் எங்களிடம் ஒப்படைத்து விட்டு, உங்கள் தலைவரான தர்மராஜரிடம் போய் கேளுங்கள். நாராயணன் என்கிற வார்த்தையினுடைய மகத்துவத்தை, அவர் உங்களுக்குச் சொல்லுவார்."

எமகிங்கரர்கள் வணங்கி நகர, அஜாமிளனை விஷ்ணுவின் தூதர்கள் ஆசுவாசப்படுத்தி மெல்ல வைகுண்டத்திற்கு அழைத்துப் போனார்கள்.

தர்மராஜரின் முன்பு எமகிங்கரர்கள் கைகட்டி நின்றார்கள். அவர்கள் முகம் கவலையோடு இருந்தது. தர்மராஜர் அவர்களைப் பார்த்து மெல்ல சிரித்தார். அருகே அழைத்தார்.

"நீங்கள் என்ன கேட்கப் போகிறீர்கள் என்று எனக்குப் புரிகிறது. நாராயணன் என்கிற பெயர் மிக உயர்வானது. நாராயணனே இந்த உலகத்தின் ஆதிமூலம். நாராயணனே இந்த உலகத்தின் முதல்அசைவு. அவன் விருப்பப்படியே இந்த பிரபஞ்சமும், அதைச் சுற்றியுள்ள தேவதைகளும் இயங்குகிறார்கள். அவருக்குக் கட்டுப்பட்டுத்தான் அத்தனை உலக இயக்கங்களும் நடைபெறுகின்றன. அவருடைய அனுமதியில்லாமல், அவருடைய விருப்பமில்லாமல் இங்கு எதுவும் நடைபெறுவதில்லை. அண்டவெளிக்கே தலைவனான ஒருவரின் பெயரை, வாய் நிறைய அழைத்து அவன் மரணமடையும் போது, அவனை தண்டிப்பதற்கு நமக்கு எந்த அதிகாரமும் கிடையாது.

மரணத் தறுவாயில், கடவுளின் நாமம் ஒருவன் நெஞ்சிலிருந்து பீறிட்டு வாய் வழியே வருவது என்பது எளிதான காரியமல்ல. இத்தனை பாவங்களுக்கு அப்பாலும் அவன் புண்ணியம் செய்தவனாக இருக்கிறான் என்பதால்தான் கடைசி நேரத்தில் கடவுளுடைய நாமம் அவனைக் காப்பாற்றி வைகுண்டத்திற்கு அழைத்துப்

போய்விட்டது. அந்த அஜாமிளன் இந்த பாவங்களில் ஈடுபடாமல் இருந்திருந்தால், மிகப் பெரிய புண்ணியாத்மாவாக, உலகில் பலரும் புகழும் வண்ணம் வாழ்ந்து, பலபேரை நல்ல கதிக்கு அழைத்துப் போய் தானும் உயர்ந்த ஒரு பதவியிலே அமர்ந்திருப்பான. இந்தப் பாவங்கள் செய்ததால் சாதாரணமானவனாய் மரித்துப் போனான்.

ஆனால், அவனுக்கு கடைசி நேரம் அவன் புண்ணியங்களால் கடவுள் பெயர் சொல்லும் ஒரு அற்புதம் நிகழ்ந்து விட்டது. இது ஆதிமூலமான நாராணனின் விருப்பம். எனவே நீங்கள் அஜாமிளனை அவர்களிடம் ஒப்படைத்து வந்ததில் தவறே இல்லை." என்று சிரித்தபடி சொன்னார்.

"உங்கள் பேச்சிலிருந்து கடவுள் நாமத்தின் மகிமை எங்களுக்குப் புரிகிறது. அவர் பெயரை உச்சரித்தால் எந்த கொடுமையான தண்டனையும் விலகி விடும் என்பதையும் நாங்கள் அறிந்து கொண்டோம். ஆனால், கடைசி நேரம் அந்த நாமம் உச்சரிக்கப்பட ஒருவர் என்ன செய்ய வேண்டும்."

"இது நல்ல கேள்வி. அஜாமிளனைப் போல் வேறொருவன் மரணத்தறுவாயில் இருந்தான். அவனுக்கருகே இருந்த ஒருசாது அவனை நல்ல நிலைக்கு அழைத்துப் போக விரும்பினார். அவன் பிள்ளைகளை அழைத்து வந்து அவனுக்கு நினைவிருக்கிறதா என்று பரிசோதனை செய்வது போல் நடித்தார். இது யார் என்று மூத்த பிள்ளையைப் பார்த்தபடி கேட்டார். இவன் 'சுக்கு' என்று அவன் பெயரைச் சொன்னான். இரண்டாவது பிள்ளையை நிறுத்தி வைத்து 'இது யார்' என்று கேட்டார். அவன் 'மக்கு' என்று பதில் சொன்னான்.

மூன்றாவது பிள்ளையின் பெயர் கிருஷ்ணன். 'அவன் பெயரென்ன' என்று மரணத்தறுவாயில் இருக்கின்றவனைப் பார்த்து சாது கேட்டார். அவன் 'இவனா.. இது கடைசிப்பிள்ளை' என்றான். பிராணன் போய்விட்டது. கிருஷ்ணன் என்கிற பெயரை அவனால் உச்சரிக்க முடியவில்லை. அவன் குழந்தைக்குப் பெயர் வைத்தானே தவிர, அதை வாய் நிறைய அழைத்ததில்லை. 'கடைசிப்பிள்ளை, கடைசிப்பிள்ளை' என்றே அவ்ன் நினைத்துக் கொண்டிருக்கிறனே ஒழிய, 'கிருஷ்ணன்' என்று நாக்கு புரட்டி உச்சரித்ததில்லை.

இடைவிடாது வாழ்நாளில் கடவுளின் நாமம் சொல்லிக் கொண்டு வந்தால், கடவுள் பெயரைச் சொல்லிக் கொண்டு வந்தால் எந்த வேலைக்கு இடையேயும் இதை ஸ்மரணை செய்து கொண்டு வந்தால் மரணத்தறுவாயில் வெகு நிச்சயமாய், மிக எளிதாய் கடவுள் நாமம் ஒட்டிக் கொண்டு வந்து விடுகிறது. மரணம் நிம்மதியாக நடைபெறுகிறது. எத்தனை பாவங்கள் செய்தாலும் அவை அத்தனையும் உதறப்பட்டு, அவன் தேவலோகத்திற்கு வந்து உட்கார்ந்து விடுகிறான். உயர்ந்த வைகுண்டப் பதவியை அடைகிறான். எனவே, இடையறாது கடவுள் நாமம் சொல்வதே மிக உன்னதமானது." என்று எமதர்மன் சொல்ல, எமகிங்கரர்கள் 'புரிந்தது' என்று வணங்கி நின்றார்கள்.

ஸ்ரீ மத் பாகவதத்தில் வரும் இந்த அஜாமிளன் கதை, நாம மகிமையை மனதில் பதியும்படி அழுந்தச் சொல்லுகின்ற ஒரு அற்புதமான கதை.

## கேலி

நகைச்சுவை என்கிற பெயரில், கேலி செய்தல் என்ற முத்திரையிட்டு, அந்த உரிமையோடு மற்றவரின் மனதை புண்படுத்தும் ஏளனங்கள் வாழ்க்கையில் மிகப் பெரிய விளைவுகளை சிலசமயம் ஏற்படுத்தி விடுகின்றன.

சிலநேரங்களில் இந்தக் கேலி என்கிற விஷயத்தை மனிதர்களால் பொறுத்துக் கொள்ளவே முடிவதில்லை. அது நகைச்சுவைக்காகச் சொல்லப்பட்டது, மனம் விட்டு சிரிப்பதற்காக நிகழ்த்தப் பட்டது என்று விளக்கினாலும், உள்ளே மனிதன் அடி ஆழத்தில் ஒரு ரத்தக்காயம் ஏற்பட்டு விடுகிறது. அந்த நிகழ்ச்சியிலிருந்து தள்ளிப் போய் நின்று மறுபடியும் யோசிக்க அந்த ரணத்திலிருந்து மீண்டும் ரத்தம் பொங்குகிறது. வலி ஏற்படுகிறது. 'அதே விதமான காயத்தையும் உனக்கும் ஏற்படுத்துவேன். அதைவிட அதிகமான வலியை நீ அனுபவித்து அவஸ்தைப் படும்படி செய்வேன்' என்று சூளுரைக்கும்படி நேர்ந்து விடுகிறது.

புராண, இதிகாசங்களிலும், வரலாறுகளிலும் இந்தக் கேலியால் ஏற்பட்ட மிகப் பெரிய விஷயங்களை நாம் கூர்ந்து பார்த்தால், கேலி செய்வது என்கிற விஷயத்தை அடியோடு உதறிவிடுவோம். மற்றவர் என்ன மனோநிலையில் இருக்கிறார் என்பதறியாது. இந்த ஏளனத்தை அவர்மீது நாம் வீசுகிற போது, அவர் கழுத்து சுருக்கிட்டு ஒரு மரணவலியை அந்த ஏளனம் ஏற்படுத்தி விடுகிறது. அந்த மரணவலிக்குப் போனவர்கள்

அனைவருமே பதிலுக்கு இன்னொரு வலியை ஏற்படுத்தாமல் ஓய்வதில்லை.

துரியோதனன் இயல்பிலேயே பொறாமை மிக்கவன். தன்னைக் காட்டிலும் யார் உயரமாக இருந்தாலும், யார் வலிமையோடு இருந்தாலும், யார் வசதியாக இருந்தாலும் அதை எப்படி குறைக்கலாம் என்று ஆத்திரப் படுபவன். அவரை எப்படி வீழ்த்தலாம் என்று ஆராய்பவன்.

இந்திரப்பிரஸ்தத்தில் தருமபுத்திரர் தன் நகரை ஸ்தாபித்து, தன் மாளிகையை எழுப்பி, ராஜசூய யாகம் நடத்தி அதற்கு எல்லா மன்னர்களையும் அழைக்க, துரியோதனன் தன் குடிபடைகளுடன், தம்பிமார்களுடன் அங்கே போயிருந்தான். ஒன்றுக்கும் உதவாத நிலம் என்று ஒதுக்கப்பட்ட இடத்தில், மிக அற்புதமான ஒருநகரம் எழுப்பப் பட்டிருப்பது கண்டு திகைத்தான். எப்படி இது சாத்தியமாயிற்று என்று வினவினான்.

மயனின் உயிரை ஒருமுறை அர்ஜுனன் காப்பாற்றியிருக்கிறான். அப்படி காப்பாற்றியதால் மயன் அர்ஜுனனுக்குப் பதில் கைம்மாறு செய்ய விரும்பினான்.

என் வீரத்தால் ஏற்படும் எந்த விஷயங்களுக்கும் நான் நன்கொடைகள் பெறுவதில்லை. அப்படி பெறுவதென்றால் என் வீரம் விலை போயிற்று என்று அர்த்தம். நான் அடுத்த முறை வில் எடுக்கும் போது இதனால் என்ன லாபம் கிடைக்கும் என்ற கணக்கு மனதிற்குள் வந்து விடும். அப்படி கணக்குத் தோன்றினால் என் வீரத்திற்கு அது சோதனையாகவும் அமைந்து விடும். எதிரே இருப்பவரை வெல்வது மட்டுமே என் குறிக்கோளே தவிர, என்ன பலன் கிடைக்கும் என்பதை நான் ஆராய்வதே இல்லை.

அப்படி ஆராய்கின்ற மனப்பான்மையை உங்களுடைய வேண்டுகோள் எனக்குக் கொடுத்து விடலாம். எனவே, மயனான உங்களைக் காப்பாற்றியதை என் கடமையாகத்தான் நினைக்கிறேனே ஒழிய, இதற்கு கைம்மாறு வேண்டுமென்று நான் நினைக்கவில்லை. நினைக்கவும் கூடாது. நீங்கள் தந்தாலும் நான் ஏற்க மாட்டேன். ஆனாலும் நீங்கள் வற்புறுத்துவதால், இந்த கைம்மாறு என்கிற விஷயத்தை எனக்குச் செய்யாமல், என் தமையனாருக்கு செய்யுங்கள்" என்று தருமபுத்திரர் பக்கம் திருப்பி விட்டான் அர்ஜுனன்.

மயன் தருமபுத்திரரிடம் போய் அடிபணிந்து, 'உங்களுக்கு நான் ஏதேனும் உதவி செய்ய வேண்டுமே' என்று கேட்ட போது, தருமபுத்திரர் பலவிதமாக யோசித்து, மயனை ஒரு அருமையான மாளிகை கட்டித் தரச்



சொன்னார். தன் நன்றியின் மொத்த உருவமாய் மயன் ஒரு மாளிகை எழுப்பினான். ராஜசூய யாகம் வேறிடத்திலே நடந்து கொண்டிருந்த போது, மயனுடைய கட்டிய பணியும் வேறு ஒரு இடத்தில் தொடர்ந்து கொண்டிருந்தது.

ராஜசூய யாகத்தை எதிர்த்த ஜராசந்தனை பாண்டவர்களில் ஒருவரான பீமன் வதம் செய்து மீண்டபோது, வேறு யாரும் எதிர்ப்பில்லை என்று தெரிந்த போது, பாண்டவர்கள் மயன் வேலை செய்கின்ற இடத்தை வந்து பார்த்தார்கள். அவனுடைய திறன் கண்டு வியந்தார்கள். வெகு விரைவிலேயே மயனுடைய வேலை முடிந்து மாளிகை தயாராகி விடும் என்பதை அறிந்து கொண்டார்கள். வந்திருந்த விருந்தினர்களை இன்னும் சில நாட்கள் தங்கி, மயன் கட்டி முடித்த மாளிகையைப் பார்த்து விட்டுப் போகுமாறு வேண்டிக் கொண்டார்கள். அவர்கள் ஊரிலும் அவ்விதம் நல்ல மாளிகை எழுப்பலாமே என்று அபிப்ராயம் தெரிவித்தார்கள்.

பல மன்னர்கள் தங்கியிருக்க, துரியோதனனும், பாண்டவர்களுடைய உபசரிப்பில் மகிழ்ந்து போய், இன்னும் சிலநாட்கள் தாமதிக்க முடிவு செய்தான். அவர்கள் அளித்த உபசாரங்களை மனமாற ஏற்றான்.

மாளிகை திறப்பு விழா நடந்தது. பசுவும், கன்றும் முன்னே போக, தருமபுத்திரர் பின்னே போக அவர்கள் மாளிகையைச் சுற்றிப் பார்த்துவிட்டு வெளியே வந்து வாசலில் நின்ற துரியோதனையும், அவன் தம்பியரையும் உள்ளே வரச் சொன்னார்கள்.

மாளிகை மிக அற்புதமாக இருந்தது. படியில் கால் வைத்தவுடன் கதவுகள் மணியோசையோடு திறந்து கொண்டன. ஆட்கள் இல்லாமலேயே கருவிகள் உதவியால் கதவுகள் திறக்கப்படுவது கண்டு துரியோதனன் குழந்தை போல் வியந்தான். படிவிட்டு இறங்கினான். கதவுள் மூடிக் கொண்டன. பதினோரு படிகள் ஏறி திருப்பிப் பார்த்தபோது, மிக விசாலமான எதிர் முற்றமும், மக்கள் திரண்டு வாழ்த்துவதற்கு வசதியான திறந்த வெளியும் இருப்பது கண்டு வியந்தான்.

மாளிகையிலிருந்து அந்த திறந்தவெளி சற்று மேடாக இருந்தது. கடைசியில் உள்ளவருக்குக்கூட மன்னருடைய இருப்பு தெளிவாகத் தெரிந்தது. முதல் படியில் நிற்பவரைக் கூட மன்னர் பார்க்க முடிந்தது.

தரையெல்லாம் பளபளக்கிற பளிங்குக் கல்லை பார்த்து வியந்தபடியே சுவரைத் தடவிக் கொண்டு

துரியோதனன் உள்ளே நுழைந்தான்.

மாளிகையினுடைய உயரம் வெப்பத்தை அறவே விரட்டியது. கனத்த சுவர்கள் குளிரைத் தாங்கும் என்றுதெரிவித்தது. மாளிகையினுள்ளே அதிக குளிரும் தெரியாமல், வெப்பமும் இல்லாமல் காற்று வருவதற்கான அற்புதமான வழிகளெல்லாம் இருந்தன. சிலுசிலுப்பாய் கூடத்தின் எல்லா மூலைகளுக்கும் காற்று வந்தது. சபா மண்டபத்தில், யாரேனும் நடனமாட, பாட்டுப்பாட ஆயிரம்பேர் உட்கார்ந்து கொண்டு தென்றலை அனுபவித்தபடி பாட்டு கேட்கலாம். நடனமும் பார்க்கலாம் என்பதை பல்வேறு இடங்களில் அமர்ந்து பார்த்து துரியோதனன் புரிந்து கொண்டான்.

வாயார மயனைப் பாராட்டினான். அந்த மயனை தன் ஊருக்கு அழைத்துப் போக வேண்டும் என திட்டமிட்டான்.

முதற்கூடம் தாண்டி அடுத்த கூடம் போகிற போது, வழியில் அகலமான இடம் ஒன்று குறுக்கிட்டது. அந்த இடத்தில் நீர் தெளிவாய் இருந்தது.

"எதற்கு நீர் இப்படி இருக்கிறது." என்று துரியோதனன் கேட்க,

"கால் கழுவாமல் இதில் நடந்து போனால் கால் கழுவிய படி ஆகிவிடுமல்லவா. ஆகவே, கால் கழுவிக் கொள்வதற்கான நீர் நடுவே விடப் பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன்." என்று துச்சாதனன் சொன்னான்.

உடனே துரியோதனன் வேட்டியை இழுத்துக் கொண்டு தரையில் கால் வைக்க அங்கு நீர் எதுவுமில்லை. நீர் இருப்பது போன்ற தோற்றத்தை வெளிச்சமும், பளிங்குக்கல்லும் ஏற்படுத்தியிருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டான். அவன் நன்றாக காலை விட்டு அளைய, தூரத்திலிருந்து பீமனின் சிரிப்பொலி கேட்டது.

"யார் சிரிப்பது.. பீமனா." துரியோதனன் உரத்துக் கேட்டான்.

"ஆமாம், நான் எங்கிருந்து பார்க்கிறேன் என்று உன்னால் பார்க்க முடியாது. ஆனால், நீ செய்வதை நான் பார்க்க முடியும். அப்படி ஒரு இடத்தை மயன் அமைத்திருக்கிறான். எதற்கும் ஜாக்கிரதையாக வா." என்று சொல்லி பீமன் மறுபடியும் சிரித்தான்.

அவசர அவசரமாக ஆடையைத் தழைத்துக் கொண்டு துரியோதனன் நடக்க, பின்னால் அவன் தம்பியர்கள் தொடர்ந்தார்கள். அவர்களில் சிலரும் வேட்டியை வழித்துக் கொண்டு நிற்க, மறுபடியும் பீமனின் சிரிப்பு கேட்டது.



நீரே இல்லை. ஆனால், நீர் இருப்பது போன்ற தோற்றமிருக்கிறது. அதனால்தான் எல்லோரும் சட்டென்று படியேறியவுடன் வேட்டியை வழித்துக் கொண்டு நிற்கிறார்கள் என்று அவர்களுக்குள் பேசிக் கொண்டார்கள்.

அடுத்த கூடம் நடந்து போக, மறுபடியும் அதே போல பளபளப்பாய் நீர் தேங்கியிருப்பது தெரிந்தது.

"இது மறுபடியும் அதே வேலைதான். நீர் தேங்கியிருப்பது போல் தோன்றுகிறதே தவிர, உண்மையில் இது நீரல்ல.. பளிங்குக்கல்." என்று துச்சாதனன் சொல்ல, துரியோதனன் அதை வேகமாகக் கடந்தான். கால் வைத்ததும் முகத்தில் தண்ணீர் அடித்தது. வேட்டி நனைந்தது. உண்மையாகவே அங்கு நீர் இருப்பது புரிந்தது.

கால்வழுக்கி, கைவீசி துரியோதனன் தடுமாற அவன் தம்பியர்கள் அவனை சட்டென்று பிடித்துக் கொண்டார்கள். சரிந்த நிலையில் துரியோதனன் இருக்க, தொடை வரை அவனை நீர் நனைத்தது. தம்பிகள் அவனை மேலே தூக்கினார்கள்.

மறுபடியும் தொலைவிலிருந்து பீமனின் சிரிப்புப் குரல் கேட்டது.

"உனக்குக் கண்பார்வை போதவில்லை துரியோதனா. நீ கண்ணை எப்பொழுதுமே கழுவி வைத்துக் கொள்வது நல்லது. நீர் இருக்கிறதா, இல்லையா என்று ஒருமுறை கலக்கிப் பார்த்து விட்டு நடக்கலாம். யாரங்கே, துரியோதனனுக்கு ஒரு கைத்தடி கொடுங்கள்." என்று சொல்ல, துரியோதனன் கோபமானான்.

மீண்டும் நடக்கத் துவங்க, ஒரு இடத்திற்கு மேல் முன்னேற முடியவில்லை. மண்டபம் முடிந்து போயிற்று.

"வழி இல்லையே, எப்படிப் போவது." என்று துரியோதனின் உரத்த குரல் கேட்க, மறுபடியும் பீமன் குரல் கேட்டது.

"எங்கோ கதவு இருக்கிறது. தடவிக் கண்டுபிடி. கை வைத்தால் கதவு தானாகத் திறந்து கொள்ளும்." என்று சொல்ல, அவனும் அவன் சகோதரர்களும் சுவரை தடவித் தடவி தள்ளிப் பார்த்தார்கள். எந்த இடத்தில் கதவு இருக்கிறது என்று ஆராய்ந்தார்கள். ஒரு இடத்தில் கை வைக்க கதவு திறந்தது.

"வழி இருக்கிறது" என்று சொல்லி துரியோதனன் வேகமாகப் போக, அவன் உயரம் காரணமாகத் தலையில் நங்கென்று இடித்துக் கொண்டான். அவன் கிரீடம் தரையில் உருண்டது. தம்பியர் எடுத்துக் கொடுக்க,

மறுபடியும் அணிந்து கொண்டான். மீண்டும் பீமன் குரல் கேட்டது.

"இது அடுத்தவருடைய அரண்மனை அல்லவா. சற்று அடக்கமாக வரக்கூடாதா." என்று பீமன் சொல்ல, எங்கிருந்து பேசுகிறான் என்று தெரியாமல் துரியோதனன் பல் கடித்தான்.

"வழி இருக்கிறது" என்று இன்னொரு இடம் முன்னேறினான். அங்கே சுவர் இருக்க, சட்டென்று முட்டிக் கொண்டான்.

மீண்டும் பலருடைய சிரிப்புச் சத்தம் கேட்டது. துரியோதனன் மேற்கொண்டு தொடர விரும்பாமல் படபடவென்று வந்த வழியே திரும்பினான். படிகளில் இறங்கினான். திரும்பி நின்று அரண்மனையைப் பார்த்தான். பெருமூச்செறிந்தான். திரும்பி தன்னுடைய விருந்தினர் மாளிகைக்கு ஓடிவந்து, கட்டிலில் மல்லாக்க விழுந்தான். பொறாமையால் அவன் கண்களில் கண்ணீர் வழிந்தது.

'என்னைக் காட்டிலும் உயர்வாக இருப்பதோடு மட்டுமல்லாமல், என்னை இழிவாக நடத்தி சிரிக்கவும் செய்தார்களே, இவர்களைப் பார்த்துக் கொண்டு நான் இன்னமும் சும்மா இருக்கிறேனே. எப்படி இது. ஏன் இப்படி இருக்கிறேன்.

ஏதாவது செய்ய வேண்டும். ஏதாவது செய்து இவர்களுடைய கர்வத்தைக் குலைக்க வேண்டும். அவர்களை அடித்துத் துரத்த வேண்டும. வென்று வாகை சூட வேண்டும். என்னைத் திக்குதிசை தெரியாது ஒரு மாளிகையில் அலைய விட்டார்கள் அல்லவா. அதே போல இவர்களையும் வனாந்திரத்தில் திசை தெரியாது அலைய விட வேண்டும். இதை செய்து முடித்தால்தான் என்வயிறு குளிரும். என் ஆத்திரம் அடங்கும்.' என்று படுக்கையில் படுத்துப் புரண்டான்.

சகுனி உள்ளே நுழைந்தான். அவன் மனநிலையைப் புரிந்து கொண்டான்.

"எல்லா பலவான்களுக்கும் ஒரு பலவீனமான இடம் இருக்கும். தருமபுத்திரர் இந்த தேதிக்கு மிக பலமாக இருக்கிறார். தம்பிகளோடு உயர்ந்த நிலையில் வாழ்கிறார். ஆனால், அவரிடம் ஒரு பலவீனமுண்டு துரியோதனா. சூதாடுவதில் மிகுந்த விருப்பமுடைய தருமபுத்திரரை சூதாட அழைத்து வா. நான் அவரை தோற்கடித்துக் காட்டுகிறேன். வனத்திற்கென்ன, இந்த உலகை விட்டே



அவரைத் துரத்தி விடலாம்" என்று சகுனி சொல்ல, இந்திரபிரஸ்தத்தில் வேறொரு திட்டம் உருவாயிற்று. எல்லோர் வாழ்க்கையும் திசை மாறிற்று. மிகப் பெரிய யுத்தத்திற்கு ஒரு இளைஞனுடைய சிரிப்பு காரணமாயிற்று.

பீமன் அன்று சிரிக்காமல் இருந்திருந்தால், கேலி செய்யாதிருந்திருந்தால், சகோதரனை மனம் புண்படுத்தாது இருந்திருந்தால், அந்த யுத்தம் நடந்திருக்க வாய்ப்பில்லை. ஆனால், விதி தன்னுடைய வேலையை ஒரு ஏளனச் சிரிப்பின் மூலம் நடத்திக் கொண்டது. தொடர்ந்து வாழ்க்கைச் சக்கரத்தை மேடு, பள்ளங்களில் உருட்டிப் போக முடிவு செய்தது.

வலிமையுள்ளவர்களும் மௌனமாக இருப்பதற்குப் பழக வேண்டும். இல்லையெனில், வாழ்க்கை துயரம் சூழ்ந்ததாக ஆகிவிடும் என்பதற்கு இந்த விஷயம் ஒருநல்ல உதாரணம்.

## சாவித்திரி

இல்வாழ்க்கை என்பது பொருள் சேர்ப்பதற்காகவோ, பெண் சுகத்திற்காகவோ அல்லது வேறு ஏதேனும் கர்வத்திற்காகவோ அல்ல. அது நன்மக்களை பெறுவதற்காகத்தான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்பதில் மத்ர தேசத்து மன்னன் அசுவபதி தெளிவாய் இருந்தான்.

எனவே, நல்ல குழந்தைகளை பெறும் பொருட்டு திருமணம் செய்து கொண்டு மனைவியோடு பலவிதமான பூஜைகளும், யாகங்களும் செய்தான். குறிப்பாய் சாவித்திரிதேவியை இடைவிடாது ஆராதனை செய்தான். பலநூறு முறைகள் அவளுக்கு ஹோமங்கள் செய்து ஆஹூதிகள் கொடுத்தான். கடுமையான விரதங்கள் இருந்தான். இடைவிடாது இறைநினைப்போடு அரசாட்சி செய்து வந்தான்.

அவனுடைய பக்தியை மெச்சிய சாவித்திரி அவனுக்கு முன்பு தோன்றினாள். "உனக்கு என்ன வேண்டும் கேள்" என்று வாஞ்சையோடு கேட்டாள்.

"இந்த உலகம் வியக்கும் வண்ணம் பலநூறு மகன்கள் எனக்கு குழந்தைகளாகப் பிறக்க வேண்டும்." என்று கைகூப்பி மத்ர தேசத்து மன்னன் அசுவபதி வேண்டிக்

கொண்டான்.

சாவித்திரி தேவி புன்னகை செய்தாள்.

"இது குறித்து படைப்புக் கடவுளான பிரம்மாவோடு நான் பேசினேன். உனக்கு மிகச்சிறந்த மகள் ஒன்றை ஆசிர்வதிக்குமாறு எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார். மேற்கொண்டு இதைப் பற்றி பேச வேண்டாம். உன்னுடைய நல்ல மனோபாவங்கள் ஈடேறும்." என்று ஆசிர்வதித்து விட்டுச் சென்றாள்.

அடுத்த வருடம், அசுவபதியின் மனைவி மாலவிராணிக்கு ஒருபெண் சிசு பிறந்தது. அந்தக் குழந்தைக்கு, தான் வழிபட்ட தேவதையின் நினைவாய் சாவித்திரி என்று பெயர் வைத்தான்.

சாவித்திரி மிகுந்த அழகோடு வளர்ந்து வந்தாள். அவளுடைய அங்கங்கள் பொலிவாகவும், வனப்பாகவும் இருந்தன.

உடம்பு அழகு தாண்டி, அவள் பேச்சில், பார்வையில், அசைவில் சிரிப்பில் ஒரு ஒளி பொருந்திய நல்லகுணம் வெளிப்பட்டது. 'வெறும் பெண்ணல்ல இவள். இறை அருள் மிக்கவள்' என்று பார்ப்போருக்குத் தெரிந்தது. அவள் வந்ததும், அழுது கொண்டிருக்கும் குழந்தைகள் கூட சிணுங்கலையும், அழுகையையும் நிறுத்தி திகைப்போடு பார்த்தன.

பெண்கள் வியந்து கன்னத்தில் கைவைத்துக் கொண்டார்கள். ஆண்கள் அவளைப் பார்த்து தலைகுனிந்து கொண்டார்கள். அல்லது கைகூப்பிய வண்ணம் கவனித்தார்கள். வயதானவர்கள் அவளுக்கு வாழ்த்துக் கூறத் துடித்தார்கள். எங்கு சென்றாலும் எந்த சபையில் நின்றாலும் சாவித்திரி என்கிற அந்த பேரழகிக்கு, தனித்த மரியாதை கிடைத்தது.

'பெண் அழகாக இருக்கிறாள். இவளைக் கொத்திக் கொண்டு போவதற்கு பல ராஜகுமாரர்கள் முன்வருவார்கள். பலபேருக்கு அவளுடைய அழகு பற்றி மக்கள் தெரிவித்திருப்பார்கள். பல தேசங்களிலிருந்தும் மன்னர்கள் மத்ர தேசத்திற்கு வந்து பெண் கேட்கப் போகிறார்கள்.' என்று மன்னன் ஆவலாக நினைத்துக் கொண்டிருந்தான்.

ஆனால், சாவித்திரியை வர்ணித்தவர்கள். அவளை சரியாகப் புரிந்து கொண்டு மற்றவர்களிடம் சொன்னார்கள்.

"நீங்கள் போய் பெண் கேட்டு வைக்காதீர்கள். சாவித்திரியின் அழகுக்கு முன் நீங்கள் ஒன்றுமே இல்லை. தேவமாதரை திருமணம் செய்து கொள்வது உங்களுக்கு சந்தோஷம் தராது. மாறாக இடையறாது கலவரத்தைக்



கொடுத்து விடும். அவளை ஆளுமை செய்யவே உங்களால் இயலாது. அப்படி பிரகாசிக்கின்ற ஒரு பெண்ணை நீங்கள் திருமணம் செய்வது அவசியம்தானா என்று யோசியுங்கள்." என்று சிறிய நப்பாசையுடன் இருப்பவர்களையும் புலவர்களும், மக்களும், பெரியவர்களும் எச்சரித்தார்கள்.

இதனால், பருவம் வந்ததும் சாவித்திரிக்கு திருமணம் தள்ளிப்போய்க் கொண்டே இருந்தது. அசுவபதி என்ன செய்வது என்று யோசித்தான்.

"சாவித்திரி.. உனக்கு வரன் தேடி வைக்கின்ற தகுதி எனக்கில்லை என்று நினைக்கிறேன். உன்னை மணம் புரிய பெண் கேட்டு இதுவரை நம் தேசத்திற்கு எவருமே வரவில்லை. எனவே, நீயே உன் புருஷனைத் தேர்ந்தெடுத்துக் கொள். உன்னோடு ஒரு பெரும் படையை அனுப்பி வைக்கிறேன். பல ஊர்களுக்குப் பயணப்பட்டு, உனக்கான வரனை நீயே தேடு." என்று சொன்னான்.

சாவித்திரி சந்தோஷமடைந்தாள். வழியில் கோயில்களை, மலைகளை, நதிகளை தரிசிக்கலாமென்று ஆனந்தத்தோடு, மந்திரி பிரதானிகளோடு கிளம்பினாள்.

சால்வ தேசத்திற்குள் நுழைந்த போது, அங்குள்ள மன்னன் பகைவர்களால் துரத்தப்பட்டதையும், மக்கள் நாடு இழந்து தவிப்பதையும், மன்னன் அடர்ந்த காடுகளுக்கு நடுவேயுள்ள ஆசிரமத்தில் முனிவர்களின் பாதுகாப்பிலும் இருப்பதை தெரிந்து கொண்டு நகரத்தைப் பார்த்துவிட்டு அந்த மன்னன் இருக்கின்ற காடுகளுக்குப் போனாள்.

சால்வ தேசத்து அரசன் த்யுமத்சேனனுக்கு கண்பார்வை போயிருந்தது. அவனுக்கு ஒரே ஒரு மகன் இருந்தான். அவன் பெயர் சத்யவான்.

சத்யவான் குழந்தையாக இருந்தபோது அவன் தந்தை ஆசிரமத்திற்கு அடைக்கலம் தேடிப்போய் அங்கிருந்து தவ வாழ்க்கை மேற்கொண்டான். அரண்மனை சௌகரியங்கள் எதுவும் அனுபவிக்காது ஒரு முனிகுமாரன் போல அந்த காடுகளைச் சுற்றி முனிவர்களின் அணைப்பில், மகான்களின் பரிச்சத்தோடு, வளர்ந்து வந்தான். நல்ல வாலிபனாய் மாறியிருந்தான்.

அரசகுடும்பத்தில் பிறந்து அதற்கான நெஞ்சுரமும், உடல் வளமும் இருப்பினும் அவன் சாதுக்களின் சங்கத்தினால் மிருதுவாகவும், மரியாதையாகவும், கம்பீரமாகவும் பேசுகின்ற தன்மையைப் பெற்றிருந்தான்.

காடுகளிலுள்ள கொடிய வனவிலங்குகள் முனிவர்

இருக்கும் ஆசிரமத்தை நோக்கி வருகையில் அவைகளை அதட்டி சப்தமிட்டு தைரியமாய் அருகே போய் பயமுறுத்தி வரலானான். அவைகளைக் கண்டு சிறிதும் பயப்படாதவனாயிருந்தான். அதேசமயம் விலங்குகளை கொல்லுகின்ற வேகமோ, ஆத்திரமோ, உயிர்களை இம்சிக்கின்ற திமிரோ இல்லாமல் மிருதுவாக நடந்து கொண்டான். முனிவர்களின் நட்பினால் ஆத்திரமில்லாத, அசூயை இல்லாத, அகங்காரமில்லாத ஒரு ராஜகுமாரனாய் திகழ்ந்து வந்தான்.

சாவித்திரியைக் கண்டதும் கைகூப்பினான். திகைத்து வரவேற்றான். அவளுடைய பிறப்பு விவரங்களைக் கேட்டு, முனிவர்களுக்கு அவளை அறிமுகம் செய்து வைத்தான். 'சிறிதுநாள் தங்கி வனத்தை சுற்றிப் பார்க்கலாம்' என்று முனிவர்கள் சொல்ல, அதற்கு சத்யவான் உதவி செய்தான்.

மனித வாழ்க்கை பற்றிய சாவித்திரியின் எந்த கேள்விகளுக்கும் தயங்காமல் பதில் சொன்னான். தெளிவாகப் பேசினான். ஆறு கடக்கும் போது, கையில் பட்டுத் துணியைச் சுற்றிக் கொண்டு, அவள் கைகளைப் பற்றிக் கொண்டு மெல்ல கரை கடக்க வைத்தான். பேச்சு கொடுத்துக் கொண்டே, சிரமம் தெரியாமல் அவளை மலையுச்சிக்கு அழைத்துப் போய் அங்கிருந்து பூமியைப் பார்க்கின்ற சந்தோஷத்தை ஏற்படுத்திக் கொடுத்தான். புதிய தாவரங்களையும் அவைகளின் பயன்களையும் அறிமுகப் படுத்தினான்.

எது குறித்தும் கர்வமில்லாத அந்த ஆணைப் பார்த்து சாவித்திரி வியந்து போனாள். சகல விஷயங்களிலும் நல்ல ஆளுமை பெற்றிருந்தாலும், 'இது சாதாரண விஷயம்தானே' என்று அவன் அடக்கமாக இருப்பதைக் கூர்ந்து கவனித்தாள்.

சத்யவான் சாவித்திரியின் அழகு கண்டு திகைத்துப் போயிருந்தான். அதைப்பற்றி பாராட்டி அவளிடம் கூற முற்பட்ட போது சாவித்திரி சிரித்தாள்.

"இது கடவுள் கொடுத்த வரம். இதில் என்னைப் பாராட்ட என்ன இருக்கிறது. என்னுடைய வடிவமைப்பு படைப்புக் கடவுளான பிரம்மாவின் ஆசிர்வாதம் அல்லவா. இந்த நீங்கள் பாராட்டி நான் கேட்டு கர்வப்படுவதற்கு என்ன இருக்கிறது." என்று பதில் சொன்னாள்.

'ஒரு பெண்ணைப் பார்த்ததும் மனதுக்குள் காமவிகாரங்கள் தோன்றும் என்று காவியங்களில் படித்திருக்கிறேன். ஆனால், சாவித்திரியைப் பார்த்ததும் கைகூப்பி நிற்கத் தோன்றுகிறது. சிலசமயம் காலில் விழுந்து வணங்கலாமா என்ற எண்ணமும் கூட ஏற்படுகிறது. அவள் குளித்துவிட்டு, மஞ்சள் பூசி, திலகமிட்டு, ஆடையைச் சுற்றிக் கொண்டு பூஜையில் அமர்ந்து தியானம் செய்கிற போது, என்னால் அவளைத் தவிர வேறு எதையும் பார்க்க முடியவில்லை. வேறு எதுபற்றியும் சிந்திக்க முடியவில்லை. அப்படி பார்க்கிற போது, ஒரு இளம் பெண்ணைப் பார்க்கிறோம் என்று நினைவு கூட இல்லாமல் தெய்வத்தைத் தரிசிக்கின்ற தன்மை ஏற்படுகிறது. இதற்கு என்ன காரணம்.' என்று முனி குமாரர்களிடம் சத்யவான் கேட்டான்.

'அவள் இறையருள் மிக்கவள். மகத்தான காரியங்கள் செய்யப் பிறந்தவள்.' என்று முனிகுமாரர்கள் சொன்னார்கள்.

'அவளிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும்' என்று முனிகுமாரர்களை சத்யவான் கேட்டபோது, 'ஒரு தபஸ்வியை நடத்துவது போல அவளைக் கொண்டாட வேண்டும்' என்று சொன்னார்கள்.

சாவித்திரி அந்த ஆசிரமத்திலிருந்து திரும்பும் வரை சத்யவான் அவளை ஒரு தபஸ்வியைப் போலவே நடத்தினான். கிளம்பும் போது கைகூப்பி, "நீங்கள் என் மனதில் நிறைந்திருக்கிறீர்கள். உங்களை மறப்பதென்பது இயலாத காரியம். மறுபடியும் நீங்கள் இங்கு வரவேண்டும். எங்களை சந்தோஷப்படுத்த வேண்டும்." என்று விண்ணப்பித்துக் கொண்டான். சாவித்திரி அவனை நோக்கி புன்னகை செய்தாள்.

"வாலிபமான ஒரு சிங்கத்தை பிடரியை பிடித்து தூக்கிக் கொண்டு போகும் வலிமை பெற்றிருந்தும், கோபமாகத் தாக்க வரும் யானையை கொம்பு பிடித்து திருப்பி அனுப்புகின்ற திறன் இருந்தும் இதை பாராட்டிக் கொள்ளாமல் 'நல்லவேளை அவைகள் ஆசிரமத்தைத் தாக்கவில்லை. அவைகளைத் தண்டிக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.' என்று கருணையோடு சொன்னீர்களே, இந்த வலிமைமிக்க கருணைதான் உங்களிடம் எனக்குப் பிடித்த விஷயம்.

விலங்குகளைத் தண்டிக்கப் பழகி விட்டால், மனிதர்களை தண்டிக்கவும் பழக்கம் ஏற்பட்டு விடும். எல்லா உயிர்களையும் சமமாகப் பாவித்து, அவைகள் மீது கருணையோடு இருப்பதுதான் நல்ல புருஷார்த்தம். மிகுந்த வலியிருப்பினும், அதை வெளிக்காட்டுவது சகல உயிர்களிடத்திலும் பிரியமாக இருப்பதுதான் உண்மையான கம்பீரம். உங்களை என்னால் மறக்க முடியாது. உங்களோடு பழகிய நினைவுகளை நான்

ஊருக்கு எடுத்துப் போகிறேன். என் தந்தையோடு நிச்சயம் அந்த நினைவுகளை பகிர்ந்து கொள்வேன்.

உங்களுக்குப் புரைக்கேறினால், நான் உங்களை நினைத்துக் கொள்கிறேன். என்று என்னை நினைத்துக் கொள்ளுங்கள். எனக்கு புரக்கேறினால் நான் உங்களை நினைத்துக் கொண்டு.." என்று சொல்லி வெட்கத்தோடு தலைகுனிந்தாள். அந்த வெட்கத்தின் அழகை சத்யவான் ரசித்தான். ஒரு நெருப்புத்தழல் அடங்கி சாம்பலால் தன்னை போர்த்திக் கொள்வது போல அவள் வெட்கம் இருந்தது என்று அவன் உள்ளுக்குள் கவிதை தோன்றியது.

சாவித்திரி ஊர் திரும்பினாள். அவள் திரும்புகிற போது நாரதர் அரண்மனையில் அசுவபதியோடு வீற்றிருந்தார்.

"அசுவபதி, உன்னுடைய மகள் எங்கே போய் வருகிறாள். அவள் வெகு தொலைவிலிருந்து வருவது போல் தெரிகிறதே. அவளை எங்கு அனுப்பியிருந்தாய்." என்று நாரதர் ஆவலோடு கேட்டார்.

"நாரத மகரிஷியே, என் மகளுக்கு சரியாக வரன் அமையவில்லை. இங்குள்ள வீரர்கள் எவரும் பெண் கேட்க முன் வரவில்லை. நல்ல குலத்தில் பிறந்த பிள்ளைகளும் சம்பந்தம் வைத்துக் கொள்ள முயற்சிக்கவில்லை. எனவே, அவள் புருஷனை அவளே தேடும்படி நான்தான் அவளை மந்திரி பிரதானிகளோடு பல ஊர்களுக்கு அனுப்பினேன். அவள் யாரையேனும் தேர்ந்தெடுத்திருக்கிறாள்ா என்று தெரியவில்லை. உங்கள் எதிரிலேயே விசாரிப்பதற்கு பிரியப்படுகிறேன்." என்று சொல்லி மகளை அருகில் அழைத்தார்.

"சாவித்திரி யாரையாவது தேர்ந்தெடுத்தாயா. உனக்கு கணவனாக வருகின்ற யோக்யதை யாருக்கு இருந்தது." என்று பிரியத்துடன் கேட்டார்.

"அப்பா, சால்வ தேசத்து மன்னர் பரம்பரையில் வந்த சத்யவான் என்கிற இளவரசர் தன் தந்தையுடன் ஒரு ஆசிரமத்தில் வசித்து வருகிறார். சாதுக்களின் சங்கத்தால் மனம் கனிந்து, தெளிவான புத்தியோடு விளங்குகிறார். அரசருடைய கம்பீரங்கள் எல்லாம் பெற்றாலும், அந்த கம்பீரத்துக்குள்ளே கனிவிருக்கிறது. எனவே, சத்யவானையே என்னுடைய புருஷனாக நான் தேர்ந்தெடுத்திருக்கிறேன்." என்று மிருதுவாய்ச் சொன்னாள்.

"ஆஹா.. சால்வ தேசத்து மன்னன் த்யுமத்சேனன் அற்புதமானவன். மிகுந்த ஒழுக்கமுடையவன். அவன் நாடு இழந்து பகைவரிடம் தோற்று ஒரு முனிவரிடம்



அடைக்கலம் பெற்று இருக்கிறான். தவ வாழ்க்கை மேற்கொண்டு இருக்கிறான். அவனுடைய பிள்ளை சத்யவான் பரமஞானி. நீ மிகச்சிறந்த ஒரு ஆணையே தேர்ந்தெடுத்திருக்கிறாய். அவனுடைய குணங்கள் போற்றத் தகுந்தன." என்று நாரதர் பாராட்டினார்.

"நாரதமகரிஷியே.. சத்தியவானது குணங்களை பாராட்டிப் பேசினீர்கள். அந்தப் பிள்ளையிடம் குறை ஏதும் உண்டோ." என்று திடீரென்று அசுவபதி கேட்க, மகரிஷி சற்று நேரம் அமைதியாக இருந்தார்.

"ஆம் மன்னா. ஒரே ஒரு குறை இருக்கிறது. நல்ல கணவனான சத்யவானுக்கு ஆயுசு பூரணமாக இல்லை. இன்னும் ஒரே ஒரு வருடம்தான் அவன் ஜீவிப்பான். அவன் அற்ப ஆயுள் படைத்தவன்." என்று சொன்னார்.

"மகளே, அற்ப ஆயுள் படைத்தவனைக் கணவனாக வரித்து என்ன பிரயோஜனம். நீ தேர்ந்தெடுப்பவன் நல்லவனாக இருப்பினும், ஆயுள் நிரம்பப் பெறாதவனாக இருக்கிறான். ஆகையால், மறுபடியும் வேறொருவனை தேர்ந்தெடுத்துக் கொள்வாயாக." என்று அசுவபதி சொல்ல, சாவித்திரி புன்னகை செய்து மாட்டேன் என்று தலையசைத்தாள்.

"நான் பார்த்துப் பேசி பழகிய பிறகு, இவரே என் புருஷனென்று சத்யவானை மனதுக்குள் வரித்து விட்டேன். அவருக்கு ஆயுள் ஒரு வருடமோ, ஒரு மாதமோ, ஒரு வாரமோ அது எனக்கு முக்கியமில்லை. என்னால் இன்னொருவனை மனதுக்குள் கணவனாக வரிக்க முடியாது. எனவே, எனக்கு தயவுசெய்து சத்யவானையே திருமணம் செய்து வைத்து விடுங்கள்" என்று சொன்னாள்.

அசுவபதி திகைத்து கவலையிலாழ்ந்த போது, நாரதமகரிஷி அசுவபதியைத் தேற்றினார்.

"ஒரு ஆணினுடைய ஆயுசு அவனுடைய மனைவியின் தபஸில் இருக்கிறது. உத்தமமான மனைவியைப் பெற்றவன் தீர்க்காயுள் உடையவனாகிறான். நல்ல தவ வாழ்க்கை மேற்கொண்டவள், தன்னுடைய கணவனின் ஆயுளை வெகு நிச்சயமாய் அதிகரிக்கச் செய்கிறாள். அவளுடைய இடையறாத பிரார்த்தனை, ஜாதக ரீதியாய் கணவனுக்கு ஆயுள் பலம் குறைந்திருப்பினும் அந்த தோஷத்தை நீக்கி அவனுக்கு நீண்ட ஆயுளையும், புதுப் பொலிவையும், நல்ல ஞானசக்தியையும், கூர்மையான அறிவையும், அன்பான குணத்தையும் ஏற்படுத்துகின்றன.

மனைவியினுடைய அண்மைதான் கணவனுக்கு பல்வேறு சுகங்களையும், சௌந்தர்யங்களையும் சிறப்புகளையும் கொடுக்கின்றன. அவைகளில் ஆயுளும் ஒன்று.

உன்னுடைய மகள் சாவித்திரி தவ வலிமையுடையவள். இறையருள் மிக்கவள். எனவே, அவளுடைய திருமணத்தை அவளே தீர்மானிக்கட்டும். நீ குறுக்கிட வேண்டாம். அவர்களை ஆசீர்வாதம் செய். போய் சம்பந்தம் பேசு." என்று நாரத மகரிஷி அனுமதி கொடுத்தார்.

வனத்தில் உள்ள சத்யவான், சாவித்திரியின் நினைப்பாகவே இருந்தான். தன் தந்தை தனிமையில் இருக்கும் போது அணுகினான்.

"அப்பா.. எந்தப் பெண்ணைப் பார்த்தால் காமம் எழவில்லையோ, எவரைப் பார்த்தால் கைகூப்பித் தொழத் தோன்றுகிறதோ, அவளே உத்தமமான ஸ்திரி என்று அங்கலட்சண சாஸ்திரத்தில் படித்திருக்கிறேன். சாவித்திரியைப் பார்த்தபோது, எனக்கு அப்படிப்பட்ட ஒரு உணர்வு ஏற்பட்டது. திரும்ப திரும்ப அவளைப் பற்றியே நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன். சாவித்திரி என்கிற அந்தப் பெண்ணின் நினைப்பிலிருந்து என்னால் மீளவே முடியவில்லை. தந்தையே.. அந்தப் பெண்ணை நான் திருமணம் செய்து கொள்ளலாமா." என்று தயங்கியபடி கேட்க, சால்வ மன்னன் மௌனமாய் தலைகுனிந்து கொண்டான்.

"சாவித்திரிக்கு விருப்பமிருப்பின் இந்த திருமணம் நடக்கும்" என்றார்.

"அவளுக்கு விருப்பம் இருக்கலாம் அப்பா. ஆனால், வெளியே சொல்ல வெட்கப்படலாம் அல்லவா. ஆகவே, நாம் பெண் கேட்டுப் போனாலென்ன.. நான் உங்களை ரதத்தில் வைத்து அழைத்துப் போகிறேன். நீங்கள் மத்ர தேசத்திற்குப் போய் பெண் கேட்கிறீர்களா." என்று சத்யவான் ஆவலோடு கேட்டான்.

"இல்லை மகனே.. அவர்களாக வந்து பேசினால் நாம் இதுபற்றிப் பேசுவோம்."

"ஏனப்பா.. ஏன் தயங்குகிறீர்கள்."

"அவர்கள் தேசமுள்ளவர்கள். ஆட்சி செய்பவர்கள். நான் தேசம் விட்டு தொலை தூரம் வந்து ஆட்சியில் இல்லாத மன்னனாக, காடுகளில் அலைந்து கொண்டிருக்கிறேன். நான் போய் பெண் கேட்பது மரியாதையா. ஆனால், இது மட்டும் என் தயக்கத்திற்கு காரணமல்ல" த்யுமத்சேனன் சொல்ல,



"வேறு என்ன க்ாரணம்" சத்யவான் கேட்டான்.

"அதைப் பிறகு சொல்கிறேன் மகனே." என்று அவர் பேசுவதை தவிர்த்து விட்டார்.

சத்யவான் அந்த வனாந்திரத்தில் தனிமையில் சுற்றி வந்தான். தந்தையை மீறி அவன் செயல்பட விரும்பவில்லை. அதேசமயத்தில் சாவித்திரியை மறக்கவும் முடியவில்லை. பெண்ணை கொள்வதற்கு எந்த முயற்சியும் செய்யாது, வெறும் காதலை மட்டுமே மனதுக்குள் ஆழமாய் வளர்த்து வந்தான்.

தொலைவில் பெரும்படைகளோடு, மத்ர தேசத்து மன்னன் வருகிறான் என்று செய்தி அறிந்து ஆனந்தமயமானான். தந்தையிடம் போய் தெரிவித்தான்.

"மகனே.. தயவு செய்து என்னை மீறி நீ எதுவும் பேசிவிடாதே. திருமணம் என்பது ஆயிரங்காலத்துப் பயிர். அவசரப்படுதல் நல்லதல்ல. அவர்கள் எதற்கு வந்திருக்கிறார்கள் என்பதை தெரிந்து கொண்ட பிறகு பேச ஆரம்பிப்பது நல்லது." என்று அவனை அமைதிப்படுத்தினான்.

அசுவபதி சால்வ மன்னனைக் கட்டித் தழுவிக் கொண்டு, சாவித்திரிக்கு சத்யவானை திருமணம் செய்து கொடுக்குமாறு பணிவோடு கேட்டார்.

"இது உம்முடைய விருப்பமா. அல்லது உமது மகளின் விருப்பமா." த்யுமத்சேனன் கேட்க, "என் மகளை மணமகன் தேர்ந்தெடுப்பதற்காக ஊர் ஊராக அனுப்பினேன். என் மகள் பல ஊர்களுக்கும் போய்ப் பார்த்து, உம்முடைய மகனையே தன் கணவனாக தேர்ந்தெடுத்திருக்கிறாள். எனவே, எந்தத் தடையும் சொல்லாது அவளுக்கு உங்கள் மகனைத் திருமணம் செய்து வைக்க வேண்டும்." என்று அசுவபதி வேண்டினார்.

"சாவித்திரி அருகே வா." என்று கண் தெரியாத சால்வ மன்னன் அழைக்க, சாவித்திரி அவருக்கு அருகே போய், 'இங்கு இருக்கிறேன்' என்று மெல்லிய குரலில் கூறினாள்.

"சாவித்திரி, என் மகனை உனக்குப் பிடித்திருக்கிறதா."

"மிகவும் பிடித்திருக்கிறது"

"பல தேசத்திற்குப் பயணப்பட்ட பிறகு, என் மகனைத்தான் உன் கணவனாக தேர்ந்தெடுத்தாயா."

"ஆமாம்.. பல இளவரசர்களைப் பார்த்தபிறகு, உங்கள் மகன் மட்டுமே என் மனதில் நிற்கிறார்."

"என்ன காரணம் சாவித்திரி." சால்வமன்னன் கேட்டான்.

சாவித்திரி நிதானமாய் பேசத் துவங்கினாள். சால்வ மன்னனின் கேள்விக்குப் பதில் சொன்னாள்.

"எல்லா ஆண்களும் கர்விகளாக இருக்கிறார்கள். அதிலும் அரசகுமாரர்கள் அட்டகாசம் மிக்கவர்களாக இருக்கிறார்கள். அவர்களுடைய கர்வமும், அட்டகாசமும் அறிந்து கொள்வதைத் தடுக்கிறது. அப்படித் தடுக்கப்படும் போது, சக மனிதர்களின் மன ஓட்டங்கள் அவர்களுக்குப் புரிவதில்லை. தன்னுடைய கர்வமே, தான் நினைத்துக் கொண்டிருக்கிற விஷயமே, தன் கற்பிதமே அவர்களுக்கு முக்கியமாகப் படுகிறது. ஆனால், சத்யவான் கற்பிதங்கள் எதுவுமில்லாமல், எந்த உயிராக இருப்பினும் அதை அதனுடைய கண்களின் மூலம் பார்த்து, அதன் எண்ண ஓட்டத்தை அறிந்து கொண்டு, அதற்கேற்ற வண்ணம் பழகுகிறார்.

மதம் பிடித்த யானை ஒன்று ஆசிரமம் நோக்கி வந்தபோது, கைதட்டி அதன் கண்களை உற்றுப் பார்த்து, 'உன்னால் என்னோடு சண்டையிட முடியாது. நான் உன்னை எளிதில் அடக்கி விடுவேன்' என்று மௌன பாஷையில் பேசி அதை மிரட்டி விலக்கினார். மற்ற ஆண்களாக இருந்திருந்தால் ஓடிப்போய் அந்த யானையை அடித்து துவம்சம் செய்திருப்பார்கள். அதற்குக் கடுமையாய் வலி ஏற்படுத்தி, துடிக்க வைத்திருப்பார்கள். துடிக்க வைத்து திருப்தி அடைந்திருப்பார்கள். தண்டிப்பதில் திருப்தியடையும் ஆணை திருமணம் செய்து கொள்வதால் வாழ்க்கை நாசமாகிறது. அவன் புருஷார்த்தம் குறைந்தவனாகி, படைப்பினுடைய உன்னதம் தெரியாதவனாகி வாழ்கிறான். தான் மட்டுமே இந்த உலகத்தில் உயிர் வாழ தகுதியுள்ளவனாய் நினைத்துக் கொள்கிறான். இது மிகப் பெரிய பேதமை. பேதமையில்லாத ஆண்கள்தான் புருஷர்கள். மற்றவர்கள் வெறும் ஆண்கள். சத்யவானின் ஞானம் என்னை வியக்க வைத்தது. நான் அவரை மனதுக்குள் புருஷனாக வரித்து விட்டேன்."

"அப்படியா, வேறு எவர் முன் வந்தாலும் நீ மறுத்து விடுவாயா."

"ஆமாம். ஒருவரை ஒருமுறை மனத்தில் வரித்த பிறகு வேறொருவரை நினைப்பது என்கிற தவறை, பாவத்தை நான் செய்ய விரும்பவில்லை."

"நல்லது சாவித்திரி, என் மகன் சத்யவானை மிக சந்தோஷமாய் உனக்குத் திருமணம் செய்து வைக்கிறேன்." சால்வ தேசத்து மன்னன் சாவித்திரி இருக்கும் திசை நோக்கி கைகூப்பினான்.



அவர்கள் திருமணம் அந்த ஆசிரமத்தில் எளிய முறையில் நடந்தது. அசுவபதி பெரும் சொத்துக்களை, யானைகளை, குதிரைகளை, பசுக்களை சீராகக் கொடுக்க முன்வந்த போது அங்குள்ள முனிவர்களும் சால்வ மன்னனும் மறுத்து விட்டார்கள்.

"இங்கு இருப்பவை போதும். மிகக் குறைந்த ஆடைகளையும், ஆபரணங்களையும் சில பசுக்களையும் உன் மகளுக்கு சீராகக் கொடு. இங்குள்ள குறைந்த வசதிகளோடு அவள் வாழக் கற்றுக் கொள்ளட்டும். அவளுக்கு பெரும் சீர் கொடுத்து இந்த சூழ்நிலையை நீ கெடுக்க வேண்டாம்." என்று விண்ணப்பித்துக் கொண்டார்கள்.

சீரும், சிறப்புமாய் வளர்ந்த சாவித்திரியை தலை வருடிக் கொடுத்து, உச்சி முகர்ந்து, "நீ விருப்பட்டது போல உன் திருமணம் நடந்து விட்டது. நீ தீர்க்க சுமங்கலியாய் நீண்ட நாள் உயிர் வாழ்ந்து நன் மக்கள் பெற்றெடுக்க வேண்டுமென்று உன் தகப்பனான நான் இடையறாது பிரார்த்தித்துக் கொள்கிறேன்.

நீ ஏதோ அற்புதமான காரியத்திற்காக படைக்கப் பட்டிருக்கிறாய். உலகத்திற்கு ஒரு நல்ல செய்தியை சொல்வதற்காக இங்கு பிறந்திருக்கிறாய் என்பது எனக்குத் தெரியும்.

உனக்கு புருஷனே சகலமும். அவனோடு நலமாய் வாழ்வாயாக." என்று சொல்லி விடை பெற்றார். சத்யவானும், சாவித்திரியும் சிறிது தூரம் அசுவபதியோடு போய் வழியனுப்பி விட்டு வந்தார்கள்.

சாவித்திரி சத்யவானோடு கொஞ்சிக் குலாவி குடித்தனம் நடத்தத் துவங்கினாள். அவர்கள் அந்த வனப்பிரதேசம் முழுவதும் சுற்றிச் சுற்றி பயணப்பட்டு வாய் ஓயாமல் பேசி, தங்கள் காதலை வளர்த்துக் கொண்டார்கள். பரஸ்பரம் புரிந்து கொண்டார்கள்.

சத்யவான் தன்னுடைய ஆயுள் குறைவானது என்பதை சற்றும் அறியாதவனாக இருந்தான். சாவித்திரிக்கு அது தெரிந்திருந்தாலும் தன் புருஷனுக்கு அது பற்றி சொல்லாமல் இருந்தாள். எந்த தேதியில் அவனுக்கு ஆயுள் முடியும் என்பதை மனதுக்குள் கேட்டுக் கொண்டிருந்தாள்.

இன்னும் நான்கு நாளில் அவன் மரணமடைவான் என்று அவளுக்கு உள்ளுணர்வு சொல்ல, நாரத மகரிஷியை தியானித்தாள். நாரதர் அவள் கனவில் தோன்றி அவ்விதம்தான் எழுதப் பட்டிருக்கிறது என்று உறுதிப்படுத்தினார்.

சாவித்திரி விரதம் மேற்கொண்டாள். சிறிதளவு தண்ணீர் கூட உண்ணாமல், சிறிது கூட கண் அசராமல், இடையறாது ஹரி நாமம் சொல்லி, ஆசிரமத்தின் ஓரம் சுருண்டு அமர்ந்திருந்தாள்.

அவள் விரதத்தின் கடுமையைப் பார்த்துவிட்டு முனிவர்கள் பயந்தார்கள். 'நீராவது எடுத்துக் கொள். ஒரு குவளை பாலாவது சாப்பிடு' என்று வேண்டினார்கள்.

சாவித்திரி பணிவாக மறுத்து விட்டாள். அவள் தேகம் மெலிந்தது. அயர்ந்து சுவரில் சாய்ந்தபடி அமர்ந்திருந்தாள்.

நான்காவது நாள் கையில் கோடாரியுடன் சத்தியவான் வனத்திற்குள்ளே நுழையத் தயாரானான். பழங்கள் பறித்து வரவும், சமைப்பதற்கு விறகுகள் சேகரிக்கவும் காட்டிற்குப் போவதாகச் சொன்னான். சாவித்திரியும் உடன் வருவதாகச் சொன்னாள்.

"நீ விரதம் அனுஷ்டித்து மெலிந்து போய் இருக்கின்றாய். இந்த நேரத்தில் கடுமையான வனத்தில் உன்னால் நடக்கக்கூட முடியாது. நான் மலையேறி உறுதியான மரங்களை வெட்டி வர வேண்டும் என்று நினைக்கிறேன். பழங்கள் பறிக்க இன்னும் உச்சிக்குப் போக வேண்டும். எனவே, நீ ஆசிரமத்தில் இரு." என்று சொன்னான்.

"நீங்கள் எங்கிருக்கிறீர்களோ, அங்கு இருப்பதுதான் எனக்கு மரியாதை. அதுதான் என் கடமை. எனவே, தயவு செய்து என்னை மறுக்காதீர்கள். உங்களோடு இருப்பதற்கு அனுமதியுங்கள்." என்று கைகூப்பினாள்.

சாவித்திரியின் பிடிவாதம் பார்த்துவிட்டு சத்யவான் சரியென்று தலையசைத்தான். அவளோடு கைகோர்த்து அவளைத் தாங்கிய வண்ணம் வனத்திற்குள் புகுந்தான். பழங்களை சேகரித்தான். பிறகு நல்ல மரமொன்று தேர்ந்தெடுத்து கோடாரியால் வேகமாக வெட்டத் துவங்கினான்.

கோடாரியால் வெட்ட வெட்ட அவனுக்குத் தலைவலி உண்டாயிற்று. தாங்க முடியாத தலைவலி வந்தபோது கோடாரியை வீசிவிட்டு, கீழே உட்கார்ந்து கொண்டான். சாவித்திரி பதறிப் போய் என்னவென்று கேட்டாள்.

"ஏனோ கடும் தலைவலி ஏற்பட்டிருக்கிறது. காலையில் கிளம்பும் போது ஆரோக்கியமாக இருந்தேன். இப்போது ஏன் இப்படி தலைநோகிறது என்று தெரியவில்லை." என்று தலையைப் பிடித்துக் கொண்டு சொன்னான்.



சாவித்திரி அவனைப் படுக்க வைத்தாள். அவனுடைய தலையைத் தன் மடியில் வைத்து, தலையை மெல்ல பிடித்து விட்டாள். வேகமாய் இறைவன் நாமம் சொல்லத் துவங்கினாள்.

அவன் மெல்ல கண்ணயரும் போது சாவித்திரி சற்று தொலைதூரத்தில் சிவந்த ஆடையோடு இருண்ட மேனியோடு, கோரமான உருவத்தோடு, கையில் சூலத்தோடு, பாசக்கயிறோடு ஒரு உருவம் தோன்றியிருப்பதைப் பார்த்தாள். அதை நோக்கி கைகூப்பினாள்.

"நீர் யாரென்று தெரியவில்லை. எதற்கு இங்கு வந்திருக்கிறீர்கள் என்று புரியவில்லை. நீங்கள் பார்ப்பதற்கு கோரமான சொரூபம் கொண்டிருந்தாலும் உங்கள் கண்களில் அன்பு ததும்பி வழிகிறது. உங்களுடைய அசைவுகள் மிகுந்த பிரியத்தை வெளிப்படுத்துகின்றன. நீங்கள் எதற்காக இங்கு வந்திருக்கிறீர்கள் என்று தயவு செய்து சொல்ல வேண்டும்." என்று வேண்டிக் கொண்டாள்.

"பெண்ணே.. சாவித்திரி, நான் எமதர்மராஜா. உன்னுடைய புருஷனின் ஆயுள் முடியப்போகிறது. அவனைக் கொண்டு போவதற்கு இங்கு வந்திருக்கிறேன். என்னுடைய கோர உருவத்தைப் பார்த்து, பலபேர் அலறி இருக்கின்ற இடம் விட்டு ஓடுவார்கள். ஆனால், எந்த பயமுமில்லாமல் என் கண்களில் அன்பு ததும்புகிறது என்று பிரியமான வார்த்தை சொன்னாயே. உன்னை ஆசீர்வதிக்கிறேன். இப்பொழுது நான் என் வேலையைச் செய்ய வேண்டும்" என்று பாசக்கயிறை சுருட்டத் துவங்கினான்.

"எமதர்மராஜரே.. பல ஆயிரக்கணக்கான வேலையாட்கள் இருக்கும் நீங்களே இங்கு வந்து நிற்கிறீர்களே. அரசரே வேலை செய்கிறாரே. இது ஆச்சரியமாக இருக்கிறது." என்று மறுபடியும் சாவித்திரி பேசினாள்.

"சத்தியவான் உத்தமான குணமுடையவன். அவன் உயிரைப் பறிப்பது என்னுடைய வேலை. ஒரு நல்ல உயிரை மிக கவனமாகப் பிரித்தெடுத்துப் போக வேண்டும் என்று நானே நேரே வந்திருக்கிறேன். சாவித்திரி, உன் புருஷனின் உயிரை நான் எடுத்துப் போகப் போகிறேன்." என்று சொல்லி, கையிலிருக்கிற பாசக்கயிற்றை சத்யவான் மீது வீசினான். பாசக்கயிறு சத்யவான் உடலைச் சுற்றி இறுக்கிக் கொண்டது. கட்டைவிரல் பருமனுள்ள லிங்க வடிவமான அவனுடைய உயிரை இணைத்தது.

சாவித்திரி மறுபடியும் கைகூப்பினாள்.

"ஐயனே.. உங்களுக்கு தர்மராஜன் என்று பெயர். நீங்கள் எது செய்தாலும் தர்மத்திற்கு உட்பட்டே செய்வீர்கள். அதர்மமாய் ஒரு காரியம்கூட செய்ய மாட்டீர்கள்.

அந்த தர்மம் செய்வதற்காகவே இங்கு நீங்கள் பிறந்திருக்கிறீர்கள். கொடுமையான இந்த காரியத்தையும் நீங்கள் திறமையாகவும், சிறப்பாகவும் செய்கிறீர்கள். தர்மம் வழுவாமல் நீங்கள் செய்கிற இந்தக் காரியம்தான் பூலோகத்தையும், பிரபஞ்சத்தையும் சரியான முறையில் நடத்தி வருகிறது. நீங்கள் உங்கள் தர்மத்தை செய்வதற்கு ஒரு போதும் நான் இடைஞ்சலாக இருக்க மாட்டேன். நீங்கள் என் புருஷனுடைய உயிரை எடுத்துப் போகலாம்." என்று சொன்னாள்.

எமதர்மராஜன் வியப்போடு அவளைப் பார்த்தான்.

"என்னைக் காரியம் செய்ய விடாமல் தடுப்பதற்குத்தான் மனிதர்கள் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். மாறாக, நீ என்னைப் போற்றி புகழ்ந்து, என்னுடைய கடமையைச் செய்யச் சொல்கிறாயே. இது சந்தோஷமாக இருக்கிறது. உனக்கு ஏதேனும் வரம் தர விரும்புகிறேன். என்னைப் போற்றுபவர்களை நான் ஒரு போதும் மறந்ததில்லை. உனக்கு என்ன வரம் வேண்டும கேள் சாவித்திரி." என்று பாசத்தோடு கேட்டார்.

"தந்தை போல் உள்ள எமதர்மராஜரே, என்னுடைய மாமனார் கண் பார்வையற்று இருக்கிறார். ஆசிரமத்தில் முனிவரைப் போல் வாழ்கிறார். அவருடைய கண்பார்வை அவருக்குக் கிடைத்து, அவர் சக்தி மிகுந்தவராக ஆக வேண்டும் என்று உங்களை பிரார்த்தித்துக் கொள்கிறேன்."

"அப்படியே நடக்கும் சாவித்திரி. இப்போது நான் என்னுடைய கடமையைச் செய்கிறேன்." என்று பாசக்கயிறை சுண்டியிழுக்க, சத்யவானது உயிர் அவன் உடம்பிலிருந்து நீங்கி, எமதர்மனின் பின்னே போய் நின்று கொண்டது. உயிரற்ற உடம்பு பொலிவற்று இருந்தது. அந்த உடலை தரையில் வைத்து அதைச் சுற்றி கோடு போட்டு பாதுகாத்துவிட்டு, சாவித்திரி கண்மூடி அமர்ந்து கொண்டாள். மனதினால் தன்உயிரை தன்னிடமிருந்து பிரித்தாள். தன் கணவனுக்கு அருகே போய் நின்று கொண்டாள்.

"என்ன இது சாவித்திரி. நீ ஏன் இவ்விதம் செய்கிறாய். உன்னுடைய மனதினால் உன் உயிரை நகர்த்தி,



உன்னுடைய புருஷனுக்கு அருகே போய் நின்று கொள்கிறாயே. உனக்கு இன்னும் ஆயுள் முடியவில்லை சாவித்திரி." என்று எமதர்மராஜன் பதறினான்.

"ஐயனே.. புருஷன் எங்கிருக்கிறானோ, அங்குதான் மனைவியும் இருக்க வேண்டும். என் புருஷனை நீங்கள் அழைத்துப் போவது உங்கள் தர்மம். என் புருஷன் எங்கு இருக்கிறானே அங்கு அவனுடன் இருப்பது தான் என் தர்மம். எனவே, நான் பாசக்கயிறால் பிணைக்கப் படாமல் இருப்பினும், என்னுடைய மனதினால் என் உயிரை வலியப் பிரித்து, அவருக்கு அருகே வந்து நிற்க, வலிவுள்ளவளாய் இருக்கிறேன். நீங்கள் தொடர்ந்து உங்கள் காரியத்தை செய்யுங்கள்"

சாவித்திரி உன்னுடைய திறமை, உன்னுடைய புருஷபக்தி ஆச்சரியமாக இருக்கிறது. இந்த சந்தோஷத்தில் மனம் தளும்பிப் பொங்குகிறது. சத்யவானுடைய உயிரைத் தவிர, இன்னொரு வரமும் தர விரும்புகிறேன் வேறு ஏதேனும் வேண்டுமா. என்று எமதர்மராஜன் பாசத்தோடு கேட்க, "என் மாமனாருக்கு ராஜ்யத்தை மீட்டுக் கொடுங்கள்.. அவருக்கு அதன் மீது இன்னும் ஆசையிருக்கிறது" என்று சொன்னாள்.

"நல்லது சாவித்திரி. வெகு விரைவிலேயே உன் மாமனார் தன்னுடைய ராஜ்ய பதவியை அடைவார். அவருடைய பகைவர்கள் நாசமடைவார்கள்." என்று கை தூக்கி எமதர்மன் ஆசீர்வதித்தான். சத்யவானை இழுத்துக் கொண்டு எமபட்டினம் நோக்கி நடக்கத் துவங்கினான். சாவித்திரியும் பின் தொடர்ந்தாள்.

"சாவித்திரி, நான் உனக்கு வரம் கொடுத்த பிறகும் நீ இன்னும் தொடர்ந்து வரக் காரணமென்ன. இயற்கைக்கு மாறாக நடக்க முயற்சிக்காதே. நீ வந்த வரை போதும். உன்னுடைய பதிபக்தி நிரூபணமாகி விட்டது. இதற்கு மேலும் தொடராமல், தயவு செய்து திரும்பிப் போ."

"உம்மை நான் ஒருக்காலும் தடை சொல்லவில்லை. உம்முடைய வேலைக்கு நான் இடைஞ்சலாகவேயில்லை. ஆனால், நீங்கள் என்னுடைய கடமையை செய்ய விடாமல் என்னை நகர்த்த முயற்சிக்கிறீர்கள். ஒருமனைவி தன் புருஷனை விட்டு பிரியாதிருப்பது நல்லதல்லவா. அதுதான் உத்தமம் என்று வேதம் சொல்லுகிறதல்லவா. அப்படியிருக்க அவனை நீங்கள் பிரித்து எடுத்துக் கொண்டு போனால் நான் அதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பது எவ்விதம். நீங்கள் தர்மத்தை அறிந்தவர். திரும்பிப் போ என்று சொல்வது அதர்மம் அல்லவா. [illegible] பிரிந்து இரு என்று ஒரு

மனைவியிடம் கட்டளையிடுவது நியாயம்தானா.

சூரியபகவானான விவஸ்வானுடைய சக்தி வாய்ந்த மகன் நீர். சான்றோரால் வைவஸ்வதர் என்று அழைக்கப் படுகிறீர். எல்லா உயிர்களையும் பச்சாதாபமின்றி நேர்மையாக மதிப்பிடுகிறீர். ஆனால், என்னை ஏன் இவ்விதம் புறக்கணிக்க முயற்சிக்கிறீர்கள்." என்று சாவித்திரி கேட்க, எமன் வாய்விட்டு சிரித்தான்.

"சாவித்திரி புகழ்ச்சியான வார்த்தைகளாலும் சாதுர்யமான பேச்சாலும் என்னை மடக்கி விட்டாய். மூன்றாவது வரம் தருகிறேன். உன்னுடைய புருஷனுடைய உயிரைத் தவிர, வேறு எது வேண்டுமானாலும் கேள் தருகிறேன்."

"எனக்கு நூறு பிள்ளைகள் பிறக்க வேண்டும். அவர்கள் சான்றோர்களாக இருக்க வேண்டும்."

"அப்படியே ஆகட்டும். உனக்கு நூறு குழந்தைகள் சான்றோர்களாக பிறப்பார்கள்." எமன் ஆசிர்வதித்தான்.

"ஐயனே.. இப்படி ஒரு வரத்தைக் கொடுத்துவிட்டு என் புருஷனை இன்னமும் தொடர்ந்து இழுத்துக் கொண்டு போகிறீர்களே. என் புருஷன் அல்லாது, வேறு யாரிடம் கூடி, இப்படி நூறு பிள்ளைகளை நான் பெறுவேன். எனவே, அதன் பொருட்டு என் புருஷன் எங்கிருக்கிறானோ, அங்குதானே நானும் தொடர்ந்து வர வேண்டும்." என்று சொன்னாள்.

"சாவித்திரி, இதற்கு மேலும் நீ என்னுடன் வருவது சிரமம். வைதரணி என்ற நதி நெருங்கிக் கொண்டிருக்கிறது. நீ திரும்பிப் போ. உன் மனம் இந்த வெப்பத்தை, இந்த சூட்டைத் தாங்காது. ஆவிவுலகிற்கு போகிற இடம் வந்து விட்டது. நீ திரும்பிப் போ." என்று எமன் பதற்றத்துடன் பேசினான்.

"இல்லை.. நான் என் புருஷனோடு தொடர்ந்து வருவேன்." என்று சாவித்திரி நகர்ந்து வந்தாள்.

"உன் மனதால் பயணப்பட்டிருக்கிறாய். இந்த வெப்பம் உன்னைத் தகிக்க வில்லையா. இது கொப்புளங்கள் ஏற்படுத்த வில்லையா."

"ஆமாம். சொப்பனத்தில் தோன்றும் வலிபோல, ஒரு வலியை உடம்பு இல்லாத போதும் நான் அனுபவிக்கிறேன். சூட்டினால் தவித்துப் போகிறேன். ஆனால், என் புருஷனை விட்டு ஒருநாளும் நகர மாட்டேன். இந்த நதியை நான் நிச்சயம் தாண்டுவேன்." என்று சொல்லி, வைதரணி நதியை மிகுந்த வேதனையோடு சாவித்திரி தாண்டினாள்.

எமன் திகைத்துப் போனான்.



"உடம்பு இல்லாதவர், மனம் இல்லாதவர்தான் இதைத் தாண்ட முடியும். எந்த வேதனையுமின்றி வர முடியும். இந்த வேதனையைச் சகித்துக் கொண்டு உன் புருஷனுக்காக வருகிறாயே. ஏன் சாவித்திரி."

"எமதர்மராஜனே.. மனைவி என்பவள் புருஷனில்லாமல் எந்த வித சிறப்பும் பெற முடியாது. என் புருஷனுக்கு ஆயுள் குறைவு என்பது மாற்றப்பட முடியாததல்ல. எந்த விதியையும் மாற்ற முடியும் என்பது உங்களுக்குத் தெரியாதா. எனக்கு நூறு மகன்கள் பிறப்பதற்காக, என்னுடைய புருஷனான சத்யவானுடைய உயிரை விட்டு விடுங்கள்" என்று எமதர்மனின் பாதங்களில் பணிந்தாள்.

மனிதர்களால் கடக்க முடியாத வைதரணி நதியைக் கடந்து சாவித்திரி வந்தது பார்த்து திகைத்துப் போன எமன், "அப்படியே ஆகட்டும்." என்று அவளுடைய பதிவிரதா தர்மத்தை மெச்சி பாசக்கயிற்றை உதறி சத்யவானின் உயிரை விடுவித்தார்.

"நீயும், உன் புருஷனும் நானூறு வருடங்கள் வாழ்ந்து, நூறு குழந்தைகள் பெற்று பிறகு மேலுலகம் போவீர்களாக. உங்கள் வாழ்க்கை இனிமையும், அர்த்தமுள்ளதுமாய் விளங்கட்டும்" என்று ஆசிர்வதித்து பாசக்கயிறை தோளில் போட்டுக் கொண்டு போனார்.

விநாடி நேரத்தில் சத்யவானது உயிரும், சாவித்திரியின் உயிரும் அவர்கள் கூட்டுக்குள் புகுந்து கொண்டன. சாவித்திரி முதலில் கண்விழித்தாள். தரையில் கிடந்த சத்யவானின் தலையை எடுத்து மடியில் வைத்துக் கொண்டாள். பிரியத்தோடு அவன் நெஞ்சை நீவினாள். சத்யவான் மெல்ல கண்விழித்தான்.

"என்ன இது. ஏன் இவ்வளவு நேரம் உறங்கி விட்டேன். நீ ஏன் எழுப்பவில்லை. இருட்டி விட்டதே. ஆசிரமத்தில் என் தாயும், தந்தையும் என்னைக் காணாது தவிப்பார்களே." என்று சத்யவான் பதறினான்.

"மரம் வெட்டிக் கொண்டிருந்த நீங்கள் தலைவலியால் உட்கார்ந்து விட்டீர்கள். பிறகு களைப்படைந்து படுத்து விட்டீர்கள். களைப்பான உங்களை எழுப்ப எனக்கு இஷ்டமில்லை." என்று சாவித்திரி சொன்னாள்.

"சிகப்பணிந்த ஒரு பயங்கரமான உருவத்தை நான் தூங்குகிறபோது கண்டேன். உனக்கு ஏதும் தெரிந்ததா." என்று அவன் சாவித்திரியைக் கேட்க.

"எனக்கு சிலவை தெரிந்தன. அவைகளை ஆசிரமத்திற்குப் போய் சொல்கிறேன்." என்று சாவித்திரி சொல்ல, சத்யவான் உடனடியாகத் தன் பெற்றோரைப்

பார்க்க ஆசைப்பட்டான். நிலவொளியில் சாவித்திரி அவனது இடது கையைத் தன் இடது தோளில் போட்டுக் கொண்டு, அவனுடைய வலதுகையை தன் வலது கையால் பிடித்துக் கொண்டு மெல்ல ஆசிரமம் நோக்கி அழைத்துப் போனாள்.

ஆசிரமத்திற்குள் நுழைந்த போது அங்கு ஆனந்தக் கூச்சல்கள் கேட்டன. சால்வ மன்னனுக்கு பார்வை திரும்பி வந்ததும், அவன் முன்னிலும் பலம் பெற்றவனாக இருந்ததும் தெரிய வந்தது. சால்வ தேசத்திலிருந்து வந்திருந்த தூதுவர்கள், தேசத்தைக் கைப்பற்றியிருந்த பகைவர்களில் சிலர் இறந்தார்கள் என்றும், சிலர் எதன் காரணமாகவோ பயந்து ஓடிவிட்டார்கள் என்றும் சொன்னார்கள். தேசம் திரும்ப கிடைத்து விட்டதென்றும், மக்கள் மன்னனை ஆவலோடு எதிர்பார்க்கிறார்கள் என்றும் செய்தி சொன்னார்கள்.

சால்வமன்னன் திரும்பி சாவித்திரியைப் பார்த்தான். கைகூப்பினான்.

"இவையெல்லாம் எளிதில் நடக்கக்கூடிய காரியமல்ல. சத்யவான் புதுப்பொலிவோடு காட்சியளிக்கிறான். அவனுக்கு நேற்று மரணம் நிகழ்ந்திருக்க வேண்டும். ஆனால், அந்த மரணம் நிகழாமல் அவன் பொலிவோடு வருவதைப் பார்த்தபோது, அதற்குக் காரணம் நீயாகத்தான் இருக்கும் என்று எனக்குத் தெளிவாகத் தெரிகிறது. என் கண்பார்வை கிடைத்ததும், என் தேசம் எனக்கு வாய்த்திருப்பதும் கூட உன்னால்தான் நிகழ்ந்திருக்க வேண்டும். உன்னை கைகூப்பி கேட்டுக் கொள்கிறேன். என்ன நடந்தது என்பதை உன் வாயால் சொல்."

சாவித்திரி, தன் புருஷனின் உயிரைக் கவர்ந்து போக எமதர்மன் வந்ததையும், அவனைத் தான் வரவேற்றதையும், அவனைப் புகழ்ந்து பேசியதையும், அவன் தனக்கு நான்கு வரங்கள் கொடுத்ததையும், ஒரு வரத்தால் மாமனாருக்கு பார்வையையும், இன்னொரு வரத்தால் மாமனாருக்கு ராஜ்யத்தையும், இன்னொரு வரத்தால் புருஷன் மூலம் நூறு குழந்தைகளையும், இன்னொரு வரத்தால் புருஷனுடைய உயிரையும் தந்தான் என்று சொல்லி எமதர்மராஜனின் புகழைப்பாடினாள்.

"சாவித்திரி, எதனால் உனக்கு இந்த பலம் வந்தது. இப்படி எமதர்மராஜனோடு போராடி புருஷனை மீட்டு கொண்டு வரக்கூடிய வலிமையை நீ அடைந்ததன் சூட்சமம் என்ன." ஆசிரமத்து அந்தணர்கள் வினவினார்கள்.

"என் புருஷனை நானே தேர்ந்தெடுத்துக் கொள்ள என் தகப்பன் எனக்கு அனுமதியளித்தது காரணம். அப்படி தேர்ந்தெடுத்துக் கொள்ளும் புத்தியை, ஞானத்தை எனக்களித்த இறைவன் காரணம். புருஷன் என்று ஒருவனை வரித்த பிறகு அவனை அந்நியன் என்று கருதாது, அவனை வேறு ஒரு உயிர் என்று நினைக்காது என்உயிரின் இன்னொரு பகுதி என்புருஷன் என்று நான் நினைத்தது காரணம். என் புருஷனும் என்னை அந்நியமாகக் கருதாது தன் உயிரின் இன்னொரு வடிவம் என்று நினைத்ததுதான் காரணம். நான் உடலாக இருந்ததைவிட, உயிராய் என் புருஷன் பின்னே நடந்தபோது அவரை நான் அதிகம் நெருக்கமாய் உணர்ந்தேன். என் புருஷன் என்பது உடம்பல்ல. அது என்னிலிருந்து கிளம்பிய இன்னொரு சக்தி. நாங்கள் அந்நியமல்ல. நாங்கள் ஒருவரே. நானே என்னை இழப்பது என்பது எங்ஙனம் என்று எனக்குப் புரிந்து போக, அவரைத் தொடர்ந்து போக முடிந்தது." என்று சொன்னாள்.

அந்தணர்கள் வியந்தார்கள். மறுபடியும் அவளை நமஸ்கரித்தார்கள்.

"சாவித்திரி இப்படிப்பட்ட அன்பு எல்லா பெண்களுக்கும் ஏற்படுவதில்லையே. உனக்கு மட்டும் ஏற்பட்டதே இதற்கு என்ன காரணம்."

"இதற்கு என் புருஷன் காரணம். என்னைக் காமரூபமாய் நினைக்காமல், ஆரம்பத்திலிருந்தே என் சக்தியை வியந்து பாராட்டி அந்த சூட்சும சக்தியை வணங்குகிறவராய் என் இறைத்தன்மையை போற்றுகிறவராய், என் உயிரை மதிக்கிறவராய், என் புருஷன் இருப்பதுதான் என்னுடைய சக்திக்குக் காரணம். நல்ல புருஷனால் ஒரு மனைவி மிகுந்த பலம் பெறுகிறாள். நல்ல மனைவியால் ஒருபுருஷன் முழுமையடைகிறான். நான் என்று சொல்லுகிற போது, என் புருஷனோடு சேர்த்துதான் நான் எப்போதும் பேசுகிறேன். என் புருஷனும் தான் என்று எண்ணுகிற போது என்னையும் சேர்த்தேதான் நினைக்கிறார். இந்த வலுவான நினைப்புதான் எங்களை உயர்த்தியது." என்று சொல்ல, மறுபடியும் முனிவர்களும், அந்தணர்களும், சான்றோர்களும் மனம் நெகிழ்ந்து பாராட்டினார்கள்.

"இப்படிப்பட்ட குணங்கள் உன் புருஷனுக்கு எப்படி அமைந்தன." என்று அந்தணர்கள் மறுபடியும் வினவ, சாவித்திரி அதற்கு பதில் சொன்னாள்.

"நல்ல தாய், தகப்பனுக்குப் பிறந்து, சான்றோர்களுக்கு நடுவே வளர்ந்து, நல்ல பழக்க வழக்கங்கள் கொண்டவனாய் என் புருஷன் வளர்ந்தபடியால்

அவருக்கு என்னை நன்கு பார்க்கின்ற.. உணர்கின்ற ஞானம் ஏற்பட்டது. அதேபோல் என் தகப்பன் ஒழுக்கமுடையவனாய், ஆரோக்கியமுடையவனாய் விளங்க, நல்ல பூஜை, புனஸ்காரங்கள் செய்து, தூபங்கள் செய்து, இறையருள் பெற்று என்னை மகளாக அடைந்ததால், அந்த இறையருளின் விளைவாக நான் புருஷனை நேசிக்கின்ற உள்மாரப் பார்க்கின்ற, என் உயிரின் இன்னொரு பதிப்பாகக் கவனிக்கின்ற சக்தியைப் பெற்றேன்.

இது நடந்ததற்கு சான்றோர்களான நீங்கள் காரணம். நல்ல தாய், தகப்பன்கள் காரணம். இறையருள் காரணம்." என்று கை கூப்பினாள்.

ஆசிரமம் அவள் பதிலால் ஆரவாரித்தது. சால்வ மன்னன் தன் ஊருக்குத் திரும்பி, மணிமுடி சூட்டிக் கொண்டு, ராஜ்ய பரிபாலனம் செய்து நீண்ட, நெடுநாள் வாழ்ந்து வந்தான்.

சாவித்திரி நானூறு வருடங்கள் தன் புருஷனோடு சுகித்து, நூறு குழந்தைகள் பெற்று அவர்களை சான்றோர்களாக வளர்ந்து பாரத சரித்திரத்தில் நீங்காது இடம் பெற்றாள்.

## கோவர்த்தனன்

**கோ**குலம் நந்தகோபரின் கட்டளைப்படி இந்திர பூஜைக்காக பரபரப்பாய் தன்னை ஆயத்தம் செய்து கொண்டது.

இந்திரன் மழைக்கு அதிபதி. மழை உலகில் நன்கு பெய்தால்தான் புற்கள் அதிகம் வளரும். புல்வெளிகள் செழிப்பாக இருந்தால்தான், காடுகள் அடர்த்தியாக இருந்தால்தான் யாதவர்களுடைய சொத்தான பசுக்களும் எருதுகளும் செழிப்பாகும். அதிகம் பால் சுரக்கும். அது அவர்களுடைய உபயோகத்திற்கும் விற்பனைக்கும் தங்கு தடையின்றி உணவுகள் கிடைக்கும். யாதவர் கூட்டம் பல்கிப் பெருகி பலமுள்ளதாய் வளரும். நோய், நொடியின்றி நீண்டநாள் இருக்கும். எனவே, இவையெல்லாவற்றிற்கும் அடிப்படையான மழையை ஆராதிப்பது, மழையின் தேவதையான இந்திரனை ஆராதிப்பது யாதவர்களுக்கு வழக்கமாக இருந்தது.

வெயிற்காலம் முடிந்து வசந்தம் ஆரம்பிக்கும் போது, அடுத்தபடி மழை வரவேண்டி இந்திரனை மனம் குளிர வைக்க யாதவர்கள் விரும்பினார்கள். அதிகமாக பெய்யாமலும், அறவே நிற்காமலும் அளவாக பெய்து எங்களை செழிப்பாக வாழ வைப்பாயாக என்று ஹோமங்களும் யாகங்களும் செய்து வைப்பார்கள்.

கோகுலம் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்த பொழுது, அவர்களிடையே வளர்ந்து வந்த பகவான் கிருஷ்ணர் ஏதும் தெரியாதவர் போல, "என்ன இங்கே நடக்கிறது. எதற்காக இந்த பூஜை. யாரை நோக்கி செய்யப் படுகிறது. இதனால் என்ன பலன்." என்று அங்குள்ள பெரியவர்களிடம் விசாரித்தார்.

கிருஷ்ணனின் ஆவலைக் கண்ட பெரியோர்கள், அவருக்கு மழையின் முக்கியத்துவத்தையும், மழைக்கு அதிபதியான இந்திரனின் முக்கியத்துவத்தையும் எடுத்துச் சொன்னார்கள்.

கிருஷ்ணர் யோசித்துவிட்டு வாய்விட்டுச் சிரித்தார்.

"என்ன.. எதற்குச் சிரிக்கிறாய் கிருஷ்ணா." பெரியவர்கள் கேட்டார்கள்.

"இந்த தயிர் கடையும் மத்து உபயோகம்தான். இதற்கும் பூஜை செய்வீர்களா. இந்தப் பானையும், கயிறும் உபயோகந்தான். இதற்கும் ஆராதனை நடக்குமா. நமக்கு குடை, செருப்பு என்றெல்லாம் பல்வேறு பொருட்கள் உதவுகின்றன. அவைகளையும் நீங்கள் பூஜை செய்வீர்களா..

காற்றுதானே மழையைக் கொண்டு வருகிறது. அப்பொழுது காற்றை ஏன் விட்டு விட்டீர்கள். வெய்யில் நன்கு அடித்தால்தானே கடல்நீர் ஆவியாகி மழையாகப் பெய்யும். அப்பொழுது சூரியனை ஏன் மறந்தீர்கள். வானம் இருந்தால்தானே சூரியனும், சந்திரனும் இருக்க முடியும். அதற்கு ஏன் படையல் போடவில்லை." என்று கேட்க பெரியவர்கள் என்ன சொல்வதென்று புரியாமல் திகைத்தார்கள்.

"எது முக்கியமோ அது சரி. மழை மட்டும் முக்கியமென்று பூஜை செய்கிறீர்கள். மழை மட்டும்தான் வரும் இனி வெய்யில் அடிக்காது என்றால் என்ன செய்வீர்கள்" என்று கேட்க அவர்கள் மிரண்டார்கள்.

"இந்திரனை பூஜை செய்கிறீர்கள். மற்ற தேவதைகள் கோபித்துக் கொண்டால் என்ன செய்வதாக உத்தேசம்." கிருஷ்ணர் கேட்கிற பொழுது யாதவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"இந்திரன் ஒரு தேவதை. ஒருசிறிய விஷயத்திற்கு அதிபதி. அவ்வளவே. வாயு ஒரு தேவதை. ஒரு சிறிய விஷயத்திற்கு அதிபதி. அவ்வளவே. ஆனால்,

இதற்கெல்லாம் ஆதி காரணமான பரம்பொருளை தியானிப்பதற்கு நீங்கள் கற்றுக் கொள்ள வேண்டும் மிகப் பெரிய சக்தியின் அங்கங்களாக இருக்கின்ற இவைகளை பூஜை செய்வதை விட்டுவிட்டு, எந்த மகாசக்தி இந்தப் பிரபஞ்சத்தை இயக்குகிறதோ, அதை நோக்கி தவம் செய்ய நாம் அறிந்து கொள்ள வேண்டும். அந்த மகாசக்தி அருள் செய்கிற போது நமக்கு நல்ல பலன்களும் தெளிவாகக் கிடைக்கும்." என்று சொன்னார்.

"அந்த மகசக்தி எது. எங்கிருக்கிறது. என்ன வடிவம்.." என்று பெரியவர்கள் கேட்டார்கள்.

"ரூபமற்றது அந்த மகாசக்தி. ஞானமில்லாதவர்களால் மனதுக்குள் சுவீகரிக்க முடியாதது அந்தப் பிரபஞ்ச சக்தி. எல்லாவற்றையும் இயக்குகின்ற அதைப் பார்ப்பது எளிதன்று. ஆனால், நாம் ஏதேனும் ஒரு உருவத்தை, அதற்குக் கொடுக்கலாம். எல்லா இடத்திலும் அது நிறைந்திருக்கிறபடியால், எல்லாமும் அதுவாக இருக்கிறபடியால், இதோ இந்த மலையைக் கூட மகாசக்தியாகக் கருதி இதற்கு வழிபாடு செய்யலாம்.

இந்திரனுக்கு வழிபாடு செய்யாவிட்டால் கோபித்துக் கொள்வான் என்று சொன்னீர்களே. இந்த மலை கோபித்துக் கொள்ளாது. தானே இந்த உலகம், தன்னால்தான் இந்த உலகம் என்று இந்த மலைக்குக் கர்வமில்லை. தான் ஒரு அடையாளம். தன்னை முன்னிறுத்தி மகாசக்தியை மக்கள் வணங்குகிறார்கள் என்று இந்தமலை அடக்கமாக இருக்கும். இந்திரன் அடக்கமில்லாமல் இருக்கிறான். அவனுக்கு எதற்கு பூஜை. புறக்கணியுங்கள்"

கிருஷ்ணர் பேசியதை எல்லோம் வாய் பிளந்து கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

ஒரு பெரியவர் எழுந்து நின்றார்.

"என்ன கிருஷ்ணா இப்படி பேசுகிறாய். காலம் காலமாக இருந்த வழக்கத்தை ஏன் மாற்றுகிறாய். ஒருவேளை இப்படி செய்து வந்த பூஜையை நிறுத்தி இந்திரனுக்கு பூஜை செய்யா விட்டால் அவன் கோபித்துக் கொள்வானே. அவன் மழை வராமல் செய்து நமக்கு தொந்தரவு தருவானே. கன்றுகளையும், பசுக்களையும் நாம் இழக்க வேண்டியிருக்குமே. நீ சொல்வது போல மலைக்குப் பூஜை செய்வோம். இந்திரனுக்கும் பூஜை செய்வோம்." என்று கேட்க மற்றவர்கள் ஆவலோடு கிருஷ்ணன் முகத்தைப் பார்த்தார்கள்.

"என்ன பயம் பார்த்தீர்களா. பூஜை செய்யாவிட்டால் கோபித்துக் கொள்ளும் என்கிற தேவதையை உபாசிப்பது



எவ்வளவு தவறு என்று பார்த்தீர்களா. இந்த வருடம் பூஜை செய்யாவிட்டால் இந்திரன் மழை அனுப்ப மாட்டான் என்றால் அவன் கடவுளா. அவன் தேவதையா. அவன் கருணை மிக்கவனா. உயர்ந்தவனா. இல்லையே.. ஒரு அவலுக்கு கட்டுப்படுகின்ற சாதாரண பைசாசம் போல் அல்லவா இந்திரன் எனக்கு காட்சியளிக்கிறான். பைசாசத்திற்கு உணவளித்தால் அது உங்களுக்கு கூலிவேலை செய்யும். உணவு இல்லாவிட்டால் அது உங்களையே அடித்துப் போடும். அதேபோல் இந்திரன் ஒரு பைசாசமாக அல்லவா நீங்கள் சொல்லும் போது எனக்குத் தெரிகிறது. எனவே இந்த பைசாச பூஜையை விட்டுவிட்டு எங்கும் நிறைந்த சக்தியை வழிபடுவோம். மலையை முன்னிறுத்துவோம். அதற்குப் படையல் வைப்போம்." என்று சொல்ல கூட்டம் மெளனமாக இருந்தது.

"ஏன் மெளனமாக இருக்கிறீர்கள்." என்று கேட்டார். மறுபடியும் வேறு ஒருகிழவர் எழுந்தார்.

"இந்த பூஜையை, இந்த மலை ஏற்றுக் கொள்ளாது போனால் அச்சான்யமாக இருக்குமே" என்று சொன்னார். "பூஜையை இந்திரன் ஏற்றுக் கொள்வது உங்களுக்கு எப்படித் தெரியும்."

"இந்திர பூஜை செய்கிற போது பூஜை முடிந்த பிறகு மெல்லிய ஒரு மழைத்தூறல் விழும். பூஜையை இந்திரன் ஏற்றுக் கொண்டான் என்று நாங்கள் குதூகலமடைவோம்."

"அப்படியா.. அதேவிதமாக பூஜையை செய்யுங்கள். இந்த மலையின் சக்தியும் உங்கள் முன்பு தோன்றும். வணக்கத்துடன் உங்கள் பூஜையை ஏற்றுக் கொள்ளும்." என்று சொன்னார்.

"கிருஷ்ணரே சொல்லிவிட்டார். இனி எதற்காக மறுபேச்சு. அவர் என்ன சொன்னாரோ அதைச் செய்யுங்கள்." என்று கோகுலத்துப் பெண்கள் கோபிக்க, ஆண்கள் சரியென்று அரை மனதோடு சம்மதித்தார்கள்.

இப்படி திடுமென்று மாற்றுகிறோமே என்று ஒரு மத்தியவயசாளி எழுந்து நின்று கவலையைத் தெரிவிக்க, பெண்கள் அவரை சூழ்ந்து கொண்டார்கள்.

"இந்திர விழா ஏன் எடுக்க வேண்டுமென்று கேட்டதற்கு பதில் சொல். ஏன் மலைக்கு விழா எடுக்கக் கூடாது என்றாவது தெரிவி. எதுவும் இல்லாமல் வெறுமே புலம்பிக் கொண்டிருந்தால் என்ன பிரயோஜனம். புலம்பலை நிறுத்தி யார் இங்கு தெளிவாகப் பேசுகிறார்களோ அந்தத் தெளிவை பின்பற்றக் கற்றுக்

கொள்ளுங்கள்." என்று அவரை அச்சுறுத்த, அவர் அடங்கிப் போனார்.

விழா திசை திரும்பியது. இந்திரனுக்கு என்ன பிடிக்கும் என்று யோசித்த யாதவர்கள், மலைக்கு என்ன பிடிக்கும் என்று யோசித்தார்கள்.

ஸ்ரீ கிருஷ்ணனை கேட்டார்கள். "இந்திரனுக்கு என்னவெல்லாம் பிடிக்குமோ அதுவெல்லாம் மலைக்கும் பிடிக்கும். எனவே இதுவரை செய்து வந்த அதே சடங்குகளை மலைக்கும் செய்யுங்கள்." என்று சொல்ல, அவர்கள் மலைக்கு நடுவே ஒரு நல்ல இடம் தேர்ந்தெடுத்து, அந்த இடத்தை சுத்தம் செய்து, மேடை அமைத்து மேடையின் மீது நிவேதனப் பொருட்களை வைத்து தீபதூபம் காட்டி மலையை நோக்கிக் கும்பிட்டார்கள். இந்த எளிய காணிக்கைகளை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று குழந்தைகளைப் போன்று வேண்டினார்கள்.

எங்கும் இருக்கிற பிரபஞ்ச சக்தி மலைக்குள்ளும் இருந்தது. அது அசைந்தது. குழந்தைகள் போல் யாதவர்கள் கை கூப்பி நிற்பதைப் பார்த்து நெகிழ்ந்தது.

"அடடே எனக்கா. எனக்கா இவைகள். நன்றி ஸ்ரீகிருஷ்ணா, நன்றி." என்று கிருஷ்ணரை துதித்தது. அதன் நெகிழ்ச்சியினால் உச்சியிலுள்ள பாறைகள் உருண்டன.

முகடுகளில் குதித்து ஓடிவந்து எங்கு படையல் இருந்ததோ அங்கு வந்து ஒரு பெரும் பாறை நின்றது. ஜனங்கள் ஓடிப்போய் அந்தப் பாறையைத் தழுவிக் கொண்டார்கள். முத்தமிட்டார்கள். அதற்கு சந்தன குங்குமம் தடவினார்கள். நமது பூஜை ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டது என்று குதூகலித்தார்கள். கிருஷ்ணரும் அவர்களோடு சேர்ந்து ஆடினார். பாடினார். கொண்டாடினார்.

இந்திரன் கோபமானான். 'என்ன முட்டாள்தனம். ஒரு வாயாடிச் சிறுவன் சொல்வதைக் கேட்டுக் கொண்டு வயதில் பெரியவர்கள் இவ்வளவு பெரிய அபத்தத்தை செய்கிறார்களே. எனக்கு வழக்கமாகச் செய்யும் பூஜையை புறக்கணித்து விட்டார்களே. நான் யாரென்று இவர்களுக்கு மறந்து போய் விட்டது. இவர்கள் மீதுள்ள பிரியத்தால் இவர்களைக் கண்ணில் வைத்து காப்பாற்றியது தவறாகப் போய் விட்டது. என்னுடைய பலம் என்ன என்பதை இவர்களுக்கு நான் காட்டியே ஆக வேண்டும்.

உலகத்தில் பயம்தான் பக்தியைத் தருகிறது. பயமில்லாது பக்தி வருவதில்லை. மாறாய் அலட்சியம் ஏற்பட்டு விடுகிறது. அகம்பாவம் பிறக்கிறது. எனவே, இவர்களுக்கு பயமுறுத்தலை செய்து நான் யாரென்று காட்டுகிறேன்.' என்றார்.

தன்னுடைய மேகப் படையை அனுப்பி வெகு உக்கிரமாக கோகுலத்தை தாக்கச் சொன்னான்.

மேகங்கள் நாலாபுறம் திரண்டு வந்தன. கோகுலத்தை சூழ்ந்து கொண்டன. வாயுவின் உதவியையும் இந்திரன் நாட, வாயுவும் இந்த தாக்குதலுக்கு உதவி செய்தான். வேகமாக காற்று கோகுலத்தை சுற்றி அடித்தது. கூரைகள் பிய்த்து எறியப்பட்டன. மரங்கள் வேரோடு விழுந்தன. காற்று அடிக்கின்ற சமயமே மிகுந்த பலத்தோடு மழை தரையை மோதியது.

மழைத்துளிகளின் வேகம் தாங்காமல் மாடுகள் கதறின. முன்னும், பின்னும் அலைந்தன. காய்களும், கனிகளும் உதிர்ந்தன. கிளைகள் முறிந்தன.

பூமியில் அங்கங்கே நீண்ட பள்ளங்கள் ஏற்பட்டன. மழை அடித்துப் பெய்தது. குடை பிடித்த யாதவர்களை வேகமாகத் தாக்கியது. குடையை உடைத்துப் போட்டது. வீடுகளை நிர்மூலமாக செய்தது. காற்றினால் சுவர்கள் தள்ளப்பட்டன. மிகப் பெரிய கலவரம் அங்கு ஏற்பட்டது.

"கிருஷ்ணா.. கிருஷ்ணா.. பார்த்தாயா. இந்திரன் கோபித்துக் கொண்டு விட்டான். அவன் ஆத்திரமாகி விட்டான். நம்மை அழிப்பதென்று தீர்மானம் செய்து விட்டான். இனி நமக்கு என்ன கதி மோட்சம். நான் எங்கு போய் நிற்போம். இத்தனை காளைகளையும் கன்றுகளையும் இழந்து விட்டு நம்மால் வாழ முடியுமா. ஒவ்வொன்றாக மடிந்து கொண்டிருக்கின்றன கிருஷ்ணா. பசுக்கள் அடி தாங்காமல் சுருண்டு விழுந்து கொண்டிருக்கின்றன. ஆற்றில் அடித்துக் கொண்டு போய் இருக்கின்றன. இவைகளை எப்படி காப்பாற்றுவது. இவைகளைக் காப்பாற்றுவது இருக்கட்டும். நம்முடைய குழந்தைகளும் பெண்களும் உயிரோடு இருப்பார்களா என்று தெரியவில்லை. குழந்தைகள் மழைத்துளியின் வேகம் தாங்காமல் கதறுகின்றன. ஒதுங்குவதற்கு இடில்லை. வீடுகளெல்லாம் காற்றால் பிய்த்து எறியப்பட்டு விட்டன. இப்போது என்ன செய்வது. இந்திரனிடம் மன்னிப்புக் கேட்கலாமா." பெரியோர்கள் கதறினார்கள். பெண்கள் விம்மி விம்மி அழுதார்கள். குழந்தைகள் வீறிட்டன.

"எதற்கு வீண் பயம். கூரைகள் இல்லாமல் தானே இந்த

அவஸ்தையைப் படுகிறீர்கள். இந்திரன் கூரையை பிய்த்து விட்டானோ என்றுதானே பயப்படுகிறீர்கள். பிய்க்க முடியாத கூரையை தருகிறேன். கவலை வேண்டாம். என்று சொல்லி மலைக்கு அருகிலே போய் மலையைத் தூக்கி தனது வலது கை சுண்டு விரலில் நிற்க வைத்தார் மலைக்குக் கீழே மிகப்பெரிய ஒருஇடம் ஏற்பட்டது.

கன்றுகளும், பசுக்களும் எவர் உத்தரவும் கேட்காமல் மழைக்குப் பயந்து அதற்கு அடியே ஓடி நின்று கொண்டன. பசுக்கள் பயமின்றி உள்ளே போவதைப் பார்த்த ஜனங்களும் பின்னால் ஓடினார்கள். சுற்றி, சுற்றிப் பார்த்தார்கள். கீழே மிருதுவான மண் இருந்தது. ஈரப் படாமல் உலர்வாக இருந்தது. நல்ல மாணிக்கக் கற்களும் மரகதக் கற்களும், சந்திரகாந்த கற்களும் இருந்தன. ஜனங்கள் அதை எடுத்துக் கொண்டே மலையின் மத்திய பாகத்திற்கு போனார்கள். அமைதியாக உட்கார்ந்து கொண்டார்கள்.

குழந்தை ஸ்ரீ கிருஷ்ணன் கையிலே தாங்கிக் கொண்டிருக்கிறானே. அவனுக்கு கை வலிக்குமே என்று கவலைப்பட்டார்கள். மலையைத் தூக்க முடிந்த கிருஷ்ணனால் மலையை தாங்கவும் முடியும். எனவே அவதாரமான ஸ்ரீ கிருஷ்ணர் இங்கு ஏதோ நடத்திக் கொண்டிருக்கிற லீலைக்கு சாட்சியாக மட்டுமே இருப்போம். வேறு எந்தக் கேள்வியும் கேட்காமல் அவருக்கு அருகே நின்று கொள்வோம்.' என்று வட்டமாய் கிருஷ்ணனையே பார்த்தபடி நின்று கொண்டிருந்தார்கள்.

மழை விடாது பெய்தது. ஏழுநாட்கள் யாதவர்கள் இருந்த இடத்தை சூறையாடியது. விதம் விதமாகத் தாக்கியது. விட்டு விட்டுத் தாக்கியது. ஆயினும் உள்ளே ஒரு சொட்டு ஜலம் கூட வரவில்லை.

மழையின அடிவாரத்திலுள்ள புற்களை சிறிது மாடுகள் மேய்ந்தன. கையில் கொண்டுவந்திருந்த சிற்றுண்டிகளை யாதவர்கள் பகிர்ந்து கொண்டார்கள். குழந்தைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள். பிறகு பெண்களை சாப்பிட வைத்தார்கள். பிறகு கிழவர்கள் உணவருந்தினார்கள். வாலிபர்களும், மத்தியதர வயது ஆண்களும் ஏழுநாட்களும் முழுவதுமாய் பட்டினி இருந்தார்கள். நீரும் குடிக்க மறுத்து உறுதியாக இருந்தார்கள்.

இந்திரன் இதற்குமேல் என்ன முயற்சித்தாலும் யாதவர்களை ஒன்றும் செய்ய முடியாது என்று தெரிந்து



கொண்டான். மெல்ல பின் வாங்கினான்.

மேகங்கள் விலகிக் கொண்டன. வானம் பளீரென்று நிறமாயிற்று. வட்ட திகிரியாய் மெல்லிய சிகப்புநிறமாய், கிழக்கில் ஆதவன் தோன்றினான். இதமான சூட்டை உலகமெங்கும் பரப்பினான்.

ஒரு மலையின் கீழ் ஏழுநாட்கள் அதிகம் அசையாது உட்கார்ந்திருந்த யாதவர்களும் அவர்கள் குழந்தைகளும் பெரிய வலிவு பெற்றார்கள். கிருஷ்ணரை நோக்கி மிகுந்த மரியாதையோடு கைகூப்பினார்கள். சகலரும் வெளியே வந்து தங்கள் இருப்பிடத்தை செப்பனிடத் துவங்கிய போது, இந்திரன் ஸ்ரீ கிருஷ்ணரிடம் வந்து மன்னிப்புக் கேட்டான். ஸ்ரீ கிருஷ்ணர் அவனை புன்சிரிப்போடு மன்னித்து விடை கொடுத்தனுப்பினார்.

என்ன சொல்கிறது இந்தக் கதை. எது பிரபஞ்சத்தின் ஆதாரமோ, எது உயிர் வாழ்தலின் மையப் பொருளோ அதை நோக்கி உணர்தலை திருப்பி விட வேண்டும். பிரபஞ்சம் முழுவதும் நிரம்பிய சக்திதான் எல்லா இடத்திலும் நிரம்பியிருக்கிறது. தன்னுள்ளும் அதுவே தங்கியிருக்கிறது என்பதை உணர வேண்டும். தன்னுள் இருக்கிற சக்தியை உணரும்போது அதுவும் பிரபஞ்சமும் வேறல்ல என்று தெரியவரும். அதை விட்டு விட்டு உடம்பாலும், மனதாலும் சுவீகரிக்கின்ற விஷயங்களில் நாட்டம் செலுத்தி, அவைகள்தான் முக்கியம் என்று நினைக்கிற் பொழுது, அரைகுறை வழிபாடாய் தேவையற்ற விஷயமாய் போய் விடுகிறது.

தேவையற்ற விஷயங்களில் ஈடுபடாது, எது முக்கியமோ, எது உண்மையோ, எது சத்தியமோ அதை யாதவர்கள் தொடர வேண்டுமென்று இதைச் செய்தார் கிருஷ்ணர்.

மழை என்பது என்ன. ஆரவாரம். இடைவிடாத அலையல், அட்டகாசம். மலை என்பதென்ன அசலம். அ+சலம். அதாவது சலனமற்று இருத்தல். அசையாது இருத்தல். அசைகின்ற ஆர்ப்பரிக்கின்ற. அட்டகாசம் செய்கின்ற மழையில் இருந்து நகர்ந்து. சலனமற்ற தன்மைக்கு மனம் போய்விட வேண்டும். மனம் அந்த சலனமற்ற தன்மைக்குக் கீழே அமர்ந்து கொள்ள வேண்டும். பிறகு ஏழுநாட்கள் இந்தத் தவம் செய்யப் பட வேண்டும்.

உங்களைச் சுற்றி ஆரவாரமும், ஆர்ப்பாட்டமும் நடந்து கொண்டுதானிருக்கும். ஆனால், நீங்கள்

அமைதியாய் உள்ளே அமர்ந்து விட வேண்டும். மனதை செயலற்றதாகச் செய்து விட வேண்டும். என்ன நடந்தாலும் கவலையில்லை என்று உட்கார்ந்து வி வேண்டும்.

உண்மையான சத்தியத்தை தேடுகிறவர்கள், ஒரு ஏழு நாட்கள் மிகுந்த வேதனைக்கு உள்ளாவார்கள். ப தாகத்தால் ஏற்படுகின்ற வேதனைகளை பொறுத்து கொண்டு, தூக்கமின்றி வெறுமே தன்னைக் கிடத்தி கொண்டிருக்கும்பொழுது, மிகுந்த உன்னதமான மாறுதல்கள் ஏற்படும். அந்த மாறுதல்களால் ஆன் பலமும், மனோ பலமும் உடல் பலமும் பெருகும் செயற்கரிய காரியங்களைச் செய்கின்ற ஒரு சக்தி ஏற்படும்

மலையை ஸ்ரீகிருஷ்ணர் தாங்கியது என்ன சொல்கிறது. அசலத்தை அதாவது சலனமற்ற தன்மையை இறைவன் சுண்டுவிரல் நுனியில் வைத்து கொண்டிருக்கிறான். அவன் நினைத்தால் சலனம். அவன் நினைத்தால் அசலம். நகர்வதும், நகராததும் அவனுடைய கட்டுப்பாட்டிலே இருக்கின்றன. எல்லாம் அவனுக்கு கீழ்படிகின்றன. எந்த ஆரவாரமும், எந்த ஆர்ப்பாட்டமும் அவனை எதுவும் செய்வதில்லை. அவன் எல்லாம் கடந்தவனாக, எதுவும் செய்ய முடிந்தவனா இருக்கிறான்.

சத்தியத்தைத் தேடி பிரபஞ்ச சக்தியை உண முற்படுகிறவனுக்கு ஒரு ஏழுநாட்கள் கடுமையான சோதனைக் காலமாக இருக்கும் என்று சொல்லப்படுவதுண்டு. அதைத் தாண்டி விடுகிற போது மிகுந்த தெளிவோடும், சிரிப்போடும், சந்துஷ்டியோடு அவர்கள் வெளிவருவது இங்கே நிகழ்ந்ததுண்டு. இ ஒரு சூட்சுமமான யோக ரகசியம்.

இறைவன் காலடியில் உட்கார்ந்து தவம் செய்ய அமைதியாக இருக்க, சலனமற்று கிடக்க, கற்றுக் கொள்ள வேண்டுமென்பதை இந்தக் கதை சொல்கிறது. இருக்க முயற்சிப்போம். இறையருள் காக்கும்.

# ஆண்டாள் திருக்கல்யாணம்

அந்த அடர்த்தியான துளசிச் செடியில் கீழிருந்து தான் அந்தப் பிஞ்சுக்குரல் பெரியாழ்வாருக்குக் கேட்டது.

அது அழுகுரலா. இல்லை.. அழைப்புக்குரலா பெரியாழ்வாருக்குச் சந்தேகமாக இருந்தது. இரண்டுமோ என்று தோன்றியது. செடிகளை விலக்கி உள்ளே போய்



அந்தக் காலைநேர வெளிச்சத்தில் தேட, ஒரு துணிச்சுருள் அசைவது தெரிந்தது. அருகே உட்கார்ந்து மண்டியிட்டு கவனிக்க, காற்று லேசாகத் துணியைக் கலைத்து உள்ளுக்குள் இருக்கின்ற குழந்தையைக் காட்ட, பெரியாழ்வார் பரவசமானார்.

குழந்தை இவரைப் பார்த்ததும் அழுகையை நிறுத்திவிட்டு சட்டென்று சிரித்தது. முகம் மலர கைதட்டி ஏதோ சொல்வது போல் குரல் கொடுத்தது. பெரியாழ்வார் கிறங்கிப் போனார். மறுபடியும் வாடைக் காற்று அடிக்க, 'கிருஷ்ணா.. இந்தக் குழந்தைக்குக் குளிருமே' என்று வாரி எடுத்துக் கொண்டார். குழந்தை அவர் துளசிமாலையைப் பிடித்துக் கொண்டது.

இது பெண் குழந்தை.. இந்தக் குழந்தையை என்ன செய்வது. யார் குழந்தை இது.. யாருமில்லாத நந்தவனத்தில் ஒரு குழந்தை இருந்து. அதை ஒருவன் அள்ளி எடுத்தான் எனில் அதற்குப் பிறகு அவனால் அந்தக் குழந்தையை கீழே வைக்க முடியுமா. அப்படி வழங்கி விட்டாலும் அந்தக் குழந்தையைப் பற்றி ஏதும் சிந்திக்காமல் இருக்க முடியுமா. இந்த சம்பந்தம் தெய்வ சம்பந்தமல்லவா. எப்படி இதை விட்டுவிட முடியும்.

அதே நேரம், தனியாய் இறைவழிபாடு தவிர, வேறு எதுவும் செய்யாது வாழ்ந்து கொண்டிருக்கின்ற எனக்கு இந்த சுமை அவசியம்தானா. இதை என்னால் தாங்க முடியுமா. இது என் இறை வழிபாட்டை குலைக்காமல் இருக்குமா. அல்லது வேறு ஏதேனும் சிக்கலில் சிக்கிக் கொள்ள பெண் குழந்தையை வாரி எடுத்திருக்கிறேனா. பெரியாழ்வார் தவித்தார்.

இங்கு யாராவது இருக்கிறார்களா என்று தேடினார். மறுபடியும் பூமியிலேயே போட்டு விடலாமா. ஏதோ தெய்வாம்சம் நிறைந்த குழந்தையாய்த் தெரிகிறது. சற்று நேரம் பூமியில் விளையாடிவிட்டுப் போகும் கந்தர்வனாக அல்லது கந்தர்வியாக இந்தக் குழந்தை இருக்கலாமா. நான்தான் தெரியாமல் வாரி எடுத்து விட்டேனா. மறுபடியும் பூமியில் கிடத்தி விட்டால் சட்டென்று மறைந்து வானத்திற்குப் போய் விடுமோ. குழந்தையை தரையில் கிடத்தலாமா.

மறுபடியும் பூமியில் கிடத்த முயற்சி செய்த போது குழந்தை அவர் துளசி மாலையை விடாது பிடித்துக் கொண்டு தரையிறங்க மறுத்தது போல் இருந்தது. அவர் இன்னும் சற்று வேகமாய் முயற்சி செய்ய, பெருங்குரலெடுத்து அழுதது. சமாதானம் செய்ய மறுபடியும் குழந்தையைப் பெரியாழ்வார் அணைத்துக்

கொண்டார். குழந்தை தொடர்ந்து அழுதது.

'தாயே.. என் அம்மையே. உன்னை என்ன சொல்லி சமாதானப்படுத்துவது.' விதம்விதமாய் முயற்சிகள் செய்தார். தொடர்ந்து அழுதது. வேண்டுமென்றே அழுவது போல் இருந்தது.

என்ன குறும்பு இது. காலையில் பலநூறு வேலைகள் எனக்கிருக்க.. அதற்கிடையே உன்னை சுமந்து கொள்ள இறைவன் வழிவகுத்திருக்கிறான். நல்லது. வா. நம்மிடத்திற்குப் போவோம் என்று குழந்தையைத் தூக்கிய வண்ணம் குடிலுக்குப் போனார். குடிலுக்கு நகர குழந்தை அழுகையை நிறுத்தியது. அந்தக் குழந்தைக்கு, கோதை என்று பெயரிட்டார்.

அந்த தேசம் பாண்டிய தேசம். அந்த ஊர் ஸ்ரீவில்லிபுத்தூர். அங்கே விஷ்ணுசித்தன் என்ற பெயரில் இறைவனுக்கு நந்தவனம் அமைத்து தினந்தோறும் துளசியும், இதர பூக்களும் கொய்து மாலையாக்கி, ஸ்ரீவில்லிப்புத்தூரில் வடபத்ரசாயி எனப்படும் வடபெரும் கோயிலுடையானுக்குச் சார்த்தி, சந்தோஷமாய் தன் வாழ்நாட்களை கழித்துக் கொண்டிருந்தவரை பெரியாழ்வார் என்று மக்கள் பெயர் சூட்டி மகிழ்ந்தனர். பெரியவர் பெரியவர் என்று கொண்டாடினர்.

அந்தப் பெரியவர் இன்னும் அற்புதமான பாடல்களை இயற்ற வேண்டுமென்று கருதி, அந்தப் பரம்பொருள் அவருக்கு கோதையை தூண்டுகோலாகக் கொடுத்தார். கோதையை வளர்க்கின்ற ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு விநாடியும், ஒவ்வொரு செயலிலும் அவர் கண்ணபிரானைத் தெளிவாக உணர்ந்தார். பாடல்களை இயற்றினார்.

நந்தவனம் அமைத்து தொண்டு செய்து வரும் மாலைக்காரரான விஷ்ணுசித்தருக்கு ஒரு பெண் குழந்தை பரிசாகக் கிடைத்திருக்கிறது. நந்தவனத்திலேயே கிடைத்ததாம். மிக வேகமாக அழுததாம். இவர் கையிலெடுக்க நின்று போயிற்றாம். மறுபடியும் தரையில் விடலாம் என்றால் மாலையைப் பிடித்துக் கொண்டு கீழே இறங்க மாட்டேன் என்று அடமாம். மிகப் பெரிய கண்களாம். அழகாம். கொள்ளைப் பேச்சாம். என்று ஊர் மக்கள் கொண்டாடினார்கள். வந்து வந்து குழந்தையைப் பார்த்தார்கள்.

தனக்குக் கிடைத்த குழந்தையை நினைக்கும் பொழுதெல்லாம் அவருக்கு கண்ணன் நினைப்பு வந்தது. ஊர் வந்து பார்த்தது கூட கவிதையாயிற்று.

பிள்ளை பிறந்த மகிழ்ச்சியால் ஓடுவார். விரைந்ததால்



சுண்ணம் மிதித்து விழுவார். ஒருவரையொருவர் மகிழ கட்டித் தழுவுவார். பிள்ளை எங்கே.. எங்கிருக்கிறது.. எவர் வீட்டில் இருக்கிறது என்று இங்கும், அங்கும் தேடுவார்.

தலைவன் இடைச்சேரியில் பிறந்துள்ளான் என்று அவன் அருளை எண்ணி எண்ணி பாட்டால் புகழ்வார். பல்வகையான பறைகளை முழக்குவார்.

அதற்கேற்ப பாடுவார். இப்படி ஆயர்பாடி களிப்பில் திளைத்தது என்று பெரியாழ்வார் குழந்தை பிறந்ததைப் பாடுகிறார்.

**ஓடுவார், விழுவார், உகந்து ஆலிப்பார்,**
**நாடுவார், நம்பிரான் எங்குற்றான் என்பார்.**
**பாடுவார்களும் பல்பறை கொட்ட நின்று**
**ஆடுவார்களும் ஆயிற்று ஆய்ப்பாடியே.**

குழந்தை கோதை மிக அழகாக வளர்ந்தாள். அவளை மடியில் வைத்து உற்றுப் பார்த்தார். விஷ்ணுசித்தர் என்கிற பெரியாழ்வார்.

குழந்தைக்கு பால் தருவதற்கு ஆய்ச்சிகளை ஏற்பாடு செய்தார். அவர்கள் வந்து உணவுதர அது மூக்குறிஞ்சி குடித்ததைப் பார்த்து வியந்தார். பால் குடித்து திண்ணையில் கிடக்கும் குழந்தையை ஆவலோடு பார்த்தார்.

**பணைத்தோள் இள ஆய்ச்சி பால் பாய்ந்த கொங்கை**
**அணைத்து ஆர உண்டு கிடந்த இப்பிள்ளை**
**இணைக்காலில் வெள்ளித் தளை நின்று இலங்கும்**
**கணைத்தால் இருந்தவா காணீரே, காரிகையீர்; வந்து**
**காணீரே.**

என்று பாடினார்.

கோதையைப் பார்க்கும் பொழுது கண்ணனின் நினைவு வந்தது. கண்ணனின் நினைவு வந்த போதெல்லாம், கோதையின் திருவுருவம்தான் அவர் மனதுக்குள் நின்றது.

ஆய்ச்சியர்களுக்கு நடுவே கண்ணன் முலைப்பால் உண்டது போல தாயில்லாத கோதை ஸ்ரீவில்லிபுத்தூரின் அழகிய பெண்களின் தனங்களிலிருந்து உணவு எடுத்துக் கொண்டாள். ஆரோக்கியமாக வளர்ந்தாள்.

ஆண்டாள் சுற்றி நாலு திசையும் பார்க்கத் துவங்கி விட்டாள். மனிதர்களைப் பார்த்ததும் அவர்களைப் பார்த்து குரலெழுப்பக் கற்றுக் கொண்டு விட்டாள். அவர்கள் சிரித்தால் சிரிக்கவும், அதட்டினால் முகம் திருப்பவும் கற்றுக் கொண்டு விட்டாள்.

பறவைகளையும், வண்ணத்துப் பூச்சிகளையும், பூக்களையும், இலைகளையும், வெளிர் வானத்தையும்,

சூரியனையும், சந்திரனையும் ஆவலோடு பார்க்க ஆரம்பித்தாள்.

அன்று பௌர்ணமி, தகதகவென்று நிலவு மேலெழுந்தது. கோதை அதைப் பார்த்துவிட்டு வா, வா என்று கையசைக்கிறாள். யார் சொல்லிக் கொடுத்தார்கள் என்று தெரியவில்லை. பாலூட்டிய ஆய்ச்சி எப்போதேனும் சொல்லிக் கொடுத்திருக்கலாம். பௌர்ணமி நிலவைக் கண்டதும் குழந்தை வேகமாக வா, வா என்று அழைக்கிறது. உடனே வர வேண்டும் என்று எகிறித் துடிக்கிறது. பெரியாழ்வார் வியந்து பார்த்தார்.

சக்கரக் கையன் தடங்கண்ணால் மலர விழித்து ஒக்கலைமேல் இருந்து உன்னையே சுட்டிக் காட்டும் காண்; தக்கது அறிதியேல், சந்திரா சலம் செய்யாதே; மக்கட் பெறாத மலடன் அல்லையேல் வா, கண்டாய்.

'கண்ணன் என் இடுப்பில் இருந்து தன்னுடைய பெரிய கண்களாலேயே உன்னை மலரப் பார்த்து வேறொருவரையும் நோக்காமல் உன்னையே கை காட்டுகிறான். உனக்குத் தகுதியானது நீ அறிவாயல்லவா. எல்லோருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்ற நிலவே, இவனுக்குக் கோபம் கொடுத்து விடாதே. நீ பிள்ளை பெற்றவன்தானே. வெறும் மலடன் அல்லவே. அப்படிப்பட்ட புத்தி இருப்பின் இந்தப் பிள்ளை அழைக்கிறது. உடனே வா, என்று கூப்பிடுகிறார்.

ஆண்டாளின் அசைவு கண்ணனின் அசைவு, கண்ணனின் அசைவுகளெல்லாம் ஆண்டாள் மூலம் விஷ்ணுசித்தர் என்கிற பெரியாழ்வாருக்குத் தெரிய வந்தது.

ஆண்டாள் நடக்கத் துவங்கினாள். வீட்டிற்குள் இங்கும் அங்கும் ஓடத் துவங்கினாள். விஷ்ணுசித்தர் பின்னாலேயே ஓடிப் போய் அவளைப் பார்த்தார். வாசற் குரட்டில் விட்டால் எழுந்து தோட்டத்துப் பக்கம் ஓடினாள். மணல் மேல் கால் வைத்து தன் பாதம் பதித்து பூக்கள் பறிக்க நகர்ந்தாள். அந்தப் பாதங்களைப் பார்த்ததும் பெரியாழ்வார் தன் வசம் இழந்தார்.

*ஒரு காலிற் சங்கு ஒரு காலிற் சக்கரம்*
*உள்ளடி பொறித்து அமைந்த*
*இரு காலுங் கொண்டு அங்கு அங்கு எழுதினாற்போல்*
*இலச்சினை பட நடந்து*
*பெருகாநின்ற இன்ப- வெள்ளத்தின்மேல்*
*பின்னையும் பெய்து*
*தரு கார்க் கடல்வண்ணன் காமர் தாதை தளர்நடை நடவானோ:*



என்று கோதை நடையை கண்ணனின் நடையாகக் கண்டு விம்முகிறார் பெரியாழ்வார்.

பல்வேறு பருவங்களை கோதை கடக்க எல்லா பருவமும் பெரியாழ்வாருக்கு தெள்ளெனத் தெரிகிறது. அத்தனையும் பாட்டாகியது. கண்ணன் இப்படித்தான் வளர்ந்திருப்பான். கண்ணன் இப்படித்தான் செய்திருப்பான். கண்ணன் இவ்விதமாக நடந்திருப்பான் என்று தெள்ளத் தெளிவாகப் புரிகிறது.

ஐந்து வயது பெண் குழந்தைக்கும் ஆண் குழந்தைக்கும் வித்தியாசம் உண்டு. ஐந்து வயது வரை எல்லா குழந்தைகளும் ஒரே மாதிரிதான்.

ஐந்து வயதானதும் பெண்ணிற்கே உரிய நளினங்களோடு கோதை அமைதியாக இருக்க, கண்ணன் வேறு விதமாக இருப்பான் என்று விஷ்ணுசித்தருக்கு தோன்றியது. ஆனால், பாடல் எழுத உதவி செய்ய வந்தவளாயிற்றே. இப்பொழுது அவள் அமைதியாக பெண்ணின் நாணத்தோடு நடந்து கொண்டால் கண்ணனை நினைவு கூர்வதற்கு வேறு என்ன வழி என்று யோசித்தார்.

குழந்தையை எதிரே வைத்து கிருஷ்ணனைப் பற்றி அவளுக்குச் சொல்லத் துவங்கினார். குழந்தை கதைக் கேட்கவே பிறந்தது போல் உட்கார்ந்து, கன்னத்தில் கைவைத்து, 'சொல்லுங்கள் அப்பா, சொல்லுங்கள் அப்பா, இன்னமும் கிருஷ்ணனைப் பற்றி சொல்லுங்கள் அப்பா' என்று அதிகம் கேட்கத் துவங்கினாள்.

கோதைக்கு கதை சொல்லுகிற சாக்கில் அந்தப் பரந்தாமனைப் பற்றி பெரியாழ்வார் அதிகம் நினைக்கத் துவங்கினார். அவனைப் பற்றி யோசிக்கத் துவங்கினார். எப்படியெல்லாம் அவன் வாழ்க்கை இருந்திருக்கும் என்று நினைத்து கோதைக்கு கதையாகச் சொல்லத் துவங்கினார். கோகுலத்தை வர்ணிக்கத் துவங்கினார்.

"கோதை, ஒருநாள் என்ன நடந்தது தெரியுமா. கோகுலத்திலுள்ள யசோதையின் வீட்டை நோக்கி ஓர் ஆய்ச்சி வேகமாகக் கத்திக் கொண்டே வந்தாள். வாசலில் அமர்ந்தவர்களெல்லாம் பயந்து போய் எழுந்து என்ன என்று பார்த்தார்கள். வேறு சில ஆய்ச்சிகளும், அவள் போய் என்ன செய்யப் போகிறாள் என்று பயந்து அவளைப் பின் தொடர்ந்தார்கள்.

யசோதையின் வீட்டுக்குப் போன அந்த ஆய்ச்சி..

'அம்மா யசோதை. இங்கே வெளியே வா. உன்னிடம் பேச வேண்டியிருக்கிறது.' என்று கூவினாள்.

'நல்ல பிள்ளை பெத்தடியம்மா. புண்ணுல புளியை

வைக்கிற மாதிரி, வயிறெரிய வைக்கிறான் உன் புள்ளை. யாருமில்லாத போது, வீட்டுக்குள் புகுந்து வெண்ணெயை எடுத்து அள்ளி அள்ளி தின்னான். ஒழிஞ்சு போறது. வெண்ணெய்க்கா இந்த ஊர்ல பஞ்சம். சாப்பிடட்டும். ஆனா.. கல்லெடுத்து அந்த காலிப் பானையை உடைச்சுட்டுப் போனானே இதை கேட்பார் இல்லையா. ஏண்டா இப்படிப் பண்றேன்னு உன் பிள்ளைய அதட்ட மாட்டியா. இந்த அநியாயங்களுக்கு ஒரு முடிவே கிடையாதா.'

ஒரு ஆய்ச்சி அப்படி குறை சொன்னதும், யசோதைக்கு உடம்பு விதிர்த்து விட்டது.

இது என்ன காலங்காலையில் இப்படி ஒரு பெண் ஓடிவந்து இப்படி ஒரு குறை சொல்கிறாள். கிருஷ்ணா வா. தயவுசெய்து வா. எங்கு ஒளிந்து கொண்டிருக்கிறாய் என்று வீட்டில் தேடினாள். இன்னொருவர் வந்து உன்னைப் பற்றி குறை சொல்வதை என்னால் தாங்க முடியவில்லையடா கிருஷ்ணா. என்று உரக்கக் கூவினாள்.

'என் பிள்ளை உன் வீட்டுப் பானையையா உடைத்தான். வெண்ணெயா தின்றான். நான் கண்டிக்கிறேன் என்று சொல்லாமல், கண்ணனை மற்றவர் வந்து உன்னைப் பற்றி குறை சொல்வது பிடிக்கவில்லை என்று சொல்கிறாள்.

யசோதை விட்டுக் கொடுக்காமல் பேசியதைக் கேட்டதும் இன்னொரு ஆய்ச்சிக்கு மேலும் கோபம் வந்தது.

'கிருஷ்ணா, தயவு செய்து வந்து விடடா, எங்கு ஒளிந்து கொண்டிருக்கிறாயடா. இவள் உன்னை அடிப்பேன் என்பது போல் நின்று கொண்டிருக்கிறாளே. மற்ற ஆய்ச்சியர்களெல்லாம் உன்னை சேர்ந்து அடித்து அதை நான் கண்ணார பார்க்கவா. இதற்காகவா நான் பிறவி எடுத்திருக்கிறேன். தயவு செய்து எங்கு ஒளிந்திருந்தாலும் ஓடிவந்து என்னருகே நின்று கொள்.

என்ற யசோதை அப்பொழுதும் கண்ணனுக்காய் பேசுகிறாள். இன்னொரு ஆய்ச்சிக்கு கடுங்கோபம் வந்துவிடுகிறது.

"இது என்னுடைய வீடு. யார் உள்ளே நுழைந்து இந்த கோகுலத்திலே திருடப் போகிறார்கள் என்று அடுப்பிலே பாலை வைத்து விட்டு, அந்தணர்கள் அகத்துக்குப் போய் அங்கே நெருப்பு வாங்குவதற்காக சிறிது நேரம் நின்று அவர்களோடு பேசிக் கொண்டிருந்தேன். வந்து பார்த்தால் சகலத்தையும் சரித்து விட்டு போயிருக்கிறான். உன்மகனைப் பற்றி இனிக்க, இனிக்க கரும்பு போல



பேசுகிறாய். ஆனால், இதை யார் கண்டிப்பார்கள்." என்று ஆத்திரமாய் கேட்கிறாள்.

பெரியாழ்வார் சொன்னவற்றையெல்லாம் கோதை உடம்பு நடுங்கக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

"பிறகு என்னவாயிற்று அப்பா."

"என்ன ஆயிற்று.. இப்படி வம்பு செய்யும் கண்ணனை, இடுப்பிலே கயிறு கட்டி உரலிலே கட்டியிறுக்கி எங்கும் போகக் கூடாது. இங்கேயே வாசலிலேயே கிட. என்று சொல்லி விட்டாள் யசோதை.

கிருஷ்ணன் கைகளை கட்டிக் கொண்டு முகத்தை தூக்கி வைத்துக் கொண்டு எங்கும் போகாமல் வாசலிலேயே உட்கார்ந்திருந்தான். ஆயர்பாடியிலுள்ள அத்தனை பேருக்கும் கிருஷ்ணரை கட்டிப் போட்டு விட்டாள் யசோதை என்ற செய்தி பரவி எல்லோரும் வந்து வந்து பார்த்துவிட்டு போனார்கள்.

எல்லோருக்கும் வேதனையாக இருந்தது. குறிப்பாய் குறும்புகள் பற்றி யசோதையிடம் குற்றம் சொன்னார்கள் அல்லவா. அவர்களெல்லாம் மிகுந்த அவமானப் பட்டார்கள். மற்ற ஆய்ச்சியர்கள் கடிந்து கொண்டார்கள்.

ஒரு பானை பால் போனால் போகிறது. அதற்காக ஒரு குழந்தையை இத்தனை நேரம் கட்டி வைப்பதா. இந்த பாவம் உன்னை சும்மா விடுமா' என்றெல்லாம் பயமுறுத்தினார்கள்.

அந்த ஆய்ச்சியர்கள் அழத் துவங்கினார்கள். கிருஷ்ணனை உரலில் கட்டியதும், மொத்த கோகுலமும் துக்கத்தில் ஆழ்ந்தது. அழத் துவங்கியது." விஷ்ணுசித்தர் என்கிற பெரியாழ்வார் சொல்லி முடித்ததும் கோதையும் அழத் துவங்கினாள்.

பெரியாழ்வார் ஓலை எடுத்தார். தள்ளிப் போய் அமர்ந்து கொண்டார்.

**வெண்ணெய் விழுங்கி வெறுங் கலத்தை**
**வெற்பிடை இட்டு அதன் ஓசை கேட்கும்**

என்று ஒரு கவிதை எழுதத் துவங்கினார்.

பெரிய நந்தவனம். நடுவே குடிசை அருகே ஒரு காட்டாறு. மிக இதமான மக்கள். சற்று தொலைவே வடபத்ரசாயி கோயில். மாலை கொண்டு வந்து கொடுத்தால் அந்தக் கோயிலிலிருந்து பிரசாதங்களும், தானியங்களும் கொண்டு வந்து கொடுத்து விடுவார்கள். வருடத்திற்கு இரண்டு மூன்று உடைகள் கொடுப்பார்கள். ஊரிலுள்ள பெரியோர்களும் வந்து வணங்கி வேண்டியன தந்து விட்டுப் போவார்கள்.

எனவே, எந்த ஆசையுமில்லாமல், எந்தப்

பிரச்சினையுமில்லாமல் அப்பாவும், மகளும் உட்கார்ந்து கொண்டு கோகுலத்தைப் பற்றியும், கண்ணனைப் பற்றியும், கண்ணனது வாழ்க்கையைப் பற்றியும் இடைவிடாது எந்நேரமும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

இதுவே கோகுலமாக இருந்தால் இங்கு கண்ணன் வந்தால் எப்படி இருக்கும். என்ன செய்வான். என்ன பேசுவான் என்று மாறி மாறி கற்பனை செய்ய ஆரம்பித்தார்கள்.

அப்பா கதை சொல்வதைப் பார்த்து கோதை மனம் உருகினாள். சொன்ன கதையை கவிதையாய் எழுதுவதைப் பார்த்து மனனம் செய்து உள்ளுக்குள் கண்ணனையே தியானம் செய்யத் துவங்கினாள். 'வருக.. வருக.. நம்பி வாமனநம்பி வருக இங்கே' என்று தனியே நின்று அவனை அழைக்கத் துவங்கினாள்.

அப்பாவுக்கும், மகளுக்கும் இதைத் தவிர வேறு எந்த வேலையும் இல்லாமல் போயிற்று.

'இங்கு உட்கார்ந்திருந்தால்தானே உனக்கு ஊர் பட்ட சண்டை. எல்லார் வீட்டிற்குள்ளும் நுழைந்து ஏதாவது வம்பு செய்து பெண்களிடம் விளையாடி கேலிக்கு ஆளாகி அடி வாங்கி வருகிறாய். உன்னுடைய வேலை என்ன. நீ இடைச் சிறுவன். மாடு மேய்ப்பதல்லவா உன் வேலை. நீ வீட்டில் இருப்பதால் அல்லவா வம்பு வழக்கு வருகிறது. கிளம்பு. போ உடனே கிளம்பு. போய் மாடு மேய்த்து வா. பத்து மாடுகள்.. இருபது ஆடுகள்.. சில கன்றுகள் தருகிறேன். போய் மேய்த்து வா' என்று கடுமையாக யசோதை கட்டளையிட, வேறு வழியின்றி அந்த எட்டு வயது கண்ணன் மெல்ல மாடுகளை ஓட்டிக் கொண்டு காடுகளுக்கும் போகிறான்.

திரும்பி யசோதையைப் பார்த்து நான் போய்த்தான் ஆக வேண்டுமா என்பது போல் கெஞ்சல் பாவனையாகப் பார்க்கிறான்.

'நிச்சயம் நீ போய்த்தானப்பா ஆக வேண்டும். இங்கு இருக்கக் கூடாது' என்று உரக்க கட்டளையிடுகிறாள் யசோதை. கண்ணன் வேறு வழியில்லாமல் மாடுகளை ஓட்டிக் கொண்டு போகிறான்.

யசோதை அவன் போன பிறகு அழத் துவங்குகிறாள். மனம் துடித்து திண்ணையில் உட்கார்ந்து புலம்பத் துவங்குகிறாள். சின்னக் குழந்தை, இங்கிருக்கிற பெண்களோடு விளையாடுகின்ற குழந்தை. இந்தக் குழந்தையை யாரோ ஏதோ சொல்லி விட்டார்களே என்று நான் காட்டிற்கு அனுப்புகிறேனே. என்னை விட மகாபாவி இந்த உலகத்தில் யாராவது இருக்கிறார்களா என்று



நெஞ்சில் அடித்துக் கொண்டு அழுகிறாள்.

அப்படி மாடு மேய்க்க அனுப்பினேனே பாவி. அவனுக்கு குடை கொடுத்தேனா. பாதரட்சை போட்டுக் கொண்டு போ என்று சொன்னேனா. எதுவுமில்லை. நிறைய விஷக்கற்களும், பாறாங்கற்களும் நிறைந்த காடுகளுடே அந்தப்பிள்ளையை வெறும் காலோடும் ஒரு குடைகூட இல்லாமலும் அனுப்பினேன். என்னைவிட மோசமான ஒரு தாயார் இந்த உலகத்தில் இருப்பாளா என்று அழுகிறாள். கண்ணன் எப்போது திரும்பி வருவான் என்று பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

மறுபடியும் ஒரு பத்து பாட்டு அவளுடைய புலம்பலாக பெரியாழ்வார் எழுத கோதை அதையும் மனனம் செய்து கொண்டாள்.

குடையும் செருப்பும் கொடாதே தாமோதரனை நான்
உடையும் கடியன ஊன்று வெம்பறள் உடைக்
கடிய வெங் கானிடைக் காலஅடி நோவக் கன்றின் பின்
கொடியென் என்பிள்ளையைப் போக்கினேன். எல்லே
பாவமே.

என்று எழுதிய கவிதையையும் கோதை மனனம் செய்து கொண்டாள்.

"காட்டிற்குப் போன கண்ணன் பிறகு எப்போது திரும்பி வந்தான்." என்று ஆவலாகக் கேட்டாள் கோதை.

"மாலை சூரியன் மெல்ல சரிந்து கொண்டிருந்தபோது, இருள் பரவத் துவங்கிபோது லேசாய் வெளிச்சமிழந்த போது யசோதை எட்டி, எட்டி வாசலில் இருந்து கண்ணன் வந்து விட்டானா என்று ஆவலாகப் பார்த்துக் கொண்டிருந்தபோது தூரத்தே ஆடுகளும், மாடுகளும் சூழ, கன்றுகள் நெருங்கிவர கண்ணன் வந்து கொண்டிருக்கிறான். யசோதைக்கு வயிற்றிலே பால் வார்த்தது போல் ஆயிற்று. மிகுந்த மகிழ்ச்சியோடு கண்ணன் வருகின்ற காட்சியைப் பார்க்கிறாள்.

இந்தக் குழந்தையைப் போய் நான் துரத்தினேனே. இவனை ஒரு காலமும் இனி காட்டிற்கு அனுப்ப மாட்டேன் என்று கங்கணம் செய்து கொண்டு அவன் வருகின்ற அழகை ஆவலோடு பார்க்கிறாள்."

'அப்பா, கண்ணன் எவ்விதம் அழகாக வருகிறான் என்று எனக்குச் சொல்ல மாட்டீர்களா." என்று கோதை வினவுகிறாள்.

"காதில் சீலை தக்கை. இன்னொரு காதில் செங்காந்தள் மலர். இடுப்பில் ஒரு வேட்டி. அதற்கு மேல் அந்த வேட்டி நழுவாமல் இருக்க ஒரு பட்டு ஆடை. கழுத்திலே நல்ல ஹாரங்கள். கருப்பு மேனி.

உடம்பெல்லாம் புழுதி. மெல்ல சிரிப்போடு கோபங்களெல்லாம் போய், அம்மா அனுப்பி விட்டாளே என்று வருத்தமெல்லாம் போய், ஒரு காரியத்தை செவ்வனே செய்து முடித்துவிட்டு கம்பீரத்தோடு திரும்பி வருகின்றான். அவன் தெருவுக்குள் நுழைந்ததும் யசோதை அவனுக்கருகே ஓடுகிறாள்."

"அப்படியா.. அப்பா, நத்தகோபனும் காத்திருக்கிறாரா. நந்தகோபனும் கண்ணன் மீது அக்கறை உள்ளவரா.."

"ஆமாம் கோதை. யசோதை துரத்தி விட்டது சரி என்றாலும், நந்தகோபனுக்கு கண்ணன் இவ்வளவு இளம் வயதில் காடுகளுக்குள் போனது பிடிக்கவில்லை. அவனுக்கு உணவு சாப்பிட இஷ்டமில்லை. கண்ணன் வரட்டும். பிறகு சாப்பிடுகிறேன் என்று அவனும் ஒட்ட ஒட்ட பட்டினியாக கிடக்கிறான்." என்று சொல்ல கோதை அப்பாவை வியப்போடு பார்த்தாள்.

"இதையும் கவிதையாக எழுதுவீர்களா அப்பா.." என்று கேட்டாள்.

"ஆமாம் கோதை இதையும் கவிதையாக எழுதத்தான் வேண்டும். கவிதையாக எழுதினால்தானே உனக்கு கதை சொன்னது போல் மற்றவர்க்கு பலபேர் கதை சொல்வார்கள்."

"அப்பா.. நீராட வா என்று உரைப்பதை எப்படி எழுதுவீர்கள் தந்தையே" என்று கேட்க...

**காடுகள் ஊடு போய்க் கன்றுகள் மேய்த்து**
**மறியோடிக் கார்கோடற்பூச்**
**சூடி வருகின்ற தாமோதரா; கற்றுத்**
**தூளி காண் உன் உடம்பு;**
**பேடை மயிற் சாயற் பின்னை மணாளா;**
**நீராட்டு அமைத்து வைத்தேன்.**
**ஆடி அமுது செய், அப்பனும் உண்டிலன்,**
**உன்னோடு உடனே உண்பான்.**

"மிக அற்புதமாக கவிதை எழுதுகிறீர்கள் அப்பா."

"நான் எங்கே எழுதுகிறேன். நமக்குள் புகுந்து கொண்ட கண்ணனல்லவா நம்மை ஆட்டி வைக்கிறான். நான் எதுவும் செய்யவில்லை கோதை. கண்ணன் இது கவிதையாக வர வேண்டுமென்று தீர்மானித்து விட்டான். ஸ்ரீவில்லிபுத்தூரில் இருக்கின்ற என்னை ஒரு கருவியாக்கி அவன் தன்னுடைய வரலாற்றைச் சொல்லிக் கொண்டிருக்கிறான். இங்கு நான் கருவி. எழுதுவது நான் இல்லை. அவனே."

"அப்பா.. நீங்கள் இடையறாது கண்ணனைப் பற்றிதான் சிந்தித்துக் கொண்டிருக்கிறீர்களா.."



"வேறு இங்கு சிந்திப்பதற்கு என்ன இருக்கிறது கோதை."

"ஆமாம் அப்பா. வேறு எதிலும் என்மனமும் நாட்டம் கொள்ளவில்லை. தூங்கும்போதும் கண்ணன். விழிக்கும் போதும் கண்ணன். எந்தவேலையில் ஈடுபட்டாலும் இப்போது கண்ணன் என்ன செய்வான் என்றுதான் எனக்கும் தோன்றுகிறது. தயிர் கடையும் பொழுது கோகுலத்தில் எப்படி தயிர் கடைவார்கள் என்று யோசிக்கிறேன். பொழுது சாயும் பொழுது கோகுலத்திலுள்ளவர்களெல்லாம் என்ன செய்வார்கள் என்று யோசிக்கிறேன். அப்பா நம்முடைய வீடே கோகுலமாகத்தான் இருக்கிறதல்லவா."

"ஆமாம்.. எங்கு எல்லாம் கண்ணன் இருக்கிறானோ அந்த இடமெல்லாம் கோகுலம்தானே.."

"அப்பா.. நம்முடைய இடத்தில் கண்ணன் இருக்கிறானா.."

"வெகு நிச்சயமாக இருக்கிறான்."

கோதையின் கேள்விக்கு பெரியாழ்வார் தீர்மானமாய் பதில் தந்தார்.

"அவன் கூப்பிட்டால் வருவானா.."

"நிச்சயம் வருவான் கோதை."

"அப்பா.. கண்ணன் எனக்கு உயிர். அவனைத் தவிர வேறு எதுவும் என்னால் நினைக்க முடியவில்லை."

"நல்லது கோதை. அவ்விதமே இரு."

அப்பாவும், பெண்ணும் மூலைக்கொன்றாய் போய் உட்கார்ந்து கொண்டார்கள். கோகுலத்திலுள்ள கண்ணன் என்ன செய்வான் என்று நினைக்கத் துவங்கினாள்.

இப்படி ஒரு வாழ்க்கை எல்லாருக்கும் கிடைப்பதில்லை. எல்லோராலும் இடையறாது கடவுளை நினைப்பதே வாழ்க்கை என்று ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்தான் இவ்விதம் நினைக்க முடியும். இறைவனை நோக்கி தவம் செய்பவர்கள்தான் இம்மாதிரியான வாழ்க்கை வாழ முடியும். இங்கே கோதையும், பெரியாழ்வாரும் இறை தவிர வேறெந்த நினைப்புமற்று வேறு எந்த தேவையுமற்று வாழ்ந்து வந்தார்கள்.

ஸ்ரீவில்லிப்புத்தூர் செழிப்பாக இருக்கிறது. கன்றுகளும், பசுக்களும் ஆரோக்கியமாக வளர்ந்து கொண்டிருக்கின்றன. கோதையும் பூரிப்போடு வளர்ந்து வருகிறாள்.

இன்னும் ஆழ ஆழ கண்ணனுடைய நினைப்பிலே,

கோகுலத்து வாழ்க்கையிலே, தன் மனதை திளைத்துக் கொள்கிறாள்.

கண்ணனைப் பற்றிய எண்ணங்கள் அதிகமாகின்றன. கண்ணனை என் கணவனாய் கொள்ளுகின்ற அந்தத் திறன் எப்பொழுது வரும் என்று ஏங்குகின்றாள்.

இதோ மார்கழி மாதம் வருகிறது. குளிர் வருகிறது. இந்தக் குளிர்காலத்தில் விடியலில் எழுந்து ஆற்றில் குளித்து உடல் சூட்டை அறவே நீக்கி நோன்பு நோற்கப் போகிறேன். மனதை ஒருமைப்படுத்தி உடம்பு முழுவதும் பரவிய இறையை அனுபவிக்கப் போகிறேன் என்று தீர்மானம் செய்தாள்.

"இது நான் மட்டும் செய்தால் போதுமா. ஸ்ரீவில்லிபுத்தூரில் நிறைய பெண்கள் இருக்கிறார்கள். அவர்களிடம் போய் கண்ணனுக்கு நோன்பு இருக்க வேண்டுமென்பதை விவரித்து, அவர்களையும் நோன்புக்கழைத்தால் நன்றாக இருக்குமல்லவா.." பெரியாழ்வாரிடம் கோதை அனுமதி கேட்டாள்.

"எதற்கு கோதை, உன்னுடைய ஆசை என்ன."

"என்னுடைய ஆசை, இங்கு கண்ணன் வந்து என்னை திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்பது."

"அப்படியா.. இது பெரிய ஆசையாக இருக்கிறது. தவிர, ஏற்கனவே நீ சரியாக உண்ணாமல், உறங்காமல் கிடக்கிறாய். நோன்பு நோற்றால் இன்னும் மெலிந்து போவாயே."

"இல்லையப்பா, மனம் சந்தோஷமாக இருக்கிறது. அதனால் உடம்புக்கு ஒருகேடும் வராது. அதைத்தவிர என்னைப் பாதுகாக்க கண்ணன் இருக்கிறார். அவர் என்னை ஆரோக்கியமாக வைத்துக் கொள்வார். எனக்கு அனுமதி கொடுங்கள்." என்று வணங்கினாள்.

"உன் மனோரதங்கள் நிறைவேறட்டும்." என்று பெரியாழ்வார் ஆசிர்வதித்தார்.

கோதை எல்லாப் பெண்களின் வீட்டிற்கும் போய் வந்தாள். நோன்பு நோற்க வேண்டும் என்று பேசினாள். எதற்கு எப்படி என்று விவரித்தாள்.

"இத்தனை காலையில் எழுந்திருக்க முடியுமா. நீ எழுந்திருப்பாயா." என்று ஒரு பெண்மணி கேட்டாள்.

"நிச்சயம் எழுந்திருப்பேன். நான் எழுவது மட்டுமில்லை. உன் வீட்டிற்கு வந்து உன்னையும் எழுப்புவேன்." என்று சொன்னாள்.

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்;
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்..

என்று பாடி, வீட்டிலே உள்ள சகலரையும் 'எழுந்திருங்கள், எழுந்திருங்கள்' என்று எழுப்பினாள். எழுதியதை விஷ்ணுசித்தரிடம் காட்டினாள்.

விஷ்ணுசித்தர் பாடலைப் படித்து கண்களில் ஒற்றிக் கொண்டார்.

"கோதை நீ சாதாரணப் பெண்ணல்ல. இதுவும் சாதாரணப் பாட்டல்ல. சந்திர ஆதித்தர் உள்ளவரையில் நீயும் இந்தப் பாட்டும் இங்கு நிறைந்திருக்கப் போகிறீர்கள். தொடர்ந்து எழுது." என்று கோதையை வழிப்படுத்தினார்.

பெரியாழ்வாரின் கவனிப்பாலும் கோதையினுடைய சீராட்டத்தாலும் நந்தவனம் பூத்துக்குலுங்கியது. பூக்களைப் பறிப்பதற்கே வெகு நேரமாகி விடுகிறது.

விடியலில் எழுந்து நந்தவனம் போய் தகப்பனும் மகளும் பூப்பறித்து கொண்டு வந்த பிறகு அதைக் கட்டி, கட்டிய சரங்களை ஒன்றாய் மாலையாக்கி அளவாக நறுக்கி வடபத்ரசாயி உயரத்திற்கு அதை இறுக்கக் கட்டினார்கள். அதன் பிறகுதான் பெரியாழ்வார் குளிக்கப் போவது வழக்கம்.

அன்றும் தகப்பனார் அந்தப் பக்கம் போனதும் அந்த மாலையை எடுத்து தன் கழுத்திலே கோதை போட்டுக் கொண்டாள். எழுந்து கண்ணாடி முன்பு பார்த்துக் கொண்டாள்.

"அழகாக இருக்கிறேனா கண்ணா. என்னை உனக்கு பிடித்திருக்கிறதா. இந்த மாலையை போட்டுக் கொண்டதும் நான் கல்யாணப் பெண் போல் இருக்கிறேனா. என்னுடைய அழகில் நீ மயங்குகிறாயா அல்லது உனக்கு பல ஆயிரக்கணக்கான அழகான பெண்களைத் தெரியுமே. அவர்கள் நினைப்பில் மூழ்கிக் கிடக்கிறாயா.

எது பார்த்தாலும் உன்னைப் பார்ப்பதாகவே இருக்கிறது. இந்த உலகத்திலே பார்க்கின்ற ஒவ்வொரு பொருளும், உன்னோடு சம்பந்தம் வைத்துக் கொண்டு உன்னை நினைவுப் படுத்துவதாகவே இருக்கிறது.

கண்ணா, என்னை திருமணம் செய்து கொள்ள மாட்டாயா. உன் மனைவியாக ஏற்றுக் கொள்ள மாட்டாயா. அந்தத் தகுதி எனக்கு இல்லை என்று நினைக்கிறாயா. செத்துப் போய் விடுவேனடா. நீ இல்லையென்றால் எனக்கு மரணம்தான். கண்ணா, என்னை கைதூக்கிவிடு. ஒருநாளும் என்னை கைவிடாதே." என்று உள்ளுக்குள் கெஞ்சினாள்.

தகப்பனார் வரும் சத்தம் கேட்டது. மாலையை எடுத்து ஆணியில் மாட்டிவிட்டு மூலையில் உட்கார்ந்து

கொண்டாள்.

கூடையில் மாலையை எடுத்துக் கொண்டு கோதையின் நினைவாக விஷ்ணுசித்தர் கோயிலுக்குப் போனார்.

மாலையைக் கொண்டுபோய் உள்ளே கோயிலுக்குள் கொடுத்தார். கோயிலிலுள்ளவர்கள் மாலையை அழகாகப் பிரித்து வைக்கும் போது மாலையின் இரண்டு பக்கமும் நீளமாக ஒருகூந்தல் முடி மாட்டிக் கொண்டு இருப்பது தெரிந்தது.

இவ்வளவு நீளக்கூந்தல் பெரியாழ்வாருக்கு இல்லை. வேறு யாருக்கு இருக்கும். யோசித்தார்கள்.

"ஹா.. பெரியாழ்வார் வீட்டில் கோதை இருக்கிறாள் அல்லவா. அவளுடைய கேசந்தான். மனிதனுடைய கேசம் மாட்டிய மாலையை இறைவனுக்குப் போடலாமா. சரி, ஏதோ தப்பிதமாய் காற்றில் பறந்து வந்திருக்கும். இந்த முறை மன்னித்து விடலாம். அடுத்த முறை கவனமாக இருக்கச் சொல்லலாம்." அவர்கள் பெரியாழ்வாரிடம் வந்தார்கள்.

"மாலை கட்டி முடித்ததும் ஒரு துணியிலே சுற்றி வைத்து விடுங்கள். தூசு, தும்பு படாமல் மாலை சுத்தமாக இருக்க வேண்டுமல்லவா. எனவே, கட்டி முடித்ததும் ஈரத் துணியால் சுற்றி வைத்து விட்டு, பிறகு மாலையோடு இங்கு வந்து விடுங்கள்." என்று எச்சரித்தார்கள்.

விஷ்ணுசித்தர் விஷயம் புரியாமல் சரி என்று சொன்னார்.

மறுநாள் மாலையை ஈரத்துணி சுற்றி வைத்துவிட்டு குளிப்பதற்கு கொல்லைப்புறம் போனார். எல்லா நாட்களையும் விட அன்று மாலை மிகமிக அழகாக வந்திருந்தது.

கோதை, ஈரத்துணியைப் பிரித்து எடுத்து கீழே போட்டுவிட்டு, மறுபடியும் கண்ணாடி முன்பு நின்று கொண்டு அந்த மாலையை கழுத்திலே போட்டுக் கொண்டாள். மறுபடியும் கண்ணனோடு பேச ஆரம்பித்தாள்.

"கண்ணா, நான் அழகாக இருக்கிறேனா. என்னை திருமணம் செய்து கொள்கிறாயா." என்று கேள்விகள் கேட்க ஆரம்பித்தாள்.

கேணியிலிருந்து முதல் குடம் தலையிலே ஊற்றிக் கொண்டதும்; மாலையை ஈரத்துணியில் சுற்றினோமா இல்லையா என்ற கேள்வி, விஷ்ணுசித்தருக்கு திடுமென்று வந்தது. குடத்தைக் கீழே வைத்துவிட்டு ஈரத்துணியோடு வீட்டிற்குள் வந்து மாலை



எங்கிருக்கிறது என்று தேட, மாலையை கழுத்தில் மாட்டிக் கொண்டு கோதை கண்ணாடி முன் நின்று கொண்டு பேசுவதைப் பார்க்க நேரிட்டது. விஷ்ணுசித்தர் அதிர்ந்து போனார்.

கோதை திரும்பிப் பார்த்துவிட்டு, மாலையை கழற்றி ஆணியில் மாட்டிவிட்டு மறுபடியும் போய் சுருண்டு படுத்துக் கொண்டாள்.

"இது தவறல்லவா கோதை. இறைவனுக்கு போட வேண்டிய மாலையை நீ போட்டுக் கொள்கிறாயே. இது நியாயமா கோதை. எப்படி இது. நீ சூட்டிக் கொண்ட மாலையை எங்ஙனம் கொண்டுபோய் வடபத்தரசாயிடம் கொடுப்பேன். நீ செய்தது எனக்குப் பிடிக்கவில்லை." என்று கோபித்துக் கொண்டார்.

தகப்பனும், மகளும் மூலைக்கொருவராய் உட்கார்ந்து கொண்டார்கள். மறுநாள் விடிந்தது. பூக்கள் கொய்யப் பட்டன. மாலையை விஷ்ணுசித்தர் தொடுத்தார். கையோடு எடுத்துக் கொண்டு போய் கொல்லைப்புறத்தில் தன் கண்ணெதிலே மாட்டினார். குளித்தார். அப்படியே ஈரம் சொட்டச் சொட்ட மாலைக்கு அருகே வந்து கூடையில் வைத்துக் கொண்டார். கொண்டுபோய் கோயிலில் கொடுத்தார்.

"நேற்று ஒருநாள் மாலை தவறிவிட்டதோ." என்று அவர்கள் கேட்க, 'ஆமாம்' என்று ஈனஸ்வரத்தில் பதில் சொன்னார்.

"உடல் நலம் சரியில்லையோ."

"மனதும் சரியில்லை." என்று பதில் சொன்னார்.

மாலையை வாங்கி இறைவனுக்குப் போட்டார்கள். மாலை அறுந்து விழுந்தது. விஷ்ணுசித்தர் திகைத்தார்.

மீண்டும் நார்போட்டு முடிந்து கொடுத்தார் கொண்டு போய் வடபத்ரசாயியின் கழுத்திலே மாட்டினார்கள். வெளியே வந்தார்கள். மறுபடியும் பளிச்சென்று மாலை அறுந்து கீழே விழுந்தது. அர்ச்சகர்கள் திகைத்தார்கள்.

"இவ்வளவு உறுதியாக கட்டியது எப்படி விழும். நான் கட்டுகிறேன்." என்று அந்த அர்ச்சகர்களே வாழைநாரால் மாலையை கோர்த்தார்கள். இறுக்கினார்கள். தங்கள் கையால் இழுத்துப் பார்த்தார்கள். மறுபடியும் மாட்டினார்கள். மாட்டும் முன்பே மாலை அறுந்து விழுந்தது. அர்ச்சகர்கள் திகைத்து விஷ்ணுசித்தரைப் பார்த்தார்கள். விஷ்ணுசித்தர் முகத்தைப் பொத்திக் கொண்டு ஓவென்று அழத் துவங்கினார். 'சடேர்' என்று ஒரு பேரொலி கருவறையில் இருந்து கிளம்பியது.

"கோதை அணிந்த மாலையை கொண்டு வாருங்கள்.

கோதைக்கு அணிவித்த பிறகு கொண்டு வாருங்கள். அதுவே நமக்கு உகப்பானது." என்று கட்டளை வந்தது. அர்ச்சகர்கள் ஆடிப்போனார்கள்.

என்ன நடந்தது என்பதை அர்ச்சகர்களுக்கு விஷ்ணுசித்தர் விவரம் தெரிவித்தார். "இறைவனுக்கு போட வேண்டிய மாலையை நீ போட்டுக் கொண்டாயே என்று கோதையை கோபித்துக் கொண்டு வந்து விட்டேன். அதனால்தான் நேற்று மாலையில்லை. ஆனால், இன்று இறைவன் இப்படிக் கேட்கிறானே. இதற்கு எனக்கு அர்த்தம் புரியவில்லையே." என்று குழம்பினார். அந்தணர்கள் அவரை சமாதானப் படுத்தினார்கள்.

"இறைவன் தேர்ந்தெடுத்து விட்டான். கோதை தன்னுடைய மாலையை போட்டுக் கொள்ளலாம் என்று உரிமை கொடுத்து விட்டான். எனவே, இந்த மாலையை எடுத்துக் கொண்டு போய், கோதையிடம் கொடுங்கள். அவள் அணிந்த பிறகு இங்கு கொண்டு வாருங்கள்." என்றனர்.

விஷ்ணுசித்தர் மாலையோடு ஓடினார். பின்னால் ஊரும் ஓடியது. கோதை மாலையை கழுத்தில் போட்டுக் கொண்டாள். பிறகு கழற்றி மரியாதையோடு கொடுத்தாள். அவள் கொடுத்த மாலையைப் பல்லக்கிலே வைத்து ஸ்ரீவில்லிபுத்தூர் கோவிலுக்கு கொண்டு வந்தார்கள். அந்த மாலையை பெருமாள் கழுத்தில் போட்டார்கள். மாலை மிக அழகாக அவர் கழுத்தில் அமர்ந்து கொண்டது.

கோதையினுடைய புகழ் பாண்டிய தேசமெங்கும் படர்ந்தது. விஷ்ணுசித்தரின் புகழ் அதையும் தாண்டி பறந்தது.

அன்று இரவு அவளுக்கும் கண்ணனுக்கும் திருமணம் என்பதாய் கனவு கண்டாள். பெண்கள் கலசங்கள் ஏந்துவதும், பார்ப்பனப் பிள்ளைகள் இங்கும் அங்கும் ஓடி திருமணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்வதும், ஹோமகுண்டம் அமைப்பதும் அக்னி வளர்ப்பதும், வலம் வருவதுமாய் பல கனவுகள், பல சம்பவங்கள் அந்த கனவுக்குள் நடந்தேறின.

அப்பா எனக்கு கனவிலே நாராயணனோடு திருமணமாயிற்று என்ன செய்வது என்று தெரியவில்லை. என்று திகைத்தாள். மறுபடியும் சுருண்டு படுத்துக் கொண்டாள். அன்று இரவு விஷ்ணுசித்தருக்கு கனவில், 'உங்கள் மகளை திருவரங்கம் அழைத்து வாருங்கள்' என்று கட்டளை வந்தது.

மறுநாள் பல பேருக்கு ஊரில் அந்தக் கனவு



வந்திருப்பது தெரிந்தது. அவர்கள் பல்லக்கு ஏற்பாடு செய்தார்கள். பல்லக்கைச் சுற்றி திரையால் மூடினார்கள். கோதையை அழைத்து நமஸ்கரித்து அவளை அதில் ஏற்றினார்கள்.

விஷ்ணுசித்தர் முன்னால் செல்ல, பல்லக்குகளை சுமந்து கொண்டு திருவரங்கம் நோக்கி நடக்கத் துவங்கினார்கள். திருவரங்கத்திலும் அப்படியே உத்திரவாகி இருந்தது. அதற்காகவே காத்திருந்தார்கள் அந்தணர்கள். கோதை பல்லக்கு விட்டு வெளியே வந்தாள்.

மெலிந்திருந்தாள். ஆனால், பிரகாசமாக இருந்தாள். நடையில் தளர்விருந்தது. ஆனால் முகத்தில் ஒளி இருந்தது. தோழிமார்களைப் பிடித்துக் கொண்டுதான் நடக்க வேண்டியிருந்தது.

அவள் விஷ்ணுசித்தரை சுற்றி வந்து நமஸ்கரித்தாள்.

"அப்பா.. என்னை கண்ணனுக்கென்று ஆளாக்கி வளர்த்தீர்களே. உங்களுக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன். என்னை கைபிடித்து கொண்டு போய் திருவரங்கத்து கருவறைக்குள் விடுங்களப்பா. நான் அங்கே போய் அவரோடு இருந்து கொள்கிறேன்." என்று சொன்னாள்.

விஷ்ணுசித்தர் தனது வலக்கையால் பெண்ணின் இடக்கையைப் பிடித்து மெல்ல நடத்தி கருவறைக்குள் அழைத்துப் போனார். கருவறைக்கு அருகே போன கோதை திரும்பி தன்னை தூக்கிவந்த ஆதரவாளர்களை தனக்காக காத்திருந்த அன்பர்களை பார்த்தாள். கைகூப்பினாள்.

மெல்லப் பின்னடைந்தாள். திரும்பினாள். கருவறையிலே பள்ளி கொண்டிருந்த பெருமானை மண்டியிட்டு வணங்கினாள்.

"இதோ உங்கள் கோதை வந்திருக்கிறேன். உங்கள் மனைவி வந்திருக்கிறேன். உங்களையே நினைத்து தவம் செய்த பெண் வந்திருக்கிறேன். என்னை ஏற்றுக் கொள்ளுங்கள்." என்று கைகூப்பினாள். பாதத்தைப் பற்றி அவனுடைய விரல்களிலே நெற்றியை வைத்தாள். சட்டென்று காணாமல் போனாள். அவள் இருந்த இடம் வெறுமையாக இருந்தது.

அந்தணர்கள் திகைத்தார்கள். கூட்டம் ஓ, ஓவென்று கதறியது. கூடவந்த தோழிப்பெண்கள் விம்மி, விம்மி அழத் துவங்கினார்கள். பல்லக்குத் தூக்கி வந்தவர்கள்

தடுமாறி சுவரில் சாய்ந்தார்கள். எல்லோரையும் விட, உரத்த குரலில் பெரியாழ்வார் கதறத் துவங்கினார்.

"என்ன நடந்தது. என்ன நடந்தது." மற்றவர்கள் விஷ்ணுசித்தரைக் கேட்டார்கள்.

"ஐயா.. கடவுள் இருக்கிறார் ஐயா. நாராயணன் இருப்பது உண்மை. கண்ணன் கதைகள் உண்மை. அவன் என் குழந்தையை திருமணம் செய்து கொண்டு போனான். எங்கள் குழந்தை கருவறைக்குப் போய் இறைவனை வணங்கி காணாமல் போனதை, இறைவனோடு ஐக்கியமானதை, நாங்கள் கண்ணாரப் பார்த்தோம். இறைவனைப் பற்றியே மனதுக்குள் சிந்தித்து சிந்தித்து அவன் அடி சேர்ந்து விட்டாள். தான் சூடிக் கொடுத்த மாலையை அவருக்கு கொடுத்து சந்தோஷப்படுத்தி விட்டாள். அவன் மீது ஆளுமை செய்து விட்டாள். அவள் அரங்கனை ஆண்டவள். ஆண்டாள் என்று பெயருள்ளவள்."

என்று மக்களிடம் பெரியாழ்வார் உரக்கச் சொன்னார்.

இறை நம்பிக்கை ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து கிளம்பி மிகப் பெரியதாக வளர்ந்து தமிழ் தேசம் முழுவதும் பரவியது.

இறைவன் உண்டு என்பதை ஆண்டாளின் கதை உலகுக்கு உறுதி செய்தது.

## சுபம்

கதை, கவிதை மற்றும் கடிதப் போக்குவரத்து. டி.டி. அல்லது எம்.ஓ. இவைகளை SREE AISHVARYA PUBLICATION ஆனந்த நாவல், 77/1, மாதவரம் நெடுஞ்சாலை, காந்தி பூங்கா எதிரில், பெரம்பூர், சென்னை-600 011 என்ற நிர்வாக அலுவலக் முகவரிக்கே அனுப்ப வேண்டும்.
போன் : 044-25512661

Anantha Navel Owned & Published by M.P. Chandra Sekaran at 50/1, Pycrafts Road, 1st Street, Royapettah, Chennai -600 014. and Printed by R.Murugan at Wonder Prints, 14, Weavers Street, Triplicane; Chennai - 600 005.